இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள் - 56

சுடர் 32 | கதிர் 106 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 28 ஞாயிற்றுக்கிழமை 12.03.2017

## அமைச்சரவை மாற்றம் மைத்திரிபால கவனம்

கொழும்பு, மார்ச் 12
அமைச்சரவையில் மாற்றங்கள் மேற்கொள்வது தொடர்பில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன கவனம் செலுத்தியுள்ளார் என அறிய முடிகின்றது. நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சர்களுடன் இது தொடர்பில் அரச தலைவர் >> 52

## தவறை சுட்டிக் காட்டிய பேராசிரியருக்கு எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 12
அரசமைப்பில் பௌத்த மதத்துக்கும் சிங்களத்துக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது தவறு என்று அரசமைப்புத் தொடர்பில் விளக்கமளிக்கும் கூட்டத்தில் பேராசிரியர் ஒருவர் தெரிவித்த கருத்துக்கு, அரச திணைக்களத் தலைவர்கள் பலரும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். பேராசிரியர் தனது கருத்தை மீளப் பெற வேண்டும், எனவும், இவ்வாறு கருத்துத் தெரிவித்தமைக் >> 52

## அம்பாந்தோட்டையை சீனாவிடம் கையளிக்க இந்தியா கடும் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 12
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவிடம் கையளிப்பதற்கு இலங்கையிடம் இந்தியா கவலை வெளியிட்டுள்ளதாகக் கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு இது தீவிரமான அச்சுறுத் >> 06



## கேப்பாபிலவுக் குடும்பங்கள் நேற்று முதல் உணவு தவிர்ப்பு

முல்லைத்தீவு, மார்ச் 12
தொடர் அறவழிப் போராட்டத்துக்குச் சாதகமான முடிவுகள் எதுவும் கிடைக்கப் பெறாமையால் கேப்பாபிலவு மக்கள் நேற்று முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். முல்லைத்தீவு, >> 52

## பன்னாட்டு நீதிமன்றில் இலங்கையை நிறுத்துக

நடிகர் சத்யராஜ் கோரிக்கை

சென்னை, மார்ச் 12
இனப்படுகொலை செய்த இலங்கை அரசுக்குப் பன்னாட்டு நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுத் தர இளைஞர்கள் போராடவேண்டும் என நடிகர் சத்யராஜ் வலியுறுத்தியுள்ளார். இனப்படுகொலை செய்த இலங்கை அரசை உடனடியாக பன்னாட்டு நீதி விசாரணைக்கு உட்படுத்தக்கோரிச் சென்னையில் கையெழுத்து இயக்கம் நடந்தது. இதனை நடிகர் சத்யராஜ் முதல் கையெழுத்திட்டு ஆரம்பித்து வைத்தார். அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் மைத்ரேயன், வணிகர் சங்கப் பேரவைத் தலைவர் வெள்ளையன் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு >> 06

அம்பலமானது மூடி மறைக்கப்பட்ட அறிக்கை

# ஈ.பி.டி.பி. ஆளுகையில் யாழ். மாநகர சபையில் முறைகேடு, மோசடிகள்

விசாரணை அதிகாரி சட்ட நடவடிக்கைக்குப் பரிந்துரைத்தும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் நடவடிக்கை ஏதும் இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 12
யாழ்ப்பாணம் மாநகர சபை ஈ.பி.டி.பியின் ஆளுகையில் இருந்தபோது பல்வேறு மோசடிகள் இடம்பெற்றன என்பதை அது தொடர்பில் விசாரணை செய்த அதிகாரி உறுதிப்படுத்தியிருக்கிறார். அந்த மோசடிகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கும்படி முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு அவர் பரிந்துரைத்தபோதும் கடந்த சுமார் ஒன்றரை வருடங்களாக குற்றஞ்சாட்டப்படுபவர்களுக்கு எதிராக எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. >> 52

ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்ற

## அரசுக்கு அவகாசம் வழங்கி அதற்குள் செய்யத் தவறின் பன்னாட்டுப் பொறிமுறை

கூட்டமைப்பின் கூட்டத்தில் நேற்றுத் தீர்மானம்



வவுனியா, மார்ச் 12
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 2015 ஆம் ஆண்டுத் தீர்மானத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தக் கால அவகாசம் வழங்கி, அந்தக் கால அவகாசத்தினுள் கொழும்பு அரசு செய் >> 52

முச்சந்தி முரளி



கூடித் தீர்மானிச்சாலும் குழப்பம் வந்துதான் தீருது பாருங்கோ...



## காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி வவுனியாவில் பேரணி

வவுனியா, மார்ச் 12
காணாமல் ஆக்கப்பட்டோரின் வெளிப்படுத்தலையும் விடுதலையையும் வலியுறுத்தி வவுனியாவில் நேற்றுப் பெரும் பேரணி நடத்தப்பட்டது. காலை 11 மணியளவில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்துக்கு முன்பாகப் பேரணி ஆரம்பமானது.
கண்டி வீதிவழியாக, மணிக்கூட்டுக்கோபுர வீதி ஊடாக பசார் வீதி, இலுப்பையடி, நீதிமன்ற வீதியூடாகச் சென்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம் நடத்தும் இடத்தை அடைந்தது.
(விரிவு: பக். 07

## உரிய அனுமதி பெறப்படாமல் கிராமத்துக்கு 5 லட்சம் திட்டம்

இணைத் தலைவர்களின் நடவடிக்கைக்கு அரச அதிகாரிகளும் முழு ஒத்துழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12
பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படாமல், கிராமத்துக்கு 5 லட்சம் வேலைத் திட்டங்களுக்குரிய அனுமதி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களால் வழங்கப்படு >> 06

## கூட்டமைப்பின் முடிவை ஏற்காத ஈ.பி.ஆர்.எல்.எவ்.

வவுனியா, மார்ச் 12
ஐ.நா. மனித உரிமைகள் சபை விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவுடன் இணங்க மறுத்த ஈ.பி.ஆர்.எல்.எவ். தனியாக நேற்றுப் பத்திரிகையாளர் >> 06

## தமிழகப் பக்தர்கள் இன்றி சோபையிழந்தது கச்சதீவு



கச்சதீவு, மார்ச் 12
இலங்கை இந்திய நாடுகளுக்கு இடையிலான கலாசார விழாவாகக் கொண்டாடப்படும் கச்சதீவு புனித அந்தோனியார் >> 06

## யாழ்.பல்கலைக் கட்டடத்தின் ஜன்னல்கள் உடைத்துச் சேதம்

மறு அறிவித்தல்வரை மூடப்பட்டது கலைத்துறை



யாழ்ப்பாணம், மார்ச் 12
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதலாம் வருட மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நேற்று இடம்பெற >> 52




வாழ்க்கையில் முன்னோக்கிச் செல்லும் பெண்கள் உங்களுக்காக...
SDB உத்தமி
சேமிப்பு அதிர்ஷ்டம்
ரூ.5,000/- இற்கு
ரூ.10,000/- இற்கு
ரூ.15,000/- இற்கு
6%
2017 மார்ச் 01 ஆம் திகதி தொடக்கம்
011 5 411 411
SDB வங்கி
Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இறால் பிடிக்கச் சென்றவர் நேற்றுச் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, மார்ச் 12

கிளிநொச்சி, சுண்டிக்குளம் பகுதியில் இறால் பிடிப்பதற்காகச் சென்ற நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனத் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். கிளிநொச்சி கண்ணகிநகரைச் சேர்ந்த செ.செல்வகுமார்(வயது32) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் காலை வீட்டில் இருந்து இறால் பிடிப்பதற்காகச் சென்ற இவர் மாலை வரை வீடு திரும்பவில்லை. இதனை அடுத்து தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. குறித்த நபர் சடலமாக காணப்படுவதாகத் தருமபுரம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

குறித்த சடலம் நீதிவான் பார்வையிட்ட பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படும் எனத் தருமபுரம் பொலிஸார் கூறினர். (த-6)

# பன்னங்கண்டி மக்களின் போராட்டம் தொடர்கிறது

கிளிநொச்சி, மார்ச் 11

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பன்னங்கண்டிப் பிரதேச மக்கள் நேற்று எட்டாவது நாளாகவும் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாம் குடியிருக்கும் காணிகளுக்கான அனுமதிப்பத்திரம், வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இயற்கை எழில் மிக்க கிராமமே பன்னங்கண்டி கிராமம். 1970 இற்கு பிற்பட்ட காலப் பகுதியில் மலையகம் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கலவரம் காரணமாக வடக்கு நோக்கி வந்தனர்.

இவ்வாறு வந்த மக்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் அதிகளவில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். கிளிநொச்சி பன்னாங்கண்டிப் பகுதியில் இன்று அடிப்படை உரிமைகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் மக்களும் இதற்கு விதிவிலக்கல்ல. அதிகாரிகளின் பாராமுகம், அரசியல்வாதிகளின் நழுவல் தன்மை, மனிதாபிமானமற்ற மனிதநேயம் ஆகியவற்றால் இன்றும் பன்னங்கண்டி மக்கள் போராடுகின்றனர்.



1990ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் காணியற்ற மக்களுக்குப் பல்வேறு பகுதிகளிலும் காணிகள் வழங்கப்பட்டன. இதன் போது இந்தப் பகுதி மக்களுக்கும் காணிகள் வழங்கப்பட்டன. குறித்த பகுதியில் பசுபதி கமம் என அழைக்கப்படும் இடத்தில் சுமார் 65 குடும்பங்களைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட மக்களும், சரஸ்வதி கமம் என அழைக்கப்படும் இடத்தில் 106 குடும்பங்களைச் சேர்ந்த 400 மேற்பட்ட மக்களும், ஜொனி குடியிருப்பு என அழைக்கப்படும் பகுதியில் 16 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 60 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றன.

சுமார் 27 வருடங்களாக வாழ்ந்துவரும் இந்த மக்களுக்கு இன்றுவரை உரித்துக் கொள்வதற்கு எவ்வித காணிகளும் இல்லாத நிலை காணப்படுகின்றது. தேர்தல் காலங்களில் வாக்குகளுக்காக அரசியல் வாதிகளால் ஏமாற்றப்படும் இந்த மக்கள், நாதியற்ற நிலையில் தற்போது போராடி வருகின்றனர். (த-6-34)

# பழையகாற்றைக் கழற்றிப் போட்டு புதுக்காற்று அடிக்க வேணும்



அம்பலத்தாடி
அப்புச்சி
aappuchchi@gmail.com

சனிக்கிழமை அன்றைக்கு மகள், பேரப்பிள்ளை எல்லாருக்கும் ஏதோ அதிசயமா நேரம் கிடைச்சுது. பின்ன எல்லாருமா செல்வச்சன்னதிக்குப் போய் வருவம் என்று வெளிக்கிட்டம். மருமகன் காரை எடுக்க, சில்லுகளுக்கு காத்துக் கொஞ்சம் குறைவா இருந்திச்சுது. கனகாலம் காரை வெளியில எடுக்காமல் கராச்சில விட்டதால அதுக்குள்ள எலிகள் குடி கொண்டு அட்டகாசப்படுத்திப் போட்டுதுகள். நாத்தம் தாங்க முடியேல்ல பிறகு கழுவித் துடைச்சு ஒருமாதிரி வெளிக்கிட்டம்.

உடையவன் கவனக்குறைவா இருந்தா வேறஏதும் தான் புகுந்து அட்டகாசம் செய்யுங்கள்.தமிழ்ச்சனம் பேசாமல் இருக்க பெருச்சாளியள் ஏறிநின்று ஆடுறது போலத்தான் என்று மனசுக்க நினைச்சன். உடையவன் இல்லையென்றா எல்லாம் ஒரு முழும் கட்டைதான்.

மருமகன் பெடியன் காரை விட்டிட்டு வேலை விசயமா இரண்டு மாதம் வெளியில போயிருந்தவர். எங்களுக்கு கார் அலுவல் தெரியுமே! நாங்கள் கிட்டப் போறதில்லை. ஆளில்லையென்ற துணிவில பெருச்சாளிகள் பூந்து விளையாட்டுக் காட்டிப் போட்டுதுகள். ஏ.சி. வரமாட்டனென்று போட்டுது. ஏனென்று பார்த்தா ஏதோ பில்ரராம் அதுக்குள்ள பெரிச்சாளியள் தும்பு துகள்களைக் கொண்டு போய்ப் போட்டிருக்கு.

சன்னதிக்கு வெளிக்கிட்டது ஒரே சன்னதமாப் போச்சுது. சரியென்று ஒருமாதிரி சரிப்படுத்தி வெளிக்கிட்டு போய் இடையில சில்லுகளுக்கு காற்றுப் பார்ப்பமென்று சின்னவன்ர ரயர் கடையில நிப்பாட்டி மருமகன் இறங்கினார். சின்னவன் காற்றடிக்க வயரை இழுத்துக் கொண்டு வந்து பிடிக்கத் தொடங்கினான்.

அப்ப கடையிக்க புத்தப் புது மிசினொன்று பளிச்சென்று மின்னிச்சு. ரயர் கடையென்றா சொல்லவே வேணும் சுவரெல்லாம் கறுப்புப் படலம் அதில பளிச்சென்று ஒரு மெசின் நின்றா கண்ணுக்க குத்தும்தானே! பொக்கவாய் கிழவிக்கு பல்லுக்கட்டின மாதிரி என்று சொல்லுங்கோவன்.

அதைப் பார்த்திட்டு நான் போய்க் கேட்டன் "அது என்னது? புதிசா ஒன்றை வைச்சிருக்கிறியள்?" சின்னவன் சொன்னான் "இதுதான் அப்புச்சி நைற்றிஜன் காத்து. இப்ப எல்லாரும் விரும்பி இதைத்தான் கேட்கினம். அதுதான் ஒன்று வாங்கி வைச்சிருக்கிறன். இதை அடிச்சா நல்ல கூலா இருக்குமாம். ரயர் கனகாலம் பாவிக்[illegible] எஸ் ரயருக்குத்தான் இது சரி. [illegible] செற்பண்ணி அடிச்சா அக்குரேட்டா அதில வந்தவுடன சரியா நிற்கும் என்றான்.

இதைக் கேட்டவுடன என்ர மருமகன் கேட்டார் எங்கட ரயருக்கும் அடிக்கலாமோ? ஓம் ஓம் இப்ப இருக்கிற காற்றக் களற்றி விட்டிட்டு இந்த நைற்றிஜன் காற்றை ஏத்துறதுதான் வேலை என்று அவன் ஆர்வத்தத் தூண்டுறமாதிரி கதைச்சான். "ஒரு இரண்டு நிமிச வேலை" என்றான். "உதுக்கு எவ்வளவு முடியும்?" இது நான். நாலு சில்லுக்கும் கிடந்த காற்ற கழற்றி புதுசா நைற்றிஜன் காற்று அடிக்க இருநூறு ரூபா முடியும் பிறகு ஒவ்வொருக்கா அடிக்க ஒரு சில்லுக்கு முப்பது ரூபா எடுப்பம்.

"எல்லாம் செலவுக்கந்தாயம்தான். இப்ப சில்லுக்க கிடக்கிற காற்றே கிடக்கட்டும். செலவும் குறைவு தானே!" நான் அதைச் சொல்லிப் போட்டு காருக்க வந்து ஏற மருமகன் சொன்னார், "எல்லாரும் ஒருக்கா இறங்கி நில்லுங்கோ! இரண்டு நிமிசத்தில காத்தை மாத்திப் போட்டுபோவம்." எனக்கு ஒரு மாதிரியாப்போயிட்டுது. என்னமோ நடக்கட்டும் என்று பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தன்.

நாங்கள் பழசுகள், பழசுகள்தான் வேணுமென்று நிற்பபம். இளசுகள் புதுசு புதுசா வாறதுகளை நோக்கி வேகமா ஓடுகினம். என்ர மருமன் ஒரு எடுபட்ட பேர்வழி. ஈசியா எதுக்கும் எடுபட்டிடுவார். ஏமாத்திப் போடுவாங்கள். அதைச்சொன்னாலும் கோவம் வரும். நான் இடையில கதைச்சா பிரச்சினையாப் போயிடுமென்று போட்டு பேசாமல் பம்மிக் கொண்டிருந்திட்டன்.

பிறகு சன்னதியான கும்பிட்டு மணல்ல கொஞ்சம் நிம்மதியா அமர்ந்திருக்க என்னைக் கண்டிட்டு அந்தப் பகுதி மூத்த பத்திரிகையாளர் ஒருத்தர் ஓடிவந்தார். அவர் கிட்ட வரேக்கையே குலை நடுங்கத் தொடங்கிட்டுது. அந்தாள் தொடங்கிச்சுதென்றா இன்றைக்கு விடாது. நிம்மதிக்கு சன்னதிக்கு வந்தா, இன்றைக்கு நிம்மதி போச்சுதென்று நான் மனதுக்க கறுவிக்கொள்ள, அந்தாள் கிட்ட வந்து என்ன "அப்புச்சி இந்த நேரமா எங்கட பக்கம் வந்திருக்கிறாய்?" என்று கதையை தொடக்கினான் பாவி. "ஓம்! ஓம்! நேரத்தோட வெளிக்கிட்டது. காரை கிளீன் பண்ணி வெளிக்கிட்டு பிறகு ரயர் கடையில பழைய காத்தத் திறந்து புதுக்காத்தடிச்சு வரச் சுணாங்கிப்போயிட்டுது." நான் சொல்லி முடிக்க முன்னமே "இப்ப எல்லாற்ற காத்தும் கழண்டு போய் ரிம்மிலதானே ஓடுகினம். முந்தி புலிகளிண்ட காலத்திலதான் காத்துக்கழற்றிப்போட்டாங்களாம் என்றாநல்லா விளங்கும்." என்றார்.

அப்ப, பொடிப்பிள்ளையளப் புலியள் பொறுப்புக்குப் போட்ட உடன விறுசா மோட்டார் சயிக்கிள் ஓடி விலாசம் காட்டுவினம் .பிறகு கொஞ்சக்காலம் ஆக்களைக் காணக்கிடைக்காது பிறகு சைக்கிள்ள வலிச்சுக் கொண்டு திரிவினம். அவையளப் பார்த்து காத்துக்க [illegible] என்று சொல்லுறவையள். இந்தாள் [illegible] காலத்தை இழுக்கிறான் பாவி என்று நினைச்சுக்கொண்டே பதிலுக்கு "ஓம்! சிலபேருக்கு வால்கட்டையையும் சேர்த்து பிடுங்கிப்போட்டாங்கள் என்று சொல்லுறதைக் கேட்டுருக்கிறன்" என்றன் நான்.

"காத்துக்கழற்றி ரிம்மில ஓடுற நிலைமைதான் இப்ப எங்கட அரசியல்வாதிகளிண்ட நிலை பாருங்கோ. கூட்டமைப்புக்க ஒரே புடுங்குப்பாடாம். ஐ.நா. தீர்மாத்தில கால அவகாசம் கொடுக்கிறதென்று ஒரு பக்கம் மற்றது கொடுக்க வேண்டாம் என்றும் இன்னொரு பக்கம் மாறி மாறி கையெழுத்துப் போட்டு புடுங்குப்படுகினமாம். அதுக்கு காத்துப் போய் சைக்கிள்ள ரிம்மில ஓடுறவை கொஞ்சப் பேர் வெளியில இருந்து தூபம் போடுகினமாம். இத்தோட தமிழரசுக் கட்சி உடைஞ்சு குட்டை குழம்பும் மீன் பிடிக்கலாம் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கினமாம்" என்று மூச்சுவிடாமல் கதைச்சுப்போட்டு கொஞ்சம் மூச்செடுத்தான். இந்த இடைவெளிக்குள்ள நான் "உண்மையோ" என்றன்.

"பேப்பருகளைப் பார்க்க தெரியேல்லையே! அதுகளும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில நிக்குதுகள் எங்கட காலத்தில அப்பிடியில்லை" என்றான். "ஐ.நா மனித உரிமை சபைக்கு கடிதங்கள் பல பேர் போடுகினம் கனசனம் நேர்மையா தமிழனுக்கு ஏதாவது நல்லது நடக்க வேணும் என்று கடிதங்கள் எழுதுதுகள் பாவங்கள் அதுகள். சரியான சின்சியரா நிக்குதுகள். இங்க காத்துப்போய் ரிம்மில சைக்கிள் ஓடுறதுகள். பம்மாத்துப்பண்ணி காரியத்தைக்கெடுக்கப்பாக்குதுகள். தமிழரசுக்கட்சியை உடைக்கிறது தான் இதுகளின்ர நோக்கமல்லாமல் சிங்களவன் திட்டமிடுகிறதுக்கு என்ன செய்யிறதென்று யோசிக்கிறாங்களில்லை. பொது எதிரியை விட்டிட்டு தமிழனும் தமிழனும் மோதுறது தானே காலங்காலமா நடந்தது. இதாலதானே தமிழன் அடிமையானவன் இது எங்களுக்கொரு சாபக்கேடு. எங்களுக்க கொம்பு சீவி கொழுவிவிட்டு தங்கட காரியங்களைப் பார்க்கிறாங்கள். இதுகள் தங்கட அற்ப சொற்பத்துக்காக அவன் வகுத்த திட்டத்தை வடிவாச் செய்யுதுகள். எங்கட அரசியல்வாதியள் எல்லாற்றை காத்துக் கறுப்பையும் கழற்றிவிடவேணும் அப்பதான் விடிவு வரும்." மூச்சுவிடக் கொஞ்ச நேரம் எடுக்கேக்கத் தான் கொஞ்சம் மூச்சுவிட்டான் பாவி.

"காருக்கு நைற்றிஜன் காத்தடிக்கிற மாதிரி ஏதாவது புதுசா நடக்கவேணும். அதுக்கு உந்த மீடியாக்காரர் விழிக்கவேணும். ரிம்மில ஓடுறதுகளை நம்பியெல்லே மீடியாக்காரர் எல்லாம் சீவிக்கினம். அதை முதல்ல நிப்பாட்டினா நல்ல நைற்றிஜன் காத்தை ஏத்தலாம்" என்று போட்டு நான் எழும்ப அவன் சொன்னான் "என்ர முப்பது வருசகால பத்திரிகை வாழ்க்கையில எந்த அரசியல்வாதியையும் நம்பி சீவிக்கேல்ல" என்றான். "நான் உன்னைச் சொல்லேல்ல. பொதுவாச் சொன்னனான்" என்று சமாளிச்சுப்போட்டு வந்திட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌர்ணமி கலைவிழா இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 12
தீவக வலயக் கல்வி அலுவலக பௌர்ணமிக் கலைவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புங்குடுதீவு சர்வோதய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன் கலந்து கொள்வார். (து-10)

# சங்கிலியன் பூங்காவில் மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச் 12
யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையம் நடத்தும் "பெண்களுக்கான பொருள் ஈட்டும் வாய்ப்பை மேம்படுத்தி சமத்துவம் பேணுவோம்" என்னும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ள மகளிர் தின நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குச் சங்கிலியன் பூங்கா நல்லூரில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஜப்பான் கச்சுயின் பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபரும் இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளருமான செவாலியர் திருமதி சிவயோகநாயகி இராமநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (து-10)

# ஹெரோயின் வைத்திருந்தவர் மறியலில்

யாழ்ப்பாணம்.மார்ச் 12
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 2 கிராம் 38 மில்லிக்கிராம் ஹெரோயின் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதானவரை இந்த மாதம் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹெரோயின் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் ஒருவரைக் கைது செய்து நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்தியபோது பதில் நீதிபதி வி.ரி. சிவலிங்கம் அவரை இந்த மாதம் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (து-ரி)

# போராடும் மக்களை மிரட்டிய பொலிஸார்



முல்லைத்தீவு, மார்ச் 12
வீதியில் உள்ள கொட்டகையை இடமாற்றுங்கள். விபத்து ஏற்பட்டால் பொலிஸார் வழக்குப் பதிவு செய்யமாட்டார்கள் எனக் கேப்பாப்பிலவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடம் அச்சுறுத்தல் பாணியில் தெரிவித்துள்ளனர் முள்ளியவளைப் பொலிஸார்.
கேப்பாப்பிலவுக் கிராமத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிக்கக் கோரி 11 ஆவது நாளாகத் தொடர்அறவழிப் போராட்டம் நடக்கிறது. அது நேற்று முதல் உணவு தவிர்ப்புப் போராட்டமாக மாறியது. உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்காகப் புதியதொரு தகரக் கொட்டகை நேற்று மாலை 3.30 மணியளவில் அமைக்கப்பட்டது.
இதன்போது சம்பவ இடத்துக்கு வந்த முள்ளியவளைப் பொலிஸார், வீதியின் இரண்டு பக்கமும் கொட்டகைகள் அமைக்கவேண்டாம். ஒரே பக்கத்தில் மட்டுமே அமையுங்கள் எனக் கூறியுள்ளனர்.
உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் வெயிலில் இருக்க முடியாது. அவர்களுக்கு ஏற்ற இடமாக இந்த இடமே உள்ளது. நாங்கள் இந்த இடத்தை விட்டு அகலமாட்டோம் எனப் போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.
இதனை அடுத்து இந்த இடத்தில் ஏதாவது விபத்துக்கள் ஏற்பட்டால் பொலிஸார் முறைப்பாடுகளைப் பதிவு செய்யமாட்டார்கள் எனத் தெரிவித்துவிட்டுச் சென்றுள்ளனர். (து-7)



# ஏமனில் வான் தாக்குதல் 26 பேர் பரிதாபச் சாவு

ஏடன், மார்ச் 12
ஏமனில் நேற்றுக் காலை (இலங்கை நேரப்படி) நடத்தப்பட்ட வான் தாக்குதல் ஒன்றில் 26 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 20 பேர் ஹௌதி ஆயுதக் குழுவினர் என்றும் 6 பேர் பொதுமக்கள் என்றும் ஏமன் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
கோகோ பகுதியில் உள்ள சந்தைத் தொகுதி ஒன்றிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதல் நடத்தியது ஏமன் அரச படையா அல்லது சவூதி தலைமையிலான கூட்டுப்படையா என்பது தொடர்பின் உத்தியோகபூர்வமான தகவல்கள் வெளியாகவில்லை. எனினும், சவூதிக் கூட்டுப்படையே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.
கடந்த 2015 ஆம் ஆண்டு ஆரம்பமான மோதலில் இதுவரை 7 ஆயிரத்து 400 பேர் சாவடைந்துள்ளனர். 40 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அண்மைய அறிக்கை ஒன்று சுட்டி நிற்கிறது. (ம)

# கருணாவின் புதிய கட்சிக்கு கல்லடியில் தலைமையகம்



கொழும்பு, மார்ச் 12
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து மகிந்தவுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் கருணா அம்மான் தனது கட்சியான, தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணிக்குத் தலைமை அலுவலகத்தை மட்டக்களப்பு கல்லடியில் நேற்றுத் திறந்து வைத்தார்.
திறப்புவிழா நிகழ்வில் முன்னணியின்பொதுச் செயலாளர் வி.கமலதாஸ், அம்பாறை மாவட்ட உறுப்பினரும்,முன்னாள் கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான நவரட்ணராஜா, பரப்புரைச் செயலாளர் திருமதி உருத்திரமலர் ஞானபாஸ்கரன், பிரதித் தவிசாளர் சோமசுந்தரம் சிறிகரன் உட்பட முன்னணியின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அதன்போது முன்னணியின் மத்திய குழுக் கூட்டமும் இடம்பெற்றது.
வடக்கு,கிழக்கு,மலையகம் சார்ந்த பிரதிநிதிகள் கட்சியின் முன்னெடுப்பு பற்றிய மீளாய்வு,கட்சியின் கொள்கைகள் பற்றிய ஒரு பார்வை,சமகால ஜெனிவா நிகழ்வுகள் பற்றிய ஒரு பார்வை,கட்சியின் அங்கத்தவர்களின் ஒழுக்கம் சார்ந்த விடயங்கள், எதிர்வரும் மாதத்தில் வன்னி, கொழும்பு காரியாலயங்கள் திறப்பது பற்றிய தீர்மானம், ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்குப் பொறுப்புக்கள் வழங்கல் போன்ற பல்வேறு முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாக முன்னணியின் பொதுச் செயலாளர் வி.கமலதாஸ் தெரிவித்தார். (து-4)

# பனை வெல்லம், பனம்பாணி உற்பத்திக்குப் பெரு வரவேற்பு

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லம், பனம்பாணி மற்றும் பதநீருக்கு அமோக வரவேற்புக் கிடைத்துள்ளது.
தினமும் பெருமளவு தென்னிலங்கை வர்த்தகர்களும், புலம்பெயர் தமிழர்களும் இவற்றை ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வருவதைக் காணமுடிகிறது.
கடந்த வருடம் மழைவீழ்ச்சி குறைவாகக் காணப்பட்டதால் ஜனவரி மாதத்தில் பனை மரங்களில் பாளை வெளிவரத் தொடங்கியது. இதனையடுத்து பனங் கள் உற்பத்தி தொடங்கியது. கள் உற்பத்தியும் அதிகரித்துள்ளதையடுத்து முன்கூட்டியே போத்தலில் கள் அடைக்கும் பணிகளையும் பனை வெல்ல உற்பத்தியையும் பெப்ரவரி மாதத்தில் சங்கத்தினர் ஆரம்பித்தனர்.
தென்பகுதி வர்த்தகர்களும் புலம்பெயர் நாடுகளிலிருந்து வந்தவர்களும் பதநீரில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பனம்பாணி வழங்குமாறு கோரியதையடுத்து பனம்பாணி உற்பத்தியும் ஆரம்பிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
பனம் கற்கண்டு உற்பத்தி செய்வதற்காகப் பனம்பாணியைக் கொள்வனவு செய்கின்றோம் எனத் தென்பகுதி வர்த்தகர்கள் தெரிவித்தனர்.
அத்துடன் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லத்துக்குத் தென்பகுதியில் கிராக்கி காணப்படுவதால் அவற்றைக் கொள்வனவு செய்ய வர்த்தகர்கள் கோரிக்கைகளை வழங்கிவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
சங்கத்தில் பனை வெல்லம் கிலோ 700 ரூபாவாகவும், பனம்பாணி போத்தல் 500 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
இதேவேளை, தென்மராட்சிப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பதநீர் விற்பனையும் அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. புலம்பெயர்ந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் விரும்பி வாங்கும் பானமாக பதநீர் காணப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது. (து-9)

# மெழுகுதிரிக் கூடுகள் கச்சதீவில் தீப்பற்றின



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய விழாவில், மெழுகுதிரிகள் ஏற்றி வைக்கப்பட்ட இடத்தில் நேற்றிரவு 9.45 மணியளவில் திடீரெனத் தீப் பிடித்தது.
மெழுகுதிரிகள் ஏற்றுவதற்கென 2 இடத்தில் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு இரண்டு கூடுகள் வைக்கப்பட்டன. பக்தர்கள் தத்தமது நேர்த்திகளை நிறைவேற்றி மெழுகுதிரி ஏற்றி வழிபாடு செய்தனர். அவ்வாறு ஏராளமான மெழுகுதிரிகள் பக்தர்களால் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன.
அதன்போது திடீரென இரண்டு கூடுகளும் தீ பற்றி எரிந்தன. அங்கு இருந்த தீ அணைக்கும் கருவிகளால் தீ அணைக்கப்பட்டது. தீ பற்றியதால் அங்கிருந்த பக்தர்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது. (து-4-8)

# தென்னைப் பயிர்ச் செய்கை விழிப்புணர்வு நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 12
காவேரிக் கலாமன்றமும் தெங்கு அபிவிருத்திச் சபையும் இணைந்து நடத்தும் தென்னைப் பயிர்ச் செய்கை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்குச் சுழிபுரத்திலுள்ள காவேரிக் கலாமன்ற அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.
தெங்கு அபிவிருத்திச் சபையின் வலிகாமம் வலய இணைப்பாளர் எஸ். ஜெகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், தெங்கு அபிவிருத்திச் சபையால் மக்களுக்குக் கிடைக்கப் பெறும் உதவித்திட்டங்கள் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்படும்.
தெங்கு அபிவிருத்திச் சபையில் அங்கத்துவம் பெறும் பயனாளிகளுக்கு அன்றைய தினம் இரண்டு தென்னம்பிள்ளைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன. (து-10)

# மீன் தொட்டி வீழ்ந்ததில் 2 வயதுச் சிறுவன் காயம்

யாழ்ப்பாணம்.மார்ச்12
2 வயதுச் சிறுவன் மீது மீன்தொட்டி விழுந்ததில் தோள் மூட்டில் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான்.
யாழ்ப்பாணம் நல்லூரடியில் நேற்றுப் பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. வீட்டில் சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தபோதே மீன்தொட்டி தோள் மூட்டில் விழுந்து கண்ணாடித் துண்டுகள் வெட்டிக் காயமடைந்தான். (து-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனை

பருத்தித்துறை வியாபாரி மூலை மையிலன் பேக்கரிக்கு முன் ஒழுங்கையில் 200m தூரத்திற்குள் தச்சன் ஓலை பெயர் கொண்ட பனைமரங்களுடன் ஆன நான்கு பக்கமும் தூண் போட்டு முட்கம்பியால் அடைக்கப்பட்ட 07 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**076 809 5014**

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ் மாவட்டத்தில் முன்னணியில் இயங்கி வரும் எமது தொழிற்சாலையில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

01. கணினி இயக்குநர் (பெண்/ஆண்)
02. தரக்கட்டுப்பாட்டாளர் (பெண்/ஆண்)

தகுதியுடையோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

**077 250 2543**

## Chemistry Personal Classes (Tamil/English)

Basic, inorganic, Organic, Physical, கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் B.Sc (cey) M.Sc (cey) Chemistry கற்பிக்கப்படும்.

**075 046 0555**

## வாடகைக்கு

நல்லூரில் சிறிய அனெக்ஸ் வாடகைக்கு உண்டு.

**- 011 236 2611**


# நாடாளுமன்றத் தடை திட்டமிட்ட நடவடிக்கை

**தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்**

கொழும்பு, மார்ச் 12

நாடாளுமன்றத்துக்கு செல்வதற்கு ஒரு வார காலம் தடை விதிக்கப்பட்ட நடவடிக்கையானது ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒன்று என கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த தடையின் பின்னால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உள்ளார். நாடாளுமன்றத்திலுள்ள 52 உறுப்பினரைப் புறக்கணித்து 16 உறுப்பினர்களைத் திருப்திப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவது கவலையளிக்கின்றது.

நாடாளுமன்றத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்கு முன்னர் கட்சித் தலைவர்களை சபாநாயகர் அழைத்து கலந்துரையாடுவார். எனக்கு எதிரான தீர்மானம் எடுக்கப்பட்டபோது நாடாளுமன்ற நடைமுறை சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் ஆபத்தான நிலைக்கு சென்றுகொண்டிருக்கின்றது. நாடாளுமன்றத்துக்குள் பொலிஸாரை அழைப்பது என்பது பயங்கரமான ஒன்று.

ஏதும் நடந்ததற்குப் பிறகு அழுவதை விடவும், வரமுன்னர் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றே நாம் கூறுகின்றோம் - என்றார். (ற-10)

# புதிய கட்டடம் திறப்பு

தென்மராட்சி, மார்ச் 12

மட்டுவில் வடக்குப் பிரதேசத்துக்கான ஆரம்ப சுகாதார நிலையத்துக்கான புதிய கட்டடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

மட்டுவில் வடக்கு வேற்பிள்ளை சனசமூக நிலையத்தினரால் கட்டடம் அமைப்பதற்குரிய காணி வழங்கப்பட்டது. சுகாதார திணைக்கள நிதிப் பங்களிப்புடன் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.

யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் க.நந்தகுமாரன் புதிய கட்டடத்தைத் திறந்தார். (ற-9)


## இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg) மொத்தமாகவும் (ரூபா. 100), சில்லறையாகவும் (ரூபா. 110) பெற்றுக்கொள்ளலாம்

**சிவா நறுமணப் பூங்கா**
**இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**(சத்திரச் சந்திக்கு அருகில்)**

## பாதுகாப்பு சேவை

பாதுகாப்பு சேவை கம்பனிக்கு கொழும்பில் வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள அனுபவமற்ற O.I.C, J.S.O ஆள்கள் உடன் தேவை. சம்பளம் - 35 000/= வரை. சாப்பாடு குறைந்த விலையில். தங்குமிடம் இலவசம். சிங்கள அறிவுக்கு முன்னுரிமை.

**தமிழில் தொடர்புக்கு -**
**071 244 6926, 011 287 1280**

## ENGLISH CLASSES

1 - 11 வரையான மாணவர்கள் O/L. A/L படித்துமுடித்தவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்கவிரும்பும் அனைவருக்கும் உங்கள் வீடுகளில் வந்து இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.

*விசேடமாக புலமைப்பரிசில் மாணவர்கள், O/L பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு (ஆங்கிலம்) கடந்தகால வினாத் தாள்களுடன் கற்பிக்கப்படும்.

**077 005 9284**

## வீடு விற்பனைக்கு

மட்டக்களப்பு நகரில் 3ஆம் குறுக்குத்தெருவில் 8.89 பேர்ச் காணியில் 03 படுக்கையறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

RE/MAX RANUSHAN 0765480685
(Call 9.00am - 9.00pm)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் கோயிலிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் வலிக்கண்டி என்னும் பிரதேசத்தில் **"மடல் வெளிக்குளம்"** என்றழைக்கப்படுவதும். **நிலபரப்பு ஏக்கர் 9 பரப்பு 6 விஸ்தீரணமுடையதுமான** காணி விற்பனைக்குண்டு. இக்காணியில் பனைகள், தென்னைகள், கிணறு மற்றும் பாதிப்படைந்த கட்டடங்கள் இரண்டும் உள்ளன. காணிக் கொள்ளவனவு தொடர்பான தொடர்பாடல்களுக்குத் தரகர்கள் வேண்டாம்.

(ABICS0013)(12.18)

**நேரடித் தொடர்புக்கு:**
**077 491 0183, 071 154 0891**

## விற்பனைக்கு

மட்டுவில் தெற்கு நெணியன்குளம் வீதி. சாவகச்சேரியில் அமைந்துள்ள 9பரப்பு வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

**077 746 0650/ 011 233 3102**

## விற்பனைக்குண்டு (3 Cube)

| | | |
|---|---|---|
| 6"X 9" | - 23,000/= | (அத்திபாரக்கல்) |
| 1" | - 32,000/= | கருங்கல் |
| ¾" | - 35,500/ = | கருங்கல் |

T.P.077 239 2626 / 076 886 8941

## விற்பனைக்கு

கொழும்பு - 4. ஆடம்பரமான புதிய தொடர்மாடி மனை விற்பனைக்கு. 4 வீடுகள் மட்டுமே உறுதியுடன் விற்பனைக்கு உண்டு. 3 படுக்கையறைகள், பணியாளர் அறை, 1525 - 1625 sqft A/C 24 மணித்தியால பாதுகாப்பு, Gym, வாகன தரிப்பிடம். விலைமதிப்பு - 35-38 million

**Rushen - 077 208 8986**

## வீடும் காணியும் விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் உரும்பராய் பலாலி வீதிக்கு அண்மையாக சிவன் வீதியில் மூன்று படுக்கை அறையுடன் கூடிய பாவனையிலுள்ள வீடும் அத்துடன் சேர்ந்த 4 - 1/2 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0775 391 887, 0771 314 137

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983ஆம் ஆண்டு பிறந்த 7இல் செவ்வாய்/கிரக பாவம் 66½ Hotel management படித்து Hotel துறையில் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**077 656 9685**

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

யாழ்நகரில் இயங்கிவரும் பிரபல தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு விற்பனைப்பிரதிநிதிகள் தேவை. O/L தகுதி போதுமானது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். பயிற்சியுடன் 35000/= அதிகமாக சம்பளம் பெறும் வாய்ப்பு

**தொடர்பு: 078 500 2004**
Hutch old post office Road.

## இனி இல்லை மூட்டுவலி

### மூட்டுகளில் வலி, இறுக்கம், வீக்கம்

அடிபட்ட காயங்கள், தொற்றுக்கள் என்பவற்றினால் முழங்கால், இடை, முழங்கை, தோள்பட்டை, விரல்கள் ஆகியவற்றில் உட்புறத்தில் ஏற்படும் சிராய்ப்புக்கள், கிழிசல்கள் காரணமாக இவை ஏற்படுகின்றன.

ஒஸ்ரியோ ஆர்த்தரைடீஸ், யூரிக் அமிலப்படிவுகள், எஸ்.எல்.ஈ, வாதமூட்டழற்ச்சி, முள்ளந்தண்டு அழற்ச்சி, மென்சவ்வுகளில் ஏற்படும் அழற்ச்சி மூட்டுகளில் வலிக்கான காரணிகளாகும்.

மூட்டுகளில் ஏற்படும் பிரச்சினைகளை எமது சிக்கலற்ற ஆயுர்வேத சிகிச்சை மூலம் வலி, வீக்கம் என்பனவற்றை நீக்கி விரைவாக குணப்படுத்தும்

**Hotline: 0777555600**
**0777708310**
**0777708330**




**FAIR PHARMA (PVT) LTD**

செலிங்கோ ஹவுஸ், 10வது மாடி கிழக்கு, இல:69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01.

**Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102**

Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

## வேலைவாய்ப்பு

1. Technical Officer (NCT(Civil)- 3 years Experience or Equivalent)
2. படவரைஞர்- Certificate in Draughtsman and **AutoCAD 2D, 3D** With Quantity surveying Experience

Your **CV** and **Covering letter** must be send Before 17th March 2017

No-207, Navalar Road, Jaffna.
E.Mail- vacancynsc@gmail.com
**077 712 0945, 021 221 3663**

## பெண் காசாளர் தேவை

வவுனியா மெற்றோ ரேட்ஸ் (Metro trades) மின்சாரப் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு கம்பியூட்டர் மற்றும் ஆங்கில அறிவுடன் கூடிய பெண் காசாளர் ஒருவர் தேவை.

**தொடர்புகளுக்கு: விமல் மெற்றோ ரேட்ஸ்**
**071 408 5016**

## ALTO CAR உடன் விற்பனைக்கு

45500 km தூரம் ஓடிய கறுப்பு நிற Alto car (ko xxxx) உடன் விற்பனைக்கு உண்டு.

**077 522 6462**

## MAJESTIC CINEPLEX

A CEYLON THEATRES CINEMA Jaffna

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 10.00 / 1.00 / 4.00 / 7.00 — வெள்ளி/சனி/ஞாயிறு 9.30 PM




சில்வர் 10.15 AM / 1.15 PM / 4.15 PM / 7.15 PM — வெள்ளி/சனி/ஞாயிறு 9.30 PM




ப்ரொன்ஸ் 10.30 / 1.30 / 4.30 / 7.30 — வெள்ளி/சனி/ஞாயிறு 9.30 PM

**விசாரணை ☎ 021- 2227712**

MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## வாடகைக்கு வீடு, கடை தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீடு, கடை வாடகைக்குத் தேவை. பிற பகுதிகளும் ஏற்கப்படும்.

**071 524 3245**

## தேவை

நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு அண்மையில் 55 வயதுடைய ஆண் ஒருவருக்கு தங்குவதற்கு வசதியான (Attach Bathroom/Toilet உடன்) ஒரு அறை தேவை. தொடர்பு கொள்ளவும்.

**077 735 5428**

## சிறுநீரக நோயாளிக்கு பண உதவி தேவை

விழி சிட்டியைச் சேர்ந்த S.வெள்ளையம்மா ஆகிய எனது சகோதரி எஸ்.மகேஸ்வரி சிறுநீரக மாற்றுச் சிகிச்சை பெற வேண்டிய நிலையில் சிறுநீரகம் தேவை. பண உதவி செய்யக் கூடிய பரோபகாரிகளிடமிருந்து நிதி உதவியை எதிர்பார்க்கின்றோம்.

**வங்கிக் க/கு.இல- 0090 2061 4794,**
**தொ.பே.இ. - 077 859 1286**

## பதவி வெற்றிடம்

2015ம் ஆண்டில் தேசிய தர விருதுகளைப் பெற்றுள்ள AB செகியூரிடாஸ் தனியார் நிறுவனம் அபான்ஸ் குழுமத்திற்கு சொந்தமான நிதி சேகரிப்பு முகாமைத்துவம் தொடர்பான இலங்கையின் முன்னணி நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் பின்வரும் வெற்றிடத்திற்கான பணியாளர்கள் தேவை.

### பண உதவியாளர்கள் (பெண்)

**தேவையான தகைமைகள்:**

* க.பொ.த. சாதாரண தரம் மற்றும் க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல்.
* 18 - 26 வயதிற்கு இடைப்பட்ட திருமணமாகாதவர்கள்.
* அதிகப்பட்ச ஊதியம், தங்குமிட வசதிகள் மற்றும் ஊழியர் சட்டத்திற்கு அமைவான ஏனைய சலுகைகள் வழங்கப்படும்.

**நேர்முகத் தேர்வுகள்:**

2017 மார்ச் 17ம் திகதி மு.ப. 9.30 மணிமுதல் பி.ப. 3.00 மணிவரை ABS குரியர் காரியாலயம், இல.212, பவர் ஹவுஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நேர்முகத் தேர்வுகள் இடம்பெறும்.
(புதிய HNB வங்கி அருகாமையில்)

விசாரணைகளுக்கு: கபிலா - 0775632558 / புவனேந்திரன் - 0710501398

துணை மனிதவள முகாமையாளர்
AB **செகியூரிடாஸ் தனியார் நிறுவனம்,**
**இல. 141, கிருல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05.**

**Abans**
AB Securitas (Pvt) Ltd

## தேவை

யாழ்ப்பாணத்தில் ஹாட்வெயர் ஸ்தாபனத்திற்கு Accounts படித்த (பெண்) கணக்காளர் தேவை அத்துடன் வாகனம் செலுத்துவதற்கும் சாரதி தேவை.

**077 336 3766**

---

வெள்ளவத்தையில் Hamers Avenue வில் நாள், கிழமை வாடகைக்கு 1, 2, 3, 6 அறைகளுடன் கூடிய தனி வீடு Luxury House சகல வசதிகளுடன் (A/C, Fridge, Washing Machine, Hot Water, Cable TV, Kitchen உபகரணங்கள். (CarPark) வெளிநாட்டில் இருந்து வருபவர்களுக்கும் சுப காரியத்துக்கும் மணமகன், மணமகள் வீடாக பாவிப்பதற்கும் மிக உகந்தது. வெள்ளவத்தை Market, Bus Stand இற்கு மிக அண்மையில் உள்ளது

077 766 7511 / 011 250 3552

(சி.27950)

---

வெள்ளவத்தையில் குறைந்த நாள் வாடகைக்கு அறைகளைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள். (800- 3500 வரை)

| UTHAYA REST | THAAS REST |
|---|---|
| 58, HAMERS AVENUE | 391/6, GALLE ROAD |
| WELLAWATTE | WELLAWATTE |
| TEL: 2503552 | 2360515 |
| 2361242 | 2362586 |
| 2360243 | |

Hot Line: 077 766 7511

வெள்ளவத்தை Station, Bus Stand, Market, Hospital ஆகிய இடங்களுக்கு மிக அண்மையில் அமைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாந்தோட்டையை...

தல்களை ஏற்படுத்தும் என்று, இராஜதந்திர வழிமுறைகளின் ஊடாக, இலங்கைக்கு இந்தத் தகவல் பரிமாறப்பட்டுள்ளது.

ஆங்கில ஊடகத்திடம், கொழும்பு அரசின் அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீன நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பான வரைவு உடன்பாடு குறித்து, துறைமுகங்கள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, தனியார் மயமாக்கல் தொடர்பான அமைச்சரவைக் குழுவின் தலைவரான கலாநிதி சரத் அமுனுகமவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## உரிய...

கின்றது. கொழும்பு அரசின் சுற்ற றிக்கையை மீறும் வகையில் நடைபெறும் இந்த நடவடிக்கைக்கு அரச அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத் திட்டம் இந்த ஆண்டு தொடக்கம், கிராமத்துக்கு 5 லட்சம் என்று மாற்றப்பட்டுள்ளது. இதற்குரிய திட்டங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்குள் முடிக்கப்படவேண்டும் எனவும், அடையாளம் காணப்பட்ட திட்டங்களைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் சமர்ப்பித்து பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதி பெறவேண்டும் எனவும், மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் பெறவேண்டும் எனவும் கொழும்பு அரசினால் சுற்ற றிக்கை அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

கிராம மட்டத்தில் அடையாளம் காணப்பட்ட வேலைத் திட்டங்கள் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்படவில்லை. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்கள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடத்தாமையினால், இவை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்படவில்லை.

அதற்குப் பதிலாகப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களிடம், திட்டங்களைச் சமர்ப்பித்து நேரடியாக அனுமதி பெறும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நடவடிக்கை கொழும்பு அரசின் சுற்றறிக்கையை மீறும் செயல் என்று சுட்டிக் காட்டப் படுகின்றது. சுற்றறிக்கையை மீறும் செயற்பாட்டுக்கு அரச அதிகாரிகளும் துணைபோவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)


### மணமகள் தேவை

இந்து சமய கௌரவ குடும்பத்திலுள்ள UK PR உள்ள மணமகன், 36 வயது, சதய நட்சத்திரம் IT தகுதியுள்ள மணமகனுக்கு CIMA, ACCA, Dr. அழகான மணமகள் விரும்பப்படும்.

தொடர்பு: 075 283 9583

### தேவை

வீட்டில் தங்கியிருந்து பிள்ளைகளைப் பார்ப்பதற்கும், பாடசாலைக்கு அழைத்துச் செல்லுவதற்கும் பெண் ஒருவர் தேவை. தனியான தங்குமிடம், சாப்பாடு, மற்றும் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

Dial : 077-6844016

### வீடு வாடகைக்கு உண்டு

உடுப்பிட்டி வடக்கு, நாவலடி ஊரிக்காட்டுப்பகுதியில் (நெற்கொழு விளையாட்டு மைதானம் முன்பாக) சகல வசதிகளுடனான வீடு வாடகைக்கு உண்டு. உடன் தொடர்புகொள்க.

077 522 6462

### 2017ம் ஆண்டிற்கான ஹோமியோபதி பதிவுகள்

நீங்கள் ஹோமியோபதி வைத்தியரா?

அரசு பதிவு செய்யப்பட்ட ஹோமியோபதி பயிற்சியாளர்கள் நிறுவனம்.

உடனடியாக உங்களது விண்ணப்பங்களை 24.03.2017க்கு முன் விண்ணப்பிக்கவும்

தொடர்புகளுக்கு :

செயலாளர்: DR. உதயன்
0771 604 992

தலைவர்: DR. நளின் பெரேரா
0777 333 888

### முதன் முறையாக IELTS பரீட்சை நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் கல்வி நிறுவனம்

BRITISH COLLEGE OF EDUCATION

கல்வி கற்க மற்றும் குடியேற

Now prepare for your IELTS

Do the exam at British College

SPOUSE விசாவில் செல்லவுள்ளவர்களுக்கு

IELTS Life Skills A1 B1

23, Kachcharinallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Street, Mannar. Tel : 023-4924124

Hot Line : 0777-596148

### VACANCIES

பிரபல கல்லூரியின் யாழ் கிளைக்கு

1. ENGLISH TEACHER
2. COMPUTER TEACHER
3. RECEPTIONIST

E-mail மூலம் விண்ணப்பிக்கவும்

BRITISH COLLEGE OF EDUCATION
email.- bcejaffnabranch@gmail.com

### VACANCIES

பிரபல கல்லூரியின் மன்னார், முல்லைத்தீவு கிளைகளுக்கு

1. ENGLISH TEACHER
2. COMPUTER TEACHER
3. BRANCH MANAGER
4. RECEPTIONIST
5. COURSE COORDINATOR

விரும்பும் கிளையினைக் குறிப்பிட்டு email மூலம் விண்ணப்பிக்கவும்

BRITISH COLLEGE OF EDUCATION
email.- britishcollegekandy@gmail

### CANADA , USA study & work visa

Minimum Qualification O/L

- VISA Consulting and Online from filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

Swiss, France
செல்ல வழிகாட்டல்

Royal Visa Consultants & Education Service

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com

Haarini : 0777 493 436
Sharmi : 0777 525 797
Office : 0113 020 892

### வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

நிட்டம்புவ 033 302 19 19
யாழ்ப்பாணம் 033 33 40 142
காலி 033 302 11 11
மாத்தறை 033 302 12 12
அநுராதபுரம் 033 302 13 13
நுகேகொட 033 302 14 14
கம்பஹா 033 302 15 15
நீர்கொழும்பு 033 302 16 16
கண்டி 033 302 17 17
குருநாகல் 033 302 18 18
கிரிபத்கொட 077 325 77 67
இரத்தினபுரி 0333 555 315

DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-18590-01-00
ISO 9001:2008 CERTIFIED

இவ் இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations · ICDL · bcs · abe Accredited College · SQA

#### இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

21, March, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

#### வார இறுதி வகுப்புகள் — 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

19, March, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

#### IELTS

சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

#### KIDS' Class — Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

British Way English Academy

Contact (Jaffna Branch) : 021 300 55 55

E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk

No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
திரு. பொன்னம்பலம் கேதீஸ்வரன்
அவர்களின் அன்பு மாமனார்

**வைத்திலிங்கம் நடராஜா**

(10.03.2017) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச்சமூகம்,**
**யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**

## வேலைவாய்ப்பு

**குறைந்தபட்ச தகைமையுடன் 4 வகையான பதவி வெற்றிடங்கள். மூந்தும் 18 பேருக்கு முன்னுரிமை.**

1. வெளிக்கள உத்தியோகஸ்தர் 18500 + உணவுப்படி
2. மேற்பார்வையாளர் - 22500 + உணவுப்படி
3. உதவி முகாமையாளர் - 25500 + கொமிசன் + உணவுப்படி (அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை)
4. அலுவலகப் பெண் (சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்)

வயது எல்லை - 18 -38

**உங்கள் எதிர்காலத்துக்காக ஒரு சந்தர்ப்பம்! உடன் தொடர்பு கொள்ளவும்.**

129, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
077 998 7699, 077 884 8188, 021 300 4664 ,077 833 1557










## புளோரன்ஸ் நைற்றிங்கேள் தாதியர் பயிற்சிப் பாடசாலை

**நீங்கள் உங்கள் எதிர்காலம்கருதி கௌரவமான தொழில் ஒன்றை எதிர்பார்க்கின்றீர்களா?**
**ஒரு வருட பயிற்சிப் பாடநெறிமூலம் உங்கள் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள்.**

- 3 மாதங்கள் தனியார் வைத்தியசாலையில் பயிற்சிகள்
- பின் நிரந்தர வேலைவாய்ப்பு

***தகைமைகள்***
***O/L 6 பாடங்களில் சித்தி, வயது - 17-35***

Home Nursing



- 6 மாதகால பயிற்சிப் பாடநெறி
- படிக்கும் காலத்தில் வேலைவாய்ப்பு

***தகைமைகள்***
***தரம் 10 தொடக்கம், வயது 17-35 வரை***

அரசவைத்தியசாலையில் ஓய்வுபெற்ற சிரேஸ்ட தாதியர் மூலம் ஆலோசனை வழங்கப்படும்

**தொடர்புகளுக்கு : 077 718 6438, 021 492 8916**
**முகவரி : கே. கே. எஸ். வீதி, மருதனார்மடம்.**

## அவசர கலந்துரையாடல்

உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய வணிக டிப்ளோமா கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்து தற்போது ஆசிரியர் சேவையில் உள்ளவர்களுக்கான அவசர கலந்துரையாடல் யாழ்ப்பாணம் உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும்.

ஆசிரியர் சேவையின் 2014 ஒக்ரோபரில் வெளியிடப்பட்ட 188 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு அமைய பதவியுயர்வு வழங்கப்படவில்லை. அதுபற்றிய கலந்துரையாடல் இன்று இடம்பெறும். சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு பாதிக்கப்பட்ட சக ஆசிரியர்கள் கோரியுள்ளனர். (த-4)

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபலமான கல்வி நிறுவனத்திற்கு சிங்களமொழி கற்பிக்க ஆசிரியர்கள் தேவை.
விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
021 222 4550,076 316 6060

## வீடு, காணி விற்பனைக்கு

மல்லாகம் நீதிமன்ற வீதியில் அமைந்துள்ள 10 பரப்புக்காணியுடன் வீடும் விற்பனைக்கு உண்டு.
*பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
077 494 1750, 021 224 1604

## பகுதி நேர வேலை வாய்ப்பு

உயர்தர வகுப்பில் கணித,விஞ்ஞான பாடங்கள் கற்ற பல்கலைக்கழக மாணவ உதவியாளர்கள் தற்போது கல்வி கற்கும் 10 ஆம் ஆண்டுக்கு கீழுள்ள மாணவர்களுக்கு தேவை. **தொடர்புகளுக்கு .076 857 3798**
**சுண்டுக்குளி,திருநெல்வேலி**

## வேலை ஆள் தேவை

பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள பான்சி மற்றும் போட்டோ கொப்பி கடைக்கு கணினி தட்டச்சு அனுபமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
077 92 35 598

## மருந்து விற்பனையாளர் தேவை

மருந்து விற்பனைக்கு ஆள்கள் தேவை. கணினி அறிவு விரும்பத்தக்கது. அனுபவத்திற்கு ஏற்பசம்பளம் வழங்கப்படும்.
**தொடர்பு. 075 943 1018**

## பணியாளர் தேவை

சந்தைப்படுத்தும் வல்லுனர் (யாழ்ப்பாணம்) தையல்தொழிலாளி (கொழும்பு) மற்றும் தொழிற்சாலை வேலையாள்கள் தேவை.
akiy.productions(PVT)LTD
**தொடர்புகளுக்கு. 077 990 5999**

## தேவை

நடமாடும் பேக்கறிவான் ஓடுவதற்கு சாரதிகளும்பாண்விற்பனையாளர்களும் தேவை.
**புதிய துர்க்கா பேக்கறி**
**கலைவாணி வீதி,கொக்குவில் கிழக்கு**
**யாழ்ப்பாணம்.**

## மருந்து விற்பனையாளர் தேவை

யாழ்.நகருக்கு அண்மையிலுள்ள மருந்தகத்திற்கு வேலையாள்கள் தேவை. கணினி அறிவுடைய ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
**தொடர்புகளுக்கு. 077 188 4200**
**075 943 1018**

## வேலையாள் தேவை

திருநெல்வேலியில் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு கணினி அடிப்படை அறிவுள்ள பெண் ஒருவரும் ஆடை விற்பனையில் முன் அனுபவம் உள்ள ஆண் ஒருவரும் தேவை. திருநெல்வேலிக்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
**தொடர்புகளுக்கு .077 881 6804**

# 1141 பேர் கைது

கொழும்பு, மார்ச் 12
நாடு முழுவதும் பல இடங்களில் நேற்றுமுன்தினமிரவு 5 மணி நேரம் நடத்தப்பட்ட பொலிஸ் சுற்றிவளைப்பில் ஆயிரத்து 141 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கைது செய்யப்பட்டவர்களில், பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள், குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள், பொலிஸாரால் தேடப்பட்டுவந்தவர்கள் மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்தியவர்கள் எனப் பலரும் உள்ளடங்குகின்றனர்.

இரவு 11 மணி தொடக்கம் நேற்று அதிகாலை 4 மணி வரையான சுற்றிவளைப்பில் 11 ஆயிரத்து 792 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-4)

## வேலையாள்கள் தேவை

சைவ உணவகம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.மூன்று நேர உணவு,தங்குமிடவசதி. மாதாந்த சம்பளத்துடன் கீழ்வரும் வேலையாள்கள் தேவை.

* சப்பிளையர் (உணவு பரிமாறுபவர்கள்.ஆண்.பெண்)
* காசாளர்
* பில்கிளாக்
* முகாமையாளர்
* மரக்கறிவெட்டுபவர்கள்
* சமையலறை வேலையாள்கள்
* சுத்திகரிப்பாளர்கள் (பெண்கள்)

**தொடர்புகளுக்கு. 077 791 7753,075 530 4521**
**பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.**

## மர்ண அறிவித்தல்

பிறப்பு 24 . 05 . 1989



இறப்பு 10 . 03 . 2017

**தில்லைநாதன் பவித்திரன்**

(தொழில்நுட்ப உத்தியோகத்தர் - Habitat for Humanity Sri Lanka)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாதன் பவித்திரன் 10.03.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தில்லைநாதன்(குஞ்சர்)-நகுலேஸ்வரி (ஈசு) தம்பதியரின் அன்பு மகனும் வத்சலன், கபிலன், சங்கீதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4 மணியளவில் அன்புவழிபுரம் பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 1203, பாலையூற்று,**
**கண்டி வீதி, திருகோணமலை.**
**077 191 2060, 077 918 9454**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**சுப்பிரமணியம் குமாரசாமி**

**(இளைப்பாறிய உபஅதிபர், சுழிபுரம் விக்ரோரியாக்கல்லூரி)**



**பிறப்பு 13.07.1937 இறப்பு 11.03.2017**

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 138, இராசவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குமாரசாமி நேற்று (11.03.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம் - அன்னம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் உமையாழ்,மீரா, பரணன், கணனி - ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2017) திங்கட்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**138, இராசாவின் தோட்ட வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 222 2365**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி வவுனியாவில் பேரணி






வவுனியா, மார்ச் 12
காணாமல் ஆக்கப்பட்டோரின் வெளிப்படுத்தலையும் விடுதலையையும் வலியுறுத்தி வவுனியாவில் நேற்று பெரும் பேரணி நடத்தப்பட்டது.

கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீட்டுத் தருமாறு கோரி அவர்களுடைய உறவினர்கள், வவுனியாவில் கடந்த 15 தினங்களாக சுழற்சி முறையிலான உணவு ஒறுப்பு போராட்டம் நடத்துகின்றனர். நேற்று 16ஆவது நாளாக அவர்களது போராட்டம் தொடர்ந்தது. அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி பேரணியை ஏற்பாடு செய்தது.

காலை 11 மணியளவில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திற்கு முன்பாக பேரணி ஆரம்பமானது. கண்டி வீதிவழியாக, மணிக்கூட்டுக்கோபுரம் ஊடாக பசார் வீதி. இலுப்பையடி, நீதிமன்ற வீதியூடாக சென்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம் நடத்தும் இடத்தை அடைந்தது. பேரணியில் மாவட்டத்தை சேர்ந்த பெருமளவான பொதுமக்கள் கலந்து கொண்டனர். "பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை உடனே நிறுத்து. அனைத்து அரசியல் கைதிகளையும் உடனே விடுதலை செய், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு பதில் கூறு, காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேட உனக்கு எத்தனை ஆண்டுகள் தேவை?" என்று பேரணியில் கலந்து கொண்டவர்கள் கோசம் எழுப்பினர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையையும் வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி வடக்கு மாகாணத்தில் மூன்று மாவட்டங்களில் அவர்களுடைய உறவினர்கள் தொடர் போராட்டங்களில் இறங்கியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த மாதம் 20 ஆம் திகதி தங்களது கவனவீர்ப்பு போராட்டத்தை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் ஆரம்பித்தனர். நேற்று 20ஆவது நாளாகவும் அவர்களுடைய போராட்டம் தொடர்ந்தது. மாவட்டத்தை சேர்ந்த பொது அமைப்புக்கள், அரசியல் தலைவர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலை மாணவர்கள் என பலரும் தமது ஆதரவுகளை வழங்கினர்.

கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் கடந்த 8ஆம் திகதி முதல் தொடர் கவனவீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இந்த போராட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது. நேற்று 4 ஆவது நாளாகவும் அவர்களின் போராட்டம் தொடர்ந்தது.
(ற-21-6-7-35)

## முதலமைச்சர் அமைச்சின் மகளிர் தின நிகழ்வுகள்

தென்மராட்சி, மார்ச் 12
பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு வடமாகாண முதலமைச்சர் அமைச்சின் மகளிர் தின நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை காலை 8.15 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளன.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் ஒன்றுகூடும் மகளிர்கள் 8.15 மணிக்கு எழுச்சி நடைபவனியை ஆரம்பித்து ஏ - 9 வீதி ஊடாக சாவகச்சேரி நகரசபை பொன் விழா மண்டபத்தை வந்தடைவர். மு.ப.9 மணிக்கு பொன் விழா மண்டபத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக சிறுவர் விவகார ராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கிளிநொச்சி உமாகாந்தன் கலாலய குழுவினரின் ' சிகரம் தொடுவோம் ' என்னும் நாடகமும் நீர்வேலி பொன்சக்தி கலாகேந்திராவின் 'பேரிகை கொட்டடா' என்னும் நாட்டிய நடனமும், மாற்றுத் திறன் மாதர்களின் ஆற்றுகையான மன்னார் வேலு சந்திரா குழுவினரின் 'மாறுமெனக் கொள்வோம்' நாடகமும் இடம்பெறும்.

விசேட உரைகளை போரால் பாதிக்கப்பட்ட பெண்களின் அனுபவப் பகிர்வை முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி கலைச்செல்வி சுந்தரலிங்கமும் 'போருக்குப் பின்னரான எமது பெண்களின் பிரச்சினைகளும் தீர்வுகளுக்கான முன் நகர்வுகளும் ' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி கோசலை மாதவனும் நிகழ்த்துவர்.

'பெண்களை உறுதிப்படுத்துவதில் இன்னமும் சமூகக் கட்டமைப்பு போதுமானதாக இல்லையா ' என்னும் தலைப்பில் யாழ்ப்பாண மாவட்ட பிரபல பேச்சாளர்கள் பங்குபற்றும் சிறப்புப் பட்டி மன்றமும், கைதடி யாழ்ப்பாணம் முற்போக்கு அரங்க இயக்கத்தின் '1938 ' என்னும் நாடகமும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)



*பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு முத்தையன்கட்டு கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஜீவநகர் கிராமத்தில் விழிப்புணர்வூட்டும் கருத்தமர்வு நேற்று முன்தினம் பிற்பகல் கிராம அலுவலரின் தலைமையில் ஜீவநகர் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. முல்லை மாவட்டச் செயலக பால் நிலை தொடர்பான இணைப்பாளர் திருமதி பற்றிமா மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டவாளர்களான சட்டத்தரணி நெத்தரைரூபன், சட்டத்தரணி சிந்துஜா ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்கள் வழங்கினர். (ற-102)*

## தொழுநோய் பரவும் அபாய நிலை

யாழ்ப்பாணம், மார்ச் 12
நாட்டில் தொழு நோய் மீண்டும் பரவக்கூடிய அபாய நிலை காணப்படுகிறது என சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.
தொழு நோய் கிருமி தொற்று ஏற்பட்டால் 3 தொடக்கம் ஐந்து வருடங்களின் பின்னரே வெளித் தெரியத் தொடங்கும். தொழு நோய்க்கான அறிகுறிகள் காணப்படுவோர் அருகில் உள்ள ஆதார வைத்தியசாலைகளில் இயங்கும் தோல் சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தோலில் வெள்ளை மற்றும் சிவப்பு நிறக் கட்டிகள் தோன்றும். அவை தடித்து அதன் மேல் காணப்படும் முடிகள் கொட்டி அந்த இடத்தில் உணர்ச்சி குறைவாக இருக்கும். கை, கால், மூட்டு போன்ற இடங்களில் வலிகள் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
(ற-9)

## கனகாம்பிகை அம்மனுக்கு முதல் மூடை காணிக்கை



கிளிநொச்சி, மார்ச்.12
கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட போக நெற் செய்கையில் முதல் நெல் மூடையை விவசாயிகள் இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்துக்கு காணிக்கை செலுத்துகின்றனர்.

கடந்த ஆண்டு காலபோக நெற்செய்கையில் கிளிநொச்சி விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டனர். மழை வீழ்ச்சி குறைவாக இருந்து நெற்செய்கை அழிவை எதிர்நோக்கியது. விவசாயிகள் பெரும் கவலையடைந்தனர். நீர்ப்பாசனத் திணைக்களமும் விவசாய சம்மேளனமும் ஆலய தொண்டர்களும் இணைந்து இரணைமடு கனகாம்பிகை அம்பாளுக்கு மழை வேண்டி ஆயிரம் இளநீர்களுக்கு மேல் சேகரித்து எல்லோரும் ஒன்று சேர்ந்து பெரும் யாகமும் அபிசேகமும் நடத்தினர். அதன் பயனாகவே கூடிய அறுவடை கிடைத்துள்ளது என்று அவர்கள் நம்புகின்றனர். நன்றிக்கடனை செலுத்தும் முகமாக தங்களால் இயன்ற நெல்லை அம்மனுக்கு வழங்குகின்றோம் என்று விவசாயிகள் தெரிவித்திருந்தனர். இரணை மடு கனகாம்பிகை அம்மன் இராஜகோபுர திருப்பணிச் சபையினரும், ஆலய தொண்டர்களும் இணைந்து ஆயிரம் வெற்றுப் பைகளில் இராஜகோபுர அடையாளம் பொறித்து அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகித்தனர்.

அவற்றில் விவசாயிகள் தங்களது காணிக்கைகளை செலுத்தி வருகின்றனர்.

"ஆலயத்தின் இராஜகோபுரம் அமைப்பதற்கு இராஜகோபுர அடையாளம் பொறிக்கப்பட்ட பைகள் வழங்கப்பட்டு விவாயிகளிடம் நெல் கொள்முதல் செய்யப்படுகின்றது. கொள்முதல் முடிந்ததும் அதனை பகிரங்கமாக விற்பனை செய்து திரட்டப்படும் நிதியைக் கொண்டு ஆலய இராஜகோபுர பணிகள் இடம்பெறும்". என இரணைமடு விவசாயிகள் சம்மேளன செயலாளர் சி.மோகன் தெரிவித்தார். (ற-21-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பெண் பிள்ளைகள் போன்று ஆண்பிள்ளைகளையும் சிந்தித்து வளர்க்க வேண்டும்

## கொழும்பு பல்கலைக்கழக ஊடகத்துறை விரிவுரையாளர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, மார்ச் 12

பெண்பிள்ளைகளை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்று சிந்தித்து வளர்க்கும் பெற்றோர்கள், ஆண் பிள்ளைகளையும் சிந்தித்து வளர்த்தால் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடக்காது.

இவ்வாறு கொழும்பு பல்கலைக்கழக ஊடகத்துறை விரிவுரையாளர் தேவகௌரி தெரிவித்தார்.

கிளிநொச்சி 'நீள்விழி' பெண்கள் அமையத்தின் ஏற்பாட்டில், பன்னாட்டு மகளிர் தின விழா நேற்று கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இயக்கப்படுகின்ற சட்டங்கள் மற்றும் கோவைகளில், ஆண்களும் பெண்களும் சரிநிகரானவர்கள் என இயங்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெறுகின்றன. குழு ஒன்று அமைக்கப்பட்டு, பெண்களின் பங்களிப்பு தொடர்பாக ஆராய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பல செயற்றிட்டங்கள் நடைபெறுகின்றன.

நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 0.5 வீதமாக காணப்படுகின்றது. இது அதிகரிக்கப்பட வேண்டும். நாட்டில் பெண்களுக்கு எதிராக பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

தற்போது வீட்டில் ஒரு சின்ன பெண்பிள்ளையைக் கூட தனியே விட்டு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. பெண்களின் நிலை அவ்வாறாக காணப்படுகின்றது. இவ்வளவு காலமும் பெண்பிள்ளைகளை எவ்வாறு வளர்ப்பது என்பது தொடர்பாகத்தான் பெற்றோர் யோசித்தார்கள். ஏன் ஆண்பிள்ளைகளை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்று யோசிக்கவில்லை. ஆண்பிள்ளையை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்று திட்டமிட்டு வளர்த்தால்கூட, பெண்களுக்கெதிரான சில சிக்கலான நிலைமைகளை குறைத்துக்கொள்ள முடியும் - என்றார்.



நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழக ஊடகத்துறை விரிவுரையாளர் திருமதி தேவகௌரி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, பெண்கள் அமைப்பினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற - 21.6)

### சமநிலைச் சகோதரத்துவம் மலரட்டும்

செல்வந்தருடைய விருந்து மேசையில் இருந்து விழும் உணவுத் துண்டங்களால் வயிற்றை நிரப்ப முற்படும் ஏழை இலாசரின் உவமைவழியாக ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்கும் உள்ள இடைவெளியைப் படம் பிடித்துக் காட்டுகிறார் இயேசு. இலாசர் என்றால் உதவியற்றவர் என்று பொருள். தனவான்கள் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றும் - ஏழைகள் சபிக்கப்பட்டவர்கள் என்றும் - கருதப்பட்ட காலத்தில், இயேசு சமயத்துக்கும் மனிதநேயத்துக்கும் இடையே இருந்த பள்ளத்தாக்கை இந்த உவமையால் எடுத்துக்காட்டுகிறார்.



பணம் படைத்தோர் ஆடம்பரம், கேளிக்கைகள், சொகுசு என்னும் தன்னலக்கோட்டையை எழுப்புகின்றனர். இவை விண்ணகம் செல்ல தம்மால் ஏற்படுத்தப்படும் தடுப்புச் சுவர்கள் என்பதை மறந்து விடுகின்றனர். பணத்தால் உணவை வாங்கலாம் ; பசியை வாங்க முடியாது என்பதை உணரும்போது மனிதன் தன் வாழ்நாளின் கடைசிப்பக்கத்துக்கு வந்து விடுகின்றான். நியாயத்தின் நிறத்தை அழிக்காது யாரும் அதீத செல்வம் சேர்க்கமுடியாது என்பதை புரிந்து வாழ்ந்தால், இலாசர்களும் பணக்காரர்களும் இந்தப்பூமியில் இருக்கமுடியாது, மாறாக சமநிலை சகோதரத்துவம் என்றும் வாழும்.

எஸ்.யேசுதாஸ்

# ஆசிரிய வெற்றிடங்களுக்கு 549 பேர் புதிதாக இணைப்பு

## நாளை நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 12

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1 (அ) தர பதவி வெற்றிடங்களுக்கு 549 பேர் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்வாறு வட மாகாண கல்வி அமைச்சின் செயலர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1 (அ) தர பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆள்சேர்ப்புச் செய்வதற்காக வட மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவால் கடந்த டிசெம்பர் மாதம் திறந்தபோட்டிப் பரீட்சைநடத்தப்பட்டது. அதில் தோற்றிச் சித்தியடைந்தவர்களுக்குகடந்தஜனவரிமாதம் வடக்கு மாகாண கல்வி அமைச்சால் நேர்முகத் தேர்வும், பிரயோகப் பரீட்சையும் நடத்தப்பட்டது.

ஆள்சேர்ப்பு விளம்பரத்துக்கு அமைவாக தகைமை பெற்றோர் ஆசிரியர் நியமனத்துக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். தெரிவு செய்யப்பட்டவர்கள் நாளை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி .சிவகுருநாதர் மண்டபத்தில் அறிக்கையிட வேண்டும்.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்வதற்கான அழைப்புக் கடிதங்கள் அவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளில்பெண்கள் இள வர்ண சேலையுடன், ஆண்கள் கறுப்பு வர்ண நீள் காற்சட்டை மற்றும் வெள்ளை நிற சேட்டும் அணிந்து வரவேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் தொடர்பான விவரங்களை வட மாகாண சபை இணையத்தளம் www. np.gov.lk மற்றும் வட மாகாண கல்வி அமைச்சின் இணையத்தளம் www. edumin.np.gov.lk எனும் முகவரியில் பார்வையிட முடியும் - என்றார். (ற -10)

# சுட்டுக்கொல்லப்பட்ட தமிழக மீனவர் விசாரணைகளைத் துரிதப்படுத்தவும்

## கொழும்பு அரசுக்கு; இந்தியா அழுத்தம்

கொழும்பு, மார்ச் 12

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர் ஒருவர் கச்சதீவுக் கடலில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு, கொழும்பு அரசுக்கு; இந்தியா அழுத்தம் கொடுத்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு கச்சதீவுக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம்தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மீனவர், இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில்மற்றொருமீனவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துக்குத் தாம் பொறுப்பல்ல என்று சிறிலங்கா கடற்படை கூறிய போதிலும், இதுகுறித்து விசாரணை நடத்துவதாக உறுதியளித்துள்ளது. இந்த நிலையிலேயேவிசாரணைகளைத் துரிதமாக நடத்துமாறு இந்தியா தரப்பில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

புதுடில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கோபால்பக்லே, இந்த விடயத்தில் உள்ள மனிதாபிமான அம்சத்தைக் கவனத்திற்கொண்டு, தீவிரமாகவும், ஈர்ப்புடனும், விசாரணை மிகமிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது - என்றார். (ஐ-10)

# ட்ராக்டரை மோதிய ரயிலுக்குக் கல் வீச்சு

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குப் பயணித்த இரவுத் தபால் ரயில் கடவையில், உழவு இயந்திரத்தை மோதியதில் சாரதி படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். கிளிநொச்சி மலையாளபுரத்தில் நேற்றிரவு 9.25 மணியளவில் விபத்து இடம்பெற்றது.

இருசக்கர உழவு இயந்திரத்தின் சாரதியான கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த சு. பாலகிருஷ்ணன் (வயது-40)கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அந்த பகுதிக்குச் சென்ற விசமிகள் ரயில் மீது கல் வீச்சு நடத்தி [illegible] உடைந்தன. கிளிநொச்சி மற்றும் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (து-4-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை கலைப்பீடத்தை மூட மாணவர்களே காரணம்

## பீடாதிபதி விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் சில மாணவர்களின் பிறழ்வான நடத்தையினால், கலைப்பீடத்தின் அமைதியையும் கீர்த்தியினையும் கருத்திற் கொண்டுசிலகற்கைகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம்.

பெற்றோர்களே! மாணவர்களின் எதிர்காலத்தையும் பல்கலைக்கழகத்தின் பாரம்பரியத்தையும் கருத்திற் கொண்டு அவர்களது ஒழுக்கம் தொடர்பில் கரிசனை கொள்ளுங்கள்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி கேட்டுள்ளார்.

அவர் உள்ளிட்ட சிலரது கையொப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நேற்று முற்பகல் 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறவிருந்த முதலாம் வருட மாணவர்களுக்கான வரவேற்பு விருந்துபசார நிகழ்வுக்கு இரண்டாம் வருட மாணவர்கள் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினூடாக அனுமதி கோரியிருந்தனர்.இதனடிப்படையில் பல்கலைக்கழகச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கக் கூடாது, பல்கலைக்கழக ஒழுங்கு விதிகளை மீறக்கூடாது, பட்டம் பெற்ற மாணவர்கள் மேற்படி நிகழ்வில் பங்குபற்றக் கூடாது, குறிப்பிட்ட நேரத்திற்குள் நிகழ்வு பூர்த்தி செய்யப்படல் வேண்டும், நிகழ்வு முடிந்த பின்னர் வரவு - செலவு அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும் போன்ற நிபந்தனைகளுடன் நிர்வாகத்தால் அனுமதி வழங்கப்பட்டது.

அலங்கரிப்பு வேலைக்காக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஊடாக இரண்டாம் வருட மாணவர்கள் 23 பேருக்கு நேற்றுமுன்தினமிரவு 8 மணி வரை பல்கலைக்கழக பொது மண்டபத்தைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. எனினும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இரண்டாம் வருட மாணவர்களுடன் மூன்றாம், நான்காம் வருட மாணவர்கள், மற்றும் பட்டம் பெற்ற சில மாணவர்களும் இணைந்து இரவு 12.30 மணி வரை தங்கியிருந்து, இரசாயன ஆய்வு கூடம் உள்ளிட்ட சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தமை, மதுபாவனையால் தகாத வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டமை, மூத்த மாணவ ஆலோசகர், மாணவ ஆலோசகர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவ ஒழுக்காற்று அதிகாரிகள் வழங்கிய ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் மீறி அவர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டமை, பல்கலைக்கழக நுழைவாயிலையும் உந்துருளியால் சென்று உதைத்தமை போன்ற ஒழுங்கீனமான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

அதனால்பல்கல்லைக்கழகப் பதிவாளர் தலைமையில் கலைப்பீட அலுவலகத்தில் கலைப்பீடாதிபதி, உதவிப் பதிவாளர், துறைத்தலைவர்கள், சிரேஷ்ட மாணவ ஆலோசகர், பீட மாணவ ஆலோசகர்கள், பீட விரிவுரையாளர்கள் மற்றும் மாணவ ஒழுக்காற்று அதிகாரிகளை உள்ளடக்கி அவசர கலந்துரையாடல் நடத்தப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது. நேற்று நடைபெற இருந்த முதலாம் வருட மாணவர்களுக்கான வரவேற்பு விருந்துபசார நிகழ்வுக்கான அனுமதியை மீளப்பெற்றுக் கொள்வது என்பதே முடிவு. அந்த முடிவு கலைப்பீட மாணவ ஒன்றியத்தலைவர், செயலாளர் ஆகியோருக்கு உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அனுமதி இரத்துச் செய்யப்பட்ட பின்னரும் மாணவர்கள், பல்கலைக்கழக நிர்வாகத்தின் விதிமுறைகளுக்கும் ஒழுங்கு நியதிகளுக்கும் மாறாக நேற்று நிகழ்வை நடத்தியுள்ளனர் என்பதை மிகுந்த மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

எனவே அன்பார்ந்த கலைப்பீட மாணவர்களின் பெற்றோர்களே! மாணவர்களது ஒழுக்கம் தொடர்பில் கரிசனை கொள்ளுங்கள்- என்றுள்ளது. (து-4)

# சிங்கள மொழியில் எழுதப்பட்ட அறிவித்தல் பலகையால் சர்ச்சை

முல்லைத்தீவு, மார்ச் 12

முல்லைத்தீவு, இரட்டைவாய்க்கால் சந்தியில் சிங்கள மொழியில் தனித்து எழுதப்பட்டுள்ள பெயர்ப் பலகையால் சர்ச்சை கிளம்பியுள்ளது.

இரட்டைவாய்க்கால் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள இந்த வழிகாட்டல் குறியீட்டுப் பலகை இராணுவத்தால் நடப்பட்டுள்ளது.

அதில் நான்கு கிராமங்களுக்குச் செல்லும் வழிகள் சிங்கள மொழியில் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழ், ஆங்கில மொழிகளில் எந்த அறிவுறுத்தல்களும் இல்லை. அந்தப் பெயர்ப் பலகை தொடர்பாக இப்போது சர்ச்சை கிளம்பியுள்ளது.

"இந்த விடயம் தொடர்பாக உள்ளூர் அரசியல்வாதிகளே முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கும் போது தடங்கல்கள் ஏற்பட்டால் எனக்கு அறிவிக்கலாம். - " என்று இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள தேசிய மொழிகள் ஒருமைப்பாட்டு அமைச்சர் மனோ கணேசன் கூறியுள்ளார். (ற - 101)



# வீடுகளின் தடயம்கூட விடுவிக்கப்பட்ட காணிகளில் இல்லை

## புதுக்குடியிருப்பில் அண்மையில் இராணுவம் விடுவித்த காணிகளுக்குச் சென்றோர் விரக்தி

முல்லைத்தீவு, மார்ச்12

காணிகளை இராணுவத்திடம் இருந்து கையேற்று ஒரு வாரம் கடந்து விட்டது. எமது காணிகளை சீர்ப்படுத்துவது பெருங்காரியமாக உள்ளது. வீடுகள் இருந்த இடமே தெரியாது அழிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கவலையுடன் தெரிவித்தனர் அண்மையில் புதுக்குடியிருப்பில் இராணுவத்தினரிடம் இருந்து தமது காணிகளைக் கையேற்ற மக்கள் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பில் பொதுமக்களின் 19 ஏக்கர் காணிகளை இராணுவம் கையகப்படுத்தி வைத்திருந்தது. அவற்றை விடுவிக்க வேண்டும் என்று காணி உரிமையாளர்கள் தொடர்ச்சியாக வற்புறுத்தி வந்தனர். அவர்களின் அறவழிப் போராட்டங்களின் காரணமாக, கடந்த 4ஆம் திகதி அந்தக் காணிகளில் 7.75 ஏக்கர் காணிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

"எமது காணிகளுக்காக நாங்கள் தொடர் அறவழிப் போராட்டம் நடத்தினோம். ஒருவாறு எங்களின் காணிகளில் ஒருபகுதியை விடுவித்தார்கள். இராணுவம் உபயோகித்ததால் நாம் எமது வீடுகள் நல்ல நிலையில் இருக்கும். உடன் வசிக்கலாம் என்று நினைத்தோம்.

இங்கு எல்லாம் தலைகீழாக உள்ளது. 20 குடும்பங்களுக்குரிய காணிகளே விடுவிக்கப்பட்டன. அவற்றில் 15 குடும்பங்களின் வீடுகள் இருந்த இடமே தெரியவில்லை. எஞ்சிய வீடுகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு வீட்டை இராணுவத்தினர் எரிபொருள் களஞ்சியமாக உபயோகத்துள்ளனர். வீடு முழுவதும் எரிபொருள் சிந்திக் கிடக்கின்றது. அதை அகற்ற நேற்றுவரை முயன்று கொண்டிருக்கிறோம். இன்னும் அகற்ற இயலவில்லை.



மலசலகூடங்கள் எவற்றையும் காணவில்லை. அத்திபாரத்தோடு புரட்டி எடுத்துள்ளனர். மலசலகூடக்குழிகள் மாத்திரமே உள்ளன.

காணிகள் விடுவிக்கப்பட்டதும் மட்டற்ற மகிழ்ச்சியுடனே உள்ளே வந்தோம். இங்கு நாம் சிறுகச் சிறுகச் சேர்த்துக் கட்டிய எமது வீடுகள் இருக்கும் நிலையைப் பார்த்த அதிர்ச்சியில் இருந்து மீள முடியாதுள்ளது-" என்று அந்த மக்கள் கவலையுடன் கூறினர். (ற-7)

# பாரதிபுரம் கிராம மக்களை அங்கிருந்து அகற்ற முயற்சி

## தடுத்து நிறுத்த வேண்டும் என்று வடமாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச்12

வவுனியா, பாரதிபுரம் கிராமத்தில் 10 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருக்கும் மக்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது- அது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாண சபை அமர்வு சில நாள்களுக்கு முன் நடைபெற்றது. அதில் மாகாணசபை உறுப்பினர் ம.தியாகராசாவால் இது தொடர்பான பிரேரணை கொண்டுவரப்பட்டது.

"வவுனியா பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட இராசேந்திரகுளம் கிராமசேவையாளர் பிரிவில் உள்ளது பாரதிபுரம் கிராமம். அங்கு 10 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருக்கும் மக்களை வெளியேற்ற முயற்சிக்கப்படுகின்றது. அந்தக் காணிகள் குடியிருந்த மக்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, வவுனியா மாவட்ட செயலாளர் ஆகியோரை இந்தச் சபை கோருகின்றது " -என்று பிரேரணையை அவர் முன்மொழிந்தார்.

அந்தப் பிரேரணை மாகாணசபை உறுப்பினர்களின் ஏகமனதான ஆதரவுடன் தீர்மானமாக நிறைவேற்றப்படுகின்றது என்று அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார். (ற-8)

# முத்துஐயன் குளத்தின் நீர்மட்டம் குறைந்ததால் மீனவர்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, மார்ச்12

முத்துஐயன் குளத்தின் நீர்மட்டம் குறைந்துள்ளதால் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது.

இவ்வாறு முத்துஐயன்குளம் நன்னீர் மீன்பிடி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகப் பெரிய குளமாக முத்துஐயன்கட்டுக் குளம் உள்ளது. அந்தக் குளத்தில் முன்னெடுக்கப்படும் மீன்பிடியை நம்பி 95 குடும்பங்கள் உள்ளன.

கடந்த வருடம் பருவமழை பொய்த்ததால் குளத்தின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்தது. தற்போது ஒரு அடிக்கும் குறைவான நீர் மட்டமே குளத்தில் உள்ளது. மீன்பிடியை நம்பியிருந்த குடும்பங்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது.

குளத்தில் மீன்குஞ்சுகளை விட முடியவில்லை. பிடிபடும் மீன்களின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்துள்ளது. தற்போது 30 குடும்பங்கள் மாத்திரமே மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். ஏனையவர்கள் கூலித் தொழிலுக்கும், வெளிமாவட்டங்களிலும் வேலைக்குச் செல்கின்றனர்.


கடந்த ஆண்டு குளத்தின் கட்டுமானப்பணிகள் இடம்பெற்றதால், தொழில் பாதிப்படைந்தது. இந்த ஆண்டு நீரின்மையால் பாதிப்படைந்துள்ளது-என்றார். (ற-7)

# புற்றுநோய் விழிப்புணர்வு 11

சிறுநீர்ப்பை மற்றும் PRO STATE புற்றுநோய்பற்றி அறிந்துகொள்வோம்.

**அறிகுறிகளாவன:**

- சிறுநீர் கழிப்பதில் நோவு / கடினம் ஏற்படல்.
- முழுமையாக சிறு நீர் கழிக்காத உணர்வு.
- அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டியிருத்தல்.
- சிறுநீரில் குருதி கலந்து வெளியேறுதல்.



# உண்டியல் உடைத்து பணம் திருட்டு

வவுனியா, மார்ச்12

ஓமந்தை சிறிசித்திவிநாயகர் ஆலயத்தில் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது. இந்த ஆலயம் ஓமந்தை ஏ-9 வீதிக்கு அண்மையில் உள்ளது.

நேற்றுக் காலை ஆலயத்துக்குச் சென்றவர்கள் உண்டியல் உடைக்கப்பட்டிருந்ததை அவதானித்து ஆலய நிர்வாகத்துக்கு அறிவித்தனர். நிர்வாகத்தினர் ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்தனர்.

மூன்றுதினங்களுக்கு முன்னர் இதே வீதியில் உள்ள ஓமந்தை அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் உண்டியல் உடைக்கப்பட்டு திருட்டு இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-402)

# நிர்வாகத்தைச் சீராக இயக்க ஆளுமையே தேவை

## வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச்12

நிர்வாகத்தை சீராக கொண்டியக்க கல்வி முக்கியமில்லை. ஆளுமை இருந்தாலே போதும் என வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வடக்கு மாகாணசபை அமர்வில், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் நியமனம் தொடர்பாக கவனவீர்ப்பு அறிவித்தல் ஒன்றை வடக்கு மாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரன் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே, வடக்கு எதிர்க்கட்சித்தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டில் உள்ள 9 மாகாண சபை முதலமைச்சர்களில், கல்வி மற்றும் தகுதியில் உயர்ந்தவராக இருக்கும் முதலமைச்சர் யார் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால், 8 ஆம் ஆண்டு படித்த வடமேல் மாகாண முதலமைச்சர் மிகவும் சிறப்பாக நிர்வாகத்தை நடத்துகின்றார். அதனை நான் நேரடியாக அங்கு சென்று அந்த மாகாண மக்கள் மற்றும் அதிகாரிகளுடன் பழகியபோது உணர்ந்து கொண்டேன். ஆனால், எவ்வளவோ படித்த ஒருவர் இருக்கின்ற மாகாணத்தில் நிர்வாகத்தை சிறப்பாக கொண்டு நடத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது.

கல்விக்கும்-ஆளுமைக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. ஒரு நிர்வாகத்தை நடத்துவதற்கு கல்வியறிவு முக்கியமாக இருந்தாலும், அதனை விட ஆளுமையே முக்கியமாகும். நாட்டில் உள்ள மற்றைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது, நிர்வாக ஒழுங்கில் எமது மாகாணமே பின்னடைவில் இருக்கின்றது- என்றார். (ற-8)

FOR SALE
KOMORI JAPAN
OFFSET PRINTING MACHINE
Paper Size 28 x 40 inches
Back to Back (Perfector)
Ideal for Rulling, Excercise Book material,
Fullscape, Colour Board Colouring
One pass 16 A4 sheets back to back
8,000 Speed per hour
Contact 0777588952 for inquiries



Can be inspected at
15/2 Avissawella Road, Orugodawatte




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பாதுகாப்புச் செயலராக வைத்தியரத்ன நியமிக்கப்படுவார்

கொழும்பு, மார்ச் 12

இலங்கையின் பாதுகாப்புச் செயலராக மூத்த மேலதிக அரச சட்ட ஆலோசகர் கபில வைத்தியரத்ன நியமிக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை பாதுகாப்புச் செயலராகப் பணியாற்றும் கருணாசேன ஹெட்டியாராச்சி எதிர்வரும் 20 ஆம் திகதியுடன் 67 வயதை அடைகிறார்.

சிங்கப்பூரில் இருதய சத்திரசிகிச்சை செய்து கொண்ட அவர், அண்மையில் தான் நாடு திரும்பியுள்ளார். இதனால் அவர் பாதுகாப்புச் செயலர் பதவியில் இருந்து விடுவிக்கப்படவுள்ளார்.

அவருக்குப் பதிலாக, மூத்த மேலதிக அரச சட்ட ஆலோசகர் கபில வைத்தியரத்ன புதிய பாதுகாப்புச் செயலராக நிய மிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து விரைவில் ஓய்வு பெறவுள்ள கபில வைத்தியரத்ன, கடந்த ஆண்டு சட்டமா அதிபர் பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டவர்.

2014 ஆம் ஆண்டு பிஜி மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றுவதற்காக, சேவையில் இருந்து இடைவிலகிச் சென்றிருந்த காரணத்தால், அவருக்குச் சட்டமா அதிபர் பதவியைப் பெறும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

கபில வைத்தியரத்ன, 1998 தொடக்கம் 2003 வரையான காலப்பகுதியில், அனைத்துலக குற்றவியல் தீர்ப்பாயத்தில் யூகோஸ்லாவியா மீது நடத்தப்பட்ட விசாரணையில் சட்டவாளராகப் பணியாற்றியிருந்தார்.

(ஐ-10)

# கழிவு முகாமைத்துவம் பலவீனமடைய ஒருங்கிணைப்பு இன்மையே காரணம்

## அரச தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 12

கழிவு முகாமைத்துவம் தொடர்பான பொறுப்புக்களை வகிக்கும் பிரதான நிறுவனங்களுக்கிடையே உரிய ஒருங்கிணைப்புக்காணப்படாமையே கழிவு முகாமைத்துவம் பலவீனமடைவதற்கு பிரதான காரணம்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களின் கழிவு முகாமைத்துவத்தை முறைப்படுத்துதல் தொடர்பாக நேற்று முன்தினம் அரச தலைவர் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று அரச தலைவர் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் கழிவகற்றல் நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் தொடர்பாக அனைத்து நிறு வனங்களும் இணைந்து உரிய நடைமுறையை பின்பற்ற வேண்டும். கொழும்பு நகரின் கழிவு முகாமைத்துவத்தைப் போன்றே நகரை அழகுபடுத்துதல் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும்.

விகாரமஹாதேவி பூங்கா மற்றும் பேரைவாவியைச் சுற்றியுள்ள சுற்றாடல் வலயம் உள்ளிட்ட சில இடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமை மற்றும் அந்த இடங்கள் உரியவாறு பேணப்படாமை தொடர்பாக மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ள பல குற்றச்சாட்டுக்கள்முன்வைக்கப்பட்டன. இது தொடர்பாக உரிய அதிகாரிகள் திருத்த வேலைகளை துரிதமான மேற்கொள்ள வேண்டும்.

கழிவுகளை அகற்றல் தொடர்பாக ஒழுங்குபடுத்துவதற்கு பொலிஸ் சுற்றாடல் பிரிவு கவனம் எடுத்தல் வேண்டும். கழிவுகளை முறையற்ற விதத்தில் வெளியேற்றும் நிறுவனங்கள் ஊடகங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றன.

உரிய கழிவகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் தொடர்பாக அடுக்குமாடி குடியிருப்புகள், தோட்ட வீடுகள் மற்றும் குறைந்த வாடகை வீடுகளில் வசிக்கும் மக்களை தெளிவூட்டும் செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டி யதன் அவசியம் பற்றி அதிகாரிகள் தெளிவுபடுத்த வேண்டும்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் பாதசாரிகளுக்கான நடைபாதையைப் பேணல் மற்றும் அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தவேலைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. கழிவு முகாமைத்துவம் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்கள் எதிர்நோக்கியுள்ள சிக்கல்கள் தொடர்பான கருத்துக்கள்முன்வைக்கப்பட்டதுடன் கழிவுகளை சேகரிக்கும் வாகனங்களின் பற்றாக்குறை மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா, மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்ரிய, அரச தலைவரின் செயலாளர் பீ.பி. அபேகோன், பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் கிரிஷாந்த த சில்வா உள்ளிட்டோரும் உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அரச அதிகாரிகளும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.என்றுள்ளது.

(ஐ-10)




# ஆப்கானிஸ்தான் தூதுவராக முன்னாள் தளபதி பதவியேற்பு

கொழும்பு, மார்ச் 12

ஆப்கானிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவராக, இலங்கையின் முன்னாள் விமானப்படைத் தளபதி எயார் சீவ் மார்ஷல் ககன் புலத்சிங்கள பதவியேற்றுள்ளார் என்று தெரியவருகிறது.

இவர் கடந்த 7 ஆம் திகதி ஆப்கானிஸ்தான் அரச தலைவர் முகமட் அஷ்ரப் கானியிடம், தமது நியமனப் பத்திரங்களைக் கையளித்தார். விமானப்படைத் தளபதி பதவியில் இருந்து அண்மையில் ஓய்வு பெற்றதையடுத்து, எயார் சீவ் மார்ஷல் ககன் புலத்சிங்க ளவுக்கு கொழும்பு அரசு இந்த இராஜதந்திரப் பதவியை வழங்கியுள்ளது.

மகிந்த ராஜபக்ச அரசின் காலத்தில் இராஜதந்திரப் பதவிகளுக்கு அதிகளவிலான படை அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அந்த நிலையை மாற்றப் போவதாக, தற்போதைய அரசு பதவிக்கு வரும் போது கூறியிருந்தது.

எனினும், அந்த வாக்குறுதியை மீறும் வகையில் இலங்கையின் ஓய்வுபெற்ற படை அதிகாரிகள் தொடர்ந்தும், வெளிநாட்டுத் தூதுவர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-10)

# நல்லெண்ணப் பயணமாக இலங்கைக்கு வருகின்றன பாகிஸ்தான் போர்க் கப்பல்கள்

கொழும்பு, மார்ச் 12

பாகிஸ்தான் கடற்படையின் இரண்டு போர்க்கப்பல்கள், நான்கு நாள்கள் நல்லெண்ணப் பயணமாக இன்று கொழும்புத் துறைமுகத்துக்கு வரவுள்ளதாக பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்தது.

பிஎன்எஸ் நாசர் மற்றும் பிஎன் எஸ் சாய்ப் ஆகிய போர்க்கப்பல்களே நாளை கொழும்புக்கு வரவுள்ளன. இரண்டு நாடுகளினது கடற்படைகளுக்கும் இடையிலான பலமான மரபுசார், நிபுணத்துவ மற்றும் சகோதரத்துவ உறவின் ஒரு பகுதியாகவே பாகிஸ்தான் போர்க்கப்பல்கள் கொழும்புக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளன.

இந்தப் போர்க்கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் போது, இலங்கைக் கடற்படையினருடன் பல்வேறு நிபுணத்துவப் பயிற்சிச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. நாளை பிஎன் எஸ் நாசர் போர்க்கப்பலில் வரவேற்பு உபசாரம் ஒன்றுக்கும் எற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ - 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமியை குதறிக் கொன்ற முதலை

திருமலை, தோப்பூர் பிரதேச உள்ளைக் குளத்தில் நீராடிக் கொண்டிருந்த 14 வயதுடை சிறுமியை, முதலை இழுத்துச் சென்ற நிலையில், அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. தனது மைத்துனியுடன் குளத்தில் குளித்து விட்டு கொண்டு வெளியேறும் வேளை, சிறுமியை முதலை, குளத்துக்குள் இழுத்துச்சென்றுள்ளது. பின்னர் சடலம், தோப்பூர் பிரதேச வைத்திய சாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)


## வீடு விற்பனைக்கு

முத்திரைச்சந்திக்கு அருகில் கல்விக் கந்தோருக்கு அண்மையில் அமைந்திருக்கும் புதிய இரண்டு மாடி வீடு விற்பனைக்கு. எட்டு அறைகள், ஆறு பாத்ரூம், நல்ல தண்ணீர், வாகன வசதி, மேல்வீடு, கீழ்வீடு முழுவதும் மாபிள் பதித்த நிலையில் உள்ள புதிய வீடு. செம்மணி வீதி , இல.45, செல்லர் வீதியில் உள்ளது. காணி மூன்றே கால் பரப்பு (3¼ ), நாலுபக்க மும் சுற்று மதில் உள்ளது. எல்லா வற்றுக்கும் வசதியான வீடு.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.
S.சாந்தலிங்கம் -
077 412 6435, 077 385 4303

## மணமகள் தேவை

1988ஆம் ஆண்டு பிறந்த சதயம் 2ஆம் பாதம் செவ்வாய் குற்றம் இல்லாத பாவம் 58 உடைய கனடாவில் PR உள்ள நல்ல உத்தியோகம் பார்க்கும் ஆணுக்கு படித்த அழகிய பெண் தேவை. தரகர்களும் தொடர்புகொள்ளலாம்.

077 923 3194

## வேலைவாய்ப்பு

SLS தர சான்றிதழினை உடைய இலங்கையில் முதற்தரத்தினைக் கொண்ட பால் உற்பத்தி பொருள்களை உற்பத்தி செய்யும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் விற்பனைப்பிரதிநிதிகள் (Sales Rep) தேவை. நிறைந்த சம்பளம் பெறலாம்.

075 377 8274

## மணமகள் தேவை

அரச நிரந்தர தொழில்புரியும் (1985, மகம்-3, 36 பாவம்) மணமகனுக்கு அழகிய தொழில்புரியும் மணமகள் தேவை.

077 601 4883

## பதவி வெற்றிடம்

யாழ். நகரில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு 18 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்குப் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

01. கணினி சிட்டைப் பதியுநர் (Computer billing clerk)
02. சுத்திகரிப்பாளர்

தகைமையுடையோர் சுயவிவரக் கோவையுடன் இன்று (13.03.2017) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு 514/18, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரில் வரவும்.

(AJA/CS/1930)(11.18) **பணிப்பாளர்**

# AHUJA®

## ஒலிபெருக்கிச் சாதனங்கள்

60வது ஆண்டுகளுக்கு மேலான நம்பிக்கையின் சின்னம்

உத்தரவாதத்துடன்
குறைந்த விலை
பலவித ரகங்கள்
தரத்தில் உயர்ந்தது
நீடித்த உழைப்பது




அம்பிளிபயர்கள்
மைக்ரோபோன்கள்
கொன்பரன்ஸ் சிஸ்டம்கள்
ரிப்லெக்ஸ் ஹோன்கள்
மெகாபோன்கள்
ஆடியோ மிக்ஸ்சர்
பூஸ்டர் அம்பிளிபயர்கள்
கொலம் ஸ்பிக்கர்ஸ்

*** தரம் இல்லாத போலியான AHUJA பொருள்கள் விற்பனையில் இருப்பதால் தரம் உள்ள AHUJA பொருள்களை எங்கள் முகவரிடம் கேட்டு வாங்கவும் ***

அனைத்து மத வழிபாட்டு ஸ்தலங்களுக்கு, பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்

## றொபர்ட் ஏஜன்சீஸ் (பிறை) லிமிட்டட்

இல: 88, றெக்லமேசன் வீதி, கொழும்பு - 11. தொ.பே.:242 1009(Hunting) பெக்ஸ்:244 9590.
ஈ-மெயில்: sales@robertagencies.com கிளை : 108, கெய்சர் வீதி, கொழும்பு - 11.

www.robertagencies.com



**NAWALOKA HOSPITALS PLC**

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் தனியார் மருத்தவ துறை முன்னோடிகளான நவலோக்க மருத்துவமனை மற்றும் நவலோக்க ஹோல்டிங் கிளைகளுக்கு சுகாதார பாராமரிப்புத்துறை நிபுணர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் முகமாக கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களைக் கோருகின்றோம்.

## தாதிப் பயிலுனர்கள் (ஆண் / பெண்)

நவலோக்க மருத்துவமனை தாதியப் பாடசாலையில் இடம்பெறவுள்ள 3 வருட காலம் கொண்ட தாதியப் பயிற்சிகளைத் தொடர நவலோக்க மருத்துவமனை சந்தர்ப்பம் வழங்குகின்றது. இப்பயிற்சிகள் ஆங்கிலத்தில் இடம்பெறவுள்ளன. இலவச ஆங்கிலப் பயிற்சித் திட்டமும் உண்டு.

**கல்வித் தகைமைகள்**

- ஜீ.சீ.ஈ. சாதாரண தரம் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி
- ஜீ.சீ.ஈ உயர்தரத்தில் எந்தவொரு பிரிவிலும் 2 பாடங்களில் சித்தி மேலதிக தகைமையாக கருதப்படும்.
- உயரம் : 4'10" கும் குறையாமலிருத்தல்
- சிறந்த மன மற்றும் உடல் நிலையில் இருத்தல்

வரையறுக்கப்பட்ட வாய்ப்புகளே உள்ளன

பயிற்சிக் காலத்தில்
பயிற்சி கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

வெற்றிகரமாக தாதியப் பயிற்சியை பூர்த்தி செய்யும் மாணவ, மாணவியருக்கு நவலோக்க மருத்துவமனையில் நிரந்தர தொழில் வாய்ப்புகள் வழங்கப்படும்.

### இயந்திர இயக்குனர்கள் (Machine Operator)

- வயதெல்லை 18 - 40 வரை
- இயந்திரங்களை இயக்குவது தொடர்பான 1 வருட அனுபவம்.

குறைந்தபட்ச சம்பளம் ரூ. 30,000/-

### உதவியாளர்கள் (Helper)

- வயதெல்லை 18 - 40 வரை

குறைந்தபட்ச சம்பளம் ரூ. 25,000/-

- கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்
- மருத்துவ காப்புறுதி வசதி வழங்கப்படும்.

JEBZ

உங்களிடம் மேற்கூறப்பட்ட தகைமைகள் இருக்குமானால், உங்களது சுய விபரக்கோவையை உங்கள் தொடர்பு இலக்கங்களுடன் அனுப்பி வைக்கவும். தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில். விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு கீழ்க்காணும் முகவுரிக்கோ அல்லது vacancy@nawaloka.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ இவ்விளம்பரம் வெளியாகிய 10 நாட்களுக்குள் விண்ணப்பங்களை அனுப்புங்கள். தொலைபேசி: 0774088294

The Director/General Manager
**Nawaloka Hospitals PLC**
23, Deshamanya H K Dharmadasa Mawatha,
Colombo 02.

www.nawaloka.com

# சுயசக்தி

இருபத்தையாயிரம் எண்ணங்கள் - இருபத்தையாயிரம் வியாபாரங்கள்

## புதிய வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்க ரூ.200,000 கடன் உதவி

### ஆரம்பகட்ட கடன் தொகைக்கான வட்டி 5.5%

இந்த கடன் தொகைக்கு மேலதிகமாக, நீங்கள் புதிதாக ஆரம்பிக்கும் வியாபார ஆரம்ப செலவுகளுக்கு ரூ.50,000 கொண்ட உயர்ந்தபட்ச நன்கொடையொன்று வழங்கப்படும். ஏற்கனவேயுள்ள வியாபாரங்களுக்கு 5.5% வட்டியுடன் ரூ.250,000 கொண்ட உயர்ந்தபட்சக் கடன் கிடைக்கும். விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் பிரிவுகளுக்காக இவ்வாறு கடன் வழங்கப்படும்.

மேல்திக விபரங்களுக்கு: அழையுங்கள் 011 2 669 234 அல்லது பிரவேசியுங்கள் www.swashakthi.lk

கீழே உள்ள வங்கிகளின் எந்தவொரு கிளைக்கும் செல்லுங்கள்.




BOC SLS Bank SDB bank SEYLAN COMMERCIAL BANK NDB bank UNION BANK PAN ASIA BANK DFCC BANK Nations Trust Bank Cargills Bank


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூக்கன்றுகள் விற்பனை

நல்லின குரோட்டன்கள் மற்றும் 60 விதமான பூக்கன்றுகள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். பூச்சாடிகள். மீன் தொட்டிகள், பறவைக் கூடுகளையும் மலிவான விலையில் பெறலாம்.

**பூக்கன்று ஒவ்வொன்றும் 80/=**
**யாழ். அக்கூரியம்**
**917.K.K.S.றோட், யாழ்ப்பாணம்.**

**075 991 0060, 077 707 0711**

## மணமகள் தேவை

கொழும்பு, வெள்ளவத்தையில் வசிக்கும் கட்டட பொறியியலாளராக பணியாற்றும் றோமன் கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த 38 வயதுடைய மணமகனுக்கு படித்த அழகான மெல்லிய மணமகள் தேவை.

**077 444 0277**

## காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள காணி நிலப்பரப்பு இரண்டு விற்பனைக்கு உள்ளது. (குணபால் கடைக்கு அருகில்)

**தொடர்புக்கு: சிவகுமார்**

**077 465 9570**

## வீடு வாடகைக்குண்டு

இல.166.கோயில்வீதி.யாழ்ப்பாணத்திலுள்ள வீடு வாடகைக்குண்டு. இரு அறைகளுக்கு A/C வசதியுள்ளது மற்றும் தளபாடங்களுடனும், தளபாடங்கள் இல்லாமலும் வழங்கப்படும்

**076 352 7443**

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

**மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்**

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

## சன்றைஸ் மெடி கிளினிக்

**388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொடர்பு: 077 934 7687(லதா)**

## றோயல் மெடிக்கல் சென்ரர்

**454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொடர்பு: 077 654 4731 (தர்சினி)**

## விற்பனை விநியோகஸ்தர்கள்

கிளிநொச்சி /முல்லைத்தீவு
தொலைபேசி (0765- 470341), 0773393561

ISO மற்றும் SLS சான்றிதழ் பெற்ற அனைத்து வகையான கேபல் மற்றும் பாகங்களை 30 வருடமாக உற்பத்தி மற்றும் விநியோகத்தில் முன்னனியாக திகழும் நிறுவனமான வ/ப கமல் கேபல் தனியார் நிறுவனம் தமது விநியோக வலையமைப்பை மேம்படுத்தும் நோக்கில் மேல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு விற்பனை விநியோகஸ்தர்கள் தேவை.

விண்ணப்பதாரிகளால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

- கவனத்தில் கொள்ளக்கூடிய மூலதனத்தை முதலீடு செய்யக்கூடிய தகுதி
- செல்லுபடியாகும் வங்கி பிணையை முன்வைக்க கூடிய தகுதி
- களஞ்சியசாலை மற்றும் காரியாலய வசதிகள்
- பொருள் விநியோகத்திற்கு சாரதியுடன் கூடிய லொரி ஒன்று

மு.ப 8.30 முதல் பி.ப 5.30 வரை தொடர்பு கொள்ளவும்

நாங்கள் உங்களின் முதலீட்டுக்கு சிறந்த பிரதிலாபத்தை பெற்றுக்கொடுக்க துணையாக இருப்போம்
இவ்விளம்பரம் பிரசுரமாகி 14 நாட்களுக்குள் உங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வையுங்கள்

KML CABLES
TRUSTED QUALITY Since 1979

**பொது முகாமையாளர்**
**வ/ப கமல் கேபல்ஸ் (தனி) நிறுவனம்**
**இல. 56, கதுவல மாவத்தை, இரத்மலானை.**

## வேலைவாய்ப்பு

TFI நிறுவனத்துடன் இணைந்து நிதித்துறையின் முன்னேற்றப்பாதையில் நீங்களும் பயணியுங்கள்

**சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் (Marketing Officers) - ஆண்கள் (லீசிங்)**
**(மானிப்பாய் / சங்கானை, சுன்னாகம்/அச்சுவேலி, நெல்லியடி/ பருத்தித்துறை மற்றும் சாவகச்சேரி/ கொடிகாமம்)**

**வருமானம்:** நிரந்தர வருமானம் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள்

**தகைமைகள்:**

**கல்வித்தகைமைகள்:** உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவை 3 பாடங்களில் சித்தி

- வயதெல்லை: 19 வயதிற்கு மேல்
- செல்லுபடியாகும் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்

**விண்ணப்பதாரி**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி. நிதி சம்பந்தமான பல்வேறு பட்ட செயற்பாடுகளை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றக் கூடியவராக இருத்தல்வேண்டும். தேவையேற்படின் நீண்ட தூரங்களுக்கு பயணம் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு நீங்கள் தகுதியடைவராயின் உறவினர் அல்லாத இரண்டு நபர்களின் விவரங்களுடன் சுயவிவரக் கோவையை இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 7 தினங்களுக்குள் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**மனிதவளப் பிரிவு**
**ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ற்மென்ஸ் பி.எல்.சி.**
**233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
(ஏ.ஜே.ஏ.ஐஎன். 1178) (13.18.17)

## Study in Europe

LATVIA | LITHUANIA | POLAND

99% Visa Ratio , Minimum Edu Qualification & No more IELTS

- High ranking universities available
- 70% lower tuition fee as compare to the other EU universities.
- Easy to visit 27 Schengen countries in Europe . ( Resident visa)
- Degree program leading to PR in Europe
- Part time work allowed
- No interviews , quick visa processing
- Minimum Bank Balance for Europe

VISA CONFIRM

EDUCARE INTERNATIONAL
0777166461 /2/3 & 0114492672
admission@educarelk.com

## மணமக்கள் தேவை

•கனடாவில் வசிக்கும் 33. 39 வயதுடைய விவாகரத்துப் பெற்ற யாழ்.இந்து மதத்தைச் சேர்ந்த மணமகன்களுக்குத் தகுந்த அழகான மணமகள்களைத் தேடுகின்றோம்.

•கனடாவிலும் லண்டனிலும் வசிக்கும் 30.32.33 வயதுகளை உடைய மணமகன்களுக்கு யாழ். இந்துமதத்தைச் சேர்ந்த அழகான மணமகள்களை எதிர்பார்க்கின்றோம்.

•கனடாவில் வசிக்கும் 33 வயதுடைய செவ்வாய்க் குற்றமுள்ள மணமகனுக்கு யாழ்.வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த யாழ்.இந்து மதத்தைச் சேர்ந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
(J/8227)(11.18)

**தொடர்புகளுக்கு: T.P & Viber**
**0016475043336/0014166661855**

## MC LEOD Hospital இணுவில்

021 224 1569/ 076 394 4346
DAILY 4.00 pm TO 8.00 pm



Dental Care
Dr. S.Jeeva
Senior Dental Surgeon
BDS(Peradeniya), DHDP(COLOMBO)



Implants, Impaction, Painless Extraction, Scaling & Polishing, Tooth Whitening, Tooth Colored Filling, Root Canal Treatment, Crown & Bridges, Dentures, Orthodontic Treatment (Braces), Gum Treatments, Pediatric Treatment (For Children)

**பொது வைத்திய நிபுணர்:**
Dr.N.கேதீஸ்வரன்
Dr.J.நளாயினி
Dr.S.கல்பனா

**சத்திர சிகிச்சை நிபுணர்:**
Dr.M.சிவகுமார்
Dr.S.கோபிசங்கர்
Dr.S.T.சர்மா

**மகப்பேற்று நிபுணர்:**
Dr.G.பவானி
Dr.A.சிறீதரன்
Dr.M.வதனா

**தோல் வைத்திய நிபுணர்:**
Dr.S.பெலிசியா
Dr.S.சத்தியரேகா

**குழந்தையியல் நிபுணர்:**
Dr.N.சரவணபவானந்தன்
Dr.S.ஜெயபாலன்

**தினமும் வைத்திய நிபுணர்களின் சேவை, வெளிநோயாளர் பிரிவு, ஆய்வுகூடப் பரிசோதனை ஆகியன நடைபெறும்.**

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

- ★ தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?
- ★ இள நரையா?
- ★ முடி கொட்டுகிறதா?
- ★ தலையிடியா?
- ★ பேன்,பொடுகு தொல்லையா?

பொன்னாங்காணி, வல்லாரை, இலாமிச்சை வேர், மருதாணி, கருசலாங்கண்ணி, கருவேப்பிலை சேர்த்துக் காய்ச்சிய ஆயுள்வேத எண்ணை 100% இயற்கை மூலிகைகளால் ஆன இவ்வெண்ணையைப் பாவித்து 2 வாரங்களில் பலனை உணர்வீர்கள்.

பதிவு இல: 16168
077 263 9037
**221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## உடல் எடை குறைய வேண்டுமா?

- ★ உடல் எடை குறைக்க வேண்டுமா?
- ★ ஊளைச்சதையா?
- ★ வயிறு மார்பு குறைக்க வேண்டுமா?
- ★ எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா?
- ★ 100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (டொனிக் குளிசை, கிறீம்)

**ஆச்சரியம் 10 நாள்களில் வயிறு மார்பு குறைக்கும் கிறீம் எம்மிடம் உண்டு**

விலை 3500/= 5500/= 9000/=

**இதனைப் பாவித்து 10 நாள்களில் அபரீதமான மாற்றத்தை உணர்வீர்கள்**

பதிவு இல: 16168
**221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**
077 210 6155

## WORK FROM HOME வீட்டிலிருந்து வருமானமீட்ட

**Training/Guide - பயிற்சி/வழிகாட்டி**

இணையத்தில் முழுநேரம்/பகுதிநேரம் வேலை செய்து வருமானமீட்டும் தொழில் முறை வழிகாட்டி

மாதம் குறைந்தது ரூ10,000/= இலிருந்து, ரூ100,000/= இற்குமேல் உழைப்பதற்கான வழிகாட்டல் மற்றும் பயிற்சி

இது சுலபமாக பணமீட்டும் வழி அல்ல. முயற்சிக்கு ஏற்ற வருமானம் பெறும் வழி.

முழுநேர Freelancer ஆக தொழில்புரியும் அனுபவமிக்க வழிகாட்டி

கணினியில் உங்களுக்கு இருக்கும் திறமையைக்கொண்டு internet ஊடாக வெளிநாட்டு வேலைகளைச் செய்து அந்நியச்செலாவணியில் உழைக்கும் நம்பிக்கையான தொழில்முறைக்கான வழிகாட்டல்.

- ஒரு புதுமுக Online Freelancer தெரிந்து கொள்ள வேண்டியவை.
- வெற்றிகர Freelancer ஆவதற்கு மேற்கொள்ளவேண்டிய வழிமுறைகள்.

ஒவ்வொருவரினது திறமை/நிலைக்கேற்ற ஆலோசனை, பயிற்சி

மேலதிக விபரங்களுக்கு, பயிற்சி/வழிபாட்டல் பெற rrahavan.tutor@gmail.com

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)

## பதவி வெற்றிடம்

**பதவி - கணக்காளர் தரம் 104/09**
**சம்பளத் திட்டம் - 15660-190x10-200x10-19560**
**(கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு அமைய உரிய படிகள் வழங்கப்படும்)**

### கல்வித்தகைமை

அ.) கூட்டுறவுச் சங்க ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்காளர் / உள்ளக கணக்குப் பரிசோதகர் பதவி ஒன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச்சங்க ஊழியர் 11ஆவது சம்பளத்திட்டத்தில் உள்ளகக் கணக்குப்பரிசோதகர் / கணக்குப் பதிவியலாளர்/கணக்கு அல்லது கணக்குப்பரிசோதகர் அலுவல்கள் சம்பந்தமாய் எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

ஆ. ஐக்கிய இராச்சிய கணக்கு பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டுப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமாய் மேற்பார்வை மட்டப் பதவியில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தரப் பத்திர சித்தி/கூட்டுறவுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 03 ஆண்டுகால அனுபவம்.

**அல்லது**

க.பொ.த உயர் தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வுத் துறையில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகால அனுபவம்.
வயதெல்லை 21-45 (கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல)

**விண்ணப்பமுடிவு திகதி - 31.03.2017**

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி- செயலாளர் . யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை வீரசிங்கம் கட்டடத் தொகுதி .2 ஆம் மாடி. இல12 . கே.கே. எஸ். வீதி . யாழ்ப்பாணம்.
விண்ணப்பப்படிவத்தை சபையின் கடமை நேரத்தில் ரூபா 20/= செலுத்தி பெற்று விண்ணப்பிக்கவும்.

**(சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)**

**செயலாளர்**
**யா.மா.கூ. சபை**

**11.03.2017** (AJA IN 1176)(12.18.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகிந்தவுக்கு ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு!

கொழும்பு, மார்ச் 12 முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை எதிர்வரும் 16ஆம் திகதி ஜனாதிபதிஆணைக் குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஊழல் மோசடிமற்றும்அரச சொத்துக்கள் முறைகேடுகள்தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவால் வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்து கொள்வதற்காகவே அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற அரச தலைவரின் தேர்தலின் போது பரப்புரை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்காக அரச ஊடகத்திற்குசெலுத்த வேண்டிய பணம் இன்னமும் செலுத்தப்படவில்லை. இது தொடர்பாகவே விசாரணை இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற10)


## VACANCIES
### MARKETING EXECUTIVE (Male & Female)

We are a Company dealing with Children educational programme and there is an exciting & excellent opportunity for Self - motivated, committed indivduals to take up the responsibility as

Requirements
- GCE (A/L) Qualified
- Below 35 years old (School leavers may apply for trainee position)

If you believe that you are the right cantidate, Please e-mail or contact immediately
Branch Manager G.Anthany
Phon No: 077 356 6835, 021 567 1130

Benifits
- An attractive salary
- Travelling allowances
- Commissions payments
- Telephone facilities
- Motorbike allowances
- incentive & Overseas trips for target achievers
- Career development (Management position)

Marketing Executive 25 000/=+++
After 3Months Management Executive 42 500/=+++



**Pioneer House Learning (PVT) Ltd.**
No.100, 2nd Floor, Manipay Road, Jaffna.
E-mail: jaffnapioneerthouse@gmail.com



## வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 10.02.2017 அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி
அமரர்
**ஆறுமுகம் கனகம்மா**



அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெறும். அக்கிரியையில் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

குடும்பத்தினர்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 28 09 1956



விண்ணில் 13 02 2017

அமரர் **தம்பு யோகராசா**
(சுகந்தன் சாணைக் கடை உரிமையாளர்)

கடந்த13.02.2017அன்று இறைவனடிசேர்ந்தஎமது குடும்பத்தலைவர் அமரர்தம்புயோகராசா அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள்நாளை (13.03.2017) திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணிக்குக் கீரிமலைக் கடற்கரையில் நடைபெறும்.

வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் புதன்கிழமை (15.03.2017) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.

குடும்பத்தினர்.



## விண்ணகப் பயணத்தின்

**2** ஆம் ஆண்டு நிறைவு

மண்ணகம் 16.07.1935



விண்ணகம் 12.03.2015

அமரர் கந்தையா ஜெயரட்ணம்

**6** ஆம் ஆண்டு நிறைவு

மண்ணகம் 19.02.1940



விண்ணகம் 17.02.2011

திருமதி மகிழ்மலர் ஜெயரட்ணம்

மரணமே உன் கூர் எங்கே,? பாதாளமே உன் ஜெயம் எங்கே?
மரணத்தை ஜெயித்த மன்னவன் இயேசு எமக்குள் இருக்கிறார்
பாரினில் நாம் வாழ ஏணியாய் நின்ற பெற்றோரின் நினைவுகளில் மிதக்கின்றோம்.

இராமலிங்கம் வீதி, உடுவில்.

குடும்பத்தினர்.



# 47 ஆம் நாள் நினைவஞ்சலி

### எங்குற்றாய் எம் கணேசா!



கணேசாமிர்தம் – காரைநகர்
**அமரர் E.S.P. கணேசலிங்கம்** JP (whole Island)
உரிமையாளர் ESP & Co. கொழும்பு, யாழ்ப்பாணம்.
சிவதொண்டன், தேசகீர்த்தி, தேசாபிமானி, வணிகமாமணி
உறுப்பினர் கொழும்பு மாவட்ட மனித உரிமை சம்மேளனம்.

அன்னையின் அரவணைப்பில் 18.06.1964
இறைவனின் சந்நிதியில் 23.01.20[illegible]

கற்றவர்கள், காசாளர், கலைவல்லார் வாழுமெழில்
நிற்கும் காரைநகர் கவினழகு காட்டிய நம் கண்ணியவான்
உற்றவரும் மற்றவரும் வாழ வகை உதவுமன்பன்
வெற்றித்திருமகன் கணேசலிங்கா, உன் பணிகளெல்லாம்
இற்றைவரையென்ன உலகுள்ளவரை உயர்ந்துநிற்கும்
பெற்றவர்கள் பார்த்து மகிழ பெருமை பல பெற்ற உந்தன்
நற்குணங்கள் எதைச் சொல்ல நல்லவனே – எங்குற்றாய்
குற்றமேதுமில்லாக் குலவிளக்கே, குவலயத்தில் குன்றென நிமிர்ந்த ஐயா!
கொற்றவனே, சற்றுமிரங்காத கொடுங்கூற்றனவன் உன்னுயிரை
சுற்றியெடுக்க, துடித்தழுதோம் துயர் மீளாது விதிர்விதித்தோம்
சொற்கள் வருமோ எம் சுந்தரனே உம்கீர்த்தி சொல
தற்புகழ் கொள்ளாத உன் தன்மையெல்லாம் தரணி சொல்ல
பற்பல பெருமையெல்லாம் பார்த்தே இறுமாந்தோம் எம்மை
பரிதவிக்க விட்டே பாரகன்று சென்று விட்டீர்
நித்தமும் நினைந்து உமை நாங்கள் துதிக்கும் நிலையடைந்தோம்
மத்தள வயிறுடைய மாமுகன் கணேசன் அந்த
வித்தக விநாயகன்றன் விரைகழலை இறைஞ்சுகின்றோம்!

எம் குடும்பத் தலைவர் E.S.P. கணேசலிங்கம் அவர்கள் 23.01.2017 இல் அமரரான நாள் முதல் எம்முடன் அன்பு பாராட்டி அவரின் இழப்புத் துயரிலும், கிரியைகளிலும் பங்குகொண்டு உதவிகள் பல புரிந்து அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரிற்கும், மற்றும் பிரிவுச் செய்தி கேட்டு உள்நாட்டிலும வெளிநாட்டிலுமிருந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள் சமர்ப்பித்தவர்கட்கும் இவ்வேளையில் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதுமட்டுமல்லாது 12.03.2017 அன்று ஞாயிற்றுக்கிழமை 11.00 மணியளவில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் 47வது நாள் நினைவேந்தல் நிகழ்விலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

கணேசபவனம், வாரிவளவு, காரைநகர்.
No. 11, Bethesda Place, off Dickmans Road, Bambalapitiya, Colombo - 04. Tel: 0771106323, 0776757178.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியதொரு தொழில் வாய்ப்பு!

சட்ட அலுவலர் (வழக்காடல்) யாழ்ப்பாணம்
தமிழ் மொழித் தேர்ச்சி உள்ளவர்

நீங்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- 32 வயதுக்குக் குன்றந்தவராக இருத்தல் வேண்டும்.
- சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும். (சட்டத்தில் இளமாணிபட்டம் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்)
- வழக்காடலில் பயன்படுத்தப்படும் வழக்குரைகளையும் ஏனைய வழக்காடல் மற்றும் நீதிமன்ற ஆவணங்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த தொடர்பாடல் திறன்களுடன் கையாளும் தகைமை கொண்டிருத்தல் வேண்டும். (சிங்கள மொழியறிவு இருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்)
- ஒரு நிதிச் சேவைகள் நிறுவனத்தில் அல்லது வழக்காடலில் ஈடுபட்டுள்ள சட்ட நிறுவனத்தில் ஆகக்குறைந்தது 3 வருடத்திற்கு குறையாத அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நொத்தாரிசு உரிமத்தைக் கொண்டிருப்பதுடன் உறுதி எழுதுவதில் நியாயமான அறிவை / அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வடமாகாண பிராந்தியத்தில் பணிப்புரிபவராகவும் ஏனைய தொழில்சார் நடவடிக்கைகள் அனைத்தையும் தலைமைகாரியத்தின் (உதவி தலைவர்) சட்ட அலுவலர் காரியாலத்தை சார்ந்து காணப்படும்.

எமது வெப்தளத்தில் பதிவிறக்கம் செய்யக்கூடிய DFCC வங்கியின்
விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கும் பதவியையும் குறிப்பிட்டு
2017 மார்ச் 16 ஆம் திகதிக்கு முன்னர்
recruit@dfccbank.com இற்கு அனுப்பி விண்ணப்பியுங்கள்.

உப தலைமை அதிகாரி (மானிட வளம்)
DFCC வங்கி, 73/5, காலி வீதி, கொழும்பு 03
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# Sharmila Travels

Ticket / Hotel / Holidays / Visa / Insurance

உல்லாசப் பயணிகளுக்கு
Sharmila Travels வழங்கும் அரிய வாய்ப்பு....













★ 3 Nights Accomodation ★ Daily Breakfast
★ Airport transfer (Sic)

Terms & Condition Apply | Twin Share Basis

**தேவை**

★ எமது யாழ் கிளை அலுவலகத்துக்கு பின்வரும் பகுதிக்கு Staff தேவைப் படுகின்றனர். சுறுசுறுப்பாக வேலைசெய்ய விரும்புபவர்கள் மாத்திரம் எமது மின்னஞ்சல் மூலம் உங்களது சுயவிவரக்கோவைகளை விண்ணப்பிக்கவும்.

★ Marketing Staff, Field Work & Office work கொழும்பு அலுவலகத்திற்கும் தேவை.

தொடர்புகளுக்கு:
**Sharmila Travels** 289, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

| யாழ்ப்பாணம் | பம்பலபிட்டி | நீர்கொழும்பு | மட்டக்களப்பு | கண்டி |
|---|---|---|---|---|
| 021 2220 266 | 0112 586 845 | 031 2230 200 | 065 2224 304 | 081 2244 565 |

# அமெரிக்காவில் மருத்துவராக தொழில்பார்ப்பதற்கு...



Limited Seats

## STUDY MBBS IN ST LUCIA - USA

Scholarship available

**5 வருட பாடநெறி**

**ST LUCIA வில் 3 வருடங்கள்.**

**2 Years ACGME approved Green Book Clinical rotations in USA Hospital along with US Medical Students**

- * CAAM- HP accreditation
- * NBME (National Board of Medical Examination USA
- * Listed in WHO IMED ECFMG MCI
- * 90% Students Pass USMLE - 1 in 1st attempt
- * 35 year old Collage
- * Facilities Like Human Simulation Lab & Skills Lab
- * Food with SRI LANKAN taste available
- * 100% Guaranteed Admission
- * Affordable Fees No Donation
- * Career leading to PG degree in USA
- * Alumini of thousands of PG Doctors in USA and across the world
- * 50,000 US$ stipend during PG
- * More than 80% Residency Match in USA
- * 80% USMLE step 2 passing ratio
- * 100% USA medical curriculum

## FREE SEMINAR & SPOT ADMISSION

**Presented by University representative**

**Date: 19th March 2017**
**Time: 4.00pm-6.00pm**

**Venue:**
**Cinnamon Grand Colombo, Ebony Room**

தமிழிலும் தொடர்பு கொள்ளலாம் : 0777 66 12 16

**DISCOVERY EDUCATION (PVT) LTD**
10A, 10TH LANE, OFF SCHOFIELD PLACE,
COLOMBO 3. TEL: 0777 66 12 16
Email: discoveryspartan@gmail.com

FLEX Graphic

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டு, பொருளாதார வளர்ச்சி மீளமைக்கப்பட்டுள்ளது

## அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 12
தற்போதைய அனைத்துலக சூழலில் பல நாடுகள் பாதுகாப்பற்றவையாகவும், கொந்தளிப்பு அல்லது சுற்றுச்சூழல் சவால்களுக்கு முகம் கொடுப்பதாகவும் இருக்கின்றன. இந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை அமைதியான நாடாக உள்ளது.

தற்போது ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டு, பொருளாதாரவளர்ச்சிமீளமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்தார்.

அமெரிக்காவின் வொசிங்டனைத் தளமாகக் கொண்ட ஹட்சன் நிறுவகத்தில், 'இலங்கை: இந்தோ பசுபிக்கில் வளரும் கடல்சார் கேந்திரம்' என்ற தொனிப்பொருளில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமுத்திரங்களில் தடையற்ற வணிகத்தைப் பாதுகாப்பதற்கும், அமைதியான கடற்பயணங்களை உறுதிப்படுத்துவதற்கும் இந்தியப் பெருங்கடல் மற்றும் அதற்கு அப்பால் கடல்சார் சக்திகளுடன் இணைந்து செயற்பட இலங்கை ஆர்வமாக உள்ளது. பண்டைய காலத்தில் இருந்தே இலங்கையின் அமைவிடம் அமைதி மற்றும் உறுதிநிலையை அடைவதற்கான கடல்சார் கேந்திரமாக இருந்து வந்துள்ளது. இந்தியப் பெருங்கடலில் இந்த முக்கிய வகிபாகத்தை மீண்டும் அடைவதிலும், அதனை இந்தோ பசுபிக் வரை விரிவாக்கம் செய்வதற்கும் இலங்கை அக்கறை கொண்டுள்ளது.

இந்தோ பசுபிக் பிராந்தியத்தின் வளர்ந்த பிரதான நாடுகளுடன் கடற்பாதைகளை இணைக்கும் இடத்தில் இலங்கை அமைந்துள்ளது. இந்தப் பரபரப்பான கடற்பாதை இலங்கைக்குத் தெற்கே 6 கடல்மைல் தொலைவில் உள்ளது. இதன் வழியாக உலகின் மூன்றில் இரண்டு பங்கு பெற்றோலிய விநியோகமும், அரைப்பங்கு கொள்கலன் போக்குவரத்தும் இடம்பெறுகின்றன.

கொழும்புத் துறைமுகம் ஏற்கனவே தெற்காசியாவில் போக்குவரத்து நெருக்கடிமிக்க துறைமுகமாக இருக்கிறது - என்றார். (10)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இரு வேறு பாதைகளில் பயணிப்பதில் என்ன தடை?

ஐக்கியநாடுகள்மனிதஉரிமைகள்சபையில்இலங்கைகுறித்து முன்வைக்கப்படவுள்ளதீர்மானம்தொடர்பானவாதப்பிரதிவாதங்கள்சூடுபிடித்துள்ளன. இந்தத்தீர்மானத்தைநிறைவேற்ற ஆதரவாகநிற்கின்றதுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பு.அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதில் பொருளேதும் இல்லை என்று வாதிடுகின்றன கூட்டமைப்புக்கு எதிரான அரசியல் கட்சிகளும் பொதுச் சமூகக் குழுக்களும்.

2015 ஒக்டோபர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த கொழும்புக்கு இரு வருட கால அவகாசம் வழங்கப்பட்டது. அந்தக்காலப்பகுதிக்குள்தீர்மானத்தில்சொல்லப்பட்ட முக்கியமான பல விடயங் கள் நிறைவேற்றப்படவேயில்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் கடந்த வாரம் முன்வைத்த தனது அறிக்கையி லும் இந்த விடயங்களைக் கடுமையாகச் சாடியிருந்தார்.

போர்க்குற்றவிசாரணைக்காககலப்புநீதிமன்றம்ஒன்றைஅமைப்பதற்கு அந்தத் தீர்மானம் பரிந்துரைத்திருந்தது. அதை அமைப்பதற்கான முயற்சி எதனையும் கொழும்பு எடுக்கவேயில்லை. அதற்கும்மேலாகஅத்தகையநீதிமன்றம்ஒன்றைஅமைப்பதற்குத் தான்இணங்கவேமாட்டார்என்றுஅரசதலைவர்மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் இருந்து பல தடவைகள் அவர் அதனைத் திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டார். அத்தோடு படையினரைத் தண்டிக்கும் செயற்பாடுகளிலும் தான் ஒருபோதும் ஈடுபடமாட்டார் என்பதையும் கூறிவிட்டார். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் இதுபோன்றே, இலங்கையின் அரசியல் சூழலுக்குக் கலப்பு நீதிமன்றம் பொருத்தமானதில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறு-வழங்கப்பட்டகால அவகாசத்துக்குள்தீர்மானத்தை நிறைவேற்றாத கொழும்புக்கு, அந்தத்தீர்மானத்தைநிறைவேற்றவேபோவதில்லைஎன்றுகூறும்ஆட்சித்தலைமைக்குமீண்டும் இரண்டு வருடகால அவகாசத்தை வழங்குவதால் என்ன பயன் என்பதே வரவுள்ள தீர்மானத்தை எதிர்ப்பவர்களின் கேள்வி. எனவே இந்தத்தீர்மானத்துக்குத்தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆதரவளிக்கக்கூடாது என்பது அவர்களின் வாதம்.

அதற்குப் பதிலாக இலங்கை விவகாரத்தை ஐ.நா. பொதுச் சபைக்கும், பாதுகாப்புச்சபைக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்பதும்அவர்களின்வலியுறுத்தல். கொழும்புநிறைவேற்றாது என்று தெரிந்தும், அதற்கு மீண்டும் கால அவகாசத்தை வழங்குவதிலும்பார்க்க ஐ.நா. பாதுகாப்புச்சபையில் இது தொடர்பான தீர்மானத் துக்கு ஆதரவு கிடைக்காவிட்டாலும்கூட அதனை முயற்சித்துப் பார்க்கலாமே என்பது அவர்களின் வாதம்.

மனித உரிமைகள் சபையில் இந்தத் தீர்மானத்தை இப்போது கைவிட்டால் அது கொழும்புக்குச் சாதமாகப் போய்விடும், தீர்மானத்தைநடைமுறைப்படுத்தவேண்டும் என்கிற பொறுப்பிலிருந்து அது விடுவிக்கப்பட்டுவிடும். அதனால் உலக நாடுகளின் கண்காணிப்பிலிருந்துகொழும்புவிடுபட்டுவிடும்,தற்போதைய அரசியல் நிலையில் அப்படிக் கொழும்பு விடுபடுவது தமிழர்களுக்குச்சாதகமானஅரசியல்நிலைஅல்லஎன்பதால்தொடர்ந்தும் கொழும்பை தீர்மானத்தின் பிடிக்குள் வைத்திருக்க வேண்டும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாதம்.

இந்தப்பிரச்சினையைஐ.நா.பாதுகாப்புச்சபைக்குஎடுத்துச்சென்றால்தமது வெட்டு அதிகாரத்தைப் (வீற்றோ பவர்) பயன்படுத்தி சீனாவும் ரசியாவும் அதனைத் தடுத்துவிடும் என்பதால் அது பயனற்ற முயற்சி என்பதும் அதன் விளக்கம்.

இப்படி இரு தரப்பினருமே தாங்கள் சொல்வதுதான் சரி, மற்றவர்கள் சொல்வதும் செய்வதும் தவறு என்று ஏறுக்கு மாறாக வாதாடி வரு வதிலும் பார்க்க அவரவருக்குச் சரியானது என்று எண்ணும்பாதையில்அவரவர்முன்னகர்ந்துபார்ப்பதுதான்சரியாக இருக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மனித உரிமைகள் சபையில் மல்லுக்கட்டும் அதே நேரத்தில் அதன் போக்குடன் மாறுபடுபவர்கள் இந்தப் பிரச்சி னையை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்குக்கொண்டு செல்வதற்கும் அதற்கானமக்கள் ஆதரவைத் திரட்டுவதற்கும் முயற்சிக்கலாம்.

ஒருவரின்காலைஅடுத்தவர்வாரிவிடும்தமிழர்களின்அடிப்படைப் புத்தியைக் கைவிட்டு, இருவேறு பாதைகளில் ஒரே இலக்கை நோக்கிப்பயணப்படஇருதரப்புகளும்முனைவதேமக்களுக்குப் பயனுள்ளதாகும். மக்களைப் பொறுத்தவரையில் யார் குத்தினாலும் அரிசியானால் சரிதான்.

# 2001 போர் நிறுத்த ஒப்பந்தம் புலிகள் பலமடைய உதவியது

தமிழாக்கம்:
எம்.ஐ.முபாறக்

*(நாட்டின் தலைமைத்துவத்தைப் பலவீனப்படுத்துவதன்மூலம் புலிகளைப் பலமடைய வைக்க பிரபாகரன் திட்டமிட்டுச் செயற்பட்டதாகக் குறிப்பிடும் முன்னாள் அமைச்சர் கருணா அம்மானது (விநாயகமூர்த்தி முரளிதரன்) செவ்வியின் கடைசிப் பகுதி இன்று பிரசுரமாகின்றது.)*

3

கே:இராணுவ உயர் அதிகாரிகள்டென்சில்கோப்பேக்கடுவை மற்றும் விஜய விமலரத்ன போன்றவர்களின் கொலையின் பின்னணியில் முன்னாள் ஜனா திபதி பிரேமதாஸா இருந்தார் என்று சொல்லப்படுகிறதே?

ப:அதுபொய்.பிரேமதாஸநல்லதலைவர். அவர் இல்லையென்றால் இந்திய இராணுவம் இப்போதும் இங்கு இருந்திருக்கும். அவர்கள் திருகோண மலையைப் பிடித்தி ருப்பார்கள். அவர்தான் இந்திய இராணுவத்தை விரட்டினார்.

இந்த இரண்டு உயர் அதிகாரிகளும் கொல்லப்பட்டமை ஒரு தற்செயல் நிகழ்வாகும். ஒரு தீவில் நிலை கொண்டிருந்து கொண்டு யாழ்ப்பாணத்தில் இருந்த புலிகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு இராணுவம் திட்டமிட்டி ருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் வீதியில்வந்த இராணுவ ஜீப்மீதுபுலிகள் தாக்குதல் நடத்தினர்.

அப்போது அந்த ஜீப்பில் இவர்கள் இருவரும் இருந்ததால் தாக்குதலில் கொல்லப்பட்டனர். உண்மையில் புலிகள் இவர்கள் இருக்கின்றார்கள் என்று அறிந்து இந்தத் தாக்குதலை நடத்தவில்லை. வழமை போல் இராணுவ வாகனம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தினார்கள். அதில் இவர்கள் இருவரும் இருந்தமை பிறகு தான் எங்களுக்குத் தெரிய வந்தது.

கே:பிரேமதாஸா மட்டக்களப்பு கிரானி லும் வெலிஓயாவிலும் புலிகளுக்கு ஆயு தங்கள் அனுப்பி வைத்தார் என்று இராணுவ அதிகாரி கமால் குணரத்ன தாம் வெளியிட்டுள்ள புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். இது உண்மையா?

ப:இதுஉண்மை.அவர் ஆயுதங்கள் மாத்திரமன்றி பணமும் தந்தார். பிரேமதாசா ஆட்சிக்கு வந்ததும் இந்திய இராணுவத்தை விரட்டுவ தற்குத் திட்டமிட்டார். உடனடியாக நாட்டைவிட்டுவெளியேறுமாறு உத்தரவிட்டார். இதனால் அவர்கள் அதை விரும்பாது தமிழ் இளைஞர்களைக் கொண்டு தமிழ் தேசிய இராணுவம் என்ற ஓர் ஆயுதக்குழுவைஉருவாக்கினர். அதில் 20 ஆயிரம் பேர்வரை இணைந்து கொண்டனர்.

தெற்கில் ஜேவிபி பிரச்சினை இருந்ததால் தமிழ்த் தேசிய இராணுவத்தை அடக்குவதற்காகவே பிரேமதாசா எமக்கு ஆயுதங்களையும் பணத்தையும் வழங்கினார்.

இந்திய இராணுவம் இருந்த போதுபுலிகளின்பலம்குறைந்தே இருந்தது. 2800 உறுப்பினர்கள் மாத்திரமே இருந்தனர். பிரேமதாசா எமக்கு ஆயு தங்கள் வழங்கிய பின்னர் மேலும் மூவாயிரம் பேரை இணைத்து பயிற்சிகளை வழங்கி தமிழ் தேசிய இராணுவத்தைநாம்கட்டுப்படுத்தினோம். இதற்கு பிரேமதாஸாவே உதவிகளைவழங்கினார்.

கே:லலித் அத்துலத்முதலியைக் கொலைசெய்ததுயார்?

ப: புலிகள்தான். இந்த நாட்டின் தலைமைத்துவத்தைப் பலவீனப்படுத்தி அதனூடாக தாம் பலமடைய வேண்டும் என்பதே பிரபாகரனின் திட்டமாக இருந்தது. இதனால் தான் அவர் பிரேமதாசா, காமினி திஸா நாயக்க மற்றும் லலித் அத்துலத் முதலி ஆகியோரைக்கொலைசெய்வித்தார்.

கே: ஒரு காலத்தில் உங்களுக்குஎதிராகப்போராடிய இராணுவ அதிகாரி ஜானக பெரேரா ஓய்வுபெற்ற பின் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட சந்தர்ப்பத்தில் கொல்லப்பட்டார். அவரை யார் கொன்றது?

ப: அந்தச் சந்தர்ப்பத்தில் நான் புலிகள் அமைப்பில் இருந்து விலகி இருந்தேன். ஆனால், அவர் புலிகளின் கொலைப்பட்டியலில் இருந்தார். வெலிஓயா சண்டையின் போது அதிகமான பெண் புலிகள் கொல்லப்பட்டனர். அந்தச் சண்டையை ஜானக பெரேராவின் தலைமையிலேயே படையினர் முன்னெடுத்தனர். அவரை எப்படியாவது கொல்ல வேண்டும் என்று பிரபா கரன் அப்போதுஎன்னிடம்கூறி இருந்தார். இதுதான் பிரபாக ரன். குறிவைத்தால் 20 வருடங்கள்

> “அந்தக் காலப் பகுதியை புலிகள் நன்கு பயன்படுத்தினர். ஆயுத விநியோகங்கள் சீராக இருந்தன. அந்தக் காலப் பகுதியில்தான் புலிகள் அதிக ஆயுதங்களை வாங்கினர். போர் உடன்படிக்கையில் புலிகளுக்கு சாதகமான சரத்துக்கள் இருந்தன. அதை இலங்கை ஆட்சியாளர்கள் கவனிக்கவில்லை.



**முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச புலிகளுக்குப் பல வகைகளில் உதவியது உண்மை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கழித்தாவது கொல்வார். வேறு ஆள்கள்போல் கோபத்தை அடக்குபவர் அல்ல அவர்.

**புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து புலிகளுக்கு நிதி உதவி கிடைத்தது**

கே: புலிகள் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு பணம் எங்கிருந்து கிடைத்தது?

ப: புலம்பெயர் தமிழர்களிடம் இருந்தே பெற்றோம். இருந்தும் அவர்கள் விருப்பத்து டன் பணம் கொடுத்ததில்லை. இப்போது அவர்கள் சந்தோசமாக உள்ளனர். உக்ரைன் போன்ற நாடுகளில் இருந்தே ஆயுதங்களை வாங்கினோம்.

கே: 2001 போர் நிறுத்த ஒப்பந்தம் புலிகளை பலவீனப்படுத்தியதா? பலப்படுத்தியதா?

ப: அந்தக் காலப் பகுதியை புலிகள் நன்கு பயன்படுத்தினர். ஆயுத விநியோகங்கள் சீராக இருந்தன. அந்தக் காலப் பகுதியில்தான் புலிகள் அதிக ஆயுதங்களை வாங்கினர். போர்உடன்படிக்கையில்புலிகளுக்கு சாதகமான சரத்துக்கள் இருந்தன. அதை இலங்கை ஆட்சியாளர்கள் கவனிக்கவில்லை.
உண்மையில் அந்த ஒப்பந்தம் முழுமையாக புலிகளுக்கே சாதகமாக இருந்தது. அரசுக்கு அது சரியான பின்னடைவாகும். அந்தக் காலத்தில்தான் புலிகள் பாங்கொக் போன்ற இடங்களுக்குச் சென்று விமானம் ஓட்டும் பயிற்சியைப் பெற்றனர். அதன்பிறகுதான் விமானப் படையும் உருவானது.

கே: நீங்கள் புலிகள் அமைப்பில் இருந்து விலகியதும் உங்களைக் கொழும்புக்கு அழைத்து வந்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாகிர்மௌலானாவாகும். அவரது அந்த உதவி எந்தவகையைச் சார்ந்தது?

ப: மௌலானா எனது பாடசாலைக் காலநண்பர். நான் புலிகள் இயக்கத்தில் இருந்தபோதுகூட இருவரும் நட்பாகவே இருந்தோம். நான் கொழும்பு செல்வதற்கு அவர் ஒரு நண்பராக இந்த உதவி செய்தார். எனக்கு உதவி செய்ததன் காரணமாகவே அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்து பாதுகாப்புக்காக அமெரிக்காவுக்குச் சென்றார். நான்புலிகள்அமைப்பில் இருந்து விலகுவதாக அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா, அமைச்சர்கள் லக்ஸ்மன் கதிர்காமர் மற்றும் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே ஆகி யோருக்குத் தகவல் கொடுத்தேன். சந்திரிகா என்னை இராணுவத்திடம் ஒப்படைத்து பாதுகாப்பு வழங்கினார்.

கே: நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரவிராஜ் மகேஸ்வரன் மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரது கொலைகளுக்கும் உங்களுக்கும் தொடர்பு உண்டா?

> நான் புலிகள் அமைப்பில் இருந்து விலகுவதாக அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா, அமைச்சர்கள் லக்ஸ்மன் கதிர்காமர் மற்றும் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே ஆகியோருக்குத் தகவல் கொடுத்தேன். சந்திரிகா என்னை இராணுவத்திடம் ஒப்படைத்து பாதுகாப்பு வழங்கினார்.

ப: அப்போது நான் இந்தியாவில் இருந்தேன். இதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**பிரபாகரன் கொல்லப்பட்டது உண்மையே?**

கே: பிரபாகரன் கொல்லப்பட்டது உண்மையா?

ப: உண்மை. சம்பவ தினத்தன்று காலை மகிந்த ராஜபக்ஸ எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டதாகச் சொன்னார். நந்திக்கடலுக்குச் சென்று அடையாளம் காணுமாறு என்னிடம் கூறினார். நான் சென்று அடையாளம் கண்டேன். அவர் பிரபாகரனே தான். 28 வருடங்கள் நான் அவருடன் இருந்திருக்கின்றேன். அதனால் என்னால் மிக இலகுவாக அவரை அடையாளம் காண முடிந்தது. ஆனால், சிலர் பிரபாகரன் இன்னமும் உயிருடன் உள்ளார் என்று கூறுகின்றனர். அது பொய்.

கே: உங்களது புதிய கட்சி உருவாக்கம் பற்றி?

ப: இது இரண்டு வருடங்களுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டது. இப்போதுதான் அதற்கான காலம் கனிந்து வந்துள்ளது. தமிழர்கள் இப்போது தமிழ் தேசிய கூட்டமைப்புமீது அதிருப்தியில் உள்ளனர். கூட்டமைப்பு மக்களுக்கு வழங்கிய எந்தவொரு வாக்குறுதியும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.
இந்த அரசுக்கு ஆதரவு வழங்குமாறு கூட்டமைப்பு தமிழர்களிடம் கோரியது. தமிழர்களும் வாக்களித்தனர். எதுவும் நடக்கவில்லை.
கிழக்கு மாகாணத்தில்கூட தமிழ் முதலமைச்சர் ஒருவரே இருக்க வேண்டும். ஆனால், கூட்டமைப்பு அதை முஸ்லிம்களுக்கு விட்டுக்கொடுத்தது. கூட்டமைப்பு வெறுமனே அரசைப் பாதுகாத்துக்கொண்டு செல்கின்றது.
இப்போது தமிழருக்கு மாற்றுக் கட்சி ஒன்று அவசியம். அதற்கான தலைமைத்துவத்தை என்னால் வழங்க முடியும். இனவாத அடிப்படையில் செயற்பட முடியாது. மிதவாதமே தேவை. எனது கட்சி இனவாதக் கட்சி அல்ல. எழுக தமிழ் போன்ற நிகழ்வுகள் காலத்துக்குப் பொருந்தாதவை.
மக்களின் இடங்களை இராணுவம் பிடித்திருப்பது தவறுதான். ஆனால், அதை நல்லமுறையில் பேசிப் பெறலாம். மட்டக்களப்பில் இராணுவம் மக்களின் இடங்களை பிடித்து இருந்தபோது எனது தலையீட்டால் பிரச்சினை தீர்ந்தது. இப்போது அந்த இராணுவ முகாம் இருந்த இடத்தில் 200 குடும்பங்கள் வாழ்கின்றன. இப்படித் தான் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும், தமிழ் தேசிய கூட்டமைப்பு கூறுவதுபோல் வடக்குகிழக்கில் இருந்து இராணுவத்தை முழுமையாக அகற்ற முடியாது. நாட்டின் பாதுகாப்புக்காக இராணுவம் நாடு பூராகவும் இருக்க வேண்டும்.

கே: எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் உங்களது கட்சி போட்டியிடுமா?

ப: ஆம். இது இனவாதக் கட்சி அல்ல. இதற்கு சிங்கள மக்களும் ஆதரவு வழங்க வேண்டும்.

கே: முன்னாள் புலிகளும் இதில் இணைத்துக்கொள்ளப்படுவார்களா?

ப: நிச்சயமாக. அவர்கள் அரசியலில் ஈடுபட விரும்பினால் நாம் அதற்கு இடம்கொடுக்க வேண்டும்.
ஜேவிபியில் ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் உள்ளனர். அதேபோல் தமிழ் தேசிய கூட்டமைப்பிலும் உள்ளனர். அது நல்ல விடயம். அப்போதுதான் ஆயுதக் கலாசாரம் ஒழிந்து ஜனநாயகம் மலரும். அதேபோல் முன்னாள் புலிகளும் உள்வாங்கப்பட வேண்டும்.

கே: சுமந்திரனைக் கொலை செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. அப்படியென்றால் இன்னமும் புலிகள் உள்ளனரா?

ப: இது பொய். வெறும் கட்டுக் கதை. சுமந்திரனால் இப்போது வடக்குக்குச்செல்லமுடியாது. மக்கள் அவரை எதிர்க்கின்றனர். இந்தக் கட்டுக்கதை பாரதூரமானது. புனர்வாழ்வளிக்கப்பட்ட அத்தனை புலி உறுப்பினர்களையும் சந்தேகத்துடன் பார்க்கும் நிலையை இது ஏற்படுத்தியுள்ளது.

கே: மகிந்தவின் ஆட்சியில் உங்களுக்கு அதிக பாதுகாப்பு வழங்கப்பட்டது. இப்போதும் அதே பாதுகாப்பு உள்ளதா?

ப: இருக்கின்ற பாதுகாப்பு எனக்குப் போதும்.

கே: உங்களுக்கு உயிர் அச்சுறுத்தல் இல்லையென்று நீங்கள் நினைக்கிறீர்களா?

ப: இருக்கின்றது. நான்தான் புலிகளின் கொலைப் பட்டியலில் முதலிடத்தில் இருந்தது. இருந்தாலும் எனக்குப் பயமில்லை. எனது தற்போதைய தேவை எல்லாம் தமிழர்களுக்கு நல்ல தலைமைத்துவத்தை வழங்க வேண்டும் என்பதுதான்.
சிங்களத் தலைவர்களுடன் சுமுகமான முறையில் பேசி தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல் எனக்கு உண்டு. 10 வருடங்கள் நாடாளுமன்றில் இருந்ததால். அரசியல் அனுபவமும் உண்டு.
எனக்கு சர்வதேசமட்டத்திலும் தொடர்புகள் உண்டு. என்னைப்போல் பல அனுபவமும் திறமையும் உள்ள ஒருவர்கூட தமிழ்தேசியகூட்டமைப்புக்குள் இல்லை.

கே: உங்களது மனைவியும் பிள்ளையும் எங்கே இருக்கின்றனர்?

ப: உயிர் அச்சுறுத்தல் இருப்பதால் அதுபற்றி எதுவும் கூற நான் விரும்பவில்லை.

கே: அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் எங்கே போட்டியிடுவீர்கள்?

ப: மட்டக்களப்பில்தான். இருந்தும் அப்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப முடிவெடுப்பேன். இவ்வாறு கருணா அம்மான் தெரிவித்தார்.



# வாசகர் திருமுகம்

## யாருக்குச் சொல்லியழுவோம்....?

தற்போது அரிசிவிவகாரம் அரசியல் மயப்படுத்தப்பட்ட பின்பு "எரிகிற வீட்டில் பிடுங்குவதே லாபம்..." எனும் போக்கில் சில வர்த்தகர்கள் செயற்கையான ஓர் அரிசித் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது.
நாடாளுமன்றில் அரிசிவிவகாரம் சூடுபிடிக்க ஆரம்பிக்க முன்பு வர்த்தக நிலையங்களில் தேவையான அளவு அரிசி தாராளமாகக் கிடைத்தது. ஆனால் இன்று காலநிலையைக் காரணம் காட்டிப் பல வர்த்தகர்கள் அரிசியைப் பதுக்கிவைத்துள்ளதோடு, அதிகூடிய விலைக்கும் விற்கின்றனர். இதனால் பாதிக்கப்படுவது அடிமட்ட வர்க்கப் பொதுமக்களும் நாள்கூலித் தொழிலாளர்களுமே.
வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக முன்னரெல்லாம் பத்துக்கிலோ அரிசிப் பைக்கற்றுக்கள் அடுக்கிவைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில், சமீபகாலமாக குறிப்பிட்ட பைக்கற்றுக்களை கடைவாசல்களில் காணமுடியவில்லை. காரணம் கேட்டால் "வவுனியாவில் இருந்து அரிசிவரவில்லை" என்ற பதில் வருகிறது.
என்னதான் அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலையை அரசு நிர்ணயித்தாலும், சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்பினருக்குச் சிலர் "காதிலே பூச்சுற்றிவிட்டு" தமது கைங்கரியத்தைத் தொடரவே செய்கிறார்கள்.
அரிசிமூடைகள் இறக்குமதி, பதுக்கிவைப்போர் மீது சட்டநடவடிக்கை எனப் பலதரப்பட்ட அறிவிப்புக்களைப் பத்திரிகைகளில் பார்த்து விட்டு பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப் படுபவர்கள் வெறுமனே பெருமூச்சு விடுவதைத் தவிர வேறுவழியில்லை என்றே சொல்லமுடியும்.

*அஞ்செழுத்தோன்*
*புதுக்குடியிருப்பு*

## சந்திரிகாவின் அரசியல் குறளிகளில் இதுவுமொன்று

போரால் பாதிக்கப்பட்ட தமிழ்ப்பெண்களுக்கு எவ்வித உதவிகளும் கிட்டுவதில்லை என மனம் நொந்து கூறியுள்ளார் முன்னாள் அரசதலைவர் சந்திரிகா.
சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் நிலவிய போர்ச்சூழலால் வடக்கு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ்க் குடும்பத்தலைவர்கள் கொல்லப்பட்ட வேளை, அவர்களது குடும்பங்களுக்கு சந்திரிகா அரசு எதுவித உதவிகளையும் வழங்கியதில்லை.
அந்த வகையில் சந்திரிகாவின் தற்போதைய சுடலை ஞானம் அவரது சந்தர்ப்பவாத அரசியல் இலாபநோக்கு உத்தியொன்றாகக் கொள்ளத்தக்கதே.

*ப. ஜெயராம்*
*கிளிநொச்சி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயாளிகளின் கவனத்துக்கு

மருத்துவர் எஸ்.ரி.எஸ்.சந்திரகுமார்

நீரிழிவு நோய் கண், மூளை, இருதயம் மற்றும் சிறுநீரகத்தைப் பாதிக்கும்.

இந்த நோய் உள்ளவர்களுக்கு மற்றவர்களைவிட பார்வைக் கோளாறு ஏற்படும் வாய்ப்பு இரண்டு மடங்கு அதிகம்.

கண்ணில் முக்கியமாக பின்புறமுள்ள விழித்திரையின் குருதி நாளங்களைப் பாதிக்கும்.

விழித்திரையில் ஏற்படும் மாறுதல்களை கண் மருத்துவர்களால் மட்டுமே பரிசோதித்து கண்டறிய முடியும். மூளை, இருதயம் மற்றும் சிறுநீரகங்களிலும் இதே மாறுதல்கள் ஏற்படுவதால் இந்தப் பரிசோதனை மூலம் இவற்றின் தன்மைகளையும் அறிய முடியும்.

நீரிழிவு நோயால் ஏற்படும் விழித்திரை பாதிப்பு நோயின் தீவிரம் மற்றும் எவ்வளவு காலம் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதைப் பொறுத்தது.

பல வருடங்கள் நோய் உள்ளவர்களில் 70 முதல் 80 சதவீதம் பேருக்கு விழித்திரை பாதிப்பு ஏற்படும்.

நீரிழிவு நோயாளிகளுக்குப் பார்வையிழக்கும் வாய்ப்பு மற்றவர்களைவிட 25 மடங்கு அதிகம் உள்ளது.


குறைந்த பார்வை அல்லது பார்வையிழப்பு ஏற்படும் வரை எந்தவித அறிகுறிகளும் தெரியாது.

விழித்திரைப் பாதிப்பை ஆரம்பநிலையிலேயே கண்டுபிடித்து லேசர் சிகிச்சையளித்தால் கணிசமான அளவில் பார்வையிழப்பைத் தடுக்கலாம்.

லேசர் சிகிச்சையால் இருக்கும் பார்வையைப் பாதுகாக்க முடியுமே தவிர இழந்த பார்வையைத் திரும்பப் பெற முடியாது.

விழித்திரை பாதிப்பால் ஏற்படும் பார்வையிழப்பைத் தடுக்க நீரிழிவு நோயாளிகள் அனைவரும் 12 மாதத்துக்கு ஒரு முறையேனும் தங்கள் கண்களை கண் மருத்துவரிடம் அவசியம் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். விழித்திரை பாதிக்கப்பட்டிருந்தால் அடிக்கடி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் கண்பார்வையை முற்றிலும் இழக்காமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்







# இன்றைய உணவு முறைகளும் எதிர்கால இன்னல்களும்



மருத்துவர் பொ.ஜெசிதரன்

ஆரோக்கியமான ஆளுமை விருத்தி, உடல் உள வளர்ச்சி மற்றும் சுறுசுறுப்பான வாழ்வுக்கு போதியளவு போசணை மிக்க உணவு அவசியமாகும். இது வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் அவசியமானதாக உள்ளது.

பதப்படுத்திய உணவு அதிகளவு கிடைக்கக் கூடிய தன்மை, துரித நகராக்கல் வாழ்க்கை முறை மாற்றம், விரும்பத்தகாத சந்தைப்படுத்தல் செயன்முறைகள் என்பவைஎம் ஆரோக்கிய உணவுப் பழக்கங்களை முற்றாகவே மாற்றிவிட்டன. மக்கள் தற்போது உண்ணும் உணவுகள் கூடிய சக்திப் பெறுமானமுள்ளதாகவும் அதிகளவு கொழுப்பு, சீனி மற்றும் உப்புக்கொண்டவையாகவுமே உள்ளன். இவை காரணமாக நிறை அதிகரிப்பு (OverWeight) அதிகூடிய நிறை (Obesity) என்பன போன்ற நோய்த்தாக்கத்துக்கான அபாய நிலைகள் ஏற்படுவதுடன் தொற்றா நோய்களான நீரிழிவு உயர் குருதி அமுக்கம் உயர் கொலஸ்ரோல், புற்றுநோய் மற்றும் இதய நோய்களும் ஏற்படுகின்றன. குருதிச்சோகை நோயானது இலங்கையில் வயது வித்தியாசம் இன்றி பாதிப்பை ஏற்படுத்தும் போசணைக் குறைபாடாக இன்றும் காணப்படுகின்றது. போசணைக்குறைபாடு பல காரணங்களால் ஏற்படுவதனால் போசணைத்தரத்தை உயர்த்துவதற்கு பல படிகளைக் கொண்டதும் பல தரப்பினருடனானதுமான அணுகு முறையே தேவைப்படுகிறது. அதாவது பல தரப்பினரையும் முழுமையாக உள்வாங்கக் கூடிய அணுகுமுறையே தேவையாகவுள்ளது.

ஆரோக்கியமான உணவு என்பது ஆறு வகையான உணவுக் கூறுகளையும் பரிந்துரை செய்யப்பட்ட அளவுப்பிரமாணப்படி கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறான பலதரப்பட்ட உணவுவகைகளைக் கொண்ட கலப்புணவே உடல் வளர்ச்சிச் சக்தி மற்றும் நோயிலிருந்து உடலைப் பாதுகாக்கும் நிர்ப்பீடணம் என்பவற்றை வழங்கும். தானியங்களும் கிழங்குவகைகளும் மரக்கறி வகைகளும் (பச்சை இலைகள், பழமரக்கறிகள்) பழங்களும், மீன், பருப்பு, இறைச்சி, முட்டை எனும் புரத உணவுகள் பாலும் பாற்பொருள்களும் எண்ணெயும் எண்ணெய் விதைகளும் மற்றும் சுத்தமான குடிதண்ணீர் என்பவையே இவ் ஆறு போசணைக் கூறுகளாகும்.

பலதரப்பட்டதான ஆரோக்கியமான சமநிலை உணவானது தனியாள் தேவைகளிலும் வயது, பால், உடற் செயற்பாடு, ஆரோக்கிய நிலை, பண்பாடு என்பவற்றிலும் மற்றும் உள்ளூரில் கிடைக்கும் உணவு வகைகள் என்பவற்றிலும் தங்கியுள்ளது.

ஆரோக்கிய உணவைத் தயார்ப்படுத்தும்போது கீழ்வரும் உண்மைகளைக் கருத்தில் கொள்ளுதல் நன்று.

1. ஒருநாள் உணவில் குறைந்தது மூன்று வகையான மரக்கறிவகைகளையும் இரு வகையான பழங்களையும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.
2. முடியுமானவரை சீனி சேர்க்கப்பட்ட உணவுகளை உள்ளெடுப்பதைத் தவிர்த்தல். ஒரு நாளைக்கு ஒருவருக்கு ஆறு தேக்கரண்டிகளுக்கு குறைவான சீனியின் அளவே தேவையாகும். உணவு தயாரிப்பின் போதே (கடை சிற்றுண்டிகள் ) சீனி சேர்க்கப்பட்ட உணவுகளையும் நாம் உண்கின்றோம் என்பதை மறுத்தலாகாது. தேநீருக்காக ஒரு நாளைக்கு இரண்டு தேக்கரண்டி சீனி அளவு மட்டுமே பாவித்தல் வேண்டும்.
3. ஒரு நாளைக்கு ஓர் ஆளுக்கு தேவையான உப்பை ஒரு தேக்கரண்டியாக (5கிராம்) மட்டுப்படுத்திக் கொள்ளுதல் நன்று.
4. ஒரு நாளுக்கு தேவையான சக்தியளவில் 30 வீதத்துக்குக் குறைவான சக்தியையே கொழுப்புணவுகளிலிருந்து பெற்றுக்கொள்ளும் வகையில் கொழுப்புணவுகளை எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். நிரம்பிய கொழுப்பமிலங்களைக் கொண்டுள்ள இறைச்சி, புட்டர், தேங்காய், பாம் எண்ணெய், கேக், பிஸ்கட் போன்றவற்றை இயலுமானவரை குறைத்து நிரம்பாத கொழுப்பமிலங்களைக் கொண்டுள்ள மீன் வகைகள், விதைகள் அவகாடா (Abocado) போன்றவற்றை எடுத்துக் கொள்ளலே ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.
5. ராண்ஸ் (Trans) கொழுப்பமிலங்களை அதிகளவு கொண்டுள்ள உணவுகளான பதப்படுத்திய உணவுகள், உடனடி உணவுகள் (Fast Food), பொரித்த உணவுகள், பீசா (Pizza), மாஜரின் மற்றும் பேக்கரி உணவுகளான பிஸ்கட், கேக், பாண் தூள் போன்றவற்றை இயலுமானவரை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.
6. பாலும் பாற் பொருள்களான தயிர், யோக்கட் போன்றவற்றை நாளுக்கு ஒரு தரமோ இரு தரமோ சேர்த்துக் கொள்ளுதல் நன்று.
7. தேவைப்படின் இருசாப்பாட்டுவேளைகளுக்கு இடையில் ஆரோக்கிய நொறுக்குகளை எடுத்துக் கொள்ளலாம். இதற்காக பழங்கள், யோக்கட், தானியங்களை அடிப்படையாகக் கொண்டு வீட்டில் தயாரித்த சிற்றுண்டி வகைகள் அவித்த பயறு வகைகளை உள்ளெடுக்கலாம்.

ஆரோக்கிய உணவுப்பழக்கங்கள், சுறுசுறுப்பான உற்சாகமான வாழ்க்கை முறை, உடல் நிறையை அதிகரிக்காது கட்டுக்குள் பேணிக்கொள்ளலுமே. ஆரோக்கிய வாழ்க்கைக்கான தூண்களாகும். உயரத்துக்கு ஏற்ப நிறையை பேணி வந்தால் போசணைக்குறைபாட்டையும் தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான ஆபத்துக்களையும் குறைத்துக் கொள்ள முடியும். உடற்திணிவுச் சுட்டி (BMI) இடுப்புச் சுற்றளவு நாரி இடுப்பு சுற்றளவு ஒப்பீடு (Waist to hip Ratio) என்பன போசணை நிலையை அளவிடும் அடிப்படை அளவீடுகளாகும்.

BMI 18.5 - 24.9க்குள் பேணுவதே ஆரோக்கியமானது. BMI னது 24.9 - 29.9 க்குள் பேணுவீர்களானால் நிறை அதிகரிப்பு உள்ளவராகவும் BMI னது 30க்கு மேல் பேணுவீர்களானால் அதிகூடிய நிறை உள்ளவராகவும் கொள்ளப்படும்.

உடலிலுள்ள மொத்தக்கொழுப்புக்களின் அளவைக் குறிக்கும் அளவீடாக வயிற்றறையிலுள்ள கொழுப்பைக் கொள்ளலாம். இதற்காக இடுப்புச் சுற்றளவானது அளக்கப்படுகிறது. ஆண்களில் இது 90 சென்ரி மீற்றர் (36")க்கு அதிகமாகவும் பெண்களில் இது 80 சென்ரிமீற்றர் (32")க்கு அதிகமாக இருப்பின் இவர்களைத் தொற்றா நோய்கள் தாக்கும் அபாயநிலை (Risk) உள்ளதாகக் கொள்ளப்படும்.

நாரி இடுப்பு சுற்றளவு ஒப்பீடானது (WHR) அதிக உடல் நிறை அதிகரிப்பை அளந்து கொள்ள உதவிடும் முறையாகும். உலக சுகாதார நிறுவனத்தின் கூற்றுப்படி அதிக வயிற்றுப்பருமனை (Abdominal Obesity) கொண்டவர்களும் அபாய நிலையில் உள்ளவர்களே.

(WHR) ஆனது 0.9க்கு அதிகமான ஆண்களையும், 0.85க்கு அதிகமான பெண்களையும் அதிக உடல்நிறை கொண்டவர்களாகக் கணிப்பீடு செய்யலாம். இவர்களுக்குத் தொற்றா நோய்கள் உடலில் தாக்கும் அபாயநிலை அதிகமாகும்.

உடலில் கொழுப்புப் படிவதனால் ஏற்படும் உருவ மாறுதல்களைக் கொண்டு இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அப்பிள் பழத்தை ஒத்த உடலமைப்பை உடையவர்கள் என்றும் பியர் பழத்தை ஒத்த உருவமைப்பை உடையவர்கள் என்பதுவே அந்தப் பிரிவுகளாகும். அப்பிள் பழத்தைப் போன்ற உடலமைப்பை (Apple Shaped Bodies) உடையவர்கள் அதிக கொழுப்பை நாரி (Waist) பகுதியில் கொண்டிருப்பர். பியர் (Pear shaped Bodies) பழத்தை போன்ற உடலமைப்பை உடையவர்கள் கூடுதலான கொழுப்பை இடுப்பு (Hips) பகுதியில் கொண்டிருப்பர். ஒப்பீட்டளவில் அப்பிள் பழத்தை ஒத்த உடலமைப்பை உடையவர்களுக்கே தொற்றா நோய் நிலைகள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம்.

உடற்பருமனைக் குறைத்திடவும் தொற்றாநோய் அபாயத்திலிருந்து மீண்டிடவும் உணவு வகைகளைத் தேர்வு செய்து உண்ணுதல் தவிர்க்கமுடியாததாகிவருகிறது. உணவு வகைகளின் தேர்வு பல காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது. கிடைக்கும் தன்மை, பொருளாதார நிலை, தனிப்பட்ட விருப்புவெறுப்புக்கள், பண்பாட்டுக் கோலங்கள், சமூக பொருளாதார தன்மை, சூழல் காரணிகள் என்பவையே அவையாகும்.

எது எவ்வாறு இருப்பினும் ஆரோக்கிய உணவு வகைகளைத் தேர்வு செய்யும் திறனை வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும். இது எமது எதிர்கால சமுதாயம் நோயன்றி வாழ்ந்திடவும் உதவிடும். ஆரோக்கிய உணவு கலாசாரத்தைத் தோற்றுவித்து அவை தொடர்ந்தும் நிலைத்திருப்பதை கண்காணித்து ஆரோக்கிய உணவுச் சூழலை ஏற்படுத்தல் வேண்டும். மக்கள் அதற்கு இசைவடைந்து ஆரோக்கிய உணவுப் பழக்கத்தை நடைமுறைப்படுத்தி பேணுவதே இன்றைய காலத்தேவையாக உள்ளது. ஆரோக்கிய உணவுச் சூழலை மேம்படுத்துவதற்கு பல தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமாகிறது.

"வளமாக வாழ்வதற்கு உகந்த உணவுப் பழக்கங்களைக் கற்றுக் கொள்வோம் நோய்கள் அகல உடல்நிறையைக் கட்டுக்குள் வைத்துக் கொள்வோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன்
12.03.2017

செம்மணிப் புதைகுழி விவகாரம்
4 படை அதிகாரிகள் உட்பட ஏழுபேரை
கைதுசெய்ய யாழ். நீதிமன்றம் உத்தரவு!

அரியாலை இளம் தம்பதியினரின்
இரு பிள்ளைகளினதும் இரத்த மாதிரி
மரபணுச் சோதனைக்கு சேகரிப்பு

அரியாலை யுவதி சுமதியின் ஆடைகளை
தாயாரும் அடையாளம் காட்டினார்



# ஒரு காட்சிக் கொலை!

■ டிலீப்

ஆசிரியரின் மேசையில் அந்தக் கடிதம்கிடந்தது. அதுகுழப்பம் நிறைந்த கிறுக்கலான கோணல் எழுத்துக்களால் நிறைந்திருந்தது. வாசிக்க முயன்று முதல் தடவையில் தோற்றுப்போன எனக்கு அதிலிருந்த ஒரு வரி, ஆர்வத்தைச் சுண்டி இழுத்தது. பொறுமையாகத் தவறுகளை என் மனதுக்குள்ளேயே சரி செய்து கொண்டு அதை வாசித்தேன். திடுக்குற்றேன்.

2000ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியான 'உதயன்' பத்திரிகையின் ஒருபக்கத்தைப்பிரதிசெய்துஉறுதிப்படுத்துமாறுஆசிரியரைக்கேட்டிருந்தது அந்தக் கடிதம். அதற்காகச் சொல்லப்பட்டிருந்த காரணம்தான் அதிர்ச்சிக்குரியது. ஒரு சாட்சியின் முடிவாக அது எனக்குப் பட்டது. "காணாமற்போன எனது தாயாரினதும் தந்தையாரினதும்இறப்புச்சான்றிதழ்பெறுவதற்காக இந்தப்பிரதிதேவைப்படுகிறது" என்று எழுதி ஒப்பமிட்டிருந்தார் ஒரு பெண்.

கொழும்பு அரசோ காணாமற்போனோருக்கான அலுவலகத்தை அமைப்பதில்தாமதம்காட்டிவருகின்றது. இந்த அலுவலகம்தான் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை நடத்திஅவர்களின்நிலைஎன்னவென்றும் அவர்கள் இறந்துபோயிருந்தால் அவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடுகளைத்தரும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் இதற்கான சட்டம் இயற்றப்பட்டு மாதங்கள் பல கடந்து விட்டபோதும் அலுவலகம் இன்னும் இயங்கியபாடில்லை.

அலுவலகத்தை இயக்குவதில் அரசு ஏனோ தானோ என்று நடந்துகொண்டிருக்கையில்களத்தில்காணாமற்போனவர்களைஇறந்தவர்களாகஅறிவித்துவிட அவர்களின் உறவினர்கள் தயாராகிவிட்டார்களா என்பதுதான் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

இப்படி எல்லோருமே காணாமற்போனதங்கள் உறவினர்களை இறந்தவர்களாக அறிவித்துவிட்டால், பிரச்சினை முடிந்துவிடும் என்று எண்ணித்தான் அரசு காலதாமதம் செய்து கொண்டிருக்கிறதோ? என்றும் எனக்குத்தோன்றியது.



## போர் முனைகள்

- வடகொரியா
- அமெரிக்கா
- மலேசியா

பக் 23










பக் 27

குற்றம் 23
குறைவற்ற விறுவிறுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெற்றோரை இழந்த இரண்டு பிள்ளைகளும் பேத்தியாரும் வாழ்ந்த வீடு

ஆசிரியர் வந்ததும் அவரிடமே கேட்டேன். அவரது மேசையில் அந்தப் பெண் கேட்டு, அவர் கையெழுத்திட்டு உறுதிப்படுத்தப்படவேண்டியிருந்த பிரதி இருந்தது. அதைப் பார்த்துவிட்டு இது 1996இல் யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடன் தொடர்புபட்டது என்றார் அவர். கிட்டத்தட்ட 20வருடத்துக்குமுன்னர்நடந்தசம்பவம். அப்போது இந்தப்பெண் சிறுமியாக இருந்திருக்கிறாள், சம்பவம் பற்றி அவருக்கு ஏதாவது தெரியுமா என்று பேசிப் பாருங்கள், ஒரு சாட்சி காலவெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுகின்றது என்றார்.

நான்பரபரப்பானேன். பத்திரிகையின்பிரதியைப் பெறுபவர்கள் நேரில் அலுவலகத்துக்கு வருவது தான் வழமை. எனவே பிரதியில் ஆசிரியர் கையெழுத்திட்டுக்கொடுப்பதற்குள் அந்தப்பெண்ணைப் பார்த்துப் பேசிவிடும் ஆவலோடு கீழே இறங்கி ஓடினேன்.

மண்டைக்குள்ளே ஆசிரியரின் மேசையில் கிடந்தபிரதியில்காணப்பட்ட வர்ணத்தால்குறிப்பு அடையாளமிடப்பட்டிருந்த செய்திகள் கிறு கிறுத்துக்கொண்டிருந்தன.

"அரியாலை யுவதி சுமதியின் ஆடைகளைத் தாயாரும் அடையாளம் காட்டினார்", என்று 23.02.2000ஆம்ஆண்டுபத்திரிகையில்வெளியான ஒரு செய்தியும், "காணாமற்போன தம்பதியரின் 2பிள்ளைகளை இருள்சூழ்ந்த எதிர்காலம் பயமுறுத்துகின்றது" என்ற தலைப்பில் 27.02.2000 அன்று வெளியான கட்டுரையும் தான் அந்தப் பிரதிகளில் இருந்தன.

பத்திரிகைநூலகத்தில்அந்த இளம்பெண் அமர்ந்திருந்தார். மெலிதாக, வாடிப்போன தோற்றத்துடன் இருந்தார். அவரது முகத்தில் இருந்த பாவனை எதையோ பறிகொடுத்தது போன்றே இருந்ததாக எனக்குப்பட்டது. இது, அவர் தனது தாயையும் தந்தையையும் இழந்துபோனவர் என்பதை நான் அறிந்துகொண்டிருந்தேன் என்பதால் நானாகவே கற்பனை செய்துகொண்டதா என்பதில் எனக்குத் தெளிவில்லை.

தஜீபா. அதுதான் அவரது பெயர். அது அவரது விண்ணப்பத்திலேயே இருந்தது. எடுத்த எடுப்பிலேயே, "சம்பவம் நடந்தது 1996இல். செய்தி பத்திரிகையில் வந்தது 2000ஆம் ஆண்டில். 17 வருடங்களின் பின்னர் இறப்புச்சான்றிதழ் பெறுவதற்குஇப்போதுஏன்விண்ணப்பிக்கின்றீர்கள்?" என்றேன்.

என்னைமேலும்கீழுமாகஏறெடுத்துப்பார்த்தார். யார் இது? ஒரு பருத்த உருவம் திடீரென வந்திருந்து என்னைக் கேள்வி கேட்கின்றது? என்கிற கேள்வியும் தயக்கமும் அந்தப் பார்வையில் தெறித்தது. என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். இப்போது புன்னகைத்தார். 'உதயன்' செய்தியாளர் என்றதும் ஒருவித சிநேகத்தை உணர்ந்திருப்பார் போலும்.

"சம்பவம்1996இல்நடந்தஅடுத்தநாள்பத்திரிகையிலும் அது பற்றிச் செய்தி வந்திருந்தது. ஆனால் அந்தத் திகதியைத் தவறவிட்டுவிட்டோம். அது தான் 2000ஆம் ஆண்டு பேப்பர் எடுக்கிறன். அம்மா, அப்பாவின்ர இறப்புச்சான்றிதழ்தேவை தானே" என்றார் மெல்ல, ஆனால் உறுதியாக.

"21 வருடங்களுக்குப் பின்னர் இப்போது ஏன் இறப்புச்சான்றிதழ்?" எனக்கு இன்னமும் அதன் ஆழ அகலம் பிடிபடவில்லை. அதனால் மீளவும் கேட்டேன்.

"இதுவரைக்கும்எங்களுக்குஎந்தவொருஉதவியும்கிடைக்கேல்லை. அப்பா, அம்மாவின்ர இறப்புச் சான்றிதழ் இருந்தா வீட்டுத் திட்டம் வரேக்க எடுக்க உதவியாக இருக்கும். அம்மா, அப்பா இல்லை. எங்களுக்கு உதவி தேவைதானே?" என்றார் பரிதாபமாக. அவரது தாழ்ந்துபோன பார்வைஅவர்களின்கையறுநிலையைஉணர்த்தியது.

நிமிர்ந்தமர்ந்தவர், "மகிந்தவின்ர காலத்தில இஞ்ச ஆணைக்குழு வந்தவை. அவை வீட்டுத் திட்டம் தருவம்என்றவை. ஆனால்இதுவரைதரேல்ல" என்றார். என்னை ஏக்கத்தோடு பார்த்தார்.

இப்போதுநான்பார்வையைத்தாழ்த்திக்கொண்டேன். செய்திபோடுவதைத்தவிர, இந்தஅரசுகள் அப்பாவிமக்களுக்குஎந்தஉதவியையும்செய்யவேயில்லை என்று எழுதிக் கிழிப்பதைத் தவிர என்னால் என்ன செய்துவிட முடியும்?

பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவித உதவியையும் செய்ய முடியாத கையறு நிலையில்தான் நானும் என் சகபாடிகளும்கூடத் தொங்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால், காலமோ எல்லாச் சாட்சிகளையும் தின்றபடி நகர்ந்துகொண்டிருக்கின்றது.

சிலசெக்கன்களேகடந்திருந்தாலும் பெரும் பாரமாய் அழுத்திய அந்த கனதிமிக்க அமைதியை உடைத்தெறிய நினைத்தேன்.

"காணாமற்போன உங்களுடைய அம்மா, அப்பா இருவருமே இறந்துவிட்டார்கள் என்ற முடிவுக்கு எப்படி வந்தீர்கள்?" என்ற வன்மமான கேள்வியுடன் அந்த அமைதியைக் கிழித்தேன்.

"கிருசாந்திக்குப் பிறகுதான் எங்கட அம்மா, அப்பாவைப் பிடிச்சவை. பிடிச்ச ஆள் (பெயர் குறிப்பிடவில்லை) எங்கட அம்மம்மாட்ட சொன்னவராம்,அம்மான்ரபொடியை கீழ வைச்சு அதுக்கு மேல பாட்டா வைச்சு பாட்டாக்கு மேல அப்பாவின்ர பொடியை வைச்சுப் புதைச்சது என்று. செம்மணியில அம்மம்மாபோய்பார்த்தவ. அம்மான்ர மூக்குத்தி எல்லாம் அடையாளம் காட்டினவ." நேர்கொண்டபார்வையுடன் அவரது பதில் நேர்த்தியாக இருந்தது.

அவரது பதிலில் இருந்த ஆழ்ந்த அனுபவத்தில் எனக்கு அவ்வளவு பரீட்சயமில்லை. அதைப் பற்றித் தயங்கித் தயங்கி விவரம் கேட்டேன்.

**1996 ஆம் ஆண்டு நடந்தது என்ன?**

சிறுவயது ஞாபகங்களை 20 வருடங்களின் பின்னர் மீட்டிக்கொண்டே கூறத் தொடங்கினார்.

அரியாலை நெடுங்குளத்தில் நாங்கள் இருந்தோம். சம்பவம் நடந்த திகதி சரியாக நினைவில்லை. ஒரு வியாழக்கிழமை இரவு நேரம் என்றது தெரியும். எனக்கு அப்போது 5வயது. தம்பிக்கு 2வயது. அந்தக் காலத்தில எல்லா இடங்களிலயும் கறன்ட் இல்லை. அதனால ஜெனரேட்டர் பிடிச்சு, ரீ.வி, டெக் வாடகைக்கு எடுத்துப் படம் போடுறவை. ஒருவீட்டிலபடம்போட்டால்பக்கத்து வீடுகளில இருக்கிறவையள் எல்லாம் போய் ஒன்றாய் இருந்து பார்ப்பினம்.

அப்படித்தான் அன்டைக்கு அப்பாவும்அம்மாவும்எங்கட வீட்டுக்கு முன் (வீதியின் மறுபுறத்தில் உள்ளது) வீட்டில படம் பார்க்கப் போயிட்டினம். நானும் தம்பியும், பக்கத்துவீட்டு 'அங்கிள்' ஒருத்தரும் தான் வீட்டில இருந்தனாங்கள். நாங்கள் நித்திரையா இருக்கேக்க கதவை உடைச்ச சத்தம் கேட்டது. எழும்பிட்டம்.

ஆமிக்காரன்தான் கதவை உடைச்சு உள்ள வந்தவன். வந்த ஆமிக்காரர் முகத்தை கறுப்புத் துணியால கட்டி மூடியிருந்தவை. கண் மட்டும்தான் தெரிஞ்சது. வீட்டில நின்ற 'அங்கிள்' (அயலவர்) வாய்க்குள்ள ஆமி ஒருத்தன் துவக்கைவச்சு எங்கடஅப்பா,அம்மா எங்க என்று கேட்டான். முன் வீட்டில படம் பார்க்கினம் என்று அவர் சொன்னார். என்னையும் தம்பியையும்பிடிச்சு வச்சுக்கொண்டு அப்பா அம்மாவைக் கூட்டிக் கொண்டு வரச் சொல்லி அவரை அனுப்பினான் அந்த ஆமி. வீட்டில மூன்று ஆமி. எல்லாரும் அவன்ரே யூனிபோர்மிலதான் இருந்தவை. வெளியில அவன்ரே ட்ரக் நின்றது. அதில ஒருதன் இருந்தவன்.

அப்பா, அம்மா வந்த பிறகு அவையிட்ட ஏதோ விசாரிச்சினம். அம்மா, தம்பியைத் தோளில தூக்கி வைச்சிருந்தவ. ஆமிக்காரன் ஒருத்தன் அம்மான்ர கையைப்பிடிச்சு இழுத்தான். அப்பா, உடன கதியால்தடியைப்பிடுங்கி அவனை அடிச்சார். அவங்கள் எல்லாரும் சேர்ந்து அப்பாவையும் அம்மாவையும்அடிச்சுப்போட்டுக்கையைக் கட்டி இழுத்துக்கொண்டு போனவங்கள்.

அப்பா, அம்மா வந்த பிறகு அவையிட்ட ஏதோ விசாரிச்சினம். அம்மா, தம்பியைத் தோளில தூக்கி வைச்சிருந்தவ. ஆமிக்காரன் ஒருதன் அம்மான்ர கையைப் பிடிச்சு இழுத்தான். அப்பா, உடன கதியால் தடியைப் பிடுங்கி அவனை அடிச்சார். அவங்கள் எல்லாரும் சேர்ந்து அப்பாவையும் அம்மாவையும் அடிச்சுப் போட்டுக் கையைக் கட்டி இழுத்துக்கொண்டு போனவங்கள். அம்மான்ர தோளில படுத்திருந்த தம்பியை ரோட்டில தூக்கி எறிஞ்சவங்கள். நானும் தம்பியும் அண்டைக்கு இரவு முழுக்க ரோட்டிலதான் படுத்திருந்தனாங்கள்



தம்பி பிரகாஷும் அக்கா தஜீபாவும்

46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் முனைகள்

## வடகொரியா – அமெரிக்கா – மலேசியா

ஜோதா

மனிதன் வாழ்வதற்கேற்ற சூழல் நிலவும் ஒரே ஒருவாழ்விடம் இந்தப் பூமி மட்டுமே. ஆனால் இந்தப் பூமி இதுவரையில் இரண்டு பெரிய போர்களுக்கு முகம்கொடுத்துள்ளது. அவை மனிதரால் நிகழ்த்தப்பட்டவை. அவற்றால் எஞ்சியது ஏராளமான மனித அழிவுகளே. அத்தோடு நின்றுவிடாது பல ஆயிரக்கணக்கான உள்நாட்டுப்போர்களை நிகழ்த்தித் தொடர்ந்தும் தன்னைத் தானே அழித்து வருகின்றான் மனிதன். ஒருவரை ஒருவர் நேசிக்கும் பண்பும் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தும் தன்மையும், சமத்துவப் பண்புகளுமற்ற ஒரு மனிதக்குழுமத்தை வழிநடத்தும் தனிமனிதன் ஒருவன் எடுக்கும் முடிவுகளே இத்தகைய போர்களுக்கு வழிசமைத்து உயிர்களை அழிக்கின்றன. ஜேர்மனிய மனிதக்குழுமத்தை ஆண்ட ஹிட்லரை இதற்கு எடுத்துக்காட்டாக்கலாம். அவர் இரண்டாவது உலகப்போருக்கு உரமிட்டவர். அத்துடன் இடிஅமீனும் மனிதர்களை அழித்த மனிதனே. சர்வதிகாரிகள் என்று இனங்காணப்பட்ட இன்னும் பலரும் இதற்குள் அடங்குகின்றனர். ஈரான், ஈராக், சிரியா, மற்றும் முஸ்லிம் நாடுகள் பலவற்றிலும் இத்தகைய மனித அழிப்புக்கள் தொடர்ந்தும் நடக்கின்றன. ஏன் இலங்கை இனக்குழுமத்தை ஆண்டு வரும் தலைமைகள் அனைத்தும் ஏராளம் மனித உயிர்களை இதுவரையில் அழித்தவையே. உலகளவில் இதுவரை இரண்டுபெரியபோர்கள்நடந்துமுடிந்தும்திருந்தாதமனித இனம் அடுத்ததாகவும் மூன்றாவதான உலகப்போர் ஒன்றுக்குஆயத்தநிலையிலிருப்பதாகவேஉணரமுடிகின்றது.

### மூன்றாவது உலகப்போர் எங்கே?

இரண்டாம் உலகப்போரின் முடிவில் ஜேர்மனியும் ஜப்பானும்சரணடைந்துஅமெரிக்காவல்லரசாகியது. அதைஒத்த நிலையிலேயேரஷ்யாவும்திகழ்ந்தது. இந்தப்போர்க்கால கட்டத்தில்ஏற்பட்டிருந்த தொழில்நுட்ப வளர்ச்சிகள் போர்த்தளபாடங்களைப் பெருக்கி மனித அழிவுகளை அதிகப்படுத்தின. ஆகையால்இந்தஇரண்டாம்உலகப்போர், உலக நாடுகள்அனைத்தும்இணைந்துசெயற்படவும்இதுபோன்றதொரு போர் இனி ஏற்படாதிருக்கவும் தமக்குள் ஒன்றிணைய வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியது. இதன் காரணமாகஉலகநாடுகள்மத்தியில்ஒற்றுமையைப்பேண ஐக்கிய நாடுகள் சபை என்கின்ற அமைப்பும் உருவாக்கப்பட்டது. எனவே கடந்த 72வருடங்கள், பல உள்நாட்டுப்போர்களுடன் மாத்திரம் உருண்டோடின. ஆனாலும் உலகநாடுகள் பலவும் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டுக்கொண்டே வருகின்றன. அவை ஒன்றுடன் ஒன்றுமோதிக்கொண்டால் இன்றைய ஆயுத, தொழில்நுட்ப வளர்ச்சியின் அதீதம் எவ்வளவுஇழப்புக்களைஏற்படுத்தும்என்பதைக்கணக்கெடுப்பது சிரமாமயிருக்கும்.

1914களில் ஆரம்பமாகியிருந்த முதலாவது உலகப்போர் நான்கு வருடங்களாக நீண்டு 1918களில் நிறைவுக்கு வந்தது. அடுத்து இரண்டாவது உலகப்போர் 1939களில் ஆரம்பித்து ஆறு வருடங்களாக நீடித்து 1945களில் முடிவுக்கு வந்தது. இவை நிறைவடைந்த பின்னர் இற்றைவரையும் பலஉள்நாட்டுப்போர்கள்நிகழ்ந்தேறிவிட்டன. இந்தநிலையில் இப்போதுமூன்றாவதுஉலகப்போரைத்தோற்றுவிக்கக்கூடிய முரண்பாடுகள் பலவும் இடையிடையே தோன்றிமறைகின்றன. அதன்மையப்புள்ளிவடகொரியாவையேசுற்றிச்சுற்றிவருகின்றது.



### எழுந்து மறையும் மோதல்கள்

உலக வல்லரசுப் பதவியைத் தக்கவைத்துக் கொண்டிருக்கும் அமெரிக்கா அதற்கடுத்து ரஷ்யா, மக்கள் தொகையிலும் கைத்தொழில்மயத்திலும்முன்னிற்கும்சீனா, மறுபுறம்பயங்கரவாத அச்சுறுத்தல் தரும் பாகிஸ்தான் உட்பட்ட முஸ்லிம் நாடுகள், ரஷ்யாவுக்கும் சீனாவுக்குமிடையிலிருக்கும் கொரியாத் தீபகற்பம் அதனை அண்மித்திருக்கும் ஜப்பான், மலேசியா, வியட்நாம், தாய்வான், பிலிப்பைன்ஸ், மலேசியா எனக் குறித்த சில பகுதிகளில் அண்மைய காலங்களில் ஒரு பதற்றமான சூழ்நிலை தொடர்ந்துவருகின்றது. உலகவர்த்தகத்தில்பெரும்பங்கை வகித்துவரும் சீனாவின் தென்சீனக்கடல் விவகாரம் அதை அண்டியுள்ள நாடுகள் மத்தியில் முறுகலைத் தோற்றுவித்திருந்தது. பன்னாட்டுநீதிமன்றத்தீர்ப்பையும்அசண்டையீனம்செய்தசீனா, தனது ஆதிக்கத்தை அந்தக்கடற்பரப்பில் தொடர்ந்தும் நிலை நிறுத்துவதால் வல்லரசுப் பதவியிலிருக்கும் அமெரிக்கா வழமைபோன்று இந்த விடயத்திலும் மூக்கை நுழைத்து அதை எதிர்த்தது. ஆகையால் அங்கு ஒரு முறுகல் நிலை தொடர்கின்றது. அதன் பின்னர் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் முறுகல் ஆரம்பித்தது. அதுஜனாதிபதிமாற்றத்துடன்சற்றுத்தணிந்தது. புதிய ஜனாதிபதிவந்ததும்மறுபடியும்சீனாவிவகாரம்காரசாரமானது. ஆனாலும் மறுபுறத்தில் தொடர்ந்தும் முறுகல் நிலையுடன் நீடிக்கும் பிரச்சினை அமெரிக்கா – வடகொரிய விவகாரமே. அது இப்போது ஒரு புதிய கோணத்துடன் நகரவும் ஆரம்பித்திருக்கின்றது.

### நடுங்க வைக்கும் வடகொரியா

1.21மில்லியன்இராணுவச்சிப்பாய்களுடன்சீனா, அமெரிக்கா மற்றும்இந்தியாவுக்குஅடுத்துஉலகில்நான்காவதுபெரிய இராணுவத்தைக் கொண்டுள்ள ஒருசிறிய நாடு வடகொரியாவாகும். இந்த நாடு அணு ஆயுதப் பரிசேதனைகள்மற்றும்உற்பத்திகள், கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து தாக்குதல் நடத்தும் அதி திறனுடன்கூடிய, பெரியளவில் அழிவை ஏற்படுத்தும் இன்னும் பல நவீன ஆயுதங்களையும்கைவசம்வைத்திருக்கின்றது. அதைஅமெரிக்காஉள்ளிட்டுஎதிர்த்தஏனையநாடுகள் ஐக்கிய நாடுகள் சபையூடாக வடகெரியாவுக்கு ஏராளமான தடைகளை விதித்தன. ஆயினும் தனது ஆயுத உற்பத்திகளில்சற்றும்தொய்வுஏற்படாமல்தொடர்ந்தும்தயாரிப்புக்களில்ஈடுபட்டுவரும்வடகொரியா அமெரிக்காவைத்தொடர்ந்தும் அச்சுறுத்தியே வருகின்றது. இப்போது அமெரிக்கா – வடகொரியா முறுகலுக்குள் புதிதாக இழுத்துவிடப்பட்டிருக்கின்றது மலேசியா.

வடகொரியாவின் ஜனாதிபதி மிகவும் இளமையானவர். அவருடையசர்வதிகாரப்போக்கால்அவர்சார்ந்த உறவுகள் பலரையும்அவர்கொன்றிருக்கின்றார். இவருக்குப்பயந்து சில உறவினர்கள் தலைமறைவாகியும் வாழ்கின்றனர். அத்துடன் அரசை விமர்சிப்பவர்களுக்குக் கடுமையான தண்டனைகளையும் அளித்து வருகின்றார். இறுதியாக நடந்த ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றியிருந்த பதக்கம் . வெல்லாதவடகொரியவீரர்களுக்குக்கூட அவர் தண்டனை அளித்திருக்கின்றார். இவ்வாறு கடும் போக்குக்கொண்ட அவருடைய செயற்பாடு ஒன்றால் தற்போது மலேசியாவும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இவருடைய தந்தையின் மற்றொரு மனைவிக்குப் பிறந்தவரும் இவரைவிட வயதில் மூத்தவருமான கிம் யோங் நாம் எனும் இவருடைய சகோதரன், இவர் மூலமே மலேசியாவில் வைத்துக் கொல்லப்பட்டிருப்பதாக நம்பப்படுகின்றது. இந்த நிலையில் மலேசியா – வடகொரியா நாடுகளுக்கிடையில் ஒரு அசாதாரண நிலை தோன்றியுள்ளது. இப்போது அமெரிக்கா–வடகொரியா முறுகலுக்குள் மலேசியாவும் சிக்கிக் கொண்டுள்ளது. பூனைக்கு மணிகட்டுவது யார் எனும் சுழல்போக்கு ஒன்று அங்கே தொடரவும் செய்கின்றது.



> அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் முறுகல் ஆரம்பித்தது. அது ஜனாதிபதி மாற்றத்துடன் சற்றுத் தணிந்தது. புதிய ஜனாதிபதி வந்ததும் மறுபடியும் சீனா விவுகாரம் காரசாரமானது. ஆனாலும் மறுபுறத்தில் தொடர்ந்தும் முறுகல் நிலையுடன் நீடிக்கும் பிரச்சினை அமெரிக்கா – வடகொரிய விவகாரமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூல் அறிமுகம்




நூல்-யாழ்கவி(கவிதைத்தொகுப்பு)
ஆசிரியர்-ஆ.ஜென்சன்றொனால்ட்
(கவிஞர் சூரியநிலா)
வெளியீடு - அன்சன் கலையகம்,
உசன், மிருசுவில்.
விலை - 200 ரூபா

**மண்வாசனை பேசும் கவிதைகள்**

போரோடு போராடிய யாழ். மண்ணின் குருதி தோய்ந்த நினைவுகளையும் வாழ்வியலையும் அம்மண்ணின் பேச்சோசையில் மீட்டி நிற்கிறது யாழ் கவி (கவிதைத் தொகுப்பு) நூல்.

இயந்திரமயமான இன்றைய காலத்தில், இயற்கை இன்பத்தை ரசிக்கச்செய்யும் கவிதைகள் நூலுக்குக் கனதி சேர்க்கின்றன. காதல் கவிதைகள், நெஞ்சை நிறைக்கின்றன. ஏக்கங்களை அழைக்கின்றன. அனைவரும் படித்து, எங்கள் மண்வாசனையைத் தெரிந்து கொள்ளவேண்டிய நூல் இது.

கவிஞர் சூரியநிலா, அமைதியாக எழுதிக்கொண்டிருப்பவர். யாழ் கவியுடன் இன்னும் பலநூறு நூல்களை அவர் தமிழுலகுக்கு அளிக்க, வாழ்த்துக்கள்.

---




**நூல்-தணியாத தமிழ்த் தாகம்**
**(தனிநாயக அடிகளின் தமிழ்ப்பணி)**
**ஆசிரியர் வண. ஜெயராஜா**
**தேவஅருட்செல்வம்**
**வெளியீடு - காவேரி கலாமன்றம்**
**விலை - 300 ரூபா**

**மாணவர்களுக்குப் பயனளிக்கும் புத்தகம்**

உலகமெல்லாம் தமிழ்த் தூது சென்றவர் தனிநாயகம் அடிகளார். அவர் தமிழ் மீது கொண்ட தணியாத தாகத்தை ஆராய்ச்சி பூர்வமாக விளக்கி நிற்கிறது தணியாத தமிழ்த் தாகம் (தனிநாயக அடிகளின் தமிழ்ப்பணி) நூல்.

தனிநாயகம் அடிகளின் வாழ்வும் பணியும், அடிகளின் தமிழ்த்தூதுப்பயணம், தமிழ்த்தூதுப்பணியும்தமிழியல் ஆய்வும், தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும், தமிழ்த்துறை ஆய்வு பற்றியவரலாறு, இலங்கைத்தமிழரின்சுயநிர்ணய உரிமை, தமிழரின்மானிட நேயம் ஆகிய ஏழு அத்தியாயங்களில், அடிகளாரின் தமிழ்த் தேடலையும்தாகத்தையும் ஆராய்ந்துள்ளார் நூலாசிரியர்.

எளியமொழிநடை, புத்தகத்தைத்திறந்ததும்முழுமையாகவாசித்துமுடித்துவிடத் தூண்டுகிறது. அடிகளாரைப் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும் மாணவர்களுக்குப் பயனளிக்கும் புத்தகம் இது.

வண. ஜெயராஜா தேவஅருட்செல்வம், ஆராய்ச்சியில் முனைப்புடன் ஈடுபடுபவர். அமைதியாக எழுதிக்கொண்டிருப்பவர். தமிழ், ஆங்கிலம் இருமொழிப் புலமை மிக்கவர்.

இது அவருடைய முதல் நூல். "தென்னாபிரிக்காவும் இலங்கைத் தமிழர் பிரச்சினையும்" என்ற ஒரு ஆய்வுக் கட்டுரையை எழுதியவர். சில தவிர்க்க முடியாத காரணங்களால் அது இன்னமும் நூலுருப் பெறவில்லை. எழுத்துலகில் அவர் பிரகாசிக்க, வாழ்த்துக்கள்.

தொகுப்பு:
மல்லிகா




# 'தீமை' செய்யாதீர்!

அராலியூர் நிலா

நல்லவற்றை வரவேற்றும் அல்லவற்றைக் கண்டித்தும், மனிதர்கள் வாழ்வதற்கு வழிகாட்டி நிற்கின்றன பண்டைய இலக்கியங்கள். ஒருவருக்குநன்மைசெய்யமுடியாவிட்டாலும்தீமையாவது செய்யாது இருங்கள் என்று அவை இடித்துரைக்கின்றன. இது உலகம் முழுமைக்கும் பொருந்தும் அறிவுரை. அன்புக்கு விளக்கேற்றி அறங்காத்த இந்த இலக்கியங்கள், சான்றோர்கள் பழிச்செயல்களைச்செய்தால் எப்படியான விளைவுகள் கிடைக்கும் என்பதனை விளக்குகின்றன. அவர்களுடைய சாவு வேளை வலிக்கும் என்பதையும் உரைக்கின்றன. அத்தகைய ஒரு இலக்கியச் சித்திரத்தை இங்கு நோக்குவோம்.

*பல்சான்றீரே! பல்சான்றீரே!*
*கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்*
*பயனின் மூப்பிற் பல்சான்றீரே*
*கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திரல் ஒருவன்*
*பிணிக்கும் காலை இரங்குவிர் மாதோ*
*நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்*
*அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்*
*எல்லாரும் உவப்பது அன்றியும்*
*நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே!*
*((புறநானூறு:195 நரிவெரூஉத் தலையார்*

நல்ல பல குணங்களைக் கொண்ட பெரியோர்களே! நல்ல பல குணங்களைக் கொண்ட பெரியோர்களே! மீனின் முள் போன்ற நரையையும், முதிர்ந்த வரி வரியாய்ச் சுருக்கம் விழுந்த கன்னத்தையும், பயனில்லாத மூப்பையும் கொண்டுள்ள பெரியோர்களே! மழு எனும் ஆயுதத்தையும், கடுமையான வலிமையையும் கொண்டவனாகிய கூற்றுவன் (யமன்) உங்களை அழைத்துச் செல்லும் போது (சாவு வேளையில்) வருந்துவீர்.

நீங்கள்நல்லசெயலைச்செய்யமாட்டீர்என்றாலும், கெட்ட செயல்கள்செய்வதையாவது விட்டொழியுங்கள்! இதைத்தான் எல்லோரும் விரும்புவார்கள். நல்ல நெறி என்று சொல்லப்படுவதும் இதுதான்.

பழந்தமிழர்கள் பழியைக்கண்டு அஞ்சினர். தீமைசெய்தவர்களை வெறுத்தனர். அதேநேரம், அவர்களைத் திருந்துமாறு அறிவுறுத்தினர். இன்று அவ்வாறு இல்லை. பசுத்தோல் போர்த்திய புலி, கல்லறைக்கு அடிக்கப்பட்ட வெள்ளை போன்று மனிதர்கள் உள்ளனர்.

யார் மனதில் என்ன உண்டு என்பதனை விஞ்ஞானம் தான் கண்டறிந்து கூற வேண்டும். அந்தளவுக்கு, 99 வீதமானோர் விசம் சுமந்து வாழ்கின்றனர். இவர்கள் காதுகளில் எங்கேகேட்கப்போகிறது பண்பெனும்சங்கோசை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘பெண் சாதி’



> விருப்புகளும், தேவைகளும், வாழ்வியலும் கூட அவ்வாறே. ஆனால் நானா? நீயா? என்கின்ற உலகளவு வாதத்துக்கு இந்த ஆண், பெண் மனிதப் பாகுபாடு பேசு பொருளாகியுள்ளது.

> இன்று வரையில் ஆணுக்கு நிகராகப் பெண் மதிக்கப்பட வேண்டும் எனும் சிந்தனைப் போக்கு பெண்ணியமாகத் தொடர்கின்றது.

ஜெ.காயா

தான் சார்ந்த சாதியை உயர்ந்ததாகக் கருதும் போக்கு அல்லது நிலைசாதியம்எனப்படுகின்றது. மேற்குலகினரைப் பொறுத்தவரையில் நிறபேதமாகக் காட்சியளிக்கும் இந்த மனிதரைப் பாகுபடுத்தும் மரபு, தமிழர்களைப்பொறுத்தவரையில்சாதிப்பேதமாகக் காட்சியளிக்கின்றது. குறிப்பாக இந்தியாவிலும் ஈழத்திலுமே இந்தத் தீண்டாமை தனது உச்ச அளவிலான வீரியத்தைப் பரப்பிவிட்டிருக்கின்றது. ஈழத்திலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில்தான் இதன் தாக்கம் அதிகம். அதிலும் இந்து மதத்தினர்தாம் இதை உருவாக்கியதிலும் கடைப்பிடிப்பதிலும் முன்னிற்கின்றனர். அதற்காக ஏனைய மதங்களில் சாதியம் இல்லை என்று பொருளில்லை. இதை இன்னும்இறுக்கமாகஇன்றும்கடைப்பிடிப்பவர்களை இனங்கண்டால் அவர்கள் கடுமையான இந்துவாதிகளாக இருப்பர். அத்துடன் அவர்களே இந்தச் சாதியமைப்பில் உயர்சாதியினர் எனும் வகையறாவுக்குள்ளுமிருப்பர்.

இந்தச்சாதியத்தின்ஆரம்பம்மற்றும்அடிப்படை பற்றிக் குறிப்பிட முனைந்தால் அது நம்மைப்பெரியதொருஆய்வுப்பரப்புக்குள் இட்டுச்செல்லும். ஆகையால், பரந்தநிலம் சார்ந்தும் அங்கு செய்யும் தொழில் சார்ந்தும் அங்கு வாழ்கின்ற ஒவ்வொரு மக்கள் குழுமத்திடையேயும் வாழ்க்கைச் சூழல், பண்பாடுகள், பேச்சுவழக்கு, இனவிருத்தி, பழக்கவழக்கங்கள், நடையுடை, கலாசாரங்கள்போன்றபலவும்வேறுபடும். இவற்றை எந்தவொரு தர்க்கத்துக்கோ நியாயப்படுத்தல்களுக்கோ வாதங்களுக்கோ ஆராய்ச்சிகளுக்கோ ஆதாரபூர்வமான நிறுவுதல்களுக்கோ உட்படுத்தாமல் அதிகாரவர்க்கத்தினராகவோஅல்லதுதொகையில் அதிகமாக, பெரும்பான்மையினராகவோ இருந்திருக்கக்கூடிய இனக்குழுமம் அந்த மக்கள் கூட்டத்தைப் பாகுபடுத்தி அவரவர் தொழில்களோடும் நிலங்களோடும் ஏனைய வாழ்வியல் பண்புகளுடனும் ஒப்பிட்டு அவற்றிடையே உருவாக்கிக் கொண்ட ஏற்றத்தாழ்வுகளே இந்தச் சாதிகள் எனலாம். இதை உருவாக்கியவர்களின் பிரதான நோக்கம் அதில் தம்மை உயர்ந்தவர்களாக நிலைநிறுத்துவதாக இருந்திருக்கும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் மருதம், முல்லை, நெய்தல், குறிஞ்சி, பாலை என மக்களும் அவர்களின் தொழில் நடவடிக்கைகளும் புவியியல் அமைப்பின்படி நிலங்கள் சார்ந்து ஐந்து பிரிவுகளாக அமைந்திருந்தன என்று குறிக்கப்பட்டிருப்பதான அடிப்படைகள்சில, இவர்களுக்குள் இவ்வாறுமனிதர்கள்மத்தியில்ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கிக் கொள்ள உதவியிருக்கலாம்.

அதையே பிற்காலங்களில் ஒரு குழுவிடமிருந்து இன்ருனொரு குழு வேறுபடும் வகையாக அவரவர் செய்யும் தொழில்களையும் ஒரு காரணியாகக் கொண்டு கணித்து மனிதர்களைச் சாதி அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகளுக்குள் உட்படுத்தியிருக்கலாம். மாறாக இன்றோ மக்களின் அதிகரித்தகுடிப்பரம்பலுக்குஏற்பதொழில் நடவடிக்கைகளும் பரந்து விரிந்துள்ளன. எந்தத் தொழிலை எந்தச் சாதியினர் செய்கின்றனர் என்றுஊகிக்கக்கூடியஅன்றைய நிலைமாறி இன்று விவசாயிகள், மீனவர்கள், பிராமணர்கள், சீவல்காரர்கள், சிகைஅலங்கரிப்பாளர்கள், துப்புரவுத்தொழிலாளர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், இன்னும்பல… என மனிதர்களின் தொழில் வளர்ச்சி விருட்சம் கண்டுள்ளது.

ஆகவே சாதியம் கட்டமைக்கப்பட்ட முதன்மைக்காரணிகளில் ஒன்றான தொழில் எனும் காரணி உட்பட அதைக்கட்டமைத்துள்ளவேறுசிலகாரணிகளும்சாதியத்தைமுன்னெடுத்துச்செல்வதில் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றன. முன்னைய காலங்கள் போலல்லாது இன்று சாதியம் சிறிது சிறிதாக வீரியம் இழந்து கொள்கின்றது. அத்துடன் இடைப்பட்ட காலத்தில் இன்னும் வீரியமாக யாழ்ப்பாணத்தை ஆட்கொண்டிருக்க வேண்டிய இந்தத் தீண்டாமைக் கொடுமைக்கு சிம்மசொப்பனமாகவிடுதலைப்புலிகள் இருந்தனர் அதுவே யாழ்ப்பாணச் சாதியத்தின் கொடூரப்போக்குக்கு ஒரு பெரும் தடையாகவும் இருந்தது.

ஆனாலும் இன்று சாதியம் மெல்லமெல்ல வெளிக் கிளம்பிக்கொள்வ தான தோற்றத்துடன் நகர்கின்றது காலம். ஒருவகையில் அது பெரும்பான்மையாகவுள்ள சிங்களவர்களால் தமிழர்கள் ஒடுக்கப்படும் நிலைக்கு ஒத்ததன்மையை தமிழர்களுக்குள்ளேயே ஏற்படுத்திச் செல்லவும் எத்தனிக்கலாம்.

இவ்வாறு எந்தவொரு நியாயபூர்வங்களுமற்றதான மனிதர்களைப் பாகுபடுத்தும் இந்தச் சாதியம் மனிதர்களிடத்தே நிலவிவிட்ட கேவலமான ஒன்றுஎனப்பகுத்தறிவாளிகள் கொள்ளுமிடத்து அத்தகைய சாதியத்தைப்போன்ற இன்னும்ஒருபாகுபாடும் அவர்களால்உணரப்படுகின்றது. அதாவது இந்தச்சாதிக்கட்டமைப்புக்கள்அனைத்துக்குள்ளேயும் இழையோடியுள்ள ஆண் – பெண் என்கின்ற பால்நிலைப் பாகுபாடே அது. அதில் நிலவும் சமத்துவமின்மை பெரியதொரு பிரச்சினையாக உருக்கொண்டு தொடர்கின்றது.

ஆரம்பத்தில்தாய்வழிச்சமூகமாகப்பெண்களை முன்னிலைப்படுத்தியிருந்தநிலை, நிலப்பிரபுத்துவத்தின் தோற்றத்துடன் மாற்றமடைந்து ஆண்வழிச்சமூகமாக பிறழ்ந்துபடிப்படியாகப்பெண்களைப்பின் தள்ளிகட்டுப்பாடுகளையும்தடைகளையும் ஒடுக்குமுறைகளையும் அவர்கள் மீது பிரயோகிக்கத்தலைப்பட்டுவிட்டது. இப்போது இங்கே பெரியதொரு பிரச்சினையாக ஆண்–பெண்பால்நிலைப்பாகுபாடுதலையெடுத்துள்ளது.

“மனிதர்கள் தம்மைப் பால்நிலையின் அடிப்படையில் பெண் – ஆண் எனப் பாகுபடுத்தி வைத்திருக்கின்றனர்”

மேற்கூறிய இந்த வசனத்தை வாசிக்கும் போது உங்கள் நாக்கு ஏதோ ஒன்றைப் பிழையாக உச்சரிப்பதாக உணரும். இனி வருங்காலங்களில்இந்தவசனத்தில்இலக்கணப்பிழை இருக்கின்றதுஎன்றுவகுக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆம்! நாம் எழுதுபவைகளில் மாத்திரமல்லஎந்தவொருசொல்லிலும்செயலிலும் ஆணை முன்னிலைப்படுத்தியும் பெண்ணைப் பின்னிலைப்படுத்தியும் கொள்வதே வழமை. இந்த வசனத்தில் பெண், ஆண் என்று எழுதியிருப்பதை ஆண், பெண் என்று உச்சரித்துப்பாருங்கள்… இப்போது உங்களது நாவிலிருந்த அந்தப் பிசிறு காணாமல்போய்விடும்! இது நமது நாவுக்கு மட்டும் பழக்கப்பட்டுவிட்ட ஒன்றல்ல.

மனிதர்கள்அனைவரதுபொதுப்புத்தியிலும் உறைந்து செயல் வடிவம் கொண்டுள்ள பாரதூரமானஒருவிடயம். எதிலும்ஆணை முன்னிலைப்படுத்தியும் பெண்ணைப் பின்னிலைப்படுத்தியும் கொள்ளும் வழமைக்கு இசைவடைந்துவிட்ட மனிதகுலம், அந்தக் கடப்பாட்டை எங்கெல்லாம், எவ்வகையில் பரப்பிவிட்டிருக்கின்றது என்பதற்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டாக இதனைக் கொள்ளலாம்.

இலக்கணத்தின்படி ஒரு பாலுக்கு எதிர்ச்சொல் மாத்திரமே மற்றைய பால். மற்றும்படி இந்த இரண்டு மனித விலங்குகளும் எதிர் எதிராக நிற்கவேண்டிய தேவை இல்லை. இவை தம்மிடையே அதாவது, ஆணுடன் ஆண், பெண்ணுடன் பெண் பிணக்குப்பட்டுக் கொள்ளும் சந்தர்ப்பங்களுடன் ஒப்பிடுகையில் பெண்ணுடன் ஆணோ, ஆணுடன் பெண்ணோ பிணக்குப்பட்டுக்கொள்வது குறைவாயிருக்கும். அவை ஒன்றுடன்மற்றையதுமுரண்பட்டுக் கொள்ளவேண்டிய தேவையைவிட ஒன்றை மற்றையது அரவணைத்துக் கொள்ளும்வகையமைப்புத்தான்அதிகம். அவற்றின் உடலமைப்புக்கூட ஒன்றை ஒன்று ஈர்த்துக்கொள்ளும்வகையில்தான் படைக்கப்பட்டிருக்கின்றன.

விருப்புக்களும், தேவைகளும், வாழ்வியலும்கூட அவ்வாறே. ஆனால்நானா? நீயா? என்கின்ற உலகளவு வாதத்துக்கு இந்த ஆண், பெண் மனிதப் பாகுபாடு பேசு பொருளாகியுள்ளது.

இன்று வரையில் ஆணுக்கு நிகராகப் பெண் மதிக்கப்படவேண்டும் எனும் சிந்தனைப் போக்கு பெண்ணியமாகத் தொடர்கின்றது.

ஆகமனிதர்கள்சாதியை இன்னும்ஒருபடி மேலுயர்த்தியிருக்கின்றார்கள் அதுவே பெண் சாதி. இனிவருங்காலங்களில் அந்தப் பெண் சாதியின்பாலும் மனிதர்களின் புதிய பாகுபாடுகள் தொடரலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரல்

# நூல்களை அன்பளித்தல்

5

வேலணையூர்தாஸ்

யாராவதுஒருநண்பரைச்சந்திக்கச்செல்லும்போதோ அல்லது உறவினரின் பிறந்தநாள், திருமணம் போன்ற நிகழ்வுகளுக்குச் செல்லும் போதோ ஒரு கையுறை (அன்பளிப்புப் பொருள்) கொண்டு செல்வது தமிழர் மரபு. சிலவேளைகளில் ஆண்கள் எதுவும் கொண்டு செல்லாமல் ஆயத்தமானாலும் பெண்கள் விடுவதில்லை. 'என்னப்பா வெறுங்கையோடையே போறது எதையாகிலும் வாங்கிக் கொண்டுபோவமே...?' எனப் பல்பொருள் அங்காடிக்குள் அழைத்துச்சென்று விடுகின்றார்கள்.

அங்கே சென்றபின் எதை வாங்குவது என்பதில் தான் பிரச்சினை தொடங்குகின்றது. எதை வாங்கலாம்? குளிர்களி (ஐஸ்கிறீம்), கன்டோஸ்போன்ற இனிப்புணவுகளை வாங்கலாமென்றால் குடாநாட்டில் நாற்பது வயதிற்கு முன்னரே அனேகமானோருக்கு நீரிழிவு நோய் வந்துவிடுகின்றது என்ற சமூக யதார்த்தம் யோசிக்கவைக்கின்றது.

குளிர்பானங்கள் வாங்கலாம் என்றால், சமுகவலைத்தளங்களிலும் சமூகங்களிலும் இவற்றின் தீய பின் விளைவுகள் பற்றியேபட்டியலிடுகின்றார்கள். நாம்அன்பளிப்பாகநோய்க் காரணிகளை தருகின்றோமோ என அவர்கள் எண்ணக் கூடுமே...! என்ற சிந்தனைவேறு வந்து தொலைக்கின்றது.

பழங்கள் வாங்கலாம் என்றுபோனால் இதில் எந்தப் பழம் மருந்தடிக்காத பழம், எதைக் கொண்டு போனால் அவர்கள் விரும்பி ஏற்பார்கள்? என்ற சிந்தனை அந்தத் தெரிவையும் தடுத்துவிடுகின்றது.

சரிஉணவுப்பொருட்கள்வேண்டாம்உடுப்புவகைகள்வாங்கலாம் என்றால், இப்போதெல்லாம் ஆளுக்கும் சேர்த்து விலை சொல்கின்றார்கள்.

அதையும் சமாளித்து வாங்கினால் அளவு, வடிவமைப்புச் சார்ந்தநமது தெரிவுகள் நாம் அன்பளிப்பவருக்குப் பொருத்தமாய் அமைந்து விடுவதும் இல்லை. சிலவேளைகளில் மகளுக்கு வேண்டிய உடையொன்று அவளது தாய்க்குத்தான் அளவாக இருக்கும்.

இப்படியாக நீங்கள் செல்ல இருக்கின்ற நிகழ்வுக்கான நேரம் முடிந்த பின்னும் உங்கள் தேடல் முடிவதில்லை

இந்த இடத்திலே அனைவருக்கும் மிகவும் உபயோகமான தொரு அன்பளிப்புப் பொருளைத் தெரிவது பற்றியே இப்பத்தி எழுதப்படுகின்றது.

'நான் இன்னும் வாசிக்காத புத்தகம் ஒன்றை வாங்கிவந்து என்னைச் சந்திக்கின்றவனே எனது தலைசிறந்த நண்பன்" என்பது ஆபிரகாம் லிங்கனுடைய கூற்று

நீங்கள் உங்கள் அன்பானவரைச் சந்திக்க செல்லும்போது கூட நல்ல புத்தகம் ஒன்றை வாங்கிச் செல்லுங்கள்.

உங்களுடைய நண்பர் மாணவராக இருக்கும் பட்சத்தில் பயிற்சி பாட நூல்களையும் இலக்கிய ஆர்வம் உள்ளவராக இருந்தால் அவர் விரும்பக் கூடிய கவிதை, கதை, கட்டுரை நூல் என்பவற்றுள் ஏதாவது ஒன்றையும் வாங்கிச்செல்லலாம். இதைவிட அறிவியல் நூல்கள், அகராதிகள், நீதி நூல்கள் ஏன் சமையல் குறிப்புக்களைக் கூட அவரவருக்கு ஏற்றதாகத் தெரிவு செய்து வாங்கலாம்.

இலக்கியக்காரர்கள் புத்தகம் வாங்கும்போது ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்களைக் குறிப்பாகச் சஞ்சிகைகளை வாங்கிபடைப்பாளிகளைஊக்குவிக்கவேண்டும். ஏனெனில் அவர்கள் தங்கள் வெளியீடுகளை விற்பதில் பெரும் இடர்ப்படுகின்றார்கள்.

அன்பளிப்புக்காகப்புத்தகம்வாங்கும்போதுஅதுஅன்பளிப்பவருக்கு ஏற்றதாக இருப்பதில் அதிக கவனம் செலுத்துவது முக்கியமானது. இப்படித்தான் எனது நண்பரொருவர் 15 வயதுப் பெண்பிள்ளை ஒருவரின் பிறந்தநாளுக்கு ஒரு புத்தகத்தைஅன்பளிப்புச்செய்தார். அந்தப்பொதியைப் பிரித்துபார்த்த அந்தப்பெண்ணின்தந்தைநண்பரைமுறைத்துப்பார்த்தார். நான் எட்டிப் புத்தகத்தின் முகப்பைப் பார்த்தேன். அதன் தலைப்பு இவ்வாறிருந்தது 'சாம்பல்தீவுக்கொள்ளைக்காரி'!!!

,,

இலக்கியக்காரர்கள் புத்தகம் வாங்கும்போது ஈழத்து எழுத்தாளர்களின் புத்த கங்களைக் குறிப்பாகச் சஞ்சிகைகளை வாங்கி படைப்பாளிகளை ஊக்கவிக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் தங்கள் வெளியீடுகளை விற்பதில் பெரும் இடர்ப்படுகின்றார்கள். அன்பளிப்புக்காகப் புத்தகம் வாங்கும் போது, அது அன்பளிப்பவருக்கு ஏற்றதாக இருப்பதில் அதிக கவனம் செலுத்துவது முக்கியமானது.





## சிரிப்பு

**பெண் :**
(ஆத்திரமும் அழுகையுமாக மருந்துக்கடைக்கு விரைகின்றாள்) எனக்கு ஒரு நஞ்சுப் போத்தல் தாங்கோ

**கடைக்காரர்:** எதற்கு நஞ்சுப் போத்தல் கேட்கிறீங்க...?

**பெண்:** என்ர மனுசனைக் கொல்லுறதுக்குத் தான்.

**கடைக்காரர்:** !!!
மருத்துவரின் அனுமதியில்லாமல் அதைத் தர முடியாது.

**பெண்** புரிந்து கொள்ளுங்கள்... என்ர மனுசன் கேவலமானவன். கட்டிய தாரம் நான் இருக்கும்போது வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கின்றான். நம்பாவிடில் இதோ இந்தப் போட்டோவைப் பாருங்கள் (கணவனும் ஒரு பெண்ணும் நெருக்கமாக இருக்கும் ஒளிப்படமொன்றைத் தனது கைபேசியில் காண்பிக்கின்றாள்)

**கடைக்காரர் :** கோபம் கொண்டு, ஆவேசம் பொங்கக் கொதித்தெழுந்து. இந்தாருங்கோ நஞ்சுப் போத்தல். அவனை உடனடியாகக் கொல்லுங்கோ. நஞ்சுப் போத்தலைக் கொடுத்துவிட்டுத் தானும் ஒருநஞ்சுப் போத்தலை எடுத்துக்கொண்டு வீடு நோக்கி விரைகின்றார். அந்த ஒளிப்படத்திலிருந்த பெண் இவருடைய மனைவி!!!



## மனதில் வரைந்த கோயில்

மனதினில் வரைந்த கோயில்
கண்ணில் மழைவரும்
எண்ணும் பொழுதில் கோடி
தீபங்கள் ஒளிசிந்தும் நேரம்
கூவி அழைக்கின்றோம் வாரும்

மாற்றம் தர மார்க்கவழி
தெரிந்த பிள்ளை
மனமுருகக் கார்த்திகையில்
மலர்ந்த முல்லை
சிந்தனையின் தூய்மை
வெயில் தரும் வீச்சில் விளங்கும்
நிழலின் அருமை
வேற்றுமையின் வேர்களுக்கு
இங்கு என்ன உரிமை
இள வட்டமவர் வாழ்க்கை
இங்கு சதுரமானது
சத்தியத்தை மறந்து நின்று
சதிராடுது

போதி மாதவ புகழின்
விதையானது-ஏன்
பேரின வாதத்துக்கு இரையானது
குடிபோதையில் கவிழ்ந்த
ரதமானது
குழுமாடு குறுக்கே வந்த
கதையானது
கேரளாவின் கஞ்சாவிருது
பையிலே
ஆவா குழுவும் அரிவாள் நூறும்
கையிலே
ஏதோ ஏதோ போலி இங்கு
மேடையேறுது

நாளும் இங்கு வேலிகளே
பயிரைமேயுது
விரைவிலே பார்த்திரு
வேளை வரும்
விழிதிறந்து காத்திரு
தொழுது நின்றோம்
துயில் கலைந்துதோன்றிவிடு

தொழு நோய்கள்
தொலைந்து போக
தோளைக் கொடு
உங்கள்
திருவிழி ஒருகணம்
திறந்திங்கு வாரும்
மாவீரராய்...!!!

முல்லையூர் க. விஜயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> திரைக்கதை புலனாய்வுகளிலிருந்து விலகி விடாமல் காதல் உள்ளிட்ட பல விடயங்களுடன் ஒன்றித்துப் பயணிக்கச் செய்திருப்பது திரைக்கதையைக் கச்சிதமாக நகர்த்துகின்றது. விறு விறுப்புத்தரும் விடயங்களைக் கனமாக அமைத்திருக்கின்றார் இயக்குநர்.

# குற்றம் 23

## குறைவற்ற விறுவிறுப்பு




செயற்கை முறையிலான கருத்தரிப்புக்குப்பின்னால் நிகழ்ந்தேறும் முறைகேடுகளையும் பாரதூரங்களையும் சித்திரிக்கும் ஒரு விறுவிறுப்பான புலனாய்வே குற்றம் 23.

கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் பாவிகளுக்குப் பாவமன்னிப்பு வழங்கும் பாதிரியார் ஒருவர் தேவாலயத்திலேயே மர்மமான முறையில் சாவடைந்து விடுகின்றார். அத்துடன் அங்கு பாவ மன்னிப்புக் கேட்க வந்த ஒரு பெண்ணும் காணாமல் ஆக்கப்படுகின்றார். இந்த இரு சம்பவங்களுக்கும் இடையில்தொடர்புஇருக்கின்றதுஎன்றநோக்கில் உதவிப் பொலிஸ் ஆணையர் வெற்றிமாறன் (அருண் விஜய்) விசாரணையில் இறங்குகின்றார். சம்பவம்நடக்கும்போது தேவாலயத்துக்குச் சென்ற தென்றல் (மஹிமா) முதலான சிலர் கூறும் தகவல்களை வைத்துக்கொண்டு விசாரணையை முன்னெடுக்கின்றார். கருவுற்ற பெண்கள் சிலர் அடுத்தடுத்துத் தற்கொலை செய்து கொள்வது அவருடைய புலனாய்வை மேலும் சிக்கலுக்குள் தள்ளுகின்றது. ஒரு கட்டத்தில் அவரது குடும்பத்துக்குள்இளேயே அத்தகைய ஒரு சாவு திகழ கதைக்களம் விறுவிறுப்பாகின்றது. இந்தச் சம்பவங்களுக்குப் பின்னால் இருக்கும் மர்மம் என்ன என்பது தான் மீதிக் கதை.

குற்றச் சம்பவங்களையும் அவற்றுக்கான காரணங்களையும் தேடி ஆராயும் புலனாய்வைவிறுவிறுப்புடனும்யதார்த்தமாகவும் சித்த ரிக்கின்றார் இயக்குநர் அறிவழகன். திரைக்கதை புலனாய்விலிருந்து விலகி விடாமல்காதல்உள்ளிட்டபலவிடயங்களுடன் ஒன்றித்துப்பயணிக்கச்செய்திருப்பதுதிரைக்கதையைக் கச்சிதமாக நகர்த்துகின்றது. விறுவிறுப்புத்தரும் விடயங்களைக் கனமாக அமைத்திருக்கின்றார் இயக்குநர். ஆனால், அந்த விறு விறுப்புக்கள் ஒன்றன் பின் ஒன்றாக முடிவுக்குவரும்போது, பார்வையாளர்கள்எதிர்பார்க்கும்சுவாரஸ்யமும்-பரபரப்பும்கிடைக்கத் தவறுகின்றன. இடைவேளைக்குப் பின்னான காட்சிகள் நீட்சியடைந்தமையே இதற்குக் காரணம்.

படத்தின் மையம் செயற்கை முறையில் கருத்தரிக்கும் குழந்தைப்பேறு தொடர்பான வம்சி கிருஷ்ணாவின் உணர்ச்சிதான். அவரது பிரதான நோக்கம் குழந்தை சார்ந்ததுதானே? இதில் பணம் கேட்டு மிரட்டும் கிளைக் கதை எதற்கு? பிரச்சினை பணமா? குழந்தையா? என்பதில் தெளிவில்லை. குழந்தைதான் முக்கியம்என்றால்கருவுற்றபெண்களிடம்உண்மையைச் சொல்லாமல் இருந்திருக்கலாம். பணம் தான் முக்கியம் என்றால், படத்தின் உயிரோட்டமே சிதைந்து போகின்றது.

செயற்கைக் கருத்தரிப்பை மேற்கொள்ளும் மருத்துவமனை நிர்வாகம், தங்கள் வாடிக்கையாளர்களை ஏமாற்றும் காட்சிகள் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன. ஆனால், அத்தகைய மருத்துவமனை நிர்வாகம் வம்சியிடம் ஏமாறும் விதம் பலவீனமானதாக உள்ளது.

வில்லன், விசாரணையை மேற்கொள்ளும் அதிகாரிக்கு நெருக்கமானவர்களைப் பிடித்து வைத்துக்கொண்டு, மிரட்டுவது இதுபோன்ற கதைகளில் வழக்கம். இந்தப் படத்திலும் அது தவறாமல் இடம்பெற்றிருக்கின்றது. மஹிமா பொலிஸிடம் உண்மைகள் முழுவதையும் சொல்லாமல் தவிர்ப்பது ஏற்கும்படி இல்லை.

செயற்கைக்கருத்தரிப்பின்செயல்முறை, அதில் நடக்கக்கூடிய முறைகேடுகள், அதற்குப் பின்னால் இருக்கும் உணர்ச்சிப் போராட்டங்கள், உளவியல் சிக்கல்கள் ஆகியவற்றை இயக்குநர்வலுவுடன்பதிவுசெய்திருக்கின்றார். தேவையான பின்னணித் தகவல்களைத் திரட்டுவதில் திரைக்கதைக் குழு சிரத்தையோடு உழைத்திருக்கின்றது.

நாயக சாகசத்தை முன்னிறுத்தாமல், புலனாய்வைஇயல்பாகநகர்த்திச்செல்வதுதிரைக்கதையின் சிறப்பான அம்சங்களில் ஒன்று. பலவீனங்களை மீறிப் படத்தைக் காப்பாற்றும் அம்சங்கள் இவை.

அருண் விஜய்க்கு இது முக்கியமான படம். பொலிஸ் அதிகாரிக்குரிய கம்பீரம், மிடுக்கு, தோற்றம், உடல்மொழி, விசாரிக்கும் தொனி ஆகியவற்றில் நேர்த்தியான நடிப்பை அவர் வழங்கியிருக்கின்றார். உணர்ச்சிகள் சார்ந்த நடிப்பிலும் குறைவைக்கவில்லை. நாயகத்தனம்மேலிடாமல்இயல்பாகஅறிமுகம்ஆவது, பதறாமல் திட்டம் தீட்டுவது போன்றவை நம்பகத்தன்மையைக் கூட்டுகின்றன.

மகிமா பாத்திரத்தோடு அழகாகப் பொருந்திப் போகின்றார். குழந்தைக்கான ஏக்கம், செயற்கைக் கருத்தரிப்பு குறித்த மன உளைச்சல் ஆகியவற்றைக் கச்சிதமாகச் சித்திரித்து மனதைக் கரைக்கின்றார்-அபிநயா.

மருத்துவப் பின்னணியில் குற்றவியல் கதையை விறுவிறுப்பாகக் கொடுக்க முயற்சித்த இந்தப் படம், இரண்டாம் பாதியில் தனது பிடியை நழுவவிடுகின்றது. அடுக்கடுக்காக விறுவிறுப்புக்களைப்போடும்இயக்குநர்அவற்றுக்கிடையேயானதொடர்பைநிலைநாட்டுவதிலும் சிக்கல்களை அவிழ்ப்பதிலும் கூடுதல் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். என்றாலும், செயற்கைக் கருத்தரிப்பு, தாய்மை உணர்வு, மருத்துவத்துறையிலுள்ளமுறைகேடுகள்ஆகியவற்றைக் கையாளும் விதத்தில் கவனிக்க வைக்கின்றது இந்தப் படம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முப்பரிமாணம்

## இழுபறிப்படும் காலமும் காட்சியும்

ஒளிப்படங்கள், ஓவியங்களில் மூன்றாவது பரிமாணத்தைக் காண முடியாது. ஆனால், யதார்த்த உலகில் அது எல்லோர் கண்ணுக்கும் தெரியக்கூடியதுதான். எனவே, கண்ணுக்குத் தெரியாத ஓர் அம்சத்தைச் சுட்ட மூன்றாவது பரிமாணம் எனும் படிமத்தை இயக்குநர் தேர்ந்தெடுத்தது பொருத்தமற்றது.

சாதி, மதம், தராதரம் என மனிதன் வகுத்துள்ள பாகுபாடுகளை அதிகம் எதிர்கொள்வது காதலே. இவற்றாலேதான் பல காதல்கள் தோல்வியைச் சந்திக்கின்றன. இந்தப் படத்தில் அந்தக் காரணங்களைக் கண்ணுக்குத் தெரியாத ஒரு பரிமாணம் என்று குறிப்பிடும் இயக்குநர், அந்தப் பரிமாணத்தையே 'முப்பரிமாணம்' ஆக்கியிருக்கின்றார்.

கல்யாண மண்டபத்தில் மணப்பெண்ணைக் கடத்துவதில் இருந்து தொடங்கும் படம், கடத்தலின் பின்னணியைச் சொல்ல, பழைய நிகழ்வுகளை அசைபோடத் தொடங்குகின்றது. கதிரும் அனுஷாவும் சிறார்கள் பருவத்தில் அயல் அயல் வீடுகளில் வசித்தவர்கள். பிள்ளைக்காதலுடன் பிரிந்துபோகும் இவர்கள், பெரியவர்கள் ஆனதும் (சாந்தனு, சிருஷ்டி) மீண்டும் சந்திக்கின்றார்கள். அப்போதும் அவர்களது காதல் பத்திரமாக இருக்கின்றது என்கின்ற பழைய புராணம் இதிலும் உள்ளது. அத்துடன் அவர்களின் இரண்டு குடும்பங்களுக்கும் இடையிலான பகை, அவர்களது காதலுக்கு முட்டுக்கட்டையாகின்றது. தடைகளை மீறித் திருமணம் செய்துகொள்ளும் முயற்சியும் தோற்றுப்போகின்றது. இதற்குக்காரணமாக அமைந்த கண்ணுக்குத் தெரியாத அந்தப் பரிமாணம் என்ன? என்பதே படம் சொல்லும் செய்தி.

ஆரம்பத்தில் அதிரடிக் கடத்தலுக்குப் பிறகு உற்சாகமான காதலைக் காட்டிவிட்டு நிகழ்காலத்துக்கு வரும் படம், பார்வையாளர்களுக்குச் சில அதிர்ச்சிகளை வைத்திருக்கின்றது. காதலியைக் கடத்திக்கொண்டு வரும் காதலனின் நடத்தையில் தெரியும் மாற்றம் முற்றிலும் புதிய கதையைச் சொல்கின்றது. காதல் முறிவின் பின்னணியில் ஒளிந்திருக்கும் உண்மையான காரணம், அவர்கள் இருவரதும் குடும்பங்களின் பகை மட்டுமே அல்ல எனும் கோணம் பார்வையாளர்களை நிமிர்ந்து உட்கார வைக்கின்றது. உண்மையும் பொய்யும் எப்போதுமே காட்சிகளில் கலந்து இருப்பதை இயக்குநர் உணர்த்த விரும்புவதாகத் தெரிகின்றது.



நாயகனின் போக்குக்கே காட்சிகள் நகர்வதால் நாயகனின் கண்ணுக்குத் தெரியாத அந்தப் பரிமாணம் பார்வையாளர்களுக்கும் இயல்பாகவே தெரியாமல் இருக்கின்றது. அதற்காகப் படத்தில் இந்த அம்சம் கவனமாகவும் கையாளப்பட்டுள்ளது. ஆனால், கடத்தலுக்குப் பிந்தைய காட்சிகளைச் சித்திரித்த விதத்தில் காட்சிகளில் நம்பகத்தன்மை குறைவு. கதாநாயகியின் கதாபாத்திரத்தில் மாத்திரம் வித்தியாசம் காட்டியிருக்கும் இயக்குநர், நாயகனின் கதாபாத்திரத்தில் அதைத் தவிர்த்திருக்கின்றார். நாயகன் திடீரென்று போதைக்கு அடிமையாக மாறுவது, அடுத்த கணமே அதில் இருந்து மீண்டு கொள்வது, கச்சிதமாகத் திட்டமிட்டுக் கடத்துவது ஆகியவை நம்பத்தகுந்த முறையில் காட்சிப்படுத்தப்படவில்லை.

முதல் பாதியில் வரும் ஆணவக் கொலைச் சித்திரிப்புக் காட்சிகூடப் பலவீனமாயுள்ளது. அதைத் தொடந்து வரும் எல்லாக் காட்சிகளும் அதே சாயலில் தான். நாயகியின் அண்ணன் 10 ஆண்டுகள் சிறைப்படுத்தப்பட்டவர். அவர் சிறையில் இருந்து வெளியே வரும்போதும் அப்படியே இருக்கின்றார். இவர் மட்டுமல்ல நாயகன், நாயகி தவிர வேறு யாருக்குமே படத்தின் பிந்தைய காட்சியில் வயது கூடவில்லை. காலஓட்டத்துக்கு ஏற்ற குறைந்தபட்ச தோற்ற மாற்றத்தில்கூட இயக்குநர் கவனம் செலுத்தாததால், காட்சிகள் நகர்ந்தாலும் திரைக்கதையில் காலம் அப்படியே தேங்கி நிற்பதுபோன்றதான எண்ணம் மனதில் ஏற்படுகின்றது. இது கதையோடு ஒன்றவிடாமல் செய்கின்றது.

ஒளிப்படங்கள், ஓவியங்களில் மூன்றாவது பரிமாணத்தைக் காண முடியாது. ஆனால், யதார்த்த உலகில் அது எல்லோர் கண்ணுக்கும் தெரியக்கூடியதுதான். எனவே, கண்ணுக்குத் தெரியாத ஓர் அம்சத்தைச் சுட்ட மூன்றாவது பரிமாணம் எனும் படிமத்தை இயக்குநர் தேர்ந்தெடுத்தது பொருத்தமற்றது. தலைப்பின் மூலம் கவனம் ஈர்த்தாலும், இயக்குநர் அதைப் பொருத்தமாகப் பயன்படுத்தவில்லை.

காட்சிகளையும் நடிப்பையும் முன்னிறுத்தியிருக்கவேண்டிய பின்னணி இசை, அதற்கு நேர்மாறாக ஒலித்துக் காட்சிகளின் வீரியத்தைக் குறைக்கின்றது. 'புத்தாண்டு பார்ட்டி...' பாடலைத் தவிர வேறு எந்தப் பாடலும் தேறவில்லை. இசை ஜி. வி. பிரகாஷ் என்பதை நம்ப முடியவில்லை. படத்தொகுப்பாளர் விவேக் ஹர்ஷன் முடிந்தவரை போராடியிருக்கின்றார். ஒளிப்பதிவாளர் ராசாமதியும் கடுமையாக உழைத்திருக்கின்றார்.

தோற்றத்தை மாற்றி, நடிப்பில் கணிசமான முன்னேற்றம் காட்டியிருக்கின்றார் சாந்தனு. அப்பாவிக் காதலன் பழிவாங்கும் ஆவேசம் கொண்டவனாக மாறுவதை நன்கு சித்திரிக்கின்றார் அவர். சிருஷ்டி டாங்கேவுக்குக் கனமான கதாபாத்திரம்.

அதை ஓரளவு சமாளித்துக் கரையேறுகின்றார். கதிரின் அப்பாவாக நடித்தவர், தம்பி ராமையா, அப்புக்குட்டி ஆகியோர் வீணடிக்கப்பட்டுள்ளனர்.

சாந்தனு, சிருஷ்டியின் நடிப்பு, இரண்டாம் பாதியின் திருப்பம் ஆகியவை கவனிக்கவைக்கின்றன. நம்பகத்தன்மையும் சுவாரஸ்யமும் அற்ற காட்சிகளால் தொய்வடையும் திரைக்கதையைக் காப்பாற்ற இவை மட்டும் போதாவை.


# வாழ்வுரிமைக் கேட்டு...



பிறப்பதற்கு முன்னிருந்த
பயங்கரவாத தடைச்சட்டத்தில்
பலியிடப்பட்ட நான்
பூட்டிய சிறையிலிருந்து
பட்டினிப்போர் புரிகின்றேன்
பாச உறவுகளுடன்
நேசமாய் வாழ...
என்க்கு இணையாக எனை
பெற்றவளும் புறப்பட்டு
விட்டாள்
பர்தையோரம் பதாகையுடன்...
பாசமகளும் தாயுடன்
தானுமொரு பங்காளியாக...
மூவருக்கும்
வேண்டுதல் ஒன்றே
“நல்லாட்சி அரசே நம்மை
நிம்மதியாய் வாழவிடு; அன்றில்
நிரந்தரமாய் சாகவிடு”....

விவேகானந்தனூர்
சதீஸ், கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோட்டையும் கடற்கரையும்

கரைந்துகொண்டிருந்த காகம்
செவ்வானத்துக்கு எதிர்த் திசையில்
சிறகடிக்கின்றது.
அதன் கூட்டங்களும் அவ்வாறே
தொடர்கின்றன.


ஒற்றைக்காலில் காத்திருந்த
கொக்கும் ஏதோ அகப்பட
எழுந்து பறக்கின்றது.


நீர்க் காகங்கள்
வேட்டையை முடித்துத்
திட்டுக்களில் அமர்ந்து
தம்மை உலர்த்துகின்றன.
உலர்ந்த குறையில் சில
கூடு சேரவும் பறக்கின்றன.

வண்ணத்துப் பூச்சிகளும்
சிறு தும்பிகளும்கூட இப்போது
வயிறு நிரம்பிவிட
ஒய்வெடுத்து ஒதுங்குகின்றன.

சூரியன் மறைய
இருள் சூழ்ந்துகொள்கின்றது.
வருகின்றனர் காதலர்கள்
காமம் தீர்க்கும் இடம்தேடி.
இணைகின்றனர் அவ்விடத்தில்
போதை கொள்ளும் இன்னும் சிலர்.

நிலவன்





கணவன்: டாக்டர் என் மனைவி
ஓவரா ரீவி. பாக்கிறா..
மருத்துவர்: எந்த அளவுக்
குப் பாக்குறாங்க?
கணவன்: 'கரண்ட்' கட்டா
னாலும், டோர்ச் அடிச்சி
பாக்குற அளவுக்கு!!!



நகைச்சுவைத் தொடர்

06

# ஓவசி...

மிருசுவில்
தமிழ்தாசன்

பழசுகள், இளசுகள், சிறுசுகள் என்று வயது வேறுபாடின்றி ஏராளமான சனத்திரள் கொண்டெக்ரர் வெற்றிவேலுவின் வீட்டுமுற்றத்தில் படம் பார்ப்பதற்காகக் குவிந்து கொண்டிருந்தனர். வழக்கம் போலப் பெண்களின் வருகை அதிகமாகவே இருந்தது. எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டும் இந்த அத்தியடிக் கிராமத்துக்கு மட்டும் இன்றைக்கு நாளைக்கு என்று மின்சாரம் வழங்கப்படாமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றது மின்சார சபை. மின்சாரமில்லாததால் இந்தக்கிராமத்து மக்களுக்கு மின்னில் தொழில்படும் மின்சாதனங்கள் திகைப்புக்குரியவை. அதிலும் தொலைக்காட்சிப்பெட்டி என்பது அவர்களுக்கு இன்னும் புதுமையானதாக இருந்தது.

"தம்பியவை...

ஆக்கள் ஓரளவுக்கு வந்திட்டினம்...

இனிப் படம்போடலாமெண்டு நினைக்கிறன்"

கொண்டெக்டர் வெற்றிவேலு உரக்க அழைத்தார். கடதாசி விளையாட்டை நிறுத்திவிட்டுப் படம் போடுவதற்காக எழுந்தான் ஓவசி.

"டேய் ஓவசி! போத்திலுக்கை இன்னும் அரைக்குக் கிட்ட கிடக்குது. நாங்கள் அந்த வயற்கரைக்குப்போறம். படத்தைப்போட்டிட்டு நீயும் கெதியாய் அங்க வந்து சேர்."

சொல்லிமுடித்த கையுடன் நண்பர்கள் வயற்கரைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

"அண்ணை ஏதேன் நல்ல, புதுப்படமாய்ப் போடுங்கோ"

சிறுவர்களுடன் கன்னிப் பெண்களும் சேர்ந்து ஓவசியிடம் கெஞ்சினார்கள். என்ன நினைத்தானோ ஓவசி, போட்டிருந்த சீ.டியைக் கழற்றி எடுத்துவிட்டு வேறு ஒரு சீடியைப் போட்டுவிட்டான். தங்களுடைய வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டு விட்டதென்பதில் அவர்களெல்லோருக்கும் மகிழ்ச்சியோ மகிழ்ச்சி.

> வெற்றிவேலு வீட்டில் பளீர்... பளீர்... என்று ஏதோ ஒரு சத்தம். வேறொன்றுமில்லை. ரீவீ மற்றும் உபகரணங்களெல்லாம் அடித்து நொறுக்கப்பட்டுக்கொண்டிருந்தன. எதுவுமே கேட்கமுடியாத பரிதாப நிலை ஓவசிக்கு.

"என்ன படமண்ணை இது! நல்ல புதுப்படமோ?"

ஆவலை அடக்க முடியாது நளினியும், கீர்த்தனாவும் ஓவசியை அரித்தெடுத்துக் கொண்டிருந்தனர். "இது சோக்கான படம். ஒரு நாளுமிதைப் பாத்திருக்க மாட்டியள். பாத்திட்டுச் சொல்லுங்கோவன் எப்பிடிப் படமெண்டு" அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக ஏதோ வாயில் வந்ததைக் க... டு எஞ்சியிருந்த அரையையும் அடிப்பதற்காக மிக ஆவலுடன் நண்பர்களைத் தேடி வயற்கரைக்கு ஓடுகின்றான் ஓவசி. சற்றுத் தாமதித்தாலும் அவர்கள் வசமிருக்கும் அந்த 'அரை'யும் முடிந்து விடும். அதுதான் அவனுக்கு அப்படியொரு அவசரமாயிருந்தது.

நாலு அடி எடுத்துவைத்திருப்பான். வெற்றிவேலு வீட்டில் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது. படம் பார்க்க வந்த பெண்கள் அனைவரும் குளறியடித்துக் கொண்டு வெற்றிவேலுவின் தகரப் படலையைத் தகர்த்தெறிந்து கொண்டு ஓட்டப்பாய்ச்சலில் ஓவசியை நோக்கி வந்து கொண்டிருந்தனர். ஓவசிக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்படியே சிலையாக நின்றான்.

அடிகளும் உதைகளும் அபாரமாக விழுந்தன.

அவலக் குரல் ஒன்று இடைவிடாது இசைப்பதைக் கேட்ட வயற்கரையிலிருந்து ஓவசியின் நண்பர்களும் என்னவோ...? ஏதோ...? என்று ஓடிவந்தனர். சூழ்நிலை மிகவும் பரபரப்பாக இருந்தது.

"எங்கையடா உவங்கள்! நில்லுங்கோடா! என்ன கன்றாவிப் படத்தையடா கொண்டுவந்து போட்டனியள்! படவா றாஸ்கொல்! (இன்னும் பல தூய வார்த்தைகள்) இப்ப உன்னை..." என்றவாறு தான் கொண்டு வந்த மண்வெட்டிப்பிடியால் ஓவசியின் மண்டையில் ஓங்கி ஒன்று போட்டார் வெற்றிவேலு. சற்று இலக்குத் தவறிவிட தலைக்கு வந்தது தோளோடு போய்விட்டது. இன்னும் ஒரு வாலிபன் ஓவசியின் கன்னத்திலும் ஒன்று இதமாகக் கொடுத்தான். இப்போது ஓவசியின் காதுக்குள் யாழ். தேவி இரைச்சலுடன் போய்க் கொண்டிருக்கின்றது.

வெற்றிவேலு வீட்டில் பளீர்... பளீர்... என்று ஏதோ ஒரு சத்தம். வேறொன்றுமில்லை. ரிவீ மற்றும் உபகரணங்களெல்லாம் அடித்து நொறுக்கப்பட்டுக்கொண்டிருந்தன. எதுவுமே கேட்கமுடியாத பரிதாப நிலை ஓவசிக்கு. இனியுமங்கே நின்றால் அவர்களின் ஆத்திரத்துக்கு அவனைக் கொன்று புதைத்து விடுவார்கள். சூழ்நிலைபுரிந்தது ஓவசிக்கு. உடனடியாக அந்தஇடத்தை விட்டு 'எஸ்கேப்' ஆக வேண்டும். இதைவிட வழியில்லை. நண்பர்கள் யாரையும் காணவில்லை. ஓவசி இப்போது செய்வதை அவர்கள் அடிவாங்காமலேயே வந்த வேகத்திலேயே நிலமை புரிந்து நழுவி விட்டார்கள். அவர்க்ள் ஓடித்தப்பிப் பத்து நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

இப்போது ஓவசி ஓடிக் கொண்டேயிருந்தான். ஆபத்து இன்னும் அவனை விட்டு முற்றாக விலகியதாகச் சொல்லமுடியாத சூழ்நிலை. ஓடினான்... ஓடினான்... ஊரின் எல்லைக்கே ஓடினான்.

"சே! நான் புதுப்படமெண்டு நினைச்சு மப்பில மற்றச் சீ.டியைப் போட்டதாலை தான் இவ்வளவு பிரச்சினைகளும்" மனம் சொல்லிக் கொண்டது.

"எல்லாப்புகழும் ரிவிக்கே!"

இதையும் வழக்கம் போல சொல்லிக் கொண்டு ஓடிக்கொண்டிருக்கின்றான் ஓவசி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சண்டி(த்தனம்)...!

தையிட்டி அ. இராசதுரை

"யோசிக்காதேங்கோ. பயப்பிடாம ஏறுங்கையா. காசு கீசெதுவுமே வேணாமையா. இந்த நாரிப்பிடிப்பு வருத்தமும் நீங்களும். வீட்டுக் கேற்றுக்கை கொண்டு போய் இறக்கிவிடுறன்" அது நல்லகுருநாதர் குடும்பத்தின் வாடிக்கை விசிறி ஆட்டோ ஆதித்தனே தான். இந்த விதமாகவெல்லாம், அருளிச் செய்து விட்டதும்.

ஒரு அவசர அந்தரமெண்டு கடைத்தெருவில சாமான்சக்கட்டு வாங்கிறதுக்குக் கூட வீட்டு வாசல்லை ஒரு பெடிபெட்டை தன்னுமில்லை. இனியிந்தளவு படுசீரியசான நாரிப்பிடிப்போடையும் உதிலை போறசுகம்பாத்து உந்தென்னம்போலேசிலைதொத்தப்போய் நாரிக்கையும் கெலிச்சு எல்லாம் சேர்ந்து 'ரேஸ்ஸ்' பண்ணிச்சுதெண்டா...!

சும்மா அந்தப் பிரச்சினையெல்லாம் என்ன மண்ணாங்கட்டிக்கி....? உந்த உதிலை கொஞ்சத்தூரத்துக்கை கிடக்கிற பேக்கரிக்கடைக்கு இந்த நாரிப்பிடிப்பு நாரியை ஒரு பக்கவாட்டுக்குச் சவட்டிக் கொண்டுபோய்ப் பாணையும் சீனியையுமொருக்கா, வாங்கிக் கொண்டோடி வருவம்...'

இப்படியே பலபாட்டுச் சிந்தனைகளோடு நல்லகுருநாதன் கிளாக்கர், அந்த விடியக்காலை நேரத்தில வெளிக்கிட்டும் விடுகின்றார். நாரிப் பிடிப்பு வருத்தத்தையும் தான் பறுவாய்பண்ணாமலுக்கு. தனது நடையைப் பார்த்து நக்கல் பண்ணுபவர்களுக்கு மேலாலெல்லாம் ஏறி மிதித்துழக்கிக் காறித்துப்பிக்கொண்டே நல்லகுரு நடைபோட்டுக்கொண்டிருந்தார்.

"எவ்வளவு படித்தும், எவ்வளவுதான் லெச்சர்கள், கதாப்பிரசங்கங்களை விழுந்து விழுந்து கேட்டும், நாளாந்தம் நாலாபக்கங்களிலும் நடந்து முடியும் அபாண்டங்களைக் கண்கொண்டும், பார்த்தும், தன்னறிவுகொண்டும் திருந்தாதவர்கள், திருந்த நினைக்காதவர்கள் உலகமழிந்தாலும் ஏன் ஒருக்காலும் ஒருபோதும் அவர்கள் திருந்தவே மாட்டார்கள்"

நாரியை ஒரு பக்கவாட்டாகச் சவட்டிக் கொண்டு தனது இயலாத்தன்மையபால் நடைபோட்டுக் கொண்டிருந்த நல்லகுருநாதனைப் பார்த்துச் சிரித்துவிழுந்து கொண்டு போனவர்களின் அந்த நளினமான சிரிப்புக் காட்சியானவை நல்ல குருநாதரின் நாரிப்பிடிப்பை இன்னுமாய்க் கூட்டியும் விடுகின்றது. நிலமையை ஒருவாறு சமாளித்துக் கொண்டே நடுக்கடலில் இருந்து அலையடிப்பு, புயலடிப்புடன் கரைக்கு வந்து சேர்ந்து தரைதட்டி விட்டதோர் அகதிப்படகாய் நல்லகுருநாதர் பேக்கரிக் கடை வாசலை டச் பண்ணியும் விடுகின்றார்! நல்லகுருநாதரின் அந்தக் காட்சியமைப்புக்குப் பாண்போறணைக் கரியுடுப்புகளோடு, கரிக்குண்டங்களாய் நின்று கொண்டிருந்த, பேக்கரித் தொழிலாளர்களும்கூட பத்தாதற்குப் பெரிய சிரிப்புப் பாட்டி வைத்து விட்டார்கள்.

"புலியூருக்குப் பயந்து நரியூருக்கு வந்தால் அதுவும் புலியூராச்சுதோ...' வந்த பாணியில் இன்னும் கூடவாய் நாரியைச் சவட்டிக் கொண்டே சாமானை வாங்கிக் கொண்டு 'இனி வீட்டு வாசலை மிதிப்பதற்குத் தவழ வேண்டியும் வந்து விடுமோ....?" நல்லகுருநாதர் இப்படியெல்லாம் யோசித்தபடியே அடுத்த சில அடிகள் வைக்கமுன்னம், வெரி, வெரி சடினாய் அவரையும் அடித்தே விழுத்திவிடும் வேகத்தில் ஒரு பச்சைக்கலர் ஆட்டோவொன்று வந்து அவர் முன்னே திடீர் 'ஸ்ரொப்'...!

"ஏறுங்கையா"

"யோசிக்காதேங்கோ. பயப்பிடாம ஏறுங்கையா. காசுகீசெதுவுமே வேணாமையா. இந்த நாரிப்பிடிப்பு வருத்தமும் நீங்களும். வீட்டுக் கேற்றுக்கை கொண்டுபோய் இறக்கிவிடுறன்"

அது நல்லகுருநாதர் குடும்பத்தின் வாடிக்கை விசிறி ஆட்டோ ஆதித்தனே தான். இந்த விதமாகவெல்லாம், அருளிச் செய்து விட்டதும்.

"இதென்னடாப்பா இண்டைக்கிந்த உலகத்திலை இப்படியும்தான் ஒரு மானிடனும் இருந்து விட்டானே....!!!!"

நல்லகுருநாதர் ஆட்டோவுக்குள் பாய்ந்துவிடுகின்றார். ஆட்டோ 'ரண்'பண்ணத் தொடங்கிவிட்டதும் நல்லகுருநாதரின் நாரிப்பிடிப்பின் வீதமும் கொஞ்சம் இறங்கிவிட்டதொரு, சுகம் காட்டத் தொடங்கியது.

"சேர் உந்த நாரிப்பிடிப்புக்கு சண்டி இலை வறுத்துத் திண்டால் அந்தப் படியே நிண்டிடுமாம் சேர்" ஆட்டோவோட்டத்துக்குச் சரிக்குச்சரியாய் ஆதித்தன் பெரும் ஆர்வத்தோடு இந்தச் செய்தியைச் சொல்லித் தான் விட்டதும் நாரிப்பிடிப்பு இன்னுமாய் இறங்கிவிட்டது போல.

"மெய்யேயும்... ஆட்டோத்தம்பி? உந்தச் சண்டியை எங்கை எடுக்கலாம்...? நல்ல பிள்ளையல்லே எடுத்துத்தர முடியுமோ...?? எவ்வளவு ஆனாலும் தரலாம் ராசா...'

விழுந்து, விழுந்து மன்றாட்டப் பிச்சையை நல்லகுருநாதர் வேண்டிக் கொள்ளும்போது திடீர் அழைப்பொன்றும் வந்து விடுகின்றது.

"ஹலோ... ஹலோ....?"

நல்லகுருநாதன் பறந்தடிக்கின்றார், சேவல் செட்டையடிப்பதுபோல்.

"ஓ...மை டியர் குரு. ஐயாம்.... ராஜதுரை ஸ்பீக்கிங் நவ்'

"ஓ... மிஸ்ரர்.... ராஜா...! என்னடாப்பா... வட் ஸ்த மற்றர்?

"டேய் மச்சான் குரு. நல்லபிள்ளையல்லோ. எனக்குக் கொஞ்சம் சண்டியிலை எடுத்துத்தரவேணும். பீளீஸ்...! பிளீஸ்...!'

"அடியடா படலேலை. என்னடா தம்பி சண்டியிலை இப்ப எடுத்தாறியோ என்ன...?"

'என்னடாப்பா... உனக்கும் நாரிப் பிடிப்போ...?"

"அட கோதாரி... என்ன உனக்குமாடாப்பா...?"

"பின்னையென்ன....! நானும் தான் சண்டியிலைக்காகத் தவிச்சுக் கொண்டிருக்கிறன்"

நல்லகுருவுக்கு வந்த வருத்தம் 'ஒவ்வீஸ்' கூட்டாளியின் சண்டியிலைத்தவிப்போட எங்காலை போனதெண்டு தெரியாமல் உசாராய் நிமிர்ந்து நிற்கும் காட்சியை இரசித்துக் கொண்டு நின்ற ஆட்டோ ஆதித்தனும் அவனுடைய கைபேசி மீயூசிக் போடப் பறந்துவிடுகின்றான்.

"ரெண்டுபேரும் ஒரே செக்ஷனிலை நோகதா வேலை செய்யிறம். ரெண்டுபேருக்கும் வருத்தம். ரெண்டு பே[illegible]ம். ரெண்டு பேற்ரை மிசி[illegible]

இதென்னாடாப்பா... இந்தச் சண்டி...' தீடீரென்று கைபேசி அழைப்புக் குளோசப்பாகி விட வீட்டுக்குள் நாரியைச் சவட்டாமல் கொஞ்சம் ஸ்ரைலாக நடந்துபோகும் தனது தலைவரை மனைவி ஜெயந்தி வரவேற்றுச் சந்தோஷப்பட்டுப் புழுகித் தொலைத்த நேரம் மறுபடியும் கோல் ஒன்று வந்து விட்டது.

"ஹலோ... ஹலோ... கூ ஸ்பீக்கிங்?'

அந்தரத்தில் நல்லகுருநாதர் நீளப்பாய்தல், தடியூன்றிப்பாய்தலெல்லாம் பினிஷ் பண்ணிவிட்டவராய் அவதிப்பட்டுத் தொலைக்க.

"டேய் மச்சான் குரு... நான் ராஜதுரை தான். சாவித்திரி.சத்தியவான் கூத்திலை எமன்வேசம்போட்ட அந்தப் பொன்னம்பலத் தான்ரை வீட்டிலை சண்டிமரம் நிக்கிதாமடாப்பா'

'வெரி வெரிகுட் நீயூஸ். ரெண்டு பேருக்கும் நல்லகாலமாப் போச்சுது. தயவு செய்து அதையொருக்கா 'றை'பண்ணு. இந்த நாரிப்பிடிப்புக்கு அது தான்ராப்பா ஆன்சர் பண்ணும். இரண்டுபேருக்குமா எடுத்துவை. ஈவினிங் 5.30க்குள்ளை ஆட்டோவிலையெண்டாலும் ஐ வில் கம்"

கதைப்பு நின்றுவிட அப்படியே அம்மிப்போனார் நல்ல குருநாதர்.

'இப்ப 'லாஸ்ற்ராய்' வந்து முடிந்திருக்கின்ற எமன் பொன்னம்பலத்தான் வீட்டுச் சண்டியிலை எடுப்புத் தொடர்பான நாய்ப்பூட்டு, நரிப் பிடிப்புத் தொல்லையிலிருந்து என்னவிதமாய் மீளப்போகின்றது'

சீரியசாய்த் திங் பண்ணிக் கொண்டே செற்றியில் போய் தொப்பென்று சிறட்டுவணாகியதும் மீண்டும் நாரிக்குள் [illegible]கொண்டு விட்டது.

"என்னப்பா பேந்தும் நாரிக்கை வந்திட்டுதோ?'

முகம் கறுத்தபடியே ஜெயந்தி அங்கலாய்த்ததும் எமன் பொன்னம்பலம் வீட்டுச் சண்டியிலை விசயத்தைச் சொல்லப் பயந்து

"ஓமப்பா..." என்று மாத்திரம் சொல்லி விட்டு நல்லகுரு முழிசியடிக்கத் தொடங்கினார்.

அந்த எமன் பொன்னம்பலத்தானுக்கும் தனக்குமிடையில் அப்ப அந்த் இளந்தாரி வயதிலேயே சாவித்திரி சத்தியவான கூத்து விசயத்திலிருந்து தொடங்கின கூத்துப் பாத்திரம் தொடர்பான இழுபறி பிறகு சச்சுப்பிச்சானது. இப்ப குடும்பத்தில போனபின்னாலும் அந்தப் பிரச்சினை ஒரு பெரும் கறளாய் சண்டித்தனப்போக்கில் நீள்கின்றது.

'இந்த எமனார் அதைச் சாதித்துக்கொண்டு ராத்தி, ராத்திக் கொண்டிருப்பதெல்லாம். இனிச் சுடலை காணும் வரையிலதான். இப்பிடியாப்பட்ட அவனிட்டை இனியொருக்கா இந்த நாரிப்பிடிப்புக்கா நானெப்பிடி..."

இப்படியாய் நல்லகுருநாதர் அந்த ஸ்ற்ரோறியை முடித்து வைக்கும் முகூர்த்தம் பார்த்து கேற்றடியில் ஒரு ஆட்டோ வந்து நின்றும்விட ஆட்டுக்குக் குழையெடுத்த கணக்காய் சண்டியிலைக் கட்டோடு வந்தும் விட்டான் ஆதித்தன்.

"சேர்... நான்போய்ச் சண்டியிலை கேட்டதுக்கு பொன்னம்பலமண்ணே 'இதைக் கொண்டு போய் நான் தந்ததாகச் சொல்லிக் குருநாதனிட்டைக் குடு. அவனுக்கும் எனக்கும் எந்தக் கோபதாபமுமில்லை"

சந்தியவானின் உயிரைத், திருப்பிக் கொடுத்த எமதர்மனை மனப்பூர்வமாக நல்லகுரு நினைத்து முடிப்பதற்கிடையில் இராசதுரையும் ஆட்டோவில்... நேரம்4.59.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலத்தில் பெண்ணியக் கவிதைகள்

அனார்

பெண் ஒருத்தியின் உணர்வுகள் தடைப்படும் தருணமொன்றை அஷ்ரபா நூர்தீன் எனும் பெண் கவிஞர் தன்னுடைய 'நானும் நீயும்' கவிதையில் சொல்லும்விதம் ரசிக்கத்தக்கது.

நானும் நீயும் அருகருகிருந்து
பயணம் செய்கின்றோம்
கறுப்புப் பர்தாவுக்குள்
முகம் மறைத்தவளாய் நான்
எனினும் எனக்கு
இவற்றின் மீது வெறுப்பில்லை
பால் அருந்தும் என் சிறு குழந்தை
மடியில் இருந்து வதைக்கின்றது

பக்கத்தே மூத்தவனும்
அடுத்து மூத்தவளும்
காற்றுப்புகா நெரிசல்
நீ சுதந்திரமானவன் ஆண்
சிறகில்லையெனினும்
நீ வான்வெளி மிதப்பாய்
அக்கணம் உனக்கு
மனைவியும் சிறுகுழந்தைகளும் இருக்காது

படகின் மேல்தளம் செல்வாய்
காற்றை முகர்வாய் களிப்புறுவாய்
சற்றே அலுக்கையில் இருக்கையிலும்
அமர்வாய்
என்னருகில் ஓர் அந்நியனைப்போல
சிலவேளை எதிர்த்திசைப் பெண்களைக்கூட
நீ ரசித்த வண்ணம் பயணிக்கலாம்
அழகான நீலக்கடலும்
அதனைத் தொட்டுக்கொண்டு
தெரிகின்ற வெண்நீலவானும்
சிறிய மலைக்குன்றுகளும்
துள்ளுகின்ற மீன்களும்
பார்ப்பதற்கு அழகாய் இருக்கும்

எனினும்
நான் முகத்திரை அகற்றிடில்
அந்நிய ஆடவன் பார்த்திடல் கூடும்
அது ஹறாமானதென
எனது கணவனாகிய நீ தண்டிப்பாய்

வாழ்வில் பெண்ணுடைய உணர்வுகள் எத்தனையோகாரணங்களுக்காகப்புறக்கணிக்கப்படுகின்றன. மதம், பண்பாடு என்ற போர்வையில் பெண்ணை ஒடுக்கும் ஆணின் அதிகாரத் திணிப்பை இதுவெளிப்படுத்துகின்றது. அதற்குள் பெண் இழுக்கப்படும்போது அவளுக்கு ஏற்படும்கோபம்அவளைஅந்நியப்படுத்துகின்றது. அதை உரைக்கும் எனது 'பெண் பலி' என்கின்ற கவிதை.

அது போர்க்களம்
வசதியான பரிசோதனைக் கூடம்
வற்றாத களஞ்சியம்
நிரந்தர சிறைச்சாலை
அது பலிபீடம்
அது பெண் உடல்

உள்ளக் குமுறல்
உயிர்த் துடிப்பு
இரு பாலாருக்கும் ஒரே விதமானது
எனினும்
பெண்ணுடையது என்பதனாலேயே
எந்த மரியாதையும் இருப்பதில்லை அதற்கு
என் முன்தான் நிகழ்கின்றது
என் மீதான கொலை

புலம்பெயர்ந்துள்ள இளம்தலைமுறைப்பெண் கவிஞர்களின் கவிதைகள், புலம்பெயர் வாழ்க்கையில் அவர்கள் எதிர்கொள்ளும் அந்நியப்படுத்தல், அடையாளம் இழத்தல், தனிமை, தாம் இழந்துவிட்ட மண்சார்ந்த, மரபுசார்ந்த வாழ்வு பற்றிய நினைவுகளையும் துயரங்களையும் இன வன்முறையால் இடம்பெறும் போரின் அவலங்களையும் வெளிப்படுத்துபவை. இந்தக்கவிதைகள் போர் அவலங்களையும் அதன் ஒடுக்குமுறையின் வெவ்வேறு வடிவங்களையும் பேசுகின்றன. தான் வாழ்ந்த நிலத்தின் மீதான பிணைப்பும் சொந்த இருப்பிடத்தை இழந்த நிலையும் விடுதலை உணர்வையும் தாம் இழந்துவிட்ட அடையாளங்களையும் சிந்திக்கத் தூண்டுகின்றன. அகதி நிலை புகலிட அனுபவம். அதனால் ஏற்பட்ட அந்நியப்பாடு, நிறவாதம், அவர்கள் எதிர்கொள்ளும் பண்பாட்டு முரண்கள் என்பனவற்றை அவர்களுடைய கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

எலும்புக் குருத்தை ஊடறுக்கும் குளிரில்
வசந்தத்தை எதிர்பார்த்து
வெளிநாட்டு வாழ்வில் அள்ளுண்டு
சீட்டாட்டம்
ஏமாற்று
போதைப்பொருள் கடத்தல்
பல்வேறாய்ப் பிளவுண்ட
குழுமோதல்கள்குடி
மேற்குலக யாத்திரிகத்தின்
விஸ்பரூபம்...
(மைத்திரேயி)

இது தமிழ்நதியின் 'சூரியன் தனித்தலையும் பகல்' என்ற கவிதைத் தொகுதியிலிருந்து 'இருப்பற்று அலையும்துயர்' கவிதையின்பகுதியொன்று.

பூட்டப்பட்ட வீடுகளைச் சுற்றி
பசியோடு அலைந்துகொண்டிருக்கின்றனர்
வளர்ப்புப்பிராணிகள்
சோறுவைத்து அழைத்தாலும்
விழியுயர்த்திப் பார்த்துவிட்டுப் படுத்திருக்கும்
நாய்க்குட்டியிடம் எப்படிச் சொல்வது
திரும்பமாட்டாத எசமானர்கள்
மற்றும் நெடியதும்
கொடியதுமான போர் குறித்து


இந்தச் செங்கல்லுள் என் குருதி ஓடுகிறது
இந்தக் கதவின் வழி
ஒவ்வொரு காலையும் துளிர்த்தது
கிணற்றில் பீறிட்ட முதல் ஊற்று
இளநீரின் சுவையொத்திருந்தது
மல்லிகையே உன்னை நான்
வாங்கிவரும்போது நீ சிறு தளிர்

இருப்பைச் சிறுபெட்டிக்குள் அடக்குகிறேன்
சிரிப்பை அறைக்குள் வைத்துப் பூட்டுகிறேன்
எந்தப் பெட்டிக்குள் எடுத்துப்போவது
எஞ்சிய மனிதரை
சொற்களற்றுப் புலம்புமிந்த வீட்டை
வேம்பை
அது அள்ளியெறியும் காற்றை
காலுரசும்
என் பட்டுப்பூனைக்குட்டிகளை

இவ்விதமாகப் பல புகலிடப் பெண்கள் தமது வாழ்பனுபவங்களைக்கவிதைகள் மூலம் பதிந்தும்பகர்ந்தும்பரப்பியும்வருகின்றனர். தொகுப்புகளிலும் சஞ்சிகைகளிலும் இணையத்தளங்களிலும் இன்றைக்கு ஒரு தொகைப் புகலிடப் பெண் கவிஞர்கள் எழுதிவருவதைக் காண முடிகின்றது.

(தொடரும்)

வாழ்வில் பெண்ணுடைய உணர்வுகள் எத்தனையே காரணங்களுக்காகப் புறக்கணிக்கப்படுகின்றன. மதம், பண்பாடு என்ற போர்வையில் பெண்ணை ஒடுக்கும் ஆணின் அதிகாரத் திணிப்பை இது வெளிப்படுத்துகின்றது. அதற்குள் பெண் இழுக்கப்படும்போது அவளுக்கு எற்படும் கோபம் அவளை அந்நியப்படுத்துகின்றது





## நானும் நண்பனும்...

காலம் தந்த வாழ்வே
வாழ்வு தந்த உறவே
கண்ணில் பதிந்த நட்பே
தாய் மண் தந்த சொத்தே!

நித்தம்! நித்தம்!
உன் நினைவு
குருதி கலந்த உன் கனவு
போர் தந்த எம் பிரிவு
உத்தம வாழ்வு பறிபோச்சு

கண்கள் போல
நாம் இருந்தோம்
கலைந்த மேகமாய்
நாம் பிரிவோம்
பருவ வயசில்
பதிந்த உருவம்
அவ்வளவு எளிதாய்
மறைந்திடுமோ!

பள்ளி அறைச்சிரிப்பும்
நீர் நிலையில்
துள்ளிய நினைப்பும்
வாலறுந்த பட்டமாய்
நான் மட்டும் இன்று.

பார்த்து எழுதி எடுத்த
பரீட்சைப் புள்ளி
மீள் நினைக்கையில்
உள்ளத்தில் வருகிறதே
அன்பு வெள்ளம்.
கண்களில் மாத்திரம்
ஏனோ கண்ணீர்.

நாவண்ணா



சிரிப்பு

ஏன் அடிக்கடி
சமையல் அறைப்
பக்கம் போகிறீங்க?

மருத்துவர் சுகர்
இருக்கா எண்டு
அடிக்கடி சோதிக்கச்
சொன்னார் அதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தேவதை பாதையில்...

ஆஷா

இலையுதிர் காலம் முடிந்தது. பூக்களைச் சொரிந்து நின்றன மரங்கள். அந்த அழகில் தன் மனதைப் பறிகொடுத்த ஆஷா மனதில், தந்தையின் ஞாபக நீரலை மீண்டும் ஊற்றெடுத்தது. பூஜாவின் அப்பா அவள் மீது எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறார். ஏன் என் அப்பா என் மீது வெறுப்புக் காட்டுகின்றார்? நான் என்ன செய்தால் அவர் என்னை நேசிப்பார்? என்று பிஞ்சு மனதுக்குள் போராடினாள் அவள். ஆறு வயதில், அவளை ஆக்கிரமித்து நின்றது தந்தை மீதான தீராப்பாசம். பூக்களுக்கு விடை கொடுத்துப் படிக்கச் சென்றவள், இரவு ஆகாரத்தையும் உட்கொள்ளாது துயின்றுவிட்டாள்.

ஆஷா பிறந்தவுடனே அவளது அன்னை இறந்துவிட்டாள். ஒரு மாதம் கழித்து, பிள்ளையைப் பார்க்க ஆள்கள் தேவை என்று தந்தை மறுமணம் செய்தார். அந்த நொடியிலிருந்தே ஆஷாவை மறந்தார். வேலைக்காரிதான் அவளுக்கு எல்லாமும் என்றானது. அவளது சிற்றன்னைக்கும் ஆஷாவைப் பிடிக்கவில்லை. அவளை விடுதியில் சேர்த்துவிடுமாறு அவளுடைய தந்தையிடம் பணித்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஆஷாவைச் சேர்ப்பதற்காக "அன்னை தெரேசா சிறுவர் விடுதி" பணிப்பாளரைச் சந்திக்கச் சென்றார் தந்தை. நீண்ட நேரமாகியும் அவர் வரவில்லை. வேலைக்காரியும் வீட்டில் இல்லை. பிரசவ வலியால் துடித்தாள் சிற்றன்னை. உடனே அவசர "அம்புலன்ஸ்" சேவைக்குத் தொலைபேசி அழைப்புச் செய்தாள் ஆஷா. விரைந்து வந்த "அம்புலன்ஸ்", அவளை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றது. சரியான தருணத்தில் வந்தமையால்தான் தாயையும் சேயையும் காப்பாற்ற முடிந்தது. அதற்கு ஆஷாதான் காரணம்" என்று அவளுடைய தந்தையிடம் கூறினார் மருத்துவர் தன் மகளைப் பிரியத்துடன் முத்தமிட்டுக் கட்டியணைத்தார் தந்தை. புன்னகையால் தன் பாசத்தை அவள் மீது சொரிந்து நின்றாள் சிற்றன்னை. அப்போது, "அப்பா, நான் குட்டித் தம்பியுடன் விளையாட வேணும். என்னைக் கொஸ்டல்ல சேர்க்காதீங்க ப்ளீஸ்..." என்று அவரது மார்பில் முகம் புதைத்து அழுதாள் ஆஷா. "இல்லம்மா...உன்னை எங்கையும் விடேல்ல. போதுமா?" என்றார் ஈரவிழிகளுடன் தந்தை. ஆஷாவின் அக்கா எனும் தேவதையின் பாதையில் பயணிக்க விரும்பி, அவளது பூந்தளிர் விரலைப் பற்றியது அவர்கள் வீட்டுக்குப் புதுவரவாக வந்த மழலை. அந்த மழலையின் கரங்களில் முத்த மிட்டுக்கொண்டிருக்கிறாள்



# மாணவ மணிகளுக்கு கலாமின் அறிவுரைகள்

மாணவ மணிகளுக்கு டாக்டர் அப்துல் கலாம் 10 அறிவுரைகள் வழங்கியுள்ளார். கனவு, கடும் உழைப்பு, நம்பிக்கை என்பனவற்றின் சாரமாகத் திகழும் அந்த அறிவுரைகள் வருமாறு:

01. உறங்கும் போது வருபவை அல்ல கனவுகள். இலட்சியங்களை நிறைவேற்றும் வரை உங்களை உறங்கவிடாமல் இருக்கச் செய்பவையே கனவுகள்.
02. வாழ்வில் வரும் இடர்கள் உங்களை அழிப்பதற்காக வருவதில்லை. உங்களுக்கு உதவ, உங்களுக்குள் மறைந்திருக்கும் ஆற்றலையும் சக்தியையும் நீங்கள் உணர வழி செய்கின்றன. சிரமங்களுக்கும் தெரியட்டும் உங்களோடு மோதுவது சிரமம் என்று.
03. நாம் அனைவரும் சரிசமமான திறமைகளைக் கொண்டவர்கள் அல்ல. ஆனால், சரிசமமான வாய்ப்புக்கள் உள்ளன தீமைகளை வளர்த்துக்கொள்ள.
04. தோல்வி எனும் நோயைக் கொல்லக்கூடிய சிறந்த மருந்து, நம்பிக்கையும் கடும் உழைப்புமே. நிச்சயம் அவை உங்களை ஒரு வெற்றியாளனாக ஆக்கும்.
05. விரைவாகக் கிடைக்கக்கூடிய செயற்கையான சந்தோசங்களுக்குப் பின் ஓடாமல், செறிவான இலக்கை அடைய அர்ப்பணிப்போடு செயற்படுங்கள்.
06. முதல் வெற்றிக்குப் பின் ஓய்வெடுக்காதீர்கள். இரண்டாவதில் தோற்க நேரிடின் ஏராளமான உதடுகள் காத்திருக்கும் உங்கள் முதல் வெற்றி வெறும் அதிர்ஷ்டத்தில் கிட்டிய ஒன்றெனச் சொல்வதற்கு.
07. தாய்நாட்டை வளர்ச்சி பெற்ற நாடாக மாற்ற ஒவ்வொரு இளைஞர்களும் தொழில் முனைவர்களாக, தொழில் அதிபர்களாக ஆகவேண்டும்.
08. வித்தியாசமாகச் சிந்திக்கும் துணிச்சல், எவரும் சென்றிராத பாதையில் பயணித்துப் புதியதைக் கண்டுபிடிக்கும் தைரியம், இயலாத ஒன்றெனக் கருதப்படுவதன் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வெற்றி பெறுதல் ஆகிய உயரிய திறமைகளை வளர்த்துக்கொள்ளப் பாடுபட வேண்டும்.
09. சிந்தனையே முதலீடு; முனைப்பே வழி; கடும் உழைப்பே தீர்வு.
10. நம் நாட்டுக்கு வெற்றியை விடக் குறைந்த எதையும் நன்றியாகச் செலுத்த முடியாது. வெற்றியே நம் இலட்சியமாக இருக்கட்டும்.

ந.கவிப்பிரியா

# மதிநுட்பம்

காட்டில் ஒரு சிங்கம் ஆட்டுக்குட்டியை அழைத்து, "என் வாய் நாறுகிறதா என்று பார்த்துச்சொல்" என்றது. ஆட்டுக்குட்டியும் முகர்ந்து பார்த்துவிட்டு, "ஆமாம், நாறுகிறது" என்று கூறியது. உடனே சிங்கம், "முட்டாளே, உனக்கு எவ்வளவு திமிர்" என்று கூறி அதன் மீது பாய்ந்து குதறியது. அடுத்து ஓநாயை அழைத்து, அதனுடைய கருத்தைக் கேட்டது. ஓநாய் முகர்ந்து பார்த்துவிட்டு, "நாறவில்லை" என்றது. சிங்கம், "மூடனே, பொய்யா சொல்கிறாய்?" என்று கூறி அதனையும் அடித்துக் கொன்றது. பின்னர் நரியை அழைத்து அதே கேள்வியைக் கேட்டது. "நாலு நாளா கடுமையான தடிமன். அதனால் எனக்கு ஒரு வாசனையும் தெரியவில்லை" என்றது நரி. சிங்கம் நரியை ஒன்றும் செய்யவில்லை, விட்டு விட்டது. இதுதான் மதிநுட்பம்.



ஞா.பிரீர்த்திகா




# சான்றோர் மொழிந்தவை

01. உன் மனம் வலிக்கும்போது சிரி. பிறர் மனம் வலிக்கும்போது சிரிக்க வை.
சார்லி சாப்ளின்
02. உங்கள் உடலில் அணியும் ஆடையை விட, முகத்தில் அணியும் மலர்ச்சி மேலானது.
ரூஸ்வெல்ட்
03. யார் அதிகமாகக் கேள்வி கேட்கிறார்களோ, அவர்களே அதிகமாகக் கற்றுக்கொள்ளவும் தக்கவைத்துக் கொள்ளவும் செய்கிறார்கள்.
பிரான்சிஸ் பேக்கன்
04. பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்யவேண்டிய காரியம், தட்டிகொடுப்பது மட்டும்தான்.
விவேகானந்தர்.
05. தொழில்நுட்பம் மனித உறவுகளை மிஞ்சும்போது, இந்த உலகம் முட்டாள்களால் நிறைந்திருக்கும் .
ஆல்பிரட் ஐன்ஸ்டீன் சிங்கம் ஆட்டுக்குட்டி



# அன்னைத் தமிழ்

அள்ளித் தரும்
வையம் இங்கே
சொல்லித் தரும்
வானம் அங்கே
கேளடி நீயும்
அன்னைத் தமிழ்
கேளடி நீயும்
அன்னைத் தமிழ்...

முத்துக்கள் போல
சொற்கள் உண்டு
மாலைகள் போல
கோர்த்துக் கொண்டு
பாடடி நீயும்
பிள்ளைத் தமிழ்
பாடடி நீயும்
பிள்ளைத் தமிழ்...

தீபத்தைப் போல
நகையும் உண்டு
தேவதை போல
நளினம் கொண்டு
பேசடி நீயும்
வெள்ளைத் தமிழ்
பேசடி நீயும்
வெள்ளைத் தமிழ்...

பிறைநிலா போல
வானில் நின்று
பிழையற நாளும்
வாழ்ந்து கொண்டு
கூறடி நீயும்
அன்னைத் தமிழ்
கூறடி நீயும்
அன்னைத் தமிழ்...

நிலா



ந.யோகப்பிரியா,
தரம் 6 A,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



ஜ.ரிஷிவர்மன்,
தரம் 5 F,
யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- தனு

ஓர் ஆணும் பெண்ணும் தனித்து ... று கதைத்தாலே போதும். உடனே அதற்கு வேறு பெயர் சூட்டி மகிழ்கிறது சமூகம். இந்தப் பிற்போக்குத்தனம்தான் எமது சமூ... த்தில் இன்னமும் பெண் விடு தலை துருப்பிடித்திருப்பதற்குக் கா... ம்.

இதில் சமூகத்தை மட்டும் குறை சொல்லிப் பயன் இல்லை. சில ஆண்களும்தான் காரணம். வெள்ளந்தி மனம் கொண்டு ஒரு பெண் பழகினாலும், அவள் தன்னைக் காதலிக்கிறாளோ என்று தடுமாறுகின்றனர். சமூகம் தப்பாக நினைக்கும் என்று அச்சமுறுகின்றனர். முற்போக்குச்சிந்தனை கொண்டிருப்பதுபோலநடிக்கும் ஆண்கள்தான் இவ்வாறு அவதியுறுகின்றனர்.

"ஆணும்பெண்ணும்சமமெனக்கொள்ளின், அறிவிலோங்கிஇவ் வையகம் தழைக்கும்" என்று பாடினான் பாரதி. சமத்துவ நடை போடப் பெண்கள் துணிந்துவிட்டனர். ஆனால், ஆண்கள்???

(எங்கும் பெண், எதிலும் பெண் என்று சொல்லுமளவுக்குப் பெண்கள் பதிக்காத தடங்களும் இல்லை, இடங்களும் இல்லை. ஆனால், அரசியலில் ஈடுபடுவதற்கு அவர்கள் பின்னிற்கின்றனர். இதற்கு என்ன காரணம்?)



# கருத்துக் களம்

## வீட்டுப் பொறுப்பு

பட்டங்கள் படித்தும் சட்டங்கள் இயற்றியும் பெண்கள் சாதித்து வந்தாலும், வீட்டை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு பெண்களுக்கானது என்ற மரபார்ந்த சிந்தனையிலிருந்து அவர்கள் இன்னும் மீட்சிபெறவில்லை. இந்தப்பொறுப்பு, பெண்கள் அரசியலில் பங்கேற்பதற்குத் தடையாக உள்ளது. பெண் விடுதலைக்காகக் குரல் கொடுக்கிறோம். அவர்களுடன் ஒத்துப் பயணிக்கிறோம் என்று ஆண்கள் கூறினாலும், வீட்டில் அதனை நடைமுறைப்படுத்துவதில்லை. தனது வேலையையும் மனைவிதான் செய்ய வேண்டும் என்று நினைக்கின்றனர். ஒருசில ஆண்கள் விதிவிலக்காக இருக்கலாம். அலுவலகத்தில் வேலை, வீட்டில் வேலை என்று அலுத்துப் போகும் பெண்கள், எப்படி அரசியலில் பங்கேற்க முன்வருவர்? பாலியல் இயந்திரம், பிள்ளைபெறும் இயந்திரம், பிள்ளைகளைப் பராமரிக்கும் இயந்திரம் என்று பெண் ஆண்களால் இயந்திரமாகவே பார்க்கப்படுகிறாள். அடிமைப்படுத்தப்படுகிறாள். ஆண் பெண் சமத்துவம் வெறும் பேச்சளவில்தான் இன்னமும் உள்ளது. அது செயலளவில் மாற இன்னும் அதிக ஆண்டுகள் உழைக்க வேண்டும்.

தம்மைச் சுற்றி விரிக்கப்பட்டிருக்கும் மாய வலைகளைப் பெண்கள் தகர்க்க வேண்டும். அப்போதுதான், ஆணுக்கான அனைத்து உரிமைகளையும் அவளாலும் அனுபவிக்க முடியும்.

- இந்துமதி

# பெண்ணியம் சில புரிதல்கள்



3

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெண்ணியம் என்ற கோட்பாடு, நவீனத்துவத்தின் சூழமைவில் எழுந்தது. தொடர்ந்து பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சய்மோன் தெபௌவோ(SimonDeBeauvoir) எழுதிய "இரண்டாவது பாலினம்" (The Second Sex 1949) என்ற பிரசித்தமான நூலை முன்னோடியாகக்கொண்டு, பெண்ணியம் ஓர் அறிவார்ந்த கொள்கையாகவும் போராட்டக்கருவியாகவும் முன்வைக்கப்பட்டது. Feminism என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகப் பெண்ணியம் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

இதனையே சிலர், 'பெண்ணிலைவாதம்/பெண்ணியவாதம்' என்றும் கூறுவர். பெண்ணின் நிலையிலிருந்து கருத்துக்கள் அல்லது வாதங்கள் எழுவது, 'பெண்ணிலைவாதம்/பெண்ணியவாதம்' எனப்படும்.

பெண்ணுரிமை பேசும் சில பெண்கள், ஆண்களுக்கும் பொதுச் சமூகத்துக்கும் எதிராக முன்வைக்கும் விமர்சனங்களில் சமநிலை தவறியிருக்கலாம். அதைவைத்துக்கொண்டு ஒட்டுமொத்தப் பெண்ணுரிமைக் கோரிக்கைகளையும் சிறுமைப்படுத்த முயல்வது, பெண்ணை அடிமைப்படுத்தும் செயலாகவே அமையும். அதேநேரம், பெண்ணியமே தேவையில்லை என்ற நிலையிலும் சில பெண்கள் வாழ்கின்றனர்.

அப்பாவின் 'அரவணைப்பில்' வளர்ந்து, அண்ணனின் 'பாசத்தில்' குளிர்ந்து, கணவனின் 'காதலில்' நனைந்து வாழும் பெண்கள்தான் பெண்ணியம் தேவையில்லை என்கின்றனர். இத்தகைய பெண்கள் பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தினர். இவர்கள், ஆண்கள் 'கொடுத்த' சுதந்திரத்தைக் கொண்டு நன்றியோடு வாழ்பவர்கள். வாழ்க்கையைச் சிக்கலாக்கிக்கொள்ள விரும்பாதவர்கள். இதில் வேதனை என்னவென்றால், படித்த பெண்களும் இவ்வாறு அடிமைத்தனமாக நடந்துகொள்வதுதான்.

நாகரிகம் வளர்ந்து, விஞ்ஞானம் உயர்ந்துநிற்கும் இந்தக் காலத்திலும் அநேகமான வீடுகளில் ஆண் பெண் பிள்ளைகள் பிறப்பில், வளர்ப்பில் பேதம் உண்டு.

ஆண் குழந்தை பிறந்தால், கூடுதல் சந்தோசப்படுவர். பெண் குழந்தை பிறந்தால், முகத்தைத் தூக்கி வைத்துக்கொள்வர்.

ஆண் பலசாலி, அவனுக்குச் சத்தான உணவுகள் வழங்கப்பட வேண்டும் என்றும், பெண்ணுக்கு அப்படிக் கொடுக்கத் தேவையில்லை என்றும் எண்ணுகின்றனர்.

வீட்டுக்குள்ளேயே பால்நிலைச் சமத்துவம் இல்லை. அப்படியெனில், நாட்டுக்குள் எப்படி அது வரும்? பெண்ணியம் தொடர்பில் இவர்களுக்கு முதலில் விழிப்புணர்வு ஊட்ட வேண்டும்.

"கருப்பையிலேயே
என்னை அழிப்பதற்கு
கள்ளிப்பால் தரும்
அன்னையே!
நீயும் ஒரு பெண்தானே?

பெண்ணுக்குப் பெண் பகையாவதையும் பாரபட்சம் காட்டுவதையும், கருவினில் அழியும் பெண் குழந்தை சுட்டுவதாக இந்தக் கவிதை வரிகள் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெயிலால் வரும் கருமையிலிருந்து பாதுகாப்புப் பெற?

வெயிலின் மிகக் கொடுமையான ஆட்சி பங்குனி மாதத்திலேயே தொடங்கிவிடும். சூரியனின் உக்கிரம் நமது சருமத்தில் பிரதிபலிக்கும். அதற்காக எல்லா இடங்களிலும் முகத்தை மூடிக்கொண்டே இருக்க முடியாது. வெளியே செல்லும் சிலமணி நேரங்களில் கூட கருமை படர்ந்துவிடும். இந்தக் கருமையிலிருந்து பாதுகாப்பாக இருக்க இதோ வழி...

தேவையானவை: ரோஜா இதழ்கள் ஒரு கிண்ணம், சீனி அரைக் கிண்ணம்.

**செய்முறை:** சுத்தமான ரோஜா இதழ்களைப் பிரித்தெடுத்து நன்றாகக் கழுவிக் கொள்ளுங்கள். அதனுடன் சீனியைச் சேர்த்துப்பொடியாகஅரைக்கவும். ஒரு மேசைக்கரண்டி பொடியை எடுத்து, அதனுடன் சிறிது ரோஸ் வோட்டர் கலந்து முகத்தில் தினமும் தேய்த்துக் கழுவவும். இவ்வாறு செய்தால் முகத்தில் உண்டாகும் கரும்புள்ளி, கருமை மற்றும் அதிகப்படியான எண்ணெய் ஆகியவை மறைந்து முகம் பளிச்சிடும். தோல் மிருதுவாகும்.



# பசலைக்கீரை முட்டைப் பொரியல்



எப்போதும் ஒரே மாதிரி முட்டைப்பொரியல்செய்துசுவைத்துச் சலித்துவிட்டதா? அப்படியெனில், பசளிக்கீரையைப் பயன்படுத்தி சற்று வித்தியாசமாக முட்டைப் பொரியல் செய்து சுவை யுங்கள்.

**தேவையான பொருள்கள்:**
பசளிக்கீரை 2 கிண்ணம் (நறுக்கியது), முட்டை 04, "மொஸரெல்லாசீஸ்"3மேசைக் கரண்டி, ஒலிவ் எண்ணெய் ஒரு மேசைக்கரண்டி, உப்பு தேவையான அளவு, மிளகு தூள் தேவையான அளவு.

**செய்முறை:**
அடுப்பில் சட்டியை வைத்து, எண்ணெய் ஊற்றிக்கொதிக்கவிடவும். கொதித்ததும், அதில் பசளிக்கீரையைப் போட்டு நன்குமென்மையாகும்வரை வதக்கவும். பின் "சீஸை" சேர்த்துப் பிரட்டி விட வேண்டும். பின்பு முட்டையை உடைத்து ஊற்றி, உப்பு மற்றும்மிளகுத்தூள்தூவிப் பிரட்டவும். சில நிமிடங்களின் பின் அதனை இறக்கிப் பரிமாறலாம்.





# ரோஜா ரோஜா

ரோஜா "கிளென்ஸர்" சருமத்தை சுத்தப்படுத்தி இளமையாக வைத்திருக்கும். இது போசாக்கையும்அளிக்கும், சுருக்கத்தைக் குறைக்கும். நீங்களும் அழகாகவும் இளமையாகவும் இருக்கக் கைகொடுக்கிறது ரோஜா....

**தேவையானவை:**
ரோஜா இதழ்கள் 5, பால் 1 கிண்ணம், கிளீசரின் 2 தேக்கரண்டி, ரோஸ் வோட்டர் 2 தேக்கரண்டி, வினிகர் 2 தேக்கரண்டி.

**செய்முறை:**
ரோஜா இதழ்களைப் பிரித்தெடுத்து அவற்றை நன்றாகக் கழுவிக்கொள்ளுங்கள். பின்னர் அதனை 6 மணி நேரம் பாலில்ஊறவைக்கவும். இப்போதுபாலின் நிறம்மாறியிருக்கும். உள்ளிருக்கும்இதழ்களை நன்றாக மசித்தால், பாலின் நிறம் இன்னும் அடர்த்தியாகும். அதனுடன் 2 தேக்கரண்டி கிளீசரின் மற்றும் 2 தேக்கரண்டி வினிகர் கலக்குங்கள். இதனைச் சில நிமிடங்கள் குளிர்சாதனப்பெட்டியில் வைத்து, பின் ஒரு பஞ்சினால் நனைத்து முகத்தில் தடவி, காய்ந்ததும் முகத்தைத் தேய்த்துக் கழுவுங்கள்.

இந்தக் கலவை சருமத்தில் இருக்கும் அழுக்குகளை நீக்கிச் சுத்தம் செய்யும். தகுந்த ஈரப்பதம் அளித்துச் சுருக்கமில்லா சருமத்தை உண்டாக்கும். உபயோகப்படுத்திப் பாருங்கள். உடனடிப் பயன் கிடைக்கும்.



# இளநீர்



- தாய்ப்பாலில்உள்ளலாரிக்ஆசிட் இளநீரிலும் இருப்பதால்பூஞ்சை, பாக்டீரியா, வைரஸ் ஆகியவற்றை அழிக்கும் ஆற்றல் இதற்கு உண்டு. இந்த லாரிக் அமிலத்தை உடலானது, மோனோலாரினாக (Monolaurin) மாற்றி, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்யும். குடலில் உள்ள புழுக்கள், கிருமிகள் ஆகியவற்றை வெளியேற்ற உதவும்.

- வயிறு மற்றும்குடல்தொடர்பான பிரச்னைகளுக்குமுற்றுப்புள்ளி வைக்கும். வயிற்றுப் பொருமல், உப்புசம், குமட்டல், பசியின்மை ஆகியவற்றைச் சரிப்படுத்தும். இந்தப் பிரச்னைகள் இருந்தால், வயிறு சற்று வீங்கிக் காணப்படும். எரிச்சல் உணர்வு ஏற்படும்; இவற்றைச் சரிசெய்யும் மருந்துதான் இந்த இயற்கைப் பானம்.

- ஒரு கப் இளநீரில், 600 மி.கி பொட்டாசியம், 250 மி.கி சோடியம், 60 மி.கி மக்னீசியம், 58 மி.கி கால்சியம், 48 மி.கி பாஸ்பரஸ் ஆகியவை உள்ளன. தசைநார்கள், செல்கள், நரம்புச் செல்கள் (Nerve cells) ஆகியவை சரியாக இயங்குவதற்கு சோடியம், பொட்டாசியம், மக்னீஷியம் ஆகிய மூன்றும் தேவை.

- சிறுநீரைப் பெருக்கி சோடியத்தைவெளியேற்றும். மேலும், சிறுநீரகக் கற்கள் உருவாகாமலும் தடுக்கும். மலச்சிக்கலும் சீராகும். நச்சுக்களும் வெளியேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தென்கிழக்குத் திசையிலிருந்து...!

அனார்கலி

> மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வேலை கேட்டு பட்டதாரிகளின் போராட்டங்கள் பல நாள்களாகத் தொடர்ந்த வண்ணமுள்ளன. கைப்பிள்ளைகள் சிறுவர்களுடன்கூட இந்தப் போராட்டங்களில் பெண்பட்டதாரிகள் கலந்து கொண்டு வருகின்றனர். நாள்கள் பல கடந்தும் நல்லாட்சி அரசின் காதுகளுக்கு இந்த அகிம்சைப் போராட் டங்கள் எட்டாமலிருப்பது தான் பரிதாபம்.

**பரிதாபம்... பரிதாபம்**

மட்டக்களப்பு,அம்பாறைமாவட்டங்களில்வேலை கேட்டுபட்டதாரிகளின்போராட்டங்கள்பலநாள்களாகத் தொடர்ந்த வண்ணமுள்ளன. கைப்பிள்ளைகள் சிறுவர்களுடன்கூட இந்தப் போராட்டங்களில் பெண்பட்டதாரிகள் கலந்து கொண்டு வருகின்றனர். நாள்கள் பல கடந்தும் நல்லாட்சி அரசின்காதுகளுக்குஇந்தஅறவழிப்போராட்டங்கள் எட்டாமலிருப்பதுதான் பரிதாபம்.

**மக்கள் மன்றத்தில் ஹசனலி**

முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம்எம்.ரி.ஹஸனலி, கட்சியும்கட்சித்தலைமையும் தனக்கு இழைத்துள்ள அநீதிகளையும் துரோகங்களையும்மக்கள்முன்தெளிவுபடுத்தும் விளக்கப்பொதுக்கூட்டங்களைகிழக்கில்நடத்தத் தொடங்கியுள்ளார். இத்தகைய முதலாவது பொதுக்கூட்டம்மக்கள்நிரம்பியிருக்கநிந்தவூரில் நடைபெற்றது. மாலை 6.30மணிக்கு ஆரம்பமான இந்தக்கூட்டம் இரவு 12மணிக்கு முடிவடையும்வரைமக்கள்திரண்டவண்ணமேயிருந்தனர். கூட்ட மேடைப் பகுதியில் முஸ்லிம் காங்கிரஸ் கொடிகளே பறக்க விடப்பட்டிருந்தன. ஒலிபெருக்கியில்முஸ்லிம் காங்கிரஸின் எழுச்சிப்பாடல்களே ஒலித்துக் கொண்டிருந்தன.

தனது இல்லத்திலிருந்து பெருமளவு மக்கள் புடைசூழ மேடைக்கு ஹஸனலி அழைத்துவரப்பட்டார். அவரும்முஸ்லிம் காங்கிரஸ் நிறத்தொப்பி ஆடையுடனேயே காணப்பட்டார்.

'மரத்தின்வேர்களுக்குவிளம்பல்'எனும் வாசகத்துடன் மரச் சின்னமும் மறைந்த தலைவர் மர்ஹூம் அஷ்ரபின் படமும் அங்குள்ள பனரில் காணப்பட்டது.

நடந்தது என்ன? நடக்கப் போவது என்ன? என்ற தலைப்பில் கட்சித்தலைமையான ஹக்கீமுடன் ஏற்பட்டு வந்த கருத்துவேறுபாடுகள்முரண்பாடுகளையும் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் துரோகத்தனங்களையும் ஹஸனலி இந்தக் கூட்டத்தில் மக்கள் மத்தியில் விளக்கினார். கிழக்கில் இத்தகைய 16 கூட்டங்களை இன்னும் நடத்தப் போவதாகவும் அவர் சூளுரைத்தார்.

**கூட்டத்தில் சலசலப்பு**

நான்எப்போதும்முஸ்லிம்காங்கிரஸ்காரன்தான். எவரும்என்னைக்கட்சியிலிருந்துநீக்கமுடியாது. ஆனால், இனி எந்தப் பதவிக்கும் நான் வரமாட்டேன். தலைவரை மாற்றுவதல்ல எனது போராட்டம், தலைவர் ஹக்கீமைத் திருத்த வேண்டும், அவர் திருந்த வேண்டும் என்பதுதான்.

இவ்வாறுஹஸனலிஉரையாற்றியபோதுகூட்டத்தில்பெரும்சலசலப்புஏற்பட்டது.கூட்டமேடையின் முன்னால் திரண்டிருந்த இளைஞர்கள் குரல் எழுப்பினர். ஹக்கீம் திருந்தத் தேவையில்லை அவர் கட்சித்தலைமையிலிருந்து நீங்க வேண்டும் அல்லது நீக்கப்பட வேண்டும். இப்படி அந்த இளைஞர்கள்உரத்துக்குரலெழுப்பினர்.பொங்கி எழுந்த இந்த இளைஞர்களை சாந்தப்படுத்திப் பேச்சைத் தொடர்ந்தார் ஹஸனலி.

**ஏட்டிக்குப் போட்டி**

ஹஸனலி நிந்தவூரில் பொதுக் கூட்டம் நடத்திய மறுதினம் நிந்தவூரில் நடந்த கூட்டமொன்றில் ஹக்கீம் கலந்து கொண்டார். முஸ்லிம் காங்கிரஸின் செயற்பாடும் நிந்தவூர் அபிவிருத்திக்குமான கூட்டம் என்ற பெயரில் நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

அது, ஹஸனலியின் உடன்பிறந்த சகோதரரான நிந்தவூர்பிரதேசசபையின்முன்னாள்உறுப்பினர் ஜப்பாரலியின் தலைமையில் நடைபெற்றது தான் அனைவரது வாய்களுக்கும் அவலானது.

'அண்ணன் என்னடா... தம்பி என்னடா... அவசரமான உலகத்திலே...' என்ற பாடலையும் 'எல்லாமே பிழைப்புக்குத்தாண்டா...' என்ற பாடலையும் ஒருவர் இந்தவேளை ஞாபகமூட்டினார்.

அதேவேளை இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தவர் மட்டுமே நிந்தவூரின் அபிவிருத்தி பற்றிப்பேசினார்.ஹக்கீம்உட்படமுஸ்லிம்காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள்போன்றஅனைவரும்முதல்நாள் நடைபெற்ற ஹஸனலியின பொதுக் கூட்டத்தை மையப்படுத்தியதாகவே உரையாற்றிய வேடிக்கையும் இடம்பெற்றது.

**எரிந்தது ரயர்!!!**

ஏட்டிக்குப் போட்டியாகக் கருதப்பட்ட நிந்தவூர்ப் பிரதேசசபைக்கூட்டஆரம்பத்திலும்இறுதியிலும் இரண்டுபரபரப்பானசம்பவங்கள்இடம்பெற்றன. கூட்டம் ஆரம்பமாவதற்கு முதலே கூட்டத்துக்கு ஹக்கீம்மற்றும்முஸ்லிம்காங்கிரஸ்பிரமுகர்கள் வருகை தரவிருந்த வீதியில் இனம் தெரியாதோரால்ரயர்கள்எரிக்கப்பட்டன.கூட்டம்முடிவடைந்ததும் இரண்டு பக்க ஆதரவாளர்கள் இருவருக்கிடையில் வாய்த்தர்க்கம், கைகலப்பு ஏற்பட்டு ஒருவர்தலையில்காயத்துடன்வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

**நான் பிரம்பை எடுத்தால்...**

பல மாதங்களுக்கு முன்பிருந்தே கட்சிக்குள்ளிருந்து கொண்டு சிலர் முன்னெடுத்த முஸ்தீபுகள் எனக்குத் தெரியும். எனக்கே பிரம்பு தூக்கி விட்டார்கள். நான் பிரம்பை எடுத்தால் கட்சியில் எவருமே இருக்கமாட்டார்கள். இப்படி நிந்தவூர்க் கூட்டத்தில்உரையாற்றும்போதுமுஸ்லிம்காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கூறினார்.அப்படியென்னமந்திரித்தபிரம்போ அது...?

**இப்படியும் ஒரு துஆ**

மக்கா சென்று நான் இறைவனிடம் துஆ செய்வதானால் (பிரார்த்தனை) இந்தத் தேசியப் பட்டியலை இல்லாமல் செய்துவிடு இறைவா என்றே கேட்பேன் என ரவூப் ஹக்கீம் நிந்தவூர்க்கூட்டமொன்றில் உரையாற்றும் போது கூறினார்.

'அந்தளவுக்குப்படாதபாடுபடுத்திவிட்டதோதேசியப்பட்டியல்...?'எனக்கேள்விஎழுப்பும் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் ஒருவர் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக அவர் வைத்திருக்கும் துருப்புச் சீட்டும் அதுதானே எனவும் அங்கலாய்க்கின்றார்.

**துரோகம்...துரோகம்...!**

முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் பதவியானது கிழக்கு மக்களுக்கு அதிலும் அம்பாறை மாவட்டமக்களுக்கு உரித்தான பதவி. அது முடக்கப்பட்டு இந்த மக்களுக்குத் துரோகமிழைக்கப்பட்டுள்ளது எனக் கூறியுள்ள ஹஸனலி உடனடியாக முழு அதிகாரம்கொண்டதாகஅந்தச்செயலாளர்பதவி தகுதியான இங்குள்ள ஒருவருக்கே வழங்கப்பட வேண்டுமென்றும் அன்றேல் 17வருடகாலமாக நாம்தந்திருக்கும்எமக்கு உரிமையான தலைவர் பதவியைக் கிழக்குக்குத் தந்துவிட்டு ஹக்கீம் ஒதுங்கவேண்டுமெனவும்வலியுறுத்தியுள்ளார்.



**அடகு உரிமை...**

தனிப்பட்ட தேவைகளுக்காகக் கல்முனைத் தமிழர்களின் உரிமைகளை அடகு வைக்கச் சிலர் முயற்சிப்பதாகத் திகாமடுல்ல மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் கவலைவெளியிட்டுள்ளார். அண்மையில் கல்முனை தமிழர் பிரதிநிதிகள் எனக் கூறிக் கொண்டு சிலர் முஸ்லிம்காங்கிரஸ் தலைவர்ரவூப்ஹக்கீமுடன்பேச்சுநடத்தியிருந்தநிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் இந்தக் கவலையை வெளியிட்டுள்ளார்.

அம்பாறையில் கரையோர மாவட்டம் உருவாவதைத்தமிழ்மக்கள்ஒருபோதும்ஆதரிக்கமுடியாதென முழக்கம் செய்து வருபவரல்லவா கோடீஸ்வரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதுமாகி

# பெண் புலிகள்.



'காதலனதுயாழின்நரம்புகளில்இருந்து சுரக்கும்இசைக்குநடனமாடும்மடமாதாகநடக்கவுமில்லை. எடுப்பார் கைப் பிள்ளையாகவோ, இங்கும் அங்கும் அலையும் சிந்தையுடையவளாகவோஇருக்கவும்இல்லை...' இது அடேல் பாலசிங்கம் அவர்கள் தனது சுதந்திர வேட்கை எனும் நூலில் தன்னை விமர்சித்திருப்பதில் ஒரு சிறிய பகுதி.

ஓர்இனத்தின்உரிமைவேண்டியஉயரியதியாகங்கள் நிறைந்ததாய்ப்பெரியதொருபோராட்டத்தில்களமிறங்கிய விடுதலைப்புலிகள் எந்தவொரு பக்கமும் சாராத நடுநிலையான ஆட்சி நிர்வாகத்தையே தம்பால் கொண்டிருந்தனர். அவர்களின் நேரிய தலைமை போன்றே அவர்களின் ஆட்சியும் தூய்மையானதாக அமைந்தது. சிங்கள அடக்குமுறைகளை எதிர்த்தது மட்டுமன்றி தமிழர்களுக்குள்ளும் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும் எனும் சிறந்த நடுநிலையை அவர்களின் ஆட்சி பேணியிருந்தது. முக்கியமாகத் த்மிழர்கள் மத்தியில் நிலவிவந்த சாதிப் பாகுபாடுகளுக்கும் ஏற்றத்தாழ்வுகளுக்கும் புலிகளின் ஆட்சிமுற்றுப்புள்ளிவைத்திருந்தது. அதன்காரணமாகவேதீண்டாமைவாதிகளும்புலிகளால்பாதிக்கப்பட்ட அவை சார்ந்த முற்போக்குவாதிகள் சிலரும் இன்றும் புலிகளை விமர்சிக்கத் தவறுவதில்லை.

**சமத்துவம் பேணும் புலிகள் ஆட்சி**

எது எவ்வாறு இருப்பினும் புலிகளின்போராட்டம்ஒரு இனத்துக்கான உரிமைகள் வேண்டியதாகவும் அவர்கள்பிறிதொருஇனத்தால் ஒடுக்கப்படுவதை எதிர்ப்பதாகவும் எவ்வாறு கடுமையானதாக அமைந்ததோ அதேபோல்தான் அவர்களின்ஆட்சியும்அந்தஇனத்துக்குள்ளும்அவ்வகைமுரண்பாடுகள்எழாமலிருக்கும் வண்ணம் அனைத்து மனிதர்களையும் ஏற்றத்தாழ்வற்றவர்களாகக்கருதிக்கட்டமைக்கப்பட்டு இறுக்கமாக்கப்பட்டிருந்தது. புலிகளின் இத்தகைய இறுக்கமான நடுநிலையான ஆட்சிப் பண்புகளைப் போன்றேஅவர்கள்மத்தியில்ஆண், பெண்என்கின்ற பால்நிலைப்பாகுபாடும்தவிர்க்கப்பட்டிருந்தது.

**புலிகளுக்குள் பெண்கள்**

1970களில்தோற்றம்பெற்றவிடுதலைப்புலிகள்இயக்கத்தில்1991களிலிலயேபெண்கள்இணைந்துகொண்டனர். விடுதலைப்புலிகளின்போராட்டத்தில்பெண்கள் இணைந்துகொண்ட ஆரம்பநாள்களில் இருந்தே அவர்கள்சமையல்சமாச்சாரங்களுக்கேபாலியல்தேவைகளுக்கோ பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. போராட்டத்தில் இணைந்துகொண்ட நாள்தொடங்கி அவர்களும்போராளிகளே.

தமதுஇனத்தைஅடிமைத்தனத்திலிருந்துமீட்டெடுக்க வேண்டும் என்கின்ற உயரிய நோக்கமும் அதைக் கொண்டு நடத்தும் தலைவனின் சிறந்த ஆளுமையுமே அதற்குக்காரணமாயிருந்தது. அங்கு அவர்கள் பெண்போராளிகளாக, ஆண்போராளிகளுக்கு நிகரானவர்களாக, புலிகளின்போராட்டத்தைச்சிதைவடையச் செய்யாத வகையில் அனைத்துச் சமவுரிமைகளும் அளிக்கப்பட்டவர்களாய்த் திகழ்ந்தனர்.

ஒருபலம்வாய்ந்தஅரசியல்சக்திகளாகப்பெண்களும் உருமாறவேண்டும் என்பதில் விடுதலைப்புலிகள் உறுதியாயிருந்தனர். போராட்டத்தில் மட்டுமன்றி பொருளாதாரத் திட்ட மிடல் அதற்கான நிதி ஒதுக்கீடுகள், அரசியல் துறை, மருத்துவம், நீதி மற்றும் சட்டத்துறை போன்றவிடுதலைப்புலிகள் கொண்டிருந்த அனைத்துக் கட்டமைப்புக்களும் பெண்களுக்கும் உரியதாகியிருந்தன. அந்த இயக்கத்தின் உயர்பீடங்களில் பெண்கள் பங்காற்றும் நிலையும் நீதி நிர்வா கங்களை நடத்த அளிக்கப்பட்ட முன்னுரிமை களும் மருத்துவத் துறையில்பெண்களின்செறிவையும்கலைகலாசார நிகழ்வுகளில் தனியா அவர்களுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவமும் இதற்குச் சான்றாகின்றன.



**ஆண் - பெண் பேதமிருக்கவில்லை**

புலிகளின்பெண்நிர்வாகப்பொறுப்பாளர்களுக்குக்கீழ் ஆண்களும் பணிபுரிந்தார்கள். ஆனால் புலிகள் ஆண், பெண் என்ற பேதத்தை அங்கு கொண்டிருக்கவில்லை. அரசியல் நிர்வாகத் துறைகளில் கௌரவத்துடனும் தன்னம்பிக்கையுடனும் முக்கிய பொறுப்புக்களைத்தாங்கியவர்களாகப்பணியாற்றும்வகையில் கட்டமைக்கப்பட்ட அவர்களின் நிர்வாக நடவடிக்கை கள் பெண்புலிகளை அந்த இயக்கத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அதிகாரமுடையவர்களாக மாற்றியமைத்தன.

இன்று உச்சங்கண்டுள்ள ஆண்களுடன் சமத்துவம் பெறுவது என்ற பெண்ணியச்சிந்தனைகள் வரவேற்கத்தக்கவை. காரணம் ஆணாதிக்கப் பார்வையில் தான் இந்த உலகம் நெறிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆண்களின் சிந்தனைகள், வாழ்க்கை முறை, செயற்பாடுகள், அதிகாரப்பகிர்வுகள் ஆகியவைபெண்களின் சுயவிருப்பு வெறுப்புக்களைத் தீர்மானிப்பவைகளாக இருக்கக்கூடாது. அத்துடன் ஆண்கள் தமது பழமைவாத உலகச் சிந்தனைகளிலிருந்து விடுபட்டுக் கொள்வதுகட்டாயமானது. ஆனால்பெண்கள்முன்னேடுக்கும் பெண்ணியப் போராட்டங்கள், நேர்த்தியான சமவுரிமை பேணும் வகையிலான பெண்விடுதலையைப் பெற்றுக்கொள்வதை மாத்திரமே இலக்காகக் கொண்டிருக்கவேண்டும். அவ்வாறு அமையாத பெண் விடுதலைக்கோசம் பிற்காலங்களில் ஆண் விடுதலைக்கோசங்களைத்தோற்றுவித்துவிடக்கூடிய அபாயங்களும் உண்டு.

புலிகளின் பெண் நிர்வாகப் பொறுப்பாளர்களுக்குக் கீழ்
ஆண்களும் பணிபுரிந்தார்கள். ஆனால் புலிகள் ஆண்.
- பெண் என்ற பேதத்தை அங்கு கொண்டிருக்கவில்லை.
அரசியல் நிர்வாகத் துறைகளில் கௌரவத்துடனும் தன்னம்
பிக்கையுடனும் முக்கிய பொறுப்புக்களைத் தாங்கியவர்
களாகப் பணி யாற்றும் வகையில் கட்டமைக்கப்பட்ட
அவர்களின் நிர்வாக நடவடிக்கைகள் பெண்புலிகளை
அந்த இயக்கத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அதிகார
முடையவர்களாக மாற்றியமைத்தன.

## நுதலின் முக்குறிகள்

வளங்கள் குன்றிச் சுருங்கும்போது
வாழ்க்கை வலுவிழந்து போகின்றது.
வழி தெரியாப் பயணிகள்போல...

அந்தரித்த மனதோடு
வெளிக்கும் திசை நோக்குகையில்
'இது உன் முற்பிறப்பின் ஊழ்வினை' யென
முகவுரைகள் முழங்கியபடி...
முளைக்கின்றன முகமறியா
நுதலின் முக்குறிகள்.

முன்வினை பின்வினையென
முன்மொழியும்
தற்கால நிகழ்வினைக் குறித்து
எதிர்வினைக்கும் அஞ்சாதனவாய்
இயல்பாகவே நடமாடும்
இறுமாப்பு இதயங்கள்
இப்பொழுதெங்கெங்கும்
பாதங்கள் பரத்தியபடி...

பட்டைகளும்; கொட்டைகளும் உடலில்
பலதெனவாய் போர்த்தணிந்தபடி...
செட்டையிழந்த
சிறுகுருவி போலானவன் வாழ்வை மிதித்து
நெட்டைமரம்போல் நிமிர்வனவெல்லாம்
எப்பிறப்பின் பயனென
இதுவரை புரிவதாயில்லை.

சதாகால இரக்கத்தை விட
சந்தர்ப்பத்துக்கு ஏற்ற இரக்கமாய்
சொரிந்து...சுகம் வினாவுவது கூட
சுயநலத்தின் வெளிப்பாடே அறிக!

ஏழ்மையின் பெயரால்... இருட்டுக்குள்
இறைவனின் பெயரால்... வெளிச்சத்தில்
வாழ்வு
ஏற்றம் கொள்கின்றது
'பட்டைகளுக்கும்'; 'கொட்டைகளுக்கும்'!

*அலெக்ஸ்பரந்தாமன்,
புதுக்குடியிருப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடையை எதிர்கொள்ளும்

# முழுமுக மறைப்புத் தலைக் கவசம்!

ஸூடோஸ்வாமி

கடந்த திங்கட்கிழமை கொழும்பு காலிமுகத்திடலுக்கு அண்மையில் உள்ள சுற்றுவட்டத்தில் உந்துருளி ஓட்டுநர்கள் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். சுறுசுறுப்பாக இயங்கும் காலிவீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுமளவுக்குத் திரண்டிருந்த அவர்கள், உந்துருளிகளில் பயணிக்கும்போதுதாம்அணிந்துகொள்ளும் கண்கள்மட்டும்வெளித்தெரியமுகத்தின் ஏனையபகுதிகளைமுழுமையாகமூடும் தலைக்கவசத்துக்குத்தடைவிதித்துவெளியாகியஅண்மையவர்த்தமானிஅறிவித்தலுக்கு எதிர்ப்புத்தெரிவிக்கவே ஒன்று திரண்டனர். அகில இலங்கை உந்துருளியாளர்கள் சங்கத்தால் ஒழுங்கமைக்கப்பட்டஇந்தஆர்ப்பாட்டத்தின்போதுஜனாதிபதியின் உதவிச்செயலாளருடன் இதுபற்றிப்பேச்சுநடத்தியதாகவும்தெரியவருகிறது.

கடந்த வருடங்களாக இந்த முழுமுக தலைக்கவசத் தடை பற்றிய விவகாரம்நீடித்துவருகின்றது. மோட்டார் சைக்கிள் பயணத்தின்போது மண்டை ஓடு உட்பட்ட தலைப் பகுதியைப் பாதுகாப்பதற்காக அணியப்படும்இந்தப்பாதுகாப்பு சாதனம், குற்ற ச்செயல்களின்போது ஆள் அடையாளத்தை மறைப்பதற்கும் பயன்படுத்தப்படுவதாலயே பிரச்சினைக்குரியதாகக் கருதப்படுகின்றது. பெருமளவான வங்கிகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தன்னியக்கப் பணப்பரிமாற்று நிலையங்களில் மேற்கொள்ளப்படும் கொள்ளைகளின்போதுகொள்ளையர்கள்தம்மை ஏனையவர்களோ பாதுகாப்பு சார் கருவிகளோ இனங்காண்பதைத் தவிர்த்துக்கொள்வதற்கு இந்த முகமறைப்புத் தலைக்கவசத்தைப்பயன்படுத்துவதால், அது பொலிஸாருக்குப் பெரும் தலையிடியைக்கொடுத்துவந்தது. இதனாலேயே முகத்தை முழுமையாக மூடும் அந்த வகைத் தலைக்கவசங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது.

மோட்டார்சைக்கிளில்பயணிக்கும்போது ஓட்டுநர்மற்றும்பயணிஆகியோர்தலைக்கவசம்அணிந்திருக்கவேண்டும்என்பது ஏலவே சட்டமாகியிருக்கின்றது. ஆனால் அந்தத்தலைக்கவசம்முற்றாகமுகத்தை மறைப்பதாக அமையக்கூடாது என்பதும்சட்டமாகியிருக்கின்றது. அத்துடன் Visor என அழைக்கப்படும் கவசமுகத்தகடுஎன்னும்முகத்தைமூடும் பாதுகாப்புத்தகடு, நிழற்சாயமிடப்பட்டோ நிழற்பூச்சிடப்பட்டோஇருக்கக்கூடாதுஎன்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.



**புதிய அறிவிப்பு!**

கடந்தமாதம்23ஆம்திகதிபோக்குவரத்து மற்றும் விமானசேவை அமைச்சரால் வெளியிடப்பட்ட2007/39இலக்கஅதிவிசேட வர்த்தமானி, 2017ஆம் ஆண்டின் இரண்டாம் இலக்க மோட்டார் வாகனப் பாதுகாப்பான தலைக்கவசங்கள் தொடர்பான புதிய ஒழுங்கு விதிகளை அறிவித்திருக்கின்றது.

1991ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் திகதி, 844ஃ26ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியான அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்புத் தலைக்கவசங்கள் தொடர்பான ஒழுங்கு விதிகளை நீக்கி, வெளியாகியிருக்கும் இந்தப் புதிய விதிகள், கண்கள் மட்டும் வெளித்தெரியத்தக்க, முற்றாக முகத்தை மறைக்கும் தலைக்கவசங்களை அங்கீகரிக்கவில்லை.

**ஆய்வு முடிவுகள்!**

மோட்டார் சைக்கிள் விபத்துக்களின் போது தலையில் காயம் ஏற்படுவதைத் தடுப்பதில் தலைக்கவச வகைகளின் பங்களிப்புத் திறன் தொடர்பில் கொரியாவில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் முழுமுக மறைப்புத்தலைக்கவசங்களில், பாதுகாப்புத் திறன் அதிகம் என்பது கண்டறியப்பட்டிருக்கின்றது. மோட்டார் சைக்கிள் விபத்தில்சிக்கிய738பேர்களில்மேற்கொண்ட முழுமுகமறைப்புத்தலைக்கவசம்,திறந்த முக தலைக்கவசம் மற்றும் பாதி மூடல் தலைக்கவசங்களுக்கிடையிலானகாப்புவினைத்திறன் தொடர்பான ஆய்விலேயேஇதுகண்டறியப்பட்டிருக்கின்றது. முழுமுகத் தலைக்கவசம், ஏனைய வகைத் தலைக்கவசங்களைவிட விபத்துக்களின்போதுமண்டையோடுமற்றும் முகம் சார்ந்து ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்கின்றது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இதைவிடமூளையைஅதிர்ச்சிக்குள்ளாக்கும் காயங்களிலிருந்தும் முழுமுகத் தலைக்கவசம், ஏனைய தலைக்கவசங்களைவிடப்பாதுகாப்பளிப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கின்றது. 2011-2012 வருட காலப்பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்துக்கு முகம் கொடுத்த 151 பேரிடம் இருந்து பெறப்பட்ட விபரங்களை வைத்து வெளியிடப்பட்ட இந்த ஆய்வறிக்கை, 2013ஆம் ஆண்டு The Journal of Travma acute Care Surgeryஎனும்விஞ்ஞானசஞ்சிகையில் வெளியாகியிருக்கின்றது.

அத்துடன் தலைக்கவச வினைத்திறன் தொடர்பாகத்தாய்வான்வைத்தியசாலை ஒன்றில்நடத்தப்பட்டஆய்வில், பாதிமூடல் வகை தலைக்கவசப் பாவனையாளர்கள், முழுமுக தலைக்கவசபாவனையாளர்களைவிட இருமடங்குக்குமேல்தலைக்காயங்களுக்குஉள்ளாகுவதாகக் கண்டறிப்பட்டிருக்கின்றது. இதனைவிட தலைக்கவசத்தைச் சரியான வகையில் அணிந்து பொருத்தமானவகையில் பூட்டியோ இணைத்தோ வைத்திருத்தலே உரிய பாதுகாப்புக்கு வழிவகுக்கும் என்றும் அந்த ஆய்வறிக்கைவலியுறுத்தியிருக்கின்றது.

**விபத்துக்களில் முதல்நிலையில்...**

வாகனவிபத்துக்களுக்குபஞ்சமில்லாதநம்நாட்டுவீதிகளில்மோட்டார் சைக்கிளுடன்சார்ந்தவிபத்துக்கள் மிகமிக மலிவானவை. வீதிப்பாதுகாப்புத் தொடர்பான தேசிய பேரவையின் தலைவர் சிசிர கோட்டகொடவின் தகவலின் பிரகாரம், 2016 ஜனவரி1ஆம்திகதிக்கும்அதே ஆண்டு ஜூலை 31ஆம் திகதிக்குமான காலப்பகுதியில் இலங்கையில் நடந்த 1538 விபத்துக்களின் போது 1632 பேர் சாவடைந்துள்ளனர்.

இதில் மோட்டார் சைக்கிள்கள் சம்பந்தப்பட்ட 666 விபத்துக்களில் சிக்கி686பேர்உயிரிழந்திருக்கின்றனர். இந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் அதிக உயிரிழப்புக்குக் காரணம்சரியானமுறையில்தலைக்கவசம் அணியப்படாமையும் தரக்குறைவான தலைக்கவசங்களுமே என்று குற்றஞ்சாட்டியிருக்கின்றார் அவர்.

இலங்கை வீதிகளை அதிகம் ஆக்கிரமிப்பவை மோட்டார் சைக்கிள்களே. மோட்டார்போக்குவரத்துதிணைக்களபுள்ளிவிபரங்களின்படி, 2015ஆம் ஆண்டில் மாத்திரம் 370,889 புதிய மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.


இலங்கையில் காணப்படும் வாகனத் தொகையில் அதிகமானவை மோட்டார் சைக்கிள் வகைகளே. 2015 வருடம் வரைக்குமான தரவுகளின் பிரகாரம், இலங்கையில் 3,359,501 மோட்டார் சைக்கிள்கள் பாவனையில் உள்ளன.

**நியாயமற்ற சட்டம்!**

பயன்பாட்டில் இருக்கும் தலைக்கவசங்கள், இலங்கைக் கட்டளைகள் நிறுவகத்தின்தராதரம்517:1994இற்குஅமைவாக இருக்கவேண்டும் என்றும் குறித்த வர்த்தமானிஅறிவிப்புவலியுறுத்தியிருக்கின்றது. பாதுகாப்புத் தொடர்பான அதிகூடிய அனுகூலங்களைமுழுமுகமறைப்புத்தலைக்கவசம் கொண்டிருக்க, குற்றச்செயல்களுக்குப் பயன்படுத்தப்படுவதைக் காரணம் காட்டி அதைத் தடை செய்வதால், அதுபாவனையாளர்களிடம்கிளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. சிலநூறு குற்றச்செயல்களில்பயன்படுத்தப்பட்டமையைக் காரணம் காட்டி பல ஆயிரம் மோட்டார் சைக்கிள் ஓட்டிகளதும் அவர்களோடு பயணிப்பவர்களதும் உயிரைப் பணயம் வைப்பதென்பது நியாயமற்றதாகவே இருக்கின்றது.


குற்றவாளிகளை இனங்காண்பதற்கான தடயவியல் துறையில் மேம்பாடுகளை உட்புகுத்துவதைத் தவிர்த்து நிறைந்த நன்மையுடைய முழுமுகத் தலைக்கவசத்துக்குத் தடை விதிப்பது சிறந்த நடவடிக்கையல்ல என்பதை சம்பந்தப்பட்ட தரப்புக்கள் உணர்ந்து, அந்தத் தடையை மீளச்செவ்வை பார்ப்பதே உசிதமானது!

பெருமளவான வங்கிகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தன்னியக்கப் பணப்பரிமாற்று நிலையங்களில் மேற்கொள்ளப்படும் கொள்ளைகளின்போது கொள்ளையர்கள் தம்மை ஏனையவர்களோ பாதுகாப்பு சார் கருவிகளோ இனங்காண்பதைத் தவிர்த்துக்கொள்வதற்கு இந்த முகமறைப்புத் தலைக் கவசத்தைப் பயன்படுத்துவதால், அது பொலிசாருக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்து வந்தது. இதனாலயே முகத்தை முழுமையாக மூடும் அந்த வகைத் தலைக்கவசங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடுப்பில் இருக்கும் அமைச்சர்



தற்கால அரசியல் அரங்கை சூடாக்கிக்கொண்டிருக்கும் விடயங்களில்ஒன்று உள்ளூராட்சிசபைத்தேர்தல்தொடர்ச்சியாகஒத்திப்போடப்பட்டுக்கொண்டுவருகின்றமையாகும். மகிந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணயம் சிக்கல்நிறைந்ததாகக்காணப்பட்டதால் இந்த அரசு அதை நீக்கி மீண்டும் எல்லைநிர்ணயத்தை மேற்கொள்வதற்குத் தீர்மானித்தது. அசோகா பீரிஸ் தலைமையில் ஐவர் கொண்ட குழுவை மாகாண மற்றும் உள்ளூராட்சிசபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா நியமித்தார். அந்தக் குழு முதற்கட்ட அறிக்கையை அமைச்சரிடம் கையளித்தது. இன்னும் 133 சபைகளுக்கான எல்லை நிர்ணய அறிக்கை ஒப்படைக்கப்பட வேண்டியுள்ளது. அந்த அறிக்கைகிடைக்கும்வரைதேர்தல் நடத்துவதில்லை என்ற நிலைப்பாட்டில் அமைச்சர் உள்ளார். ஆனால், அந்த இறுதி அறிக்கையை முழுமை செய்வதற்குத் தேவையான வசதிகள் எவற்றையும் அமைச்சர் பைஸர் முஸ்தபா செய்துதருகிறார் இல்லை. அவரிடமிருந்து முழுமையான ஒத்துழைப்பு இல்லை என்று அசோகா பீரிஸ் அண்மையில் கூறி இருந்தார். முதலாவது அறிக்கை ஒப்படைக்கப்பட்டபோது பைசர் முஸ்தபா அளவுக்கு எந்த அமைச்சரும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை எல்லா வசதிகளையும் செய்து தந்தார் என்று கூறியி ருந்தார்.

இவ்வாறாக ஒரு மாதம் கழித்து அசோக பீரிஸ் பல்டி அடித்துள்ளதால் அமைச்சர், அசோக மீது கடுப்பில் உள்ளாராம் அமைச்சர். யார் இவரின் மனதை இந்தளவு மாற்றி இருப்பார்கள் என்றும் அமைச்சர்தேடிப்பார்க்கின்றாராம். இந்தக்குழப்பங்களின்பின்னர் ஜே.வி.பியின் கூட்டம் ஒன்றில் அசோக பீரிஸ் அண்மையில் கலந்துகொண்டதிலிருந்துதான் இது நடக்கின்றது. ஜே.வி.பிக்காரர்களின் வேலையாகத்தான் இருக்கும் என்று அசோகவைப் பழிவாங்கும் விதத்தில் பொது இடங்களில் கதைகள் பலதும் அடிபடுகின்றனவாம்.





# அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா...!

எம்.ஐ.முபாறக்



## ஒரு கப் தேநீர் கிடைக்குமா?


வானமே இடிந்து தலையில் வீழ்ந்தாலும் சற்றும் தளராத, பதட்டப்படாத ஒருவர்தான் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம். எந்தவொரு சொற்போரையும் மிகவும் இலகுவாக எதிர்கொள்வார். தொடுக்கப்படும் கேள்விக் கணைகளுக்கு அந்த இடத்தில் பதிலளிக்காமல் பதுங்கிக்கொள்வார். அவரது நிதானப் போக்கே அவர் முன் பாய்பவர்களின் வாயை அடைத்துவிடும். அப்படியான பல சம்பவங்களுள் ஒன்றுதான் இது.
கடந்தநாடாளுமன்றத்தேர்தலில்முஸ்லிம்காங்கிரஸின் சார்பில்மட்டக்களப்புமாவட்டத்தில்செய்யித்அலிசாகிர் மௌலானாவைநிறுத்துவதுஎன்றுஹக்கீம்முடிவெடுத்துவிட்டார். அந்த மாவட்டத்தில் அந்தக் கட்சியின் சார்பில் அதுவரைத் தனிக் காட்டு ராஜாவாகத் திகழ்ந்த பஷீர் சேகுதாவூத்தும் அவரது ஆதரவாளர்களும் இந்த முடிவால் கொதித்துப் போனார்கள்.
வேட்பாளர் நியமனம் தாக்கல் செய்து முடிந்து சில நாள்களின் பின் ஹக்கீம் தலைமையில் ஏறாவூரில் சந்திப்பொன்று இடம்பெற்றது. பஷீர் சேகுதாவூத், முதலமைச்சர் நஸீர் அஹமட், அலி சாஹிர் மௌலானா மற்றும் அவரவர் ஆதரவாளர்கள் அதில் கலந்துகொண்டனர். பஷீர்ஒதுக்கப்பட்டதைஎதிர்த்து அவரது ஆதரவாளர்கள் குரல்எழுப்பியதும் அது பஷீர் மற்றும் மௌலானாவின் ஆதரவாளர்களிடையே கைகலப்பை ஏற்படுத்தியது. அந்த நிலமையைக் கட்டுப்படுத்தி உரை ஒன்றை நிகழ்த்தி அந்தச் சந்திப்பை நிறைவு செய்த பின்னர் ஹக்கீம், பஷீரின் வீட்டுக்குச் சென்றார்.
அங்குவைத்துபஷீர் அவரது மனக்குமுறல்களைகொட்டித் தீர்த்தார். தனக்குக் கட்சியின் தலைமைத்துவம் துரோகமிழைத்துவிட்டதாகக்கூறினார். இதற்குத்தலைவர் இப்போது எனக்குப்பதிலளிக்க வேண்டும் என்றார். ஒரு வார்த்தைகூடப் பேசாது எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த ஹக்கீம் திடீரென வாய் திறந்து "எனக்கு ஒரு கப் தேநீர் கிடைக்குமா"? என்றார். தேநீரும்சூடாகவந்தது. அருந்தினார். அருந்திமுடிந்ததும் பதில் வழங்குவார் என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர். வெற்றுக் கிளாஸை மேசையில் வைத்துவிட்டு "அப்போ நான் வருகிறேன். பிறகு சந்திப்போம்" என்றவர் வாகனத்தில் ஏறி பறந்து சென்றார். பஷீருக்கு எஞ்சியது அந்த வெற்று கிளாசுடன்கூடிய ஏமாற்றம்தான். இதுதான் ஹக்கீம் ஸ்டைல்.



## 'மாப்பு...மாப்பு...' பேயிடம் அடி வாங்கிய எம்பி

நுவரெலியாவில் உள்ள எம்பிக்கள் ஓய்வு விடுதியில் தங்கியபோது தன்னைப் பேய் தாக்கியது என்கின்றார் குருநாகல் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி எம்பி நளின் பண்டார. அன்று இரவு மூன்று மணியளவில் தூக்கத்தின் இடையில் எழுந்து கழிப்பறைக்குச் சென்றபோது பின்னால் வந்த ஓர் உருவம் அவரைக் கடுமையாகத் தாக்கிக் கீழே தள்ளியதாகவும் சுதாகரித்து எழுந்து பார்த்தபோது பூட்டிய அந்த அறைக்குள் யாரும் இருக்கவில்லை என்றும் நளின் கூறினார். வீழ்ந்ததால் அவரின் தலையில் காயமும் ஏற்பட்டது. அந்த விடுதியில் பேய் இருப்பதாக அண்மைக் காலமாகக் கதை அடிபடுகின்றமையால் அவரைத் தாக்கியதும் நிச்சயமாகப் பேய்தான் என்று அவர் உறுதியாகக் கூறுகின்றார். இப்போது கிடைத்த தகவல் என்னவென்றால் அந்தச் சம்பவத்துக்குப் பிறகு அவர் எந்த இடங்களிலும் தனி அறையில் தூங்குவதில்லையாம். கூட்டத்தோடு கூட்டமாகத்தான் தூங்குகிறாராம்.

## 'நாங்க அப்பவே அப்பிடி': துமிந்தவிடமிருந்து நழுவிய ரிசாத்



ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த கவிழ்ந்ததும் ரொம்பவும் அப்செட்டாகிப் போனார் துமிந்த சில்வா. பாரத லக் ஷ்மன் கொலை வழக்கில் தான் சிக்கப்போவது உறுதி என்பதை அறிந்த துமிந்த, மைத்திரி அரசுடன் இணைந்து அந்தக் குற்றத்தில் இருந்து தப்புவதற்கான வேலையில் இறங்கினார். பல அமைச்சர்களின் ஊடாக மைத்திரியை தொடர்புகொள்ள முயற்சித்தார். மைத்திரியின் கதவு பூட்டியே இருந்தது. அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஊடாகவும் முயற்சித்தார்.
திடீரென ஒருநாள் ரிசாத் பதியுதீனின் கைபேசிக்குத் துமிந்த அழைப்பை எடுத்தார். அது சிக்கலான அழைப்பு என்பதை அறிந்திருந்த அமைச்சர் அழைப்பு எல்லோருக்கும் கேட்கும்படி செய்துவிட்டார். "தம்பி எப்படி சுகமா? எல்லோரும் புதிய ஜனாதிபதியுடன் இணைந்து வேலைசெய்வோம் என்ன...? வேலைசெய்வோமா...? வேலை செய்வோம். நான் வைக்கிறன்"
என்று அமைச்சர் கூறத் துமிந்த "அமைச்சரே... அமைச்சரே... நான் உங்களுடன் கொஞ்சம்..........." என்று இழுக்க அழைப்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.
சக நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் அந்த அழைப்புக்கு அமைச்சர் பதில் அளித்தார் என்பதையும் சர்ச்சைக்குரிய ஒருவருக்கு உதவப்போய் தேவையற்ற பிரச்சினையில் சிக்க அவர் விரும்பவில்லை என்பதையும் இதையெல்லாம் அவதானித்துக்கொண்டிருந்த ஓர் ஊடகவியலாளரால் உணர முடிந்தது.
அதுபோக, கடந்த மேல்மாகாண சபைத்தேர்தலில் தனது நெருங்கிய நண்பிகளான சிங்கள நடிகைகள் ருவந்தி, ஜிஞ்ஜர் மற்றும் கயாசா போன்றோரை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட வைப்பதற்கு துமிந்த முயன்றபோது மகிந்த அதற்கு இடங்கொடுக்கவில்லை.
இதனால் ரிசாத் பதியுதீனின் கட்சியின் ஊடாக அவர்களை போட்டியிட வைப்பதற்கும் துமிந்த முயற்சி செய்து பார்த்தார். இதனாலும் அமைச்சர் ரிசாத் நழுவிக் கொண்டாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமு தவக்குறுச்சி

# துப்பாக்கிச் சூட்டுக் கலாசாரம் இலங்கை

இந்தியாவின் தங்கச்சிமடத்தைச் சேர்ந்தபிரிட்ஜோஎன்றமீனவர் கடந்த திங்கட்கிழமை இரவு விசைப்படகுஒன்றில்இந்திய– இலங்கைக் கடற்பரப்புக்குள் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம்சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். இவர் மீதானதுப்பாக்கிச்சூட்டைஇலங்கைக்கடற் படையினர் மேற்கொண்டிருந்ததாகக் குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது. ஆனால், இலங்கைக் கடற்படையோ தாம் சுடவில்லை என்று மறுத்துள்ளது. இப்போது அந்தக்கொலைசெய்யப்பட்ட மீனவரின்உடலில்இருந்து எடுக்கப்பட்ட துப்பாக்கி ரவையை வைத்து அது எந்த நாட்டினர் பயன்படுத்துவது என்பதைக் கண்டுபிடிக்கும்புலனாய்வுகளை மேற்கொள்ள ஆரம்பித்திருக்கின்றது இந்தியா. மீனவரின் உடலையும் அவர் சென்றிருந்த படகையும் துளைத்த அந்தத் துப்பாக்கிரவையே இதன் கொலையாளி யார்? என்பதைக் கண்டறிய உதவும் மிக முக்கிய சான்றுப்பொருள். குற்றஞ் சுமத்தப்படுவதுபோல் இலங்கைப் படைதான் அவரைச்சுட்டுக்கொன்றதா? இல்லையா? என்பதை இதன் மூலம் கண்டறிய முடிமாம்.

### துப்பாக்கிச் சூட்டுக் கலாசாரம் இலங்கையினுடையதே

சிங்கள அரசுகளைப்பொறுத்தவரை இந்தநாட்டின்வடபகுதியை எப்போதும் பதற்றமான சூழல்களால் வரித்து வைத்திருப்பது வழமையானதே. பயங்கரவாதிகள் பட்டம் கட்டி ஒழிக்கப்பட்ட விடுதலைப்புலிகள்நீண்டகாலமாகஅந்தத்தேவையைமுழுமை செய்யப் பயன்படுத்தப்பட்டனர். அதன் பின்னர் கிறிஸ்பூதம், வெள்ளைவான், முன்னாள்புலிகள், வாள்வெட்டுக்கள், கஞ்சா, கொள்ளைகள்என்றுஏராளம்ஏராளம்அடாத்துநடவடிக்கைகளை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் வடக்கில் கட்டவிழ்த்து விட்டனர். பெலிசாரும்கூட வெளிப்படையாகவே இளைஞர்கள் மீது துப்பாக்கிச் சூட்டுப்பயிற்சி எடுத்திருந்தனர். இவை அனைத்தும் இந்த நாட்டில் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைகளுடன் வாழ முடியாது என்பதுடன் விடுதலைப்புலிகளின் தேவையையும் மீளவும் வலியுறுத்தி நிற்கின்றன. ஆனால் இப்போது இந்தச் சிங்களப் பயங்கரவாதத்தின் அடாத்துக்கள் நாடுகடந்தும் பரவுகின்றன. இது குறித்த இந்திய மீனவர் சுட்டுக்கொல்லப்பட்ட இந்த விடயம் மூலம் உணரப்படுகின்றது. அது வடக்கில் நிகழ்த்தப்படுவதை ஒத்த பாணியிலிருப்பதால், அதை மேற்கொண்டது இலங்கைப் படையே என்கின்ற சந்தேகமே வலுப்பெற்றுள்ளது. அத்தோடு அது பற்றிய விசாரணைகளையும் இந்தியா முடுக்கி விட்டிருக்கின்றது.

### மீனவர் எதிர்நோக்கும் இடர்கள்.

இலங்கை– இந்திய நாடுகளின் எல்லைகள், நிலப்பகுதிகளாக அமைந்திருக்குமானால், அவற்றை இனங்கண்டுகொள்வது இலகுவானது. மாறாக இவ்விரு நாடுகளுடைய எல்லைகளும் கடலாகக்காணப்படுகின்றன. அதிலுள்ள கச்சதீவுகூட இழுபறிப்பட்டே இலங்கைக்குரியதாக ஆக்கப்பட்டிருக்கின்றது. பொதுவாகவே எல்லைகள், அடையாளங்கள் எவையுமற்ற பரந்த கடற்பரப்புக்குள் இருவேறு நாடுகளின் எல்லைகளை வரையறுத்துக் கொண்டு, மீனவர்களால் மீன்பிடியில் ஈடுபடுவது என்பது இயலாதகாரியம். அத்துடன் எல்லையைப்பிரித்தறியும்தொழில்நுட்ப வசதிகளை அரசுகள் ஒருசில மீனவர்களுக்கேவழங்கியுள்ளன. ஏனைய பலரும் தாம் கைவசம் வைத்திருக்கும் குறிப்பிட்ட வசதிகளை மாத்திரம் கொண்ட 'உலக இட நிலை உணர்வியை' வைத்தே கடலில் தொழிலை மேற்கொள்கின்றனர். தாம் எந்தத் திசையில், எவ்வளவு தொலைவில் நிற்கின்றார்கள், எவ்வாறு கரையைஅடையலாம்என்றுதெரிந்துகொள்ளக்கூடியகுறிப்பிட்ட சிலவசதிகளை மாத்திரமே அதுவும் கொண்டுள்ளது. மற்றும்படி இருவேறுநாடுகளின் கடல்எல்லைகளை அது பிரித்துக்காட்டுவது இல்லை. எந்தக் கடற்பரப்பில்அவர்களுக்கு அதிகளவு மீன்கள் கிடைக்கின்றனவோ அங்குசென்று மீன்பிடிக்கவே அவர்கள் உந்துவார்கள். இவ்வாறான பல காரணங்களால் கடலில் அவர்கள் எல்லை தாண்டுவது இயல்பாகவே நடந்துவிடுகின்றது.



### விழி பிதுங்கும் இலங்கை

பொதுவாக மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்கும் சந்தர்ப்பங்களில் எதிர் நாட்டுக் கடற்படையினர் அவர்களை அங்கிருந்து விரட்டி, தமது எல்லைக்குள்ளிருந்து அப்புறப்படுத்தி, அவர்களுடைய நாட்டு எல்லைக்குள் அனுப்பிவிடுவர். அத்தோடு ஒரே நாளில் கடற்படையினரின் எச்சரிக்கைகளுக்குப் பலமுறை உட்பட்ட படகு, அதையும் மீறி எல்லை தண்டினாலோ அல்லது அவ்வாறில்லாமல் சாதாரணமாக எல்லை தாண்டினாலோ அப்போதுகூட அவர்களைக்கைது செய்யலாமே தவிர சுட்டுக்கொல்ல முடியாது. இந்நிலையில் இலங்கைக் கடற்படை நடத்தியுள்ளதாக நம்பப்படும் இந்தச்துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதல் மிகவும் கண்டிக்கத்தக்கதே. ஆனால்தன் மீதான இந்தக் குற்றச்சாட்டை இலங்கை அரசு முற்றுமுழுதாகவே மறுத்துள்ளது.

'இந்தச்சம்பவத்தில் உயிரிழந்த மீனவரின் உடலில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ள குண்டு எமக்கு ஒரு மிகப்பெரிய ஆதாரமாக உள்ளது. இந்தக் குண்டைப்பரிசோதித்துப்பார்த்தால், அது எந்த நாட்டினர்பயன்படுத்தும் குண்டுஎனக்கண்டுபிடித்துவிட முடியும். தமிழகக் கடலோரப் பாதுகாப்புப் படை இந்தச் சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்துள்ளது. நீதிமன்றம் இந்தக் குண்டைப் பரிசோதனை செய்தால், இதற்கான விடை கிடைக்கும். மேலும், சம்பவம் நடந்த தினத்தன்று இலங்கைக் கடற்படையின் எந்தக் கப்பல்குறித்த பகுதியில்பாதுகாப்புப்பணியை மேற்கொண்டது என்ற விவரம் இலங்கை கடற்படையிடம் இருக்கும். ஆனால், தற்போது இதற்கான ஆதாரங்களை மறைக்கும் முயற்சியில் இலங்கைக் கடற்படை ஈடுபட்டிருக்கும். இவ்வாறாகக் கருத்துத் தெரிவிக்கும் இந்தியத் தரப்புக்கள், இதனை இலங்கைக் கடற்படையே செய்திருப்பதாக உறுதிபட நம்புகின்றன. ஆம்! இப்போது இலங்கை அரசுக்கு விழிபிதுங்கத் தொடங்கியிருக்கின்றது.

### சாடுவதற்கு ஏது குறை...?

இந்தியமீனவர்கள்எல்லைமீறிமீன்பிடியில்ஈடுபடுவதும்– இலங்கைக்கடற்படை அவர்களைக் கைது செய்வதும்–சிறைப்படுத்துவதும்– குறித்த கடற்பரப்பில் பல காலங்களாக நீடித்தே வருகின்றது. அத்துடன் தரையிலேயே தடுமாறும் இலங்கை அரசபடை குறித்த–மீனவரைக்கடலில்சுட்டுக்கொண்டிருக்கலாம்என்பதை இந்தியா மட்டுமன்றி ஈழத்தவர்களும் நம்புகின்றனர். ஆனால் இலங்கை– இந்திய கடற்பரப்பில் இந்த இரண்டு அரசுகளையும் விடப் பிறிதொரு நபர் உலாவுவதான பிரமையை ஏற்படுத்திவிட்டிருக்கின்றது இலங்கை அரசு. தற்போது இலங்கை எனும் வர்த்தகக் கேந்திர மையத்துக்குச் அமெரிக்கா – சீனா , இந்தியா ஆகியன பிடுங்குப்பாட்டில் இருக்கின்றன ஆகவே சுடப்பட்ட துப்பாக்கிரவையை ஆராய்ந்தால், இதன்கோணங்கள் புதிதாகலாம். அல்லது அந்தத்துப்பாக்கிரவை இலங்கைக்கடற்படையின் துப்பாக்கியிலிருந்தேவெயியேறிய ஒன்று என்று கண்டறியப்பட்டால், தமது குற்றத்தை ஏற்றுக்கொள்வதைத் தவிர இலங்கைப் படைக்கு வேறு வழியில்லை. ஆனாலும் விசாரணைகள், தண்டனைகள் எல்லாம் உள்நாட்டு நீதிபதிகளை வைத்துத்தான் நடத்தப்படும்...! இல்லை, இல்லை. அது எமது குண்டுதான் ஆனால், நாம் சுடவில்லைஎன்றாலும், கைவசம் இருக்கின்றது புலிப்பூச்சாண்டி...!



இலங்கை கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற தமிழக மீனவர் பிரிட்ஜோ பயணம் செய்த விசைப்படகு.



இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டதில் குண்டு துளைத்து சேதமடைந்த விசைப்படகு



இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழக மீனவர் பிரிட்ஜோ உடலில் இருந்து எடுக்கப்பட்ட துப்பாக்கி ரவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகரஆசாத்




# கால அவகாசமும் கால அட்டவணையும்



இலங்கையில் மேற்கொள்ளப்பட்டபோர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகஐக்கியநாடுகள்மனித உரிமைகள்சபையில்அமெரிக்காவால்முன்வைக்கப்பட்டதீர்மானம் ஏகமனதாகநிறைவேற்றப்பட்டது. தற்போது நடைபெற்றுவரும் ஐக்கியநாடுகள்சபையின் 34ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நிறை வடைந்துவிட்ட நிலையில் இந்தப் பிரச்சினை மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் அல்ஹுசைன் தனது ஆரம்ப அறிக்கையில், இலங்கை, தீர்மானத்தில்குறிப்பிடப்பட்ட விடயங்களில் ஒரு சிலவற்றைப் பகுதியளவில்நிறைவேற்றியுள்ளபோதிலும்கூட போதுமான அளவில் செயற்படவில்லை எனத் தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

## ஆதரவு திரட்டும்போக்கு

இலங்கையின் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தீர்மானத்தை நிறைவேற்ற மேலும் இரண்டு வருடங்கள் அவகாசம் கோரும் வகையில்உறுப்புநாடுகளுடன்கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றார். அதேவேளையில் பிரிட்டன் கால அவகாசம் வழங்குவதற்கு ஆதரவு வழங்கப்போவதாகஉத்தியோகப்பற்றற்றமுறையில் தெரிவித்துள்ளது.

இந்தப்பிரச்சினைதொடர்பாகபிரிட்டன்தலைமையில் இடம்பெற்றகலந்துரையாடலில்ஐரோப்பிய ஒன்றியம் சுவிற்சர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகியநாடுகள், இலங்கைகாலஅவகாசம்கோருமாயின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்ற கால அட்ட வணை சமர்ப்பிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளன. மேலும் இலங்கையின் பொறுப்புக்கூறல் பங்களிப்பில்பன்னாட்டுநீதிபதிகள்சட்டவியலாளர்கள் ஆகியோரின்பங்களிப்பும்இருக்கவேண்டுமென அவை திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளன.

இலங்கை காலஅவகாசம் கோருவது என்பது பன்னாட்டையும் தமிழ் மக் களையும் காலத்தை இழுத்தடித்துப் பிரச்சினையின் கூர்மையை மழுங்கடிக்கும் கபட நோக்கம் கொண்டது என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

ஏற்கனவே வழங்கப்பட்ட ஒன்றரை வருட காலத்தில் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட அம்சங்கள் எவற்றையும் நிறைவேற்ற எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## தொடர்ந்தும் போராடும் மக்கள்

பன்னாட்டு சமூகத்தின் மத்தியில் இராணுவப் பிடியிலுள்ளபொதுமக்களின்காணிகள்விடுவிக்கப்படுவதாகவும்அரசியல்கைதிகள்படிப்படியாக விடுவிக்கப்படுவதாகவும் காணாமற்போனோரைக் கண்டறிய ஆணைக்குழு அமைக்கவுள்ளதாகவும் புனர்வாழ்வு அபிவிருத்தி என்பன மேற்கொள்ளப்படுவதாகவும்கூறிவருகின்றது. இவை வெறும் கண்துடைப்பு நடவடிக்கைகள் தான். அவைகூட கடுமையான, தொடர்ச்சியான மக்களின்போராட்டங்கள்காரணமாக மேற்கொள்ளப்பட்டவையே தவிர அரசு தானாக எதையும் செய்யவில்லை. அது மட்டுமன்றி அரச தலைவர், தலைமை அமைச்சர் உட்பட அரச தரப்பினரிடமிருந்து காணாமற்போனோர் விவகாரம், பொறுப்புக் கூறல் என்பன தொடர்பாக வெளிப்படையாகவே நேரெதிரான கருத்துக்களே முன்வைக்கப்படுகின்றன.

காணாமலாக்கப்பட்டோர்தொடர்பாகஎத்தனையோ போராட்டங்கள் நடத்தப்பட்டன. இப்போதும் தொடர்ந்து நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பிரச்சினை தொடர்பாக எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும்எடுக்கப்படவில்லை. மாறாகக் காணாமற்போனோரை வெளிநாடுகளில் தான்போய்த்தேடவேண்டுமெனத்தலைமை அமைச்சர் திமிருடன் பதிலளித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் வழங்கப்பட்ட கால அவகாசம் இலங்கையால் இதுவரை இப்படித்தான் கையாளப்பட்டது. இதனாலே உறுப்பு நாடுகள் கால அட்டவணையுடன்கூடியகாலஅவகாசமே வழங்கப்படவேண்டுமென வலியுறுத்துகின்றன என்றும் எண்ணலாம்.

கால அட்வணை என்பது இலங்கை அரசுக்கு ஒரு கிடுக்கிப்பிடி என்பதில் சந்தேகமில்லை.

இலங்கை அதற்குச் சம்மதிக்குமா? என்பதுடன் உறுப்புநாடுகள் இந்தவிடயத்தில்எவ்வளவு உறுதியாக நிற்குமா? என்பதும் கேள்விக்குரியதே. கால அட்டவணை விவகாரத்தைக்கூட நீர்த்துப் போக வைக்க இலங்கை ஏதாவது தந்திரத்தைக் கையாளலாம். எனவே காலஅவகாசம் என்ற விடயத்தில் கால அட்டவணை என்ற விடயத்தில் தமிழர் தரப்பு மிகவும் விழிப்பாக இருக்கவேண்டியது அவசியமாகும்.

## அசண்டை செய்யும் அரசு

அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேன இலங்கையில்இடம்பெற்றதாகக்கூறப்படும்போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையில்பன்னாட்டுப்பங்களிப்புஅனுமதிக்கப்படமாட்டாதெனவும் உள்ளக விசாரணையே இடம்பெறுமெனவும் கூறி வருகிறார். அதைவிட தியாகம்செய்துநாட்டைப்பாதுகாத்தஇராணுவத்தினர் தண்டிக்கப்படமாட்டார்களெனவும் தெரிவித்து வருகிறார்.

இதிலிருந்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட முன்பே உள்ளக விசாரணைகள் மூலம் நீதி கிடைக்காது என்பதன் தீர்ப்பை அரச தலைவர் வழங்கிவிட்டார். ஏற்கனவே இலங்கையின் நீதிக் கட்டமைப்பின் மூலம் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது என்பது தெரிகின்றது.

காணாமற்போனோர் விவகாரம் தொடர்பாக அவற்றுக்கான அலுவலகம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார். ஏற்கனவே நல்லிணக்க ஆணைக்குழு ஸ்வெல்மாக்பரணகம, தலைமையிலான காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழு என்பன விசாரணைகளை நடத்தி சாட்சியங்களைப் பதிவுசெய்து அறிக்கைகளையும்சமர்ப்பித்திருந்தன. ஆனால் அவை தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காணாமற்போனோர்அலுவலகம்மட்டும்இந்தப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்குமென எப்படி நம்பமுடியும்?

இந்த நிலையில்தான் மேலும் இருவருடங்கள் அவகாசம்கோரப்படுகிறது. இப்படிக்கோரப்படும் காலஅவகாசம்நிச்சயமாகத்தீர்மானத்தைநிறைவேற்றுவதற்காக அல்லவென்பதும் பிரச்சினைகளை ஆறப்போட்டுத் திசை திருப்பும் நோக்கம் கொண்டதுதான் என்பதும் தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடிய விடயமாகும்.

## தமிழர் தரப்பு ஒன்றிணைய வேண்டும்

இப்படியானஒருசூழலில் பாதிக்கப்பட்டவர்களாய் நீதியைக் கோரிநிற்கும் தமிழ் மக்களின் நிலைப்பாடுதான் என்ன?

புலம்பெயர் தமிழ் அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒருபகுதியினர் இலங்கைஅரசுக்குக்காலஅவகாசம் வழங்கக் கூடாது என வலியுறுத்தி வருகின்றனர். இந்தக் காலஅவகா சத்தை இலங்கை அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் என்பதால் அவர்களின் நிலைப்பாட்டில் தவறு இருப்பதாகச் சொல்லமுடியாது.

அதேவேளையில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைமைநிபந்தனைகளுடன்கூடியகாலஅவகாசம் வழங்கலாமெனத் தெரிவித்துள்ளது.

கால அவகாசம் வழங்கப்படக்கூடாது என்பது நியாயமான ஒரு கோரிக்கையாகக்காணப்பட்டாலும், அதுவழங்கப்பட்டால் அடுத்த கட்டம் என்ன என்பது தான் இங்கு எழும் கேள்வி. ஏனெனில் காலஅவகாசம் தொடர்பான தீர்மானத்தை எடுப்பதில் தமிழர் தரப்புக்கு எந்தவித பங்குமில்லை. தீர்மானிப்பது உறுப்பு நாடுகளே, நாம் அதற்கு வெளியே நின்று அழுத்தங்களை மட்டுமே கொடுக்க முடியும். அத்தோடு கால அட்டவணையின் அடிப்படையில் கால அவகாசம் வழங்கக்கூடிய கருத்தோட்டமே உறுப்பு நாடுகள் மத்தியில் காணப்படுகிறது. தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விடயங்களும் எவ்வளவு நாள்களில் நிறைவேற்றப்படும்என ஒருதிட்டவட்டமானகால அட்டவணையின்அடிப்படையில்காலஅவகாசம் வழங்கப்படுமானால் அது வரவேற்கப்பட வேண்டிய விடயமே! ஆனால் இப்படியான காலஅட்டவணையுடன் கூடிய கால நீடிப்பு வழங்கப்படும் போது அது நிறைவேற்றப்ப டும் போது ஐக்கிய நாடுகள் சபையின் கடுமையான கண்காணிப்பின் கீழேயேமேற்கொள்ளப்படவேண்டும். இல்லையேல் இலங்கை வழமைபோலவே இந்தக்கால அவகாசத்தையும் ஏமாற்றிக் கடந்து செல்லும். இப்படியான ஒரு முறைக்கு இலங்கை அரசு இலகுவில் சம்மதிக்கப்போவ தில்லை. சுதந்திரம், சுயாதிபத்தியம் அந்நியத் தலையீடு எனப் பல்வேறு சாக்குப்போக்குகளைச் சொல்லி நழுவிப் போகவே முயற்சி செய்யும்.

இதில் இலங்கை அரசு தப்பிவிடாமல் இருப்பது உறுப்பு நாடுகளின் உறுதிப்பாட்டையே பொறுத்துள்ளது. அந்த உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதில் தமிழர் தரப்பு ஒரே அணியாகச்செயற்படவேண்டும்.

> அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனஇலங்கையில்இடம்பெற்ற தாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனிதஉரிமைமீறல்கள் தொடர்பான விசாரணையில் பன்னாட்டுப் பங்களிப்பு அனுமதிக்கப்படமாட்டாதெனவும் உள்ளக விசாரணையே இடம்பெறுமெனவும்கூறிவருகிறார். அதைவிட தியாகம் செய்து நாட்டைப் பாதுகாத்த இராணுவத்தினர் தண்டிக்கப்படமாட்டார்களெனவும் தெரிவித்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலக சாதனை படைத்தார் வைக்கம் விஜயலட்சுமி..!

சோதனையான நேரத்தில் கூட உலக சாதனை ஒன்றைச் செய்து காட்டியுள்ளார் பிரபல மலையாள பின்னணி பாடகி வைக்கம் விஜயலட்சுமி. இந்த மார்ச் மாதம் இறுதியில் நடைபெற இருந்த அவரது திருமணத்தை சில காரணங்களால் அவரே நிறுத்தினார். ஆனால் அந்த சோகம், வருத்தம் எதுவும் தன்னை பாதிக்கவிடாமல், கின்னஸில் இடம்பெறும் விதமாக புதிய சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார் விஜயலட்சுமி. கொச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் தொடர்ந்து ஐந்து மணி நேரம் இடைவிடாமல் காயத்ரி வீணை மூலம் பாடல்களை பாடி புதிய சாதனையை படைத்துள்ளார். இதில் மலையாளம், தமிழ் மற்றும் இந்தி உள்ளிட்ட மொழிகளில் அவர் பாடிய 67 பாடல்களும் மற்றும் 12 கீர்த்தனைகளும் அடங்கும். நிச்சயமாக இந்த சாதனை கின்னஸ் சாதனை பெறும் என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். “என்னுடைய குரு, பெற்றோர்கள் மற்றும் நலம் விரும்பிகளின் கனவை நனவாக்க முடிந்ததற்காக கடவுளுக்கு நன்றி கூறுகிறேன்” என்று கூறியுள்ளார் வைக்கம் விஜயலட்சுமி.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2 | | 4 |
| 9 | 3 | | | | | | 5 | |
| | | | 3 | 7 | | 1 | | |
| 4 | | 1 | | | | 3 | | |
| | | | 5 | 1 | 6 | | | |
| | | 2 | | | | 9 | | 6 |
| | | 7 | | 6 | 8 | | | |
| | 5 | | | | | | 8 | 3 |
| 8 | | 9 | | | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 4 | 9 | 5 | 7 | 2 | 6 | 1 |
| 1 | 9 | 7 | 8 | 2 | 6 | 3 | 4 | 5 |
| 2 | 5 | 6 | 1 | 3 | 4 | 9 | 7 | 8 |
| 9 | 1 | 2 | 6 | 8 | 3 | 4 | 5 | 7 |
| 4 | 7 | 5 | 2 | 1 | 9 | 6 | 8 | 3 |
| 6 | 8 | 3 | 7 | 4 | 5 | 1 | 2 | 9 |
| 5 | 2 | 9 | 4 | 7 | 1 | 8 | 3 | 6 |
| 3 | 4 | 1 | 5 | 6 | 8 | 7 | 9 | 2 |
| 7 | 6 | 8 | 3 | 9 | 2 | 5 | 1 | 4 |

சுடோக்கு
ஒரு எண் விளை யாட்டு.
தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மனக்குழப்பம் உருவாகலாம். குடும்பத்தில்ஒற்றுமையைக்காப்பதுநல்லது. தொழில், வியாபாரத்தில் சீரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப்பெறுவர்.

**இடபம்:** பேச்சில் நிதானத்தைக் கடைபிடிக்க வும். தொழில், வியாபாரத்தில், குறைபாடு களை உடனடியாகச் சரிசெய்வது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**மிதுனம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அப ரிமிதமான வளர்ச்சி உருவாகும். லாபம் அதிகரிக்கும். குடும்ப பிரச்சினையில் சுமுகத் தீர்வு கிடைக்கும்.

**கடகம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாம தம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பணியாளர் கள்பணிவிடயமாகவெளியூர்செல்வர். பெண்க ளுக்கு, சகோதரவழியில் உதவிகிடைக்கும்.

**சிங்கம்:** இனிய பேச்சால் பிறரைக் கவர்வீர் கள். மக்கள் மத்தியில் மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு விரும்பிய இட மாற்றம் கிடைக்கும்.

**கன்னி:** சுயநல நோக்குடன் சிலர் உதவ முன் வருவர். தொழில், வியாபாரத்தில்எதிர்பார்த்த பணவரவுகிடைக்கும். பணியாளர்கள்நிர்வா கத்தினரின் நன்மதிப்பைப் பெறுவர். பெண் கள், ஆடை ஆபரணம் வாங்குவர்.

**துலாம்:** தடைகளைத் தகர்த்து முன்னேறு வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், லாபம் பன்மடங்கு உயரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். பெண்கள் கணவரின் அன்புக்குரியவராவர்.

**விருச்சிகம்:** தவறைத்திருத்திக்கொள்ளமுயல் வீர்கள். குடும்பத்தினரின் ஆதரவுகிடைக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிட்டா லும், லாபம் குறையாது. நண்பர்களின் சந் திப்பு மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

**தனுசு:** குடும்பத்தில் யாருடனும் வாக்குவா தம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணியை நிறைவேற்றுவது நல் லது. லாபம் சுமாராக இருக்கும். பெண்கள், ஆடம்பர எண்ணத்தை தவிர்ப்பது நல்லது.

**மகரம்:** உங்கள் கருத்தை மற்றவர் தவறாக உணர்ந்து கொள்வர். குடும்ப விஷயத்தைப் பிறரிடம் பேச வேண்டாம். விடாமுயற்சியால் தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். செலவில் சிக்கனத்தைப் பின்பற்றவும்.

**கும்பம்:** புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். தக்க நேரத்தில், நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த சுபச்செய்தி வந்து சேரும்.

**மீனம்:** அன்பு மிக்கவராக அனைவரையும் ஆதரிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் சிறப்பான வளர்ச்சி இருக்கும். சேமிக்கும் விதத்தில் லாபம் உண்டாகும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர்.

**கணவன்: நீ சமைச்ச இந்த சாப்பாட்டை என்னவென்று சொல்லுவே?**
**மனைவி: ஏன்?**



**கணவன்: சொர்க்கத்துக்கு போனா எமராஜா கேப்பாரு, என்னத்த தின்னுட்டு செத்து போனேன்னு?**

**என் கணவர்கிட்ட 18 கரட் நெக்லஸ் கேட்டேன். அவர் வாங்கி கொடுத்ததை பாருங்க...**



**அவரை என்ன பண்ணலாம்னு நீங்களே சொல்லுங்க...**



**``சோப்பு பெட்டியில ஏன் சின்னச் சின்ன ஓட்டைகள் போட்டிருக்காங்க?''**
**``பெருசா போட்டா, சோப் கீழே விழுந்திடும்''**

பனித்துளி @mymindvoice Mar
வெறுத்தவர்கள் காதலித்து சேர்கிறார்கள்...
காதலித்தவர்கள் வெறுத்து பிரிகிறார்கள்...
இரண்டுக்கும் அவர்கள் காரணமல்ல
1 8 12



**ஒருவர்:** அடுத்த பிறவியிலாவது கரப்பான் பூச்சியா பிறக்கணும்.
**மற்றவர்:** ஏன்?
**ஒருவர்:** என் மனைவி அது ஒன்றுக்குத்தான் பயப்படறா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உற்சாகத்தை அளிக்கும் மூளைக்கான உணவு

காலை உணவு மனதுக்கு உற்சாகத்தைத் தரும் என்பதால் அதனை 'மூளைக்கான உணவு' என்று கூறுகிறோம்.

பெண்கள் உற்சாகம் ஒருபோதும் குறையாமல் இருக்கவேண்டும். 'மனம் சரியில்லை', 'என்னவோ ஒருமாதிரியா இருக்குது, எதிலுமே ஆர்வம் இல்லை' என்றெல்லாம் சொல்லாமல் இருக்கவேண்டும் என்றால், அதற்கான உணவை சாப்பிடுவது மிக அவசியம்.

* இரவு உணவுக்கு பின்னால் தூங்கிவிடுகிறோம். காலையில் விழிந்ததும் உடலுக்கும், மனதுக்கும் சக்தியும் உற்சாகமும் தேவை. அதற்காக காலை உணவை கட்டாயம் சாப்பிட்டாக வேண்டும். அதில் போதுமான அளவு சத்துக்களும் இருக்க வேண்டும். காலை உணவு மனதுக்கு உற்சாகத்தை தரும் என்பதால் அதனை 'மூளைக்கான உணவு' என்று கூறுகிறோம்.

* தவிடுநீக்காததானியங்கள், பருப்புபயறுவகைகள், ஓட்ஸ்போன்றவைகள் அடங்கிய உணவுகள் சிறந்தவை. இந்த வகை உணவுகளை சாப்பிட்டால், குருதியில் உடனடியாக சீனியின் அளவு உயராது. உடலில் குளுக்கோஸ் அளவில் திடீர் மாற்றங்கள் நிகழ்ந்தால் அது மன நிலையை ஓரளவு பாதிக்கும்.

* சிறுவர், சிறுமியர்களுக்கு உற்சாகம் கிடைக்க 'ஓமேகா 3 பாற்றி அசிட்' கலந்த உணவுகளை அவர்களுக்கு வழங்கவேண்டும். சிலவகை மீன்களிலும், பாதாம், ஒலிவ் ஓயில் போன்றவைகளில் மேற்கண்ட சத்து இருக்கிறது.

* மன ஆரோக்கியத்திற்கு 'விட்டமின் பி' சத்துள்ள உணவுகள் அவசியம். கீரை, பீன்ஸ் வகைகள், முளைவிட்ட தானியங்களில் இந்தச் சத்து அதிகம் இருக்கிறது. முட்டைக்கோஸ், ஒரேஞ்சு, கொய்யா போன்ற பழங்களையும் சாப்பிட்டுவர வேண்டும்.

* 'மனம் சரியில்லை' என்று கருதும் நேரத்தில் நீங்கள் விரும்பினால் கோப்பியோ, தேநீரோ பருகலாம். அதில் இருக்கும் 'கபீன்' உங்களுக்கு உற்சாகத்தை தரலாம். கோப்பியைவிட தேநீர் சிறந்தது. அதில் இருக்கும் 'எல் தியானின்' என்ற அமினோ அமிலத்திற்கு மனநிலையை மேம்படுத்தும் சக்தியிருக்கிறது. ஆனால் கோப்பி, தேநீர் போன்றவைகளின் பயன்பாடு அளவுக்கு மீறிவிடக்கூடாது.

* நமது மனநிலையின் சீராக்கியாக தைரொய்டு சுரப்பி செயல்படுகிறது. இதன் சரியான இயக்கத்திற்கு அயோடின் அவசியம். அதற்காக அயோடைடு உப்பு வாங்கி பயன் படுத்த வேண்டும். கடல் உணவுகளையும் அதிகம் சாப்பிட வேண்டும்.

* உடல் ஆரோக்கியத்தோடு மன ஆரோக்கியமும் கிடைக்க நிறைய தண்ணீர் பருகவேண்டும். நன்றாக தூங்கவேண்டும். தேவைக்கு ஓய்வும் அவசியம்.

# இது புதுசு



தலைக்கு அணியும் கிளிப் வகைகளில் துணி மற்றும் கம்பளித் துணி வைத்து ஒட்டிய நிலையில் கலர் கலராக கிளிப்கள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை 260 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# தலை அலங்காரம்





1 தலைமுடியை சீப்பால் நன்றாகச் சீவிய பின் இரண்டாகப் பிரித்துக் கட்ட வேண்டும்.

2 பின்பு பின்னலாம்

3 பின்னி முடிந்ததும் நுனியில் சிறு ஹேர் பான்ட் கொண்டு கட்ட வேண்டும்.

4 படத்தில் காட்டியவாறு பின்னிய இரண்டு பக்க முடிகளையும் சேர்த்து இணைத்தால் புதிய முறையிலான தலைமுடி அலங்காரம் கிடைக்கும்.

**நாளை**
**மாசி-29**
**திங்கட்கிழமை**
**-13.03.2017**
**திதி: பிரதமை**
**மு.இ. 09.08**
**நட்சத்திரம்:**
**உத்தரம் மு.இ.06.55**
**சுபநேரம்:**
**12.22-01.52 வரை**
**ராகுகாலம்:**
**07.52-09.22 வரை**
**திருவள்ளுவர் குருபூஜை**



# மாணவர்கள் பாடம் படிக்க ஏற்ற நேரம்

(நேற்றைய தொடர்ச்சி)

ஆனால், காலையில் காற்றடித்த பந்துபோல படுக்கையில் இருந்து துள்ளி எழுவர். நல்ல தூக்கத்துக்குப்பின் அதிகாலையில் சுற்றுச்சூழல் மிக அமைதியாக இருப்பதுடன், மனமும் அமைதியாகவும் புத்துணர்வோடும் இருக்கும். ஒரு வெற்றுக்காகிதத்தில் கதை, கவிதை, ஓவியம் என எதை வேண்டுமானாலும் பதிவிட முடியும் என்பதைப்போல, இந்த நேரத்தில் எதைப்படித்தாலும் மனதில் எளிதில் தங்கும் எனப் பலரும் நம்புகின்றனர். மாறாக, பகல் முழுவதும் பள்ளியில் கடின உழைப்புக்குப் பின் இரவில் நெடுநேரம் விழித்துப் படித்தால், மூளையும் களைப்போடு இருப்பதால், படிப்பது எதுவும் புரியாமல் மனதிலும் பதியாது என சிலர் நம்புகின்றனர். அதனால் தம் குழந்தைகளைக் காலையில் எழுப்பிவிட்டு படிக்க வைக்கின்றனர்.

அறிவியல்பூர்வமாக ஆராய்ச்சி செய்ததில் இரண்டு நேரமுமே ஏற்றது எனத் தெரிய வந்துள்ளது. இரவில் மூளை சோர்வாக இருக்கும்போது இன்னும் சிறப்பாக வேலை செய்கிறது என அறிஞர்கள் கூறுகின்றனர். சோர்வான மூளை, கவனச்சிதறல்களை வடிகட்டி கவனம் செலுத்த இயலாததாலும், ஆழ்மனதின் பழையவற்றை ஞாபகப் படுத்தமுடியாததாலும், புதுச்சிந்தனைகளுக்கும், வழிமுறைகளுக்கும் இரவுநேரம் வழிவகுக்கிறது. அதோடு, கற்றவையாவும் உறக்கத்தின்போது உணர்மனதிலிருந்து நெறிப்படுத்தப்பட்டு ஆழ்மனதில் சேமிக்கப்படுகின்றன. எனவே, ஒருவருக்கு எந்நேரம் சரியாக இருக்கிறதோ அதை அவர் பின்பற்ற வேண்டும். வேறொரு நேரத்தைப் பின்பற்ற வற்புறுத்துதல் தவறு. கொக்கரிக்கும் கோழி ஆந்தையாகாது! உங்களுக்கு எந்நேரமும் சரியெனத் தோன்றினால், இரவில் 10 மணி வரை நன்றாகப் படித்துவிட்டு நிம்மதியாகத் தூங்குங்கள்.

காலையிலும் 5 மணிக்கு எழுந்து, படித்தவற்றை நினைவுகூர்ந்தால் அல்லது மீதியிருப்பதைப் படித்தால், அது வகுப்பில் ஆசிரியர் கேட்கும்போது உதவுவதோடு அடுத்த பாடத்திலும் தொடர்ந்து பயணிக்கக் கை கொடுக்கும். மூளைக்கும் ஓய்வு மிக அவசியம். தேர்வாக இருந்தாலும் உங்கள் மூளையை ஓய்வின்றிப் பட்டினி போடாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நொதேர்ண் பவர் நிறுவனத்தைக் காப்பாற்றவே நிபுணத்துவகுழு

## வடக்கு மாகாண சபையில் எதிர்க்கட்சித் தலைவர்

சி. தவராசா

சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைந்துள்ளமை தொடர்பாக, குறிப்பாக ஒயில் கலந்துள்ளமை தொடர்பாக, மல்லாகம் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடந்து கொண்டிருக்கின்றது. நான் இங்கு விவாதிக்க இருப்பது சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைந்தமை தொடர்பாக அல்ல. இந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது விவசாய அமைச்சரால் ஒரு நிபுணர்குழு அமைக்கப்பட்டு. நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் தொடர்ந்து கொண்டிருக்கும்போது, அந்த நிபுணர் குழுவின் இறுதி அறிக்கை வெளியானது. நான் இங்கு விவாதிப்பது அந்த அறிக்கை தொடர்பான விடயமேயன்றி சுன்னாகம் நிலத்தடி நீர் ஒயிலினால் மாசடைந்திருப்பது தொடர்பாக அல்ல. ஆதலினால் இந்த விவாதம் எந்த வகையிலும் நீதிமன்றத்திலுள்ள விடயத்தை விவாதிப்பதாக அமையாது.

**நிபுணர்குழு அமைப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரமில்லை**

ஒன்பது நிபுணர்களைக் கொண்ட அந்தக் குழு சம்பந்தமான விவரமும் அதிலுள்ளவர்களின் பெயர்ப்பட்டியல்களும் வடக்கு மாகாண சபைக்கு அறிவிக்கப்பட்டன. இங்கு தெளிவாகக் கவனிக்கப்பட வேண்டியது இந்த நிபுணர்குழு சபையால் நியமிக்கப்படவில்லை என்பதாகும். அமைச்சரால் நியமிக்கப்பட்டுச் சபைக்கு அறிவிக்கப்பட்டது. 19.01.2015, 10.02.2015களின் ஹன்சாட் பதிவுகள் இதனைத் தெளிவாகக் காட்டுகின்றன.

இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு அமைச்சருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதனை நான் முதலில் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். நீர் வழங்கல் மற்றும் சுற்றுச் சூழல் தொடர்பான நிறைவேற்றுச் செயற்பாடுகளுக்கு அமைச்சர் ஐங்கரநேசனுக்கு அதிகாரம் இல்லை. பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் மாகாணசபை நிரலிற் குறிப்பிடப்பட்ட விடயங்களில் எந்தப்பந்தியிலும்நீர்வழங்கலோ, சுற்றுச்சூழல் விடயங்களோ மாகாண சபைக்குரிய விடயமாக நிரற்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆனால் அமைச்சர் தனது கடிதத் தலைப்பில் கூட 'நீர் வழங்கல்' என்ற சொற்பதத்தையே பயன்படுத்தியிருக்கின்றார். ஒருங்கியை நிரலிற் (Concurrent List) சூழற்பாதுகாப்பு என்ற விடயம் குறிக்கப்பட்டி ருந்தாலும், ஒருங்கியை நிரலிற் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகப் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் நியதிச்சட்டத்தை உருவாக்கினால் மாத்திரமே அது தொடர்பான நிறைவேற்று அதிகாரம் மாகாண சபைக்குரியதாகும். ஆதலால் தனது அதிகார வரம்பில்லாத ஒரு விடயம் தொடர்பாக விசாரிப்ப தற்கு அமைச்சர் நிபுணத்துவக்குழு அமைத்தது ஒரு தவறான செயலாகும்.

**நீர் மாசுக்கு நொதேர்ண் பவரே காரணம்**

இதே அமைச்சர் 04.12.2014 இல் மாகாண சபையில் பேசும்போது பின்வருமாறு கூறியிருந்தார்:

"சுன்னாகப் பிரதேசத்தில் நிலத்தடி நீரில் மனித ஆரோக்கியத்துக்கும், விவசாயத்துக்கும் சமூக அமைதிக்கும் பெருந்தீங்கு விளைவிக்கக்கூடிய விதத்தில் எண்ணெய் கலந்துள்ளமைக்கு சுன்னாகம் அனல் மின் நிலைய வளாகத்திலிருந்து வெளியேறிய கழிவு டீசலே காரணமென்பது வெள்ளிடைமலை. இந்த டீசல் வெளியேறியமைக்குப் பல் வேறு காரணங்கள் இருந்தபோதிலும் இந்தச் சபைக்கு உட்பட்ட வகையில் முன்மொழியப்பட்ட பிரேரணை மிகச்சுருக்கமான அளவில் இங்கு தரப்படுகின்றது. சுன்னாகம் அனல் மின் நிலைய வளாகத்திலிருந்து இயங்கி வருகின்ற இரண்டு அனல் மின்னுற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான தனியாருக்குச் சொந்தமான நொதேர்ண் பவர் அதன் ஆரம்ப காலங்களில் சுற்றுச் சூழல் விதிகளைக் கணக்கிற் கொள்ளாது கழிவு டீசலைச் சுத்திகரிக்காமலேயே வெளியேற்றி வந்தமையை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பதிவுகளிலிருந்து அறிய முடிகின்றது."

இவ்வாறாகச் சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைந்தமைக்குக் குறித்த நிறுவனமே காரணமென்று அன்று கூறியிருந்தார்.

சுன்னாகம் அனல் மின் நிலைய வளாகத்திலிருந்து இயங்கிவருகின்ற இரண்டு அனல் மின்னுற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான தனியருக்குச் சொந்தமான நொதேர்ண் பவர் அதன் ஆரம்ப காலங்களில் சுற்றுச் சூழல் விதிகளைக் கணக்கிற் கொள்ளாது கழிவு டீசலைச் சுத்திகரிக்காமலேயே வெளியேற்றி வந்தமையை மத்திய சுற்றாடல் அதி கார சபையின் பதிவுகளிலிருந்து அறிய முடிகின்றது'. இவ்வாறாகச் சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைந்தமைக் குக் குறித்த நிறுவனமே காரணமென்று ன்று கூறியிருந்தார்.

**நிபுணர்குழுவுக்கு அளிக்கப்பட்ட வேலை என்ன?**

அப்படியிருக்க அமைச்சரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு அமைக்கப்பட்டு மூன்று மாதகாலத்தினுள், தனது முதல் கட்ட ஆய்வு அறிக்கையை வெளியிட்டது. இந்த ஆய்வு அறிக்கையின் முடிவில் பின் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

'இந்த ஆய்வு முடிவுகளின்படி எந்த ஒரு நீர் மாதிரியிலும் BTEX இனுடைய அளவுகள் பன்னாட்டு நியம அளவுக்கு மேற்பட்டிருக்கவில்லை. மாறாக 85% மான மாதிரிகளில் முற்றாக இல்லாமலும் 15% மான மாதிரிகளில் நியம அளவிலும் அதாவது 200 மடங்கு குறைவான அளவிலும் காணப்படுகின்றது.'

இந்த நிபுணர்குழுவின் முதற்கட்ட அறிக்கையின்படி சுன்னாக நிலத்தடி நீரில் BTEX இல்லையென்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இங்கு கவனத்திற்கொள்ள வேண்டியது ஒயில் என்பதற்கும் BTEX இற்குமுள்ள தொடர்பு என்ன? என்பதாகும். BTEX எனப்படுவது மசகு எண்ணெயில் காணப்படும் Benzene, Toluene, Ethylbenzene, Xylene ஆகியவற்றின் இரசாயனப் பதார்த்தங்கள் ஆகும். இவை மசகு எண்ணெயில் 1L இற்கு 4mg வரை காணப்படுமென்று சுற்றுச்சூழல் ஆய்வுகளுக்குப் பெயர்போன GRIFFITH பல்கலைக்கழகம் தனது ஆய்வுகளில் குறிப்பிட்டுள்ளது. ஆனால் இந்த மசகு எண்ணெய் வடிகட்டப்படும்போது முதல் 150°Cஇல் பெற்றோலும், 200°C இல் மண் எண்ணெயும், 300°C இல் டீசலும், 370°C இல் ஒயிலும் பெறப்படுகின்றன. அதற்கும் அதிகரித்த வெப்பநிலையில்தான் மெழுகு, தார் போன்ற பதார்த்தங்கள் அடங்கும்.

நிபுணர் குழுவால் குறிப்பிடப்பட்ட BTEXஅதாவது Benzene, Toluene, Ethylbenzene, Xylene ஆகியவற்றின் ஆவியாகும் வெப்பநிலை முறையே 80.1°C, 110.6°C, 136°C மற்றும் 138.4°C ஆகும். ஆதலினால் மசகெண்ணெய் வடிகட்டப்படும்போது NghJ Petrol cld;; BTEX எனக்குறிப்பிடப்படும் சகல பதார்த்தங்களும் ஆவியாகிச் சென்று விடும். ஆதலால் Fuel Oil, அதிலும் குறிப்பாக Heavy Fuel Oil இல்BTEX இரசாயனக் கலவைகள் இருக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை. Petrol ஒழுக்குகள் இருந்தால் அந்த இடத்தில்தான் BTEX இரசாயனப் பதார்த்தங்கள் இருக்கும். 100°C இல் நீர் ஆவியாகும் என்பதனை விளங்கிக் கொள்வதுபோல் இதனை விளங்கிக் கொள்வதற்கும் விஞ்ஞான அறிவு தேவையில்லை.

இந்த நிபுணத்துவக்குழுவுக்கு வழங்கப்பட்ட பணிப்பு, சுன்னாகம் நிலத்தடி நீரில் ஒயில் இருக்கின்றதா? என்பதைப் பரிசீலித்து அறிக்கையிடுவதே! 'வட்டுக்கோட்டைக்குப் போகும் வழியென்ன என்றால் துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு' என்பது போன்று ஒயில் கலந்திருக்கின்றதா? என்பதற்கு விடை காண்பதற்குப் பதிலாகத் தொடர்பில்லாத இரசாயனப் பதார்த்தங்கள் இல்லையென்று அறிக்கையிட்டுள்ளது. இது அவர்கள் ஏதோ ஒரு நோக்கத்துடன் செயற்பட்டிருக்கின்றார்கள் என எண்ணத் தோன்றுகின்றது.

**தொடர்புகளற்ற இரண்டாவது அறிக்கை!**

இந்த அறிக்கை வெளிவந்து இரண்டு மாதங்களுக்குள், அதாவது 05.05.2015 இல், இந்த நிபுணத்துவக் குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கை வெளிவந்தது. இந்த அறிக்கையில்கூட சுன்னாகம் நிலத்தடி நீரில் ஒயில் கலந்துள்ளதா? என்பதற்கு விடையளிக்காது ஏற்கனவே சுன்னாகம் நிலத்தடி நீரில் ஒயில் கலந்துள்ளதென்று நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் செப்ரெம்பர் 2014இல் வெளியிட்ட அறிக்கை விஞ்ஞான ரீதியற்றது, அதன் கணிப்பீட்டில் தவறுகள் உள்ளன என்று தடித்த Bold எழுத்தில் குறிப்பிட்டது. இவர்களை நீரில் ஒயில்; இருக்கின்றதா எனப் பரிசீலியுங்கள் என்று கொடுக்கப்பட்ட பணிப்புரைய விடுத்து வேறு ஒரு நிறுவனத்தின் தவறுகளை அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர். அதுபோக நீர் வழங்கல் வடிகால் சபையின் அறிக்கையின் கணிப்புகளின் முறைமையில் (Methodology) தவறென்றால் இது தொடர்பாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையைத் தொடர்புகொண்டு கேட்டிருக்க வேண்டும். ஆனால் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையை அவ்வாறு கோரியதற்கான எந்தவித குறிப்புகளோ அல்லது ஆவணங்களோ நிபுணர் குழுவின் அறிக்கையிலோ அல்லது இணைப்புகளிலோ காணப்படவில்லை.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையை நான் தொடர்பு கொண்டு இது தொடர்பாக வின வியபோது தா... களை அவ்வாறு எவரும் விளக்க... கோரவில்லையென்றும், அவ்வா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

12.03.2017 முதல் 18.03.2017 வரை

உங்களுக்கு எப்படி?

## மேடம்

பெரும்பாலான கிரகங்கள் அளப்பரிய நன்மை தருவர். மனதில் நம்பிக்கை வளரும். சிரமமான சூழ்நிலைகளை சமயோசிதமாக சரி செய்வீர்கள். பணவரவில் முன்னேற்றம் இருக்கும். உடன்பிறந்தவர்கள் பாசம் கொள்வர். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். புத்திரர் படிப்பு, வேலையில் மேம்படுவர். இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். பயணங்கள் இனிய அனுபவம் தரும். மனைவி வகுத்து தரும் திட்டங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் பணிபுரிவர்.

## இடபம்

செவ்வாய், சுக்கிரன், சூரியனால் நன்மை உண்டாகும். உறவினர்கள் மதிப்பு மரியாதை தருவர். குடும்ப செலவுக்கான பணவரவு திருப்திகரமாக இருக்கும். உடன்பிறந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள் பிடிவாத குணத்துடன் நடந்து கொள்வர். உடல்நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். மனைவி அல்லது கணவர் வழியில் அதிர்ஷ்டகரமான பலன்களை எதிர்பார்க்கலாம். தொழில், வியாபாரத்தில் அரசு சார்ந்த உதவி கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து சலுகை பெறுவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளிலும் சிறந்து விளங்குவர்.

## மிதுனம்

புதன், ராகு, குரு, சனீஸ்வரர் வியத்தகு பலன் தருவர். மனதில் புத்துணர்வு ஏற்படும். தாமதமான பணிகளை எளிதில் நிறைவேற்றுவீர்கள். உங்களிடம், பலரும் நல்ல எண்ணங்களுடன் பழகுவர். சுற்றுலா சென்று வர வாய்ப்பு ஏற்படும். புத்திரர்கள் கேட்ட பரிசுப்பொருள் வாங்கித் தருவீர்கள். பூர்வ புண்ணிய பலன் பலவித நன்மைகளும் தரும். உடல்நிலை நன்றாக இருக்கும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். பெண்கள் குடும்பநலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## கடகம்

சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். பணிகளை நிதானமாக செய்வது பிரச்சினைகளைத் தவிர்க்கும். உடன்பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு வரலாம். ஆனால், செல்வ வளம் சிறப்பாக இருக்கும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற யோசனை சொல்வீர்கள். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும். வழக்கு, விவகாரத்தில் தீர்வு வர தாமதமாகலாம். மனைவி விரும்பிக்கேட்ட பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். தொழில், வியாபாரம் வளர சில மாற்றங்களைச் செய்வீர்கள். பணியாளர்கள் எதிர்பார்க்கும் சலுகைகள் கிடைத்து விடும்.



## சிங்கம்

புதன், சுக்கிரன் ஓரளவு நன்மை தருவர். எதிர்கால திட்டங்களை நல்லமுறையில் வகுப்பீர்கள். உங்களுக்கு வேண்டாதவர்களிடம் பேசி பிரச்னையை வரவழைத்துக் கொள்ளாதீர்கள். பணவரவில் ஓரளவே விருத்தி உண்டு. வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்களின் செயல்களில் கவனக்குறைவு ஏற்படலாம். சத்து நிறைந்த உணவு உண்டு, மகிழ்வீர்கள். நண்பர்களிடம் கடனாகக் கொடுத்தபணம் கிடைக்கும். மனைவியின் நற்செயல் குடும்பத்திற்கு பெருமை தரும். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு கூடும். பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரித்தாலும் சலுகை கிடைக்கும்.

## கன்னி

சூரியன், கேது, சனீஸ்வரர், குரு நற்பலன் தருவர். குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். பணவரவு அதிகரிக்க புதிய வாய்ப்பு வரும். உடன் பிறந்தவர்கள் பணஉதவி கேட்பர். புதிய வீடு, வாகனம் வாங்க, யோகம் உண்டு. புத்திரர்கள் உங்கள் சொல்லை மதித்து செயல்படுவர். மனைவியின் உடல்நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு நிர்வாகத்துடன் கருத்து மோதல் ஏற்படும். பெண்களுக்கு நகை பாதுகாப்பில் கவனம் வேண்டும். மாணவர்களுக்கு புதியவர் களின் நட்பு, நன்மை தரும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற யோசனை சொல்வீர்கள்.

## துலாம்

செவ்வாய், சந்திரன், புதனால் ஓரளவு நற்பலன் ஏற்படும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக செயல்படுவர். மன அமைதி குறையலாம். புத்திரர்கள் சில விடயங்களில், பிடிவாதமாக நடந்து கொள்வர். கடன் வாங்க நினைத்திருந்தால் இந்த வாரம் வாங்க வேண்டாம். மனைவியின் கருத்தை மதித்தால் பலன் உண்டு. தொழில், வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். பெண்கள் வீட்டுச்செலவுக்கு சற்று திண்டாடலாம். மாணவர்களுக்கு படிப்பில் அதிக கவனம் இருந்தால் தான், வெற்றி பெற இயலும்.

## விருச்சிகம்

சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். பிரியமானவர்களுக்கு உதவுவீர்கள். தாயின் வாழ்த்து கிடைக்கும். புத்திரர்கள் படிப்பு, செயல்திறனில் மேம்படுவர். குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். உடல்நிலை பேணுவதில் உரிய கவனம் வேண்டும். மனைவி விரும்பிக்கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணியாளர்கள் நீண்டநாளாக எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் உறவினர்களை உபசரிப்பர். மாணவர்கள் அக்கறையுடன் படித்து பாராட்டு பெறுவர். பயணங்கள் இனிய அனுபவம் தரும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்க, தாராள பணவசதி துணை நிற்கும்.

## தனுசு

குரு, சூரியன், சுக்கிரன், கேது வியத்தகு பலன் வழங்குவர். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பணவரவு அதிகம் பெற வழி பிறக்கும். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வாகனப் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். புத்திரர்கள் தங்கள் செயல்திறனில் பின்தங்கலாம். சொத்து ஆவணங்களை, பிறர் பொறுப்பில் கொடுக்க வேண்டாம். உடல்நிலை சீராக இருக்கும். மனைவியின் ஆலோசனையால் திட்டங்கள் விரைவில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் கடும் போட்டி இருந்தாலும் பொறுமையாக சமாளிப்பீர்கள். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் சிறப்பாக படித்து முன்னேறுவர்.



## மகரம்

செவ்வாய், சுக்கிரன், சனீஸ்வரர் சுப பலன்களை தருவர். ஆன்மிகசுற்றுலா சென்றுவர வாய்ப்புண்டு. உங்கள் செயல்திறன் வளரும். உடன்பிறந்தவர்களுக்கு மங்கள நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு. புதிய வாகனம் திட்டமிட்டபடி வாங்கலாம். புத்திரர்கள் உங்கள் சொல்லை மதித்து செயற்படுவர். உடல்நிலை சுமாராக இருக்கும். கணவன், மனைவி ஒற்றுமை சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி இருந்தாலும், லாபம் நன்றாக இருக்கும். பணியாளர்களுக்கு நிர்வாகத்தின் அனுசரணையால் நன்மை நடக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவுக்கு, போதுமானபணம் இருக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

## கும்பம்

குரு, சுக்கிரன், சந்திரன் நன்மை தருவர். புதியவர்களின் உதவி கிடைக்கும். நீண்டநாளாக வசூலாகாத கடன் ஒன்று வந்து சேரும். வீடு, வாகனம் வாங்க, யோகம் உண்டு. புத்திரர்களால் பிரச்னை இருந்தாலும் சமாளிக்கும் அளவே இருக்கும். பூர்வசொத்தில் பணவரவு கிடைக்கும். உடல்நிலை சுமாராக இருக்கும். கணவன், மனைவி கருத்து ஒற்றுமை ஏற்படும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு புதிய திட்டங்களை வகுப்பீர்கள். பணியாளர்களுக்கு கைநிறைய சலுகை கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் மேம்படுவர்.

## மீனம்

சுக்கிரன், புதன், ராகு அளப்பரிய பலன் தருவர். திட்டங்களை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து கூடும். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி வளரும். புத்திரர்கள் பொறுப்புடன் நடந்து கொள்வர். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். நண்பர்களின் அன்பு, மனதை நெகிழ வைக்கும். மனைவி வழிச் சார்ந்த உறவினர்களால், உதவி உண்டு. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து சேமிப்பு கூடும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்களுக்கு கணவரின் அன்பும், பணவரவும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொதேர்ண் பவர்....

(43ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோரியிருந்தால் தாங்கள் விளக்கமளித் திருப்போம் என்றும், தங்கள் கணிப்பீடு களில் எந்தவித தவறும் இல்லையென்றும் கூறினர். அவர்களுடைய விளக்கத்தைக் கேட்காமல், ஒருதலைப்பட்சமாக, அந்த அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்ட சுன்னா கம் நிலத்தடி நீரில் ஒயில் மாசு அளவிலும் பார்க்க மிகையாகக் கலந்திருப்பதென்பதை நிபுணர்கள் மறுத்துக் கூறியிருப்பது அவர் கள் வேறுஏதோ நோக்கத்துடன் செயற்பட் டார்களா என்ற சந்தேகத்தை வலுவடையச் செய்கின்றது.

**திரிபுகளும் தேவையற்ற ஒப்பீடுகளும்**

நிபுணர் குழுவின் முடிவான அறிக்கை 07 டிசெம்பர் 2015இல் வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் சுகாதார அமைச்சால் கொழும்பு அனுமதிக்கப்பட்ட குடி தண்ணீ ருக்கான ஒயில் மாசுத் தன்மையின் அளவு 2mg/L எனத் தெரிவித்து, அதனடிப்படை யில் நீரில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய அளவில் ஒயில் கலப்பில்லை எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது. அதேவேளையில் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் (Sri Lanka Standard Institute) அறிவிக்கப்பட்ட தரநிர்ணயத்தின் படி ஆகக்கூடிய அளவு ஒயில் மாசு 0.2 mg/L ஆகும். இவ்வாறாக இரண்டு அரச நிறுவ னங்கள் மாறுபட்ட தர நிர்ணயங்கள் அறி வித்திருக்கும் பட்சத்தில் எந்தத் தர நிர்ண யம் மக்களுக்குக் கூடிய சுகாதாரப் பாது காப்பை வழங்குமோ அந்தத் தர நிர்ண யத்தை அடிப்படையாகக் கொண்டு, நிபு ணர் குழு அறிக்கையைத் தயாரித்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக நிபுணர்குழு நொதேர்ண் நிறுவனத்தைக் காப்பாற்றும் நோக்கில், 2mg/L என்ற சுகாதார அமைச் சின் தரநிர்ணயத்தை ஏற்றுக் கொண்டிருப் பதை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்? இந்த விடயம் தொடர்பாக விசாரணை செய்து கொண்டிருக்கும் மல்லாகம் நீதிமன் றம் 0.2mg/l என்பதே ஏற்றுக்கொள்ளக்கூ டிய தர நிர்ணயம் என்று கட்டளை பிறப்பித் துள்ள தென்பதையும் இங்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

அத்துடன், நின்றுவிடாது நிபுணர் குழு அறிக் கையானது வெவ்வேறு அறிக்கைகளிலி ருந்து தரவுகளையும், அறிக்கைக் குறிப்புக்களையும் பிழையாக அல்லது திரி புபடுத்தித் தனது அறிக்கையில் சேர்த்திருக் கின்றது.

உதாரணத்துக்கு ஆஸ்திரேலிய புலம்பெயர் தமிழர்களால் பன்னிரண்டு கிணறுகளின் நீர் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு வெளியி டப்பட்ட அறிக்கையில் அந்தப் பன்னிரண்டு நீர்மாதிரிகளிலும் ஒயில் இருப்பதற்கான சான்றுகள் இல்லையென்றாலும், இந்தப் பன்னிரண்டு கிணறுகளில் ஒயில் இல்லை யென்பதை மட்டும் ஆதாரமாகக் கொண்டு சுன்னாகம் நிலத்தடி நீரில் ஒயில் கலப் பில்லை எனும் முடிவுக்கு வரமுடியாதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், நிபுணர்குழு அறிக்கையில் சுன்னாகம் நிலத்தடி நீரில் ஒயில் மாசு இல்லையென ஆஸ்திரேலிய புலம் பெயர் தமிழர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகப் பல தடவைகள் திரிபுபடுத்திக் கூறப்பட்டுள்ளது.

அதேபோல் ITI நிறுவனத்தின் அறிக்கையில் தாங்கள் பரிசீலித்த 54% ஆன கிணறுகளில் இலங்கை தரநிர்ணய நிறுவனத்தின் தரத்தி லும் பார்க்க ஒயில் மற்றும் கிறீஸ் காணப்பட் டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தும், அதைத் திரிவு படுத்தி 16% ஆன கிணறுகளில் மட்டுமே 2mg/L இற்கு மேலான ஒயில் மாசு இருப்ப தாகக் காட்டப்பட்டுள்ளது.

**பின்னணியிலுள்ள சூத்திரதாரிகள்**

எனக்கு லண்டனிலிருக்கும் இலங்கையர் ஒருவர் அனுப்பியிருக்கும் மின்னஞ்சலில் நொதேர்ண் பவர் நிறுவனத்தின் இயக்குநர் களில் ஒருவரான லண்டனில் வாழும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி ஒருவருக்கு எதிராக இலங்கையின் சுற்றுச் சூழ லைப்பா திக்கக்கூடிய நிறுவன மொன்றின் இயக்குந ராக இருக்கின்றார் என்று வழக்குத் தாக்கல் செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு, Wallers law group என்ற சட்டத்தரணிகள் நிறுவனம் இது தொடர்பாக அந்த நபரது காரியாலயத்தைத் தொடர்பு கொண்டபோது, இந்த விடயம் தொடர்பாக நிபுணர் குழு அறிக்கை ஒன்று வரவிருப்பதாகவும், அந்த அறிக்கை வரும்வரை வழக்குத் தாக்கல் செய்வதைத் தாமதப்படுத்தும்படியும் கேட் டுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவை எல்லாவற்றையும் வைத்துப் பார்க் கும்போது, நிபுணர்குழு அமைக்கப்பட்டது நொதேர்ண் பவர் நிறுவனத்தைக் காப்பாற் றுவதற்கே என்பதைக் கணிக்கக் கூடியதாக வுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜான் எலசன் அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சரைத் தொடர்பு கொண்டு, யாழ்ப்பாண மாவட்டக் குடி தண் ணீரில் மாசு கலந்துள்ளமை தொடர்பாக வினவியபோது,

வெளிவிவகார அமைச்சரால் கொடுக்கப் பட்ட பதிலில் (அந்தக் கடிதத்தின் பிரதி வடக்கு மாகாண சபையில் காண்பிக்கப்பட்டது) பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"இந்த வருடம் ஜுன் மாதத்தில் பிரித்தானிய உயர் ஆணையர் யாழ்ப்பாணத்துக்கு பய ணம் செய்து நீர் மாசடைந்திருப்பது தொடர் பாக முதலமைச்சரிடம் வினவியபோது, அதற்கு அவர் கடந்த காலங்களில் அவ்வாறு இருந்தமை ஓர் பிரச்சினையாக இருந்தா லும், தற்போது நீர் மாதிரிகளை வெளிநாடு களுக்கு எடுத்துச்சென்று - பரிசோதனை செய்து அவ்வாறில்லை என உறுதிப்படுத்தி யுள்ளார்"

வெளிநாடுகளுக்கு மாதிரிகளை எடுத்துச் சென்று பரிசோதித்தவர்கள் யார்? அவ்வாறு பரிசோதிப்பதற்கு அனுமதியளித்தவர்கள் யார்? இது தொடர்பாக முதலமைச்சர் விளக்க மளிக்க வேண்டும்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 462

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | | ■ | ■ | 10 | |
| ■ | 11 | | ■ | ■ | 12 | | |
| 13 | | | | | | | ■ |
| | ■ | | ■ | ■ | | ■ | 14 |
| 15 | | | | ■ | 16 | 17 | |
| | ■ | | ■ | 18 | | | ■ |

அனுப்புபவர் பெயர்:....................................

முழுமையான தபால் விலாசம்:..............................

..............................................................

கையொப்பம்:...........................................

**இடமிருந்து வலம்**

1. ஈரானின் பழைய பெயர்
4. புராதன/பழைய காலம்
6. வருவதற்கு
7. உறுதியும் கடினத் தன்மையும் கொண்ட
8. கோள்
10. வழக்குத் தொடுப்பவர்
11. (கண்கள் கண்ணீரால்) ஈரமாதல்
12. சிறு குன்று
13. (உடையிலுள்ள அழுக்குகளை சவர்க்காரம்) அகற்றி விடும்
15. கடவுளுக்கு ஒரு பெயர்
16. வேள்வி
18. நெருப்பு

**மேலிருந்து கீழ்**

1. செலுத்தப்பட வேண்டியிருக்கும் மீதி
2. இரட்டைக் காப்பியங்களில் ஒன்று
3. கை
4. பலர் கூடியிருக்கும் இடத்திலிருந்து எழும் சத்தம்
5. பலத்த சத்தத்துடன் வேகமாக என்பதை வெளிப்படுத்துவது
9. தகராறு/கலாட்டா
12. பொறுக்க முடியாத அளவுக்கு அதிகமான
13. விநாயகர்
14. பிரணவ மந்திரம்
17. ஏதாவதொன்றைக் கற்றுக் கொள்ளுமாறு வற்பு றுத்தல்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலா னோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 460 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சமர் (3) சிரமம் (5) பகு (6) தரி (7) தடியன் (9) துப்பு (10) யாப்பு (11) சனம் (12) ஏரல் (13) அக்கினி (14) தம் (15) வங்கி (16) வரகு (17) தின்

**மேலிருந்து கீழ்**

(1) சபதம் (2) மகுடி (3) சிரி (4) மதிப்பு (6) தன் (8) ஜன்னல் (9) துப்பாக்கி (11) சரம் (13) அங்கு (14) தம் (15) வர

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர். எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப்பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 460 இற்கான முற்றிலும் சரி யான விடைகளை எழுதி அனுப்பிய இரண்டு அதிர்ஷ்டசாலி களது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
விமலதாஸ் லவினா,
ஏழாலை கிழக்கு,
ஏழாலை

**2 ஆம் பரிசு**
கே. இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி
வட்டுக்கோட்டை.

சொற்சிலம்பம் போட்டி இல. 462 இல் வெற்றி பெறு வோர்களது விவரம் 26.03.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல. 462
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேசன்
(பிறைவேற்) லிமிட்டெட்.
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்.
(22.03.2017 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோ லைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி 460இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சிறிதும் கலப்படம் இல்லாத அப்பட்டமான உண்மைக்கதை

> எங்கட அம்மாவை அவை றேப் பண்ணினவை. அப்பாவையும் உடுப்புக் கழட்டிப் போட்டு அடிச்சவை. ரெண்டு பேரையும் தூணில கட்டிப் போட்டு மண்வெட்டிப் பிடியால அடிச்சுக் சாக்காட் டினவை என்று அந்த ஆமிக்காரன் நீதிமன்றத்தில சொன்னவர். அந்தப் பெண் முகத்தில் துளி சலனமில்லை. அந்த மனம் எத்தனை ரணப்பட்டிருந்தால், மீண்டும் மீண்டும் துன்பத்தால் வாடி வடுப்பட்டிருந்தால் இந்த நிலையை எட்டியிருக்கும் என்று என்னால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அம்மான்ர தோளில படுத்திருந்த தம்பியைரோட்டிலதூக்கிஎறிஞ்சவங்கள். நானும் தம்பியும் அண்டைக்கு இரவு முழுக்க ரோட்டிலதான் படுத்திருந்தனாங்கள்.

அவர் நிறுத்தியபோது எனக்குத் தலை கிறுகிறுத்தது. இத்தனை கொடூரங்களையும் கண்முன்னே பார்த்து வேதனையை அனுபவித்த ஒரு சிறுமி வளர்ந்துஇளம்பெண்ணாகஎன்முன் இருக்கின்றார் என்பதை என்னால் நம்ப முடியவில்லை.

அந்த இளம் பெண்ணிடம் சொல்வதற்கு இன்னும் மிச்சம் இருந்தது. ஆனால் இனியும் கேட்பதற்கு எனக்குத்துணிவிருக்கின்றதாஎன்கிறசந்தேகத்தில் என் இதயத் துடிப்பு எகிறியிருந்தது. உடல் ஒருவிதமாகப் பதறத் தொடங்கியிருந்தது.

அந்தப் பெண் கொஞ்சம் நேரம் எடுத்து, தன்னைஆசுவாசப்படுத்திக்கொண்டார். துயரத்தையும்- துன்பத்தையும் அவை தந்த பெரும் சுமையையும் மென்று விழுங்கிவிட்டு மீண்டும் தொடர்ந்தார்.

அம்மாவின்ர அப்பா, தச்சுத்தொழிலுக்காக எங்கட ஊருக்கு வாறவர். அடுத்த நாள் அவர் வந்து எங்கள கூட்டிக்கொண்டுபோகும் வரைக்கும்எவரும்இல்லாதஅநாதைகளா தம்பியும்நானும்நடுத்தெருவில கிடந்தம்.

அதுக்குப் பிறகு ஊரெழுவில் அம்மம்மா ஆக்களோடதான் நாங்கள் வளர்ந்தனாங்கள்.

அவரதுமொத்தச்சோகமும்கண்களில் தேங்கிக் கிடந்தது. என்னால் அந்தக் கனதியைப்பொறுக்க முடியவில்லை. இருட்டு உலகில் என்னை எவரோ அமுக்கிப் பிடித்துக்கொண்டது போல இருந்தது. அதற்குள் இருந்து திமிறி எழுந்து வெளியே வந்துவிடவேண்டும் என்று விரும்பினேன்.

"அதற்குப் பிறகு அப்பா அம்மாவுக்கு என்ன நடந்தது என்று விசாரிக்க வில்லையா" என்ற கேள்வியுடன் அந்த இருட்டைக் கடக்க முயன்றேன்.

"அம்மாவின்ர அப்பா போய் காம்பில கேட்டவர். அவங்கள் தாங்கள் பிடிக்கேல்லஎன்றுசொன்னவங்கள். பிறகு ஒரு ஆமிக்காரர் (செம்மணிப் புதைகுழிவழக்கின்சூத்திரதாரிஇராணுவக் கோப்ரல் சோமரத்தின ராஜபக்ச) ஆக்கள கடத்தினவர் எண்டு பிடிபட்டவர், அவர் நீதிமன்றத்தில சாட்சி சொன்னவர். அம்மாவையும் அப்பாவையும் கொன்று புதைச்சது என்று சொன்னவர். அவர்சொன்ன இடத்திலதோண்டி ஒரே கிடங்கில இருந்த ரெண்டு எலும்புக்கூடுகள எடுத்தவையள். அது எங்கடஅப்பா, அம்மாதான்என்றுஉறுதிப்படுத்திறதுக்காகஎன்னட்டையும்தம்பியிட்டையும் அம்மான்ர சகோதரங்களிட்டையும் ரத்தம் எடுத்தவை. ஆனா எதுவும் நடக்கேல்ல. கன தரம் திரும்பத்திரும்பரத்தம்எடுத்தவை. ஒருகட்டத்துக்குப் பிறகு அம்மம்மா, இதுக்குச் சம்மதிக்கேல்ல. அந்த நேரம்தான் எங்கட விசயத்தைபேப்பரிலபோட்டவிமல்ராஜ்யையும் (பத்திரிகையாளர் நிமலராஜனைக் குறிப்பிடுகிறார்) கொலை செய்தவை. அதோட நாங்களும் இந்த விசயத்தை அப்படியேவிட்டுட்டம்.

எங்கட அம்மாவை அவை றேப் பண்ணினவை. அப்பாவையும்உடுப்பைக் கழட்டிப் போட்டு அடிச்சவை. ரெண்டு பேரையும் தூணில கட்டிப் போட்டு மண்வெட்டிப் பிடியால அடிச்சுக் சாக்காட்டினவை என்று அந்த ஆமிக்காரன் நீதிமன்றத்தில சொன்னவன்.

அந்தப் பெண் முகத்தில் துளி சலனமில்லை. அந்தமனம்எத்தனைரணப்பட்டிருந்தால், மீண்டும் மீண்டும் துன்பத்தால் வாடி வடுப்பட்டிருந்தால் இந்த நிலையை எட்டியிருக்கும் என்று என்னால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

அவரிடம்தான்சொல்லிக்கொண்டிருக்கும்கதையின்உணர்வுப்பாதிப்புக்கள் இப்போது தெரியவில்லை: திரும்பத் திரும்ப எண்ணி எண்ணியே எல்லாமும் மரத்துப்போய் விட்டது என்பதை நமிர்ந்து அமர்ந்து தன்னைச் சமநிலைப்படுத்திக்கொண்ட அவரது உடல் மொழி சொல்லியது.

செம்மணிப்படுகொலைவழக்குத்தள்ளுபடி செய்யப்பட்டு, கைது செய்யப்பட்ட இராணுவத்தினர் அனைவரும் விடுவிக்கப்பட்டனர் என்றும் அவர் சொன்னார். அந்தவழக்குகிடப்பிலை கிடக்கிறதுஎன்பதுஅவர்அறியாததாய் இருக்கும். தன்னுடைய தாயையும் தந்தையையும் கொன்றார்கள் என்பதற்குத்தெளிவானசாட்சியங்கள்இருந்தபோதும்தண்டனை ஏதும்வழங்கப்படவில்லை என்பதைத்தான் அவர் அப்படிச் சொல்லாமல் சொன்னார்.

கொலை செய்த இராணுவத்தினருக்குத் தண்டனை கொடுக்கத் தேவையில்லையா என்று கேட்டால், "எங்களால் என்ன செய்ய முடியும்?" என்று திருப்பிக் கேட்கிறார்.

அந்த இளம்பெண்ணின் அம்மாவின் தந்தையார் இறந்த பின்னர், அம்மாவின் தாயார் தோட்ட வேலை செய்தே அவரையும் தம்பியையும் படிக்க வைத்தார். பின்னர் தானும் இடையில் தோட்ட வேலைக்குச் சென்று உழைத்தே தமது வாழ்வாதாரத்தை தேடிக்கொண்டார். இப்போது தையல் வேலையும்செய்கிறார். தம்பி, உழைப்பதற்காக டோகா நாட்டுக்குச் சென்றுவிட்டார். நடுவீதியிலிருந்ததங்களைக் காப்பாற்றி வந்து பாதுகாத்த அம்மம்மாவை இப்போது இவரும்தம்பியுமே பார்த்துக் கொள்கிறார்கள்.

2000ஆம் ஆண்டே தாய் தந்தை கொலைசெய்யப்பட்டுவிட்டார்கள்என்பது உறுதியாகத் தெரிந்திருந்தாலும் அவர்களின் உடல் எச்சங்கள் அடையாளம்காணப்பட்டிருந்தாலும்அச்சம் காரணமாக இதுவரை காலமும் இறப்புச்சான்றிதழ்க்கு விண்ணப்பிக்கவில்லை என்று அவர் சொன்னதை மனத்தில் ஏற்றிக்கொண்டேன்.

"காணாமற்போனோர் விடயத்தை அப்போது கிளற முற்பட்டவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். தாங்கள் இறப்புச் சான்றிதழ் கேட்டால் தங்களையும் சுட்டுவிடுவார்கள் என்று அஞ்சினார்கள் என்று சொன்னார்.

இது அறியாமையா அல்லது காலச் சூழலின்கொடூரமாகஎன்பதுஎனக்குப் புரியவில்லை. எனக்குஎன்னவென்று தெரியாதஒருசூழலின்உள்ளேவைத்து அந்தஇளம்பெண்ணைமதிப்பிடுவதை நான் விரும்பவில்லை.

ஆசிரியர்பீடத்துக்குத்திரும்பியதும் எங்கள் சுவடிப் பகுதியில் இருந்த பழைய பத்திரிகைக் கட்டுக்களைப் பிரித்தேன்.

செம்மணி உப்புக் காற்றில்கரைந்திருக்கும் குருதி வாடை பக்கங்களில் விரிந்தது. இன்று அந்த இடம் சில இளைஞர்களின் உல்லாசப் போக்கிடம். சிலருக்கு வயிற்றுப் பிழைப்புக்கான இடம். தெற்கிலிருந்து வருபவர்களுக்கோ அவர்களை யாழ்ப்பாணத்துக்குள் வரவேற்கும் இடம். ஆனால் அன்றுஅதுஒருபயங்கரங்களின்இடம். 1990ஆம் ஆண்டுப் பின்னர், யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. 1996ஆம் ஆண்டு அது இராணுவக் கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவரப்பட்டது. தற்போதுள்ள கூட்டாட்சிஅரசின்ரட்சகியும்நல்லிணக்க அலுவலகத்தின் தலைவருமான சந்திரிகாபண்டாரநாயக்ககுமாரணதுங்கவே அப்போதுஅரசதலைவராகப்பதவிவகித்தார்.

யாழ்ப்பாணத்தைக் கைவிட்டு, பின் வாங்கிய விடுதலைப் புலிகள் அதற்குப் பதிலடியாக முல்லைத்தீவு இராணுவ முகாமைத்தாக்கிஅழித்தார்கள். அதைத் தொடர்ந்துவந்தநாள்கள்யாழ்ப்பாணத்தின்இருண்டநாள்களாகத்தொடங்கின. எந்தப் பக்கம் திரும்பினாலும் இளம் ஆண்களும் பெண்களும் காணாமற்போயினர். பலர்நேரடியாகவேஇராணுவச்சுற்றிவளைப்புகளில்கைதுசெய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் என்ன ஆனார்கள் என்று தெரியாமல் போனது. வேலைக்குப்போனவர்கள்வீடு திரும்ப வில்லை. படிக்கச் சென்றவர்களைக் காணவில்லை. வீதியோர இராணுவச்சோதனைச்சாவடியில் நிறுத்தப்பட்டு மேலதிக விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டவர்கள் என்ன ஆனார்கள் என்று எங்குதேடியும் தகவலில்லை. இரவு வேளைகளில் இராணுவச்சீருடையுடன்இராணுவவாகனங்களில் வந்தவர்கள் சிங்களம் பேசிக் கொண்டு பிள்ளைகளை அள்ளிக் கொண்டு போனார்கள். தாய், தகப்பன் கண் முன்னே.

இதே காலப் பகுதியில் கைதடியைச் சேர்ந்த சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தியும் காணாமல் ஆக்கப்பட்டார். அவரைத்தேடிச்சென்ற குடும்பத்தினரும்மர்மமாகமறைந்துவிடுகின்றனர். அவரது உறவினர்கள் செல்வாக்குள்ளவர்கள்என்பதால்இந்தவிவகாரம் அரச தலைவர் வரைக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றது. விசாரணைக்கு உத்தரவிடப்படுகின்றது. விசாரணையில் இராணுவத்தினரே கிருசாந்தியை வீதிச் சோதனைச் சாவடியில் வைத்துக் கைதுசெய்துவன்புணர்வுக்குட்படுத்திக் கொலைசெய்தனர் என்பதும்அவரைத் தேடிச் சென்ற குடும்பத்தினரையும் கொன்றுபுதைத்தனர் என்பதும்-தெரிய வந்தது.

குற்றஞ்சாட்டப்பட்ட படையினரில் ஒருவர்சிப்பாய்சோமவன்சராஜபக்ச. இந்தக் கொலை வழக்கின் குற்றவாளி களுக்கு நீதிமன்றம் சாவுத் தண்டனை விதித்து. இளநீர் குடித்தவன் இருக்க கோம்பை சூப்பிய தனக்குத் சாவுத் தண்டனையா என்று வெகுண்டெழுந்த சோமவன்சராஜபக்ச, செம்மணிப்புதைகுழியின்சூத்திரத்தை அடையாளம் காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுக் காணாமற்போன நூற்றுக் கணக்கான இளைஞர்கள் இந்தச்செம்மணியிலேயேபுதைக்கப்பட்டார்கள்என்ற உண்மையை வெளிப்படுத்தினார். அதற்குஅடையாளமாகவிசாரணையின் முதல் நாளிலேயே இரண்டு சடலங்கள் புதைக்கப்பட்ட இடத்தை அடையாளம் காட்டினார். அதன் பின்னர் அவர் பல இடங்களை அடையாளம்காட்டினாலும் அவற்றில் சிலவற்றில் இருந்து மட்டுமே மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. 17 பேருடைய மனித எச்சங்கள் மீட்கப்பட்டி ருந்தன. காலப்போக்கில் அந்த விசாரணைகள் யாழ். மாவட்டத்துக்கு வெளியே மாற்றப்பட்டு அப்படியே கிடப்பில் போடப்பட்டன.

அதன் பின்னர் இறுதிப் போரின்போது, மேலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்று வரையில்தெரியாமலேயேஇருக்கிறது. அவர்களுக்கும்நடந்ததுஎன்னவென்று தெரிந்துகொள்ள அவர்களது உறவினர்கள் இப்போதுவீதியில்இறங்கிப்போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள். 1996இல் காணாமற்போனவர்களின் உறவினர்களோ கடந்த காலங்களில் போராடிப்போராடிஇப்போதுகளைத்து ஓய்ந்துபோய்விட்டார்கள். அவர்களில் சிலர்இப்போதுஇறப்புச்சான்றிதழைப் பெறவும் முன்வந்துவிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சாத்தியமில்லா வெற்றியை சாதித்தது பார்சிலோனா

நான்கு கோல்கள் பின்தங்கி, பின்னர் அதிலிருந்து மீண்டுவந்து, வெற்றிபெற்று, காலிறுதிக்குத்தகுதிபெற்று மிரட்டியுள்ளது பார்சிலோனா. ஐரோப்பிய கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. காலிறுதிக்கு முந்தைய சுற்றில் (16 அணிகள் விளையாடும் சுற்று) ஸ்பெய்னின் பார்சிலோனாவும் பிரான்ஸின்பாரிஸ்செயின்ட்ஜேர்மன் அணிகளும்பலப்பரீட்சைநடத்தின. ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் தலா இரண்டு முறை மோதவேண்டும் என்பதே விதி. பார்சிலோனாவின் மைதானத்தில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில், 4:0 என்ற கோல் கணக்கில் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி வெற்றிபெற்றது.

இரண்டாவது ஆட்டம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதில் 5 கோல்கள் வித்தியாசத்தில் பார்சிலோனா வென்றாலேயே அந்த அணி காலிறுதிக்குத் தகுதிபெறும் என்ற நெருக்கடி இருந்தது. அவ்வாறான ஓர் வெற்றிக்கு வாய்பப்பில்லை என்பதால், பார்சிலோனா காலிறுதிக்குத் தகுதிபெறாமல் வெளியேறும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 6:1 என்ற கோல் கணக்கில் இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற்று பார்சிலோனா அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

பிரகாஸ்



## மக்ஸ்வெல் சாதிப்பாரா?

நடப்பு வருட ஐ.பி.எல். தொடருக்கான பஞ்சாப் அணியின் தலைவராக அதிரடி வீரர் கிளென்மக்ஸ்வெல்நியமிக்கப் பட்டுள்ளார். அவர் தலைமையில் பஞ்சாப் சரிவில் இருந்து மீளுமா என்பது ஐ.பி.எல். ஆர்வலர்களின்எதிர்பார்ப்பாக உள்ளது.

கடந்த வருடம் பஞ்சாப் அணி மிகவும்மோசமானபெறுபேறுகளை வெளிப்படுத்தியது. தொடரின்ஆரம்பத்தில்அணித் தலைவராகப் பெயரிடப்பட்டிருந்த தென்னாபிரிக்க வீரர் மில்லர், தொடரின் இடையே இடைநிறுத்தப்பட்டு இந்திய வீரர்முரளிவிஜய்தலைவராக்கப்பட்டார். எனினும்எந்தவித பயனும் கிடைக்கவில்லை. 8 அணிகளில் எட்டாவது அணியாகவே பஞ்சாப் வந்தது.

தற்போது அந்த அணி ஆஸ்திரேலிய சகலதுறை வீரரான மக்ஸ்வெல்லைதலைவராகப் பெயரிடப்பட்டுள்ளது. தலைமைத்துவத்தில் அனுபவம் குறைந்தஅல்லதுஅனுபவமற்றவராகவே மக்ஸ்வெல் உள்ளார். எனவே அவரின் தலைமையில் பஞ்சாப் என்னசெய்யப்போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.



## ஆஸிக்குப் பின்னடைவு

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அடுத்த இரு ஆட்டங்களும் முக்கியத்துவம் வாய்ந்தன என்று கருதப்படும் நிலையில், அந்த ஆட்டங்களில் இருந்து ஆஸ்திரேலியாவின் சகலதுறைவீரர்களானஸ்ராக், மிச்செல்மார்ஷ் இருவரும்காயம்காரணமாக விலகியுள்ளனர். இது ஆஸ்திரேலிய அணிக்கு பெரும் பின்னடைவே.

நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக, ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. முதலாவது ஆட்டம் புனேயில்நடைபெற்றது. இதில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டம் பெங்களூரில் நடைபெற்றது. இதில் இந்தியா வெற்றிபெற்றது. தற்போது இரு அணிகளும் 1:1 என்ற நிலையில் உள்ளன. அடுத்த ஆட்டம் ராஞ்சியில் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தஆட்டத்தில் வெற்றிபெறும் அணி தொடரை இழக்க வாய்ப்பில்லை என்பதால் மிக முக்கித்து வமுடையதாக மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் அமைந்துள்ளது.

இருஅணிகளும்தீவிரவலைப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. அவ்வாறு வலைப்பயிற்சியில் ஈடுபடும் போது ஏற்பட்ட காயம் காரணமாக ஆஸ்திரேலியாவின் சகலதுறை வீரர்களான ஸ்ராக் மற்றும் மிச்செல் மார்ஷ் இருவரும் விலகியுள்ளனர். அவர்களின் விலகல் ஆஸ்திரேலியாவுக்கு பெரும் பின்னடைவே. ஏனெனில் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெறுவதற்கு ஸ்ராக் முக்கிய காரணியாகத் திகழ்ந்தார். மிச்செலும் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினார். இவர்கள் இருவரினதும் இடத்தைப் பிரதியீடு செய்பவர்கள் , இவர்களைப் போன்ற பெறுபேறுகளை வெளிப்படுத்துவது சந்தேகமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கியின் யாழ். மாவட்டக் கிளைகளின் ஏற்பாட்டில் பன்னாட்டு மகளிர் தினக் கொண்டாட்டங்கள் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இலங்கை வங்கியின் வட மாகாண உதவிப் பொதுமுகாமையாளர் எம்.ஜே.பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், விருந்தினர்களாக மருத்துவர் திருமதி திருமகள் சிவசங்கர், திருமதி மஞ்சுளா யூட் வோல்ரன், இலங்கை வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் சேதுகாவலர், இலங்கை வங்கியின் யாழ்.மேற்றரக்கிளை பிரதான முகாமையாளர் திருமதி.சு.பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ)







கம்பர்மலை வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி-அதிபர் வ.ரமணசுதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. முதன்மை விருந்தினராக சிவன் அறக் கட்டளை நிறுவன ஸ்தாபகரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் கொள்கை பரப்புச் செய லாளருமான கணேஸ்வரன் வேலாயுதம் கலந்துகொண்டதோடு வெற்றிபெற்ற மாண வர்களுக்கு பரிசுகளும் வழங்கி வைத்தார். (108)





பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி அதிபர் தர்மலிங்கம் முகுந்தன் தலைமையில் நடைபெற்றது. முதன்மை விருந்தினரான வடமாகாண கல்விப்பணிப்பாளர் எஸ் உதயகுமார் உட்பட மற்றும் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் நிகழ்வுகளையும் காணலாம். (10)





சங்கானைப் பிரதேச செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டுக்கான பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான எல்லே போட்டியின் இறுதி ஆட்டத்தின் சுழிபுரம் விக்ரோரியன்ஸ் அணியினரும் மூளாய் விக்ரோறி அணியினரும் போட்டியிட்டு இவ் வருடமும் மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழக அணியினர் சம்பியன் பட்டத்தை தட்டிக் கொண்டனர். கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் இடம்பெற்ற தேசிய மட்ட பண்ணிசை போட்டியிலே மூளாய் ஞானஒளி அறநெறிப் பாடசாலை மாணவர்கள் குழுப்பாடலில் தேசிய மட்டத்தில் 3 ஆம் இடத்தை தட்டிச் சென்றனர்.





மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை இல்லமெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் பாட சாலை மைதானத்தில் நடைபெற்றன. நிகழ்வின் விருந்தினர்கள் அழைத்து வரப்படு வதையும் இடைவேளை நிகழ்வான இசையும் அசைவும் நிகழ்வும் இவ்வருடத்திற்கான சிறந்த வீர வீராங்கனைகளுடன் விருந்தினர்களும் பாடசாலையின் அதிபர் ஆசிரியர்களும் காணப்படுகின்றனர். (ஜ)



மாதகல் சென் யோசப் மகாவித்தியாலய மாணவர்கள் யாழ்ப்பாண மாவட்ட சுற்றாடல் முன்னோடிப் படையணி போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்றனர். அவர்களுக்கான [illegible] விழாவில் அதிபர், ஆசிரியர்களுடன் வெற்றி பெற்ற மாணவர்கள். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| கொள்ளளவு | 9000btu | 12000btu | 18000btu | 24000btu |
|---|---|---|---|---|
| சாதாரண விலை | ரூ.114,990 | ரூ.124,990 | ரூ.204,990 | ரூ.224,990 |
| விசேட விலை | ரூ.89,990 | ரூ.114,990 | ரூ.194,990 | ரூ.209,990 |
| வட்டியற்ற தவணை | ரூ.6,099 | ரூ.6,626 | ரூ.10,836 | ரூ.11,889 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1930.11.21

மறைவு
2014.02.14

## இராசக்கோன் குழந்தைவேலு

(ஓய்வு நிலை அதிபர், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்)

ஆயிரம் பிறைகள் கண்ட எங்கள் ஐயா ஆண்டவன் திருவடியில் சரணடைந்து
ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும்
நேசமுடன் உம் நினைவில் வாழ்கின்றோம்.
நித்தமும் உன் செயல்களையே எண்ணி எண்ணி
பகலிரவைக் கழித்தாலும் - நின் பாசத்திற்கு ஈடில்லையே ஐயா
ஓயாமல் உன் நினைவைச் சுமந்து நின்று
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

154/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சர்மிளா விஜயரூபன்



புளியங்கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சர்மிளா விஜயரூபன் (10.03.2017) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் விஜயரூபனின் அன்பு மனைவியும் ஆரணன், ஆகாஷ் ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் கந்தலிங்கம் - யோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் சாருலதா, சாந்தகுமார், சசிகலா, யோகேஸ்வரி, கிருபாளினி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காந்தரூபன், சிவரூபன் காலஞ்சென்ற கேமா, ஞானேந்திரம், மனோகரன், சத்தீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2017) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுருவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புளியங்கூடல் தெற்கு,**
**ஊர்காவற்றுறை.**

தகவல்
குடும்பத்தினர்.

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1980.03.20 | 2017.03.10 |

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் இராஜசேகர் (சேகர்)



பிறவுண் வீதி, கலட்டியைப் பிறப்பிடமாகவும், இராமநாதன் வீதி, கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராஜசேகர் (சேகர்) 10.03.2017 வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் திரவியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் கபிலாஸ் (சுவிஸ்), சசீபன், கஜன்ராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வித்தியா (சுவிஸ்), தீபிகா, யசிந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் சயித் (சுவிஸ்), ஜனிஸ், கத்தீஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ரஞ்சினி, ராஜேஸ் கண்ணா, ராஜ்குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் விஜயரஞ்சன், மேரிகிஷாணி, கனகரத்தினம் காலஞ்செனற் கந்தசாமி, குணரத்தினம், இராசரத்தினம், பரமேஸ்வரி, வாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**76/59A, இராமநாதன் வீதி,**
**கலட்டி, யாழ்ப்பாணம்.**

தகவல்:
குடும்பத்தினர்.

### கூட்டமைப்பின்...

சந்திப்பு நடத்தியது. அத்துடன் தமது கட்சித் தலைவரை மேற்படி கூட்டத் துக்கு அழைக்காமை தொடர்பிலும் அந்தக் கட்சி கரிசனை வெளியிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் நேற்றுக் காலை 10.10 ஆரம்பமாகி மாலை 4.15 மணிக்கு முடிவுற்றது. கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் அந்தப் பகுதியில் சிறப்பு அதிரடிப் படையினர் சோதனை நடத்தினர். கூட்டத்துக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வரவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்குக் கால அவகாசம் வழங்குவதா இல்லையா என்பது தொடர்பிலேயே நீண்ட விவாதம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தை முன்னரே கூட்டியிருக்கவேண்டும் என்று பலர் கருத்து வெளியிட்டனர். அப்படிக் கூட்டத்தை நடத்தியிருந்தால், ஐ.நா. ஆணையாளருக்குக் கடிதம் அனுப்பி ஒரு சிலர் தியாகிகளாகியிருக்க வேண்டியதில்லை என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. கால அவகாசம் வழங்கிவிட்டு மக்கள் முன்னிலையில் செல்லமுடியாது என்றும் ஒரு சில உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் அனுப்பப்பட்ட மின்னஞ்சலை வாசிப்பதாகத் தெரிவித்து அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மின்னஞ்சல் ஒன்றை வாசித்துள்ளார். அதில், அமெரிக்கத் தூதுவர் கெசாப் தன்னிடம் (முதலமைச்சரிடம்), இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கக் கூட்டமைப்புத் தயார் என்று எம்.ஏ.சுமந்திரன் ஜெனிவாவில் கூறிவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளார். இந்தத் தகவலை கூட்டத்தின் முடிவில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மறுத்துள்ளார்.

இலங்கை அரசு விடயங்களை 'கால அட்டவணையில்' நிறைவேற்றத் தவறினால் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டபோது அதனைக் காலக் கிரமத்தில் என்று மாற்ற முதலில் பரிந்துரைக்கப்பட்டது. பின்னர் அதனைத் தகுந்த பொறிமுறையின் ஊடாக என்று மாற்றித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ந.சிவசக்தி ஆனந்தன், கால அவகாசம் வேண்டாம் என்று சில தினங்களுக்கு முன்னர் கடிதம் அனுப்பிவிட்டு அதனை மறுக்கும் வகையில் செயற்பட முடியாது என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இது தொடர்பில் எமது கட்சியின் தலைவருடன் பேசி முடிவெடுக்க வேண்டும். எமது கட்சியின் தலைவரை (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன்) இங்கே நீங்கள் அழைக்கவில்லை. நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் அல்லாத இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆள்கள் இங்கே இருக்கின்றனர். எமது கட்சித் தலைவரை அழைத்திருக்கலாம். கூட்டமைப்பின் முடிவுடன் எம்மால் உடன்பட முடியாது என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர், கூட்டத்தில் நடைபெற்ற முடிவுகளை, கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன், பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பத்திரிகையாளர் சந்திப்பில் வைத்துத் தெரிவித்தனர். இதன் பின்னர் தனியாக ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் உறுப்பினர்கள் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தினர். (த-5)

# மரண அறிவித்தல்

## திருமதி பராசக்தி சச்சிதானந்தசிவம்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி சச்சிதானந்தசிவம் நேற்று (11.03.2017) சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சைவப்புலவர் சச்சிதானந்தசிவத்தின் அன்புமனைவியும் இரத்தினசபாபதி பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பரமகுருவின் மைத்துனியும் நிர்மலாதேவி, சத்தியபாமா, ஸ்ரீதரன் (லண்டன்), சுலோசனாதேவி (ஆசிரியை, ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும் சுந்தரமூர்த்தி (தியாகி அறக்கொடை நிலையம்), பாலகுமார் (தபாலகம் யாழ்ப்பாணம்), புவனேஸ்வரி, சசிதரன், ரவிவர்மன் (APEX) ஆகியோரின் அன்பு மாமியும் பகுறூபா, ஜெயறூபா, சிவறூபா ஆகியோரின் பெரியம்மாவும் கபிலன் (விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), தசாங்கன் (யூனியன் வங்கி சுன்னாகம்), தர்சிகா, அபிஷாயினி, மகிஷாயினி, கவிஷாயினி, பிரதக்சனா, எயிலன், ஈகன், ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் பிரமாத்மிகாவின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 4 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### தமிழகப்....

தேவாலய வருடாந்தத் திருவிழா இந்த முறை சோபையிழந்துள்ளது. தமிழகத்தில் இருந்து எவரும் கச்சதீவுக்கு வரவில்லை.

கடல் எல்லையில் இந்திய மீனவர் ஒருவர் சில தினங்களுக்கு முன்னர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார். துப்பாக்கிச் சூடு நடத்தியது இலங்கைக் கடற்படைதான் என்று இந்திய மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இலங்கைத் தரப்பு அதனை மறுத்துள்ளது. எனினும் குற்றச்சாட்டைக் கூறும் தமிழக மீனவர்கள் இந்தமுறை கச்சதீவு செல்வதைப் புறக் கணிக்கப் போவதாக ஏற்கனவே தெரிவித்திருந்தனர். அதன்படியே அவர்கள் கச்சதீவுத் திருவிழாவைப் புறக்கணித்தனர்.

இலங்கையில் இருந்து வழக்கம்போல யாத்திரிகர்கள் நேற்றுப் பிற்பகல் தொடக்கம் தனியார் மற்றும் கடற்படையின் படகுகளில் கச்சதீவை வந்தடைந்தனர். குறிகாட்டுவான் துறையில் இருந்து புறப்பட்ட படகுகள் மூலம் அவர்கள் கச்சதீவை அடைந்தனர். இரவு 9 மணியளவிலும் படகில் பக்தர்கள் கச்சதீவுக்கு சென்றிருந்தனர். கச்சதீவுக்கு இந்தமுறை சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சென்றிருந்தனர்.

நேற்று மாலை பூசை வழிபாடுகளுடன் சிலுவைப் பாதை நடைபெற்றது.

வழக்கமாகத் தமிழகத்தில் இருந்து 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் பேர் வரையிலானோர் நிகழ்வில் கலந்துகொள்வார்கள். அவர்கள் மீன்பிடிப் படகுகளில் வந்து அந்தோனியாரைப் பக்தியோடு தரிசித்துச் செல்வார்கள்.

அதனால் இந்திய மற்றும் ஈழத் தமிழர்களின் கலாசார நிகழ்வாக கச்சதீவு கடந்த சில ஆண்டுகளாக வளர்ந்து வந்தது. இரு பகுதி தமிழ் உறவுகளும் ஒருவரை ஒருவர் நட்புப் பாராட்டிக்கொள்ளவும் அன்பைப் பரிமாறிக்கொள்ளவும் அது களம் அமைத்து வந்தது. ஆனால் இந்தத் தடவை ஒட்டுமொத்த அன்பும் முறிந்துள்ளதாகத் தாம் உணர்கின்றனர் என்று ஆலயத்துக்கு வந்திருக்கும் தமிழர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்திய மீனவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கச்சதீவுக்குப் போகமாட்டோம் என்றும் ஏனையவர்கள் செல்வதற்கு வசதியாக தமது படகுகளையும் அனுப்ப மாட்டோம் என்றும் அவர்கள் மறுத்துவிட்டனர். அதனால் தமிழகத்தில் இருந்து மக்கள் எவரும் வரவில்லை. அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து கத்தோலிக்க குருமாரும் வருகை தரவில்லை.

இதனால் வழக்கமான சோபையை இழந்த நிலையிலேயே கச்சதீவுத் திருவிழா நடக்கிறது. இன்று காலை 6.30 மணியளவில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுத்தலுடன் விழா நிறைவுக்கு வரும். இந்தத் திருப்பலியை வழக்கமாக இலங்கை இந்தியக் குருமார் இணைந்தே நடத்துவார்கள். போர்க் காலத்தில்கூட தமிழகக் குருமார்கள் வருகை தந்திருந்தனர். நேற்றைய திருப்பலியை யாழ்ப்பாணக் கத்தோலிக்க குருமார்களே நிகழ்த்தி உள்ளனர்.

கச்சதீவில் சிவிலுடையிலும் சீருடையிலும் பொலிஸாரும் கடற்படையினரும் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (த-48)

### பன்னாட்டு...

கையெழுத்திட்டனர்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த நடிகர் சத்யராஜ், இலங்கைப் பிரச்சினைப் போராட்டத்தில் இளைஞர்களால் மட்டுமே வெற்றி அடைய முடியும் என்றும், சமூக வலைதளங்கள் மூலம் மாணவர்கள் ஒன்றிணைந்து போராடவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். இதைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த, திராவிடர் கழக தலைவர் வீரமணி, இலங்கை அரசு பன்னாட்டு நீதி விசாரணையை எதிர் கொள்ளத் திராணியில்லாமல் தொடர்ந்து ஏமாற்றி வருவதாகவும், இலங்கைக்குக் கால அவகாசம் வழங்காமல் உடனடியாக விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் எனவும் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

**திருக்கோயில் பொருள்கள் விற்பனைக்குண்டு**



ஆலய நிர்மாண பிம்பலஷணம் காஸியப்ப சிற்ப சாஸ்த்திரம்
சிற்பச்செந்நூல் சிற்பரத்தினாகரம் விஸ்வகர்ம குலத்தினரால்
வடிவமைக்கப்பட்ட செப்புத் திருமேனிகள் சிலாவிக்கிரகம் கலசங்கள்
துவாஜஸ்தம்பம் திருவாசிகள் சோட உபசாரங்கள் தேர்யாகசாலை
அலங்காரப்பொருள்கள் முதலான அனைத்து சிற்பப்பொருள்களும்
தியான முறைப்படி செய்துகொடுக்கப்படும்.


**விஸ்வகர்மா சிற்பக்கூடம் விஸ்வஸ்ரீ - தியாகராஜா ஆச்சாரி ரவிசங்கர்**
**208 P- 1/1 செட்டியார் தெரு, கொழும்பு - 11**
**077 900 6584** Email- VKS Centre@gmail.com

# மரணஅறிவித்தல்

## மாணிக்கம் வெற்றிவேல்

(B.Sc(Ceylon), P.G Dip Ed)

ஓய்வு நிலை பௌதிகவியல் ஆசிரியர், யாழ்ப்பாணக்கல்லூரி - வட்டுக்கோட்டை, முன்னாள் பௌதிகத்துறைத் தலைவர், சென்தோமஸ் கல்லூரி கல்கிசை, முன்னாள் பௌதிகவியல் போதனாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் திறந்த பல்கலைக்கழகம்



பன்னாலை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் வெற்றிவேல் (ஓய்வு நிலை ஆசிரியர்) 03.03.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் (முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர் - மலேசியா) - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை (முன்னாள் பல்மருத்துவர் - தெல்லிப்பழை) - மாமாங்கம் தம்பதியரின் மருமகனும் சகுந்தலாதேவியின் (தெல்லிப்பழை) அன்புக் கணவரும் சக்திவேல் (ஆங்கில இலக்கிய ஆசிரியரும் - சித்தமருத்துவரும்) அன்புத் தந்தையும் இரத்தினசிங்கம் (முன்னாள் இரசாயணி, மலேசியா) காலஞ்சென்ற சத்தியபாமா மற்றும் திருநாவுக்கரசு (முன்னாள் ஆய்வுகூட உத்தியோகத்தர் - மலேசியா), அமரர் சத்தியமூர்த்தி(மலேசியா) மற்றும் சத்தியஞானலட்சுமி, சத்தியபாலதேவி (முன்னாள் ஆசிரியர்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த 03.03.2017 வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் 'தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:

**தற்போதைய முகவரி**
**டச்சுவீதி சந்தி,**
**சித்தன்கேணி.**

**வெ.சகுந்தலாதேவி (மனைவி)**
**வெ.சக்திவேல் M.Sc (மகன்)**
**(சித்தமருத்துவர் - தெல்லிப்பழை)**

# மரணஅறிவித்தல்

## குழந்தைவேல் குலரட்ணம் (குலம்)



நவாலியைச் சேர்ந்த குழந்தைவேல் குலரட்ணம் (குலம்) 10.03.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேல் - மீனாம்பிகை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான கலாவதி, உஷா மற்றும் குலேந்திரன், வித்யா, ரவி, ரூபன், சித்ரா, ஜமுனா, கங்கா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான அதிஷ்டரட்ணம் (BOBY), பிரபா மற்றும் லீலா, அனுஷியா, ஆன், ஜெய், ராஜேந்திரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மகேசர் வீதி,**
**நவாலி வடக்கு, மானிப்பாய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 350 4121**

AJA CS 1948 (11.3)

# சிந்தனைகளின் தோற்றுவாயாக விளங்க வேண்டும் பாடசாலைகள்

### வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

"இப்போது மாணவர்களின் சிந்தனைகள் மாற்றம் பெற்று வருகின்றன. அன்றைய கல்வியின் மகத்துவம் இன்றில்லை. அதனால் சிறந்த சிந்தனைகளின் தோற்றுவாயாகப் பாடசாலைகள் விளங்க வேண்டும்."

இவ்வாறு வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தெரிவித்தார். குட்டியப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் பாடசாலையின் நிறுவுனர்களில் ஒருவரும் முதல் அதிபருமான ஹென்றியின் உருவச்சிலை திரை நீக்கம் செய்யும் நிகழ்வு நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது; நல்லதொரு சமூகத்தின் சிருஷ்டி கர்த்தாக்கள் மாணவர்களே. சிறந்த சிந்தனைகளின் தோற்றுவாயாக விளங்கும் கிராமங்களிலுள்ள மாணவர்கள் முன்னுதாரணமாகத் திகழ வேண்டும். இந்தப் பாடசாலை பின்தங்கிய பிரதேசத்திலுள்ள சிறுவர்களின் எதிர்கால நலன்கருதி தூர நோக்கோடு அமைக்கப்பட்டது. மிகத் துரிதகதியில் வளர்ந்துவரும் இந்தப் பாடசாலை ஏனைய பாடசாலைகளுக்குச் சமமாக கல்வி, விளையாட்டு, இணைபாடவிதானச் செயற்பாடுகள் என எல்லாவற்றிலும் தன் முத்திரையைப் பதிக்க வேண்டும். பாடசாலைகள் பண்பாடு, கலாசாரங்களை பேணுபவைகளாக இருக்க வேண்டும். இங்கே கற்ற பலர் அரச உத்தியோகத்தர்களாக இருப்பது மகிழ்ச்சிக்குரியது. எம்மால் வழங்கக் கூடிய அனைத்து வளங்களையும் நாம் வழங்குவோம்.

பாடசாலைச் சமூகம் சிறந்ததொரு சமூகத்தை உருவாக்க வேண்டும் - என்றார். (ந-10)

## Dubai Job 2017 வேலை வாய்ப்பு

**Hotel Works**
**Car Company**
**Flower Shop**
**Driver (Sirlanka license)**
**Cook and Helper**

மற்றும் கல்வி தகைமைகளுக்கு ஏற்ப ஆண்,பெண் இருபாலாருக்கும் வேலைவாய்ப்பு உண்டு.
சம்பளம் (48000/–தொடக்கம் 120,000/- வரை)
உணவு/தங்குமிடம்/போக்குவரத்து இலவசம்.

தொடர்புகளுக்கு - இலங்கை, 075 4699 004 , 072 425 2240
டுபாய் - 009 7150 80 96517
Whatapp/imo/Viber, 009 715 525 48955
WWW.dubai job.lk(Web Side)

## இளைஞர் யுவதிக்கான புதியதொரு வாய்ப்பு

யாழ் மாவட்டத்தில் இயங்கி வரும் எமது கம்பனியானது பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக புதிய நபர்கள் தெரிவு செய்யப் படவுள்ளனர்.
முன் அனுபவம் தேவையில்லை தங்குமிட வசதிகள் ஒழுங்கு செய்து தரப்படும். ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் உடனடியாக தொடர்புகொள்ளவும். தகுதிக்காண் காலத்தின் பின்னர் எமது கம்பனியில் நிரந்தர வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு - 077 517 9034, 077 695 3242**

## உடனடி வேலைவாய்ப்பு

உதவியாள்கள் தேவை.
யாழ் நகரில் இயங்கும் முன்னணியான ஆய்வுகூடத்திற்கு ஆண் உதவியாள்கள் தேவை. : தகைமைகள்

* க /பொ /த சாதாரண தரம்.
* சாரதி அனுமதி பத்திரம்
* வயதெல்லை 25-40
* முன் அனுபவம் தேவையில்லை
* கவர்ச்சிகரமான சம்பளம்
* மேலதிக சலுகைகள்

**உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.**
**021 4641 641**
**514, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

Mega Carear fair 2017

இலங்கையில் முதல்
தடவையாக பெண்களுக்கான
அழகுக் கலைக் கல்லூரி

# ஒளி அழகன் ஸ்ரூடியோ

# British College of Beauty Studies

இணைந்து நடத்தும்

# Womens Day Celebration

சாதனைகளோடு சரித்திரம்
படைக்க கடவுளால்
படைக்கப்பட்ட கற்பக விருட்சம்
தான் பெண்கள்

அனுமதி இலவசம்

- கல்வி வழிகாட்டல், கருத்தரங்கு, பெண்களுக்கு பொருத்தமான துறை சம்பந்த மான கலந்துரையாடலும் இடம்பெறும்.
- எங்கள் கல்லூரி மாணவர்களுடைய நடன நிகழ்வும் இடம்பெறும்.
- வருகை தரும் அனைவருக்கும் சுவாரஸ்யமான நிகழ்வுகளும், பரிசில்களும் காத்திருக்கின்றன.
- பெண்களே இது உங்களுக்கு மட்டுமான கல்லூரி.
- வயதெல்லை கிடையாது. பெண்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



Note: பெண்கள் மட்டும் வருகை தரவும்
**இடம் : வீரசிங்கம் மண்டபம்**
**நேரம் : 10.00Am - 2 00 Pm**
**திகதி : 12.03.2017**

வருகை
தருபவர்களுக்கு
Gift boucher
வழங்கப்படும்.

உதயன்

# ஆறு பாடசாலைகளில் டெங்குக் கட்டுப்பாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவில் நேற்று சனிக்கிழமை ஆறு பாடசாலைகளில் டெங்கு தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் மற்றும் யூனியன் அஷூரன்ஸ் நிறுவனமும் இணைந்து இந்த விழிப்புணர்வுக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட்டன.

மாநகர கழிவகற்றும் பொறியியல் பிரிவினரின் உதவியுடன் பாடசாலைச் சுற்றாடலில் இருந்த திண்மக் கழிவுகள் யாவும் தரம் பிரிக்கப்பட்டு அகற்றப்பட்டன.

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, பரியோவான் கல்லூரி, சென். ஜேம்ஸ் வித்தியாலயம் , சென்பற்றிக்ஸ் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் இந்த டெங்கு விழிப்புணர்வுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெற்றன. (ந-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சிகள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## யாழ்...

விருந்த நிலையில் பல்கலைக் கட்டடம் ஒன்றின் ஜன்னல் கண்ணாடிகள் நேற்றுமுன்தினமிரவு அடித்து நொறுக்கப்பட்டன. இதனால் நேற்றைய நிகழ்வு இழுபறியுடன் நடந்தேறியதோடு கலைப்பீடத்தின் 2 துறைகளைத் தவிர்ந்த ஏனைய துறைகள் மூடப்பட்டன. மாணவர்களை வெளியேறுமாறும் துணைவேந்தர் அறிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு பல மாதங்களுக்கு முன்னரே இடம்பெற்றிருக்கவேண்டும். எனினும் மாணவர்கள் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதால் அது இடம்பெறவில்லை. நேற்று அந்த நிகழ்வை நடத்துவது என்று மாணவர்களால் நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டது.

அதற்கான ஏற்பாடுகள் நேற்றுமுன்தினமிரவும் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர் சிற்றுண்டிச்சாலை அமைந்துள்ள கட்டடத் தொகுதியின் மேல்மாடியில் இந்த நிகழ்வு நடத்த ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன.

இந்தநிலையில் நேற்றுமுன்தினமிரவு விஞ்ஞான பீடம் அமைந்துள்ள பக்கமாக உள்ள மகேஸ்வரன் மண்டப கட்டடத் தொகுதியின் ஜன்னல் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டன. யார் அடித்து நொறுக்கினார்கள் என்பது தமக்குத் தெரியாது என்று பல்கலைக்கழக நிர்வாகத் தரப்பும் மாணவர் தரப்பும் கூறுகின்றன.

இந்த விடயம் பல்கலைக்கழக நிர்வாகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதையடுத்து வரவேற்பு நிகழ்வை நிறுத்துமாறு பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாணவர்களுக்குக் கூறியுள்ளார். ஆனால் உணவு உட்பட பல்லாயிரக்கணக்கான ரூபா செலவளிக்கப்பட்டதால் வரவேற்பு நிகழ்வை நிறுத்தச் சம்மதிக்கவில்லை. அதன் பின்னர் துணைவேந்தர் பல்கலைக்கழக நுழைவாயில் கதவுகளை இழுத்துப் பூட்டியுள்ளார் என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

அவ்வாறு கதவுகள் மூடப்பட்டதால் பல்கலைக்கழகத்துக்குள் வார இறுதி நாள்களில் நடத்தப்படும் முதுகலைமாணி உள்ளிட்ட கற்கைகளுக்காகச் சென்றவர்களும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் வெளியேற முடியாதவாறு சிரமத்தை எதிர்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

துணைவேந்தர் கதவைத் திறந்துவிட்ட பின்னர் மாணவர்கள் கதவைச் மூடி எவரும் வெளியேறவோ உட்செல்லவோ முடியாதவாறு தடை ஏற்படுத்திப் பின்னர் அதனை விலக்கிக் கொண்டனர் என்று மாணவ பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது.

வரவேற்பு நிகழ்வுகளில் பல்கலைக்கழக நிர்வாகத்தினர், விரிவுரையாளர்கள் பங்கெடுப்பது வழமை. ஆனால் நேற்று இவர்கள் நிகழ்வில் பங்கெடுக்கவில்லை என்று மாணவப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் பொலிஸாருக்குப் பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டு உரிய நடவடிக்கை கோரப்பட்டது. பொலிசார் அங்கு வந்து நீண்ட நேரம் வீதியில் நின்றனர். அதன் பின்னர் மாலையில் வளாகத்திற்குள் நுழைந்தனர். யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லெஸ் தலைமையிலான குழுவினர் பல்கலைக்கழகத்துக்குச் சென்று மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

துணைவேந்தர் நிகழ்வை நிறுத்துமாறு கூறியபோதும் அதனை மாணவர்கள் கவனத்தில் கொள்ளாத நிலையில் குறித்த மண்டபத்துக்கான மின்சாரமும் தண்ணீர் விநியோகமும் நிறுத்தப்பட்டன. எனினும் மாற்றுவழிகள் செய்யப்பட்டன. அவ்வாறான தடையின் மத்தியிலும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

நிர்வாகம் சார்பில் குறித்த நிகழ்வில் எவரும் கலந்து கொள்ளவில்லை என்பதற்காக மாணவர்கள் வாசல் கதவுகளைப் பூட்டினர். அந்த நேரம் சிறு பதற்றம் நிலவியது. உடனடியாகப் பொலிஸாரின் உதவி நாடப்பட்டது. உதவி தேவையென நாம் மதியம் ஒரு மணியளவில் கோரினோம். அந்த நேரம் பொலிசார் உதவ முன்வரவில்லை. அனைத்தும் நிர்வாகத்தினால் ஓரளவு சீர் செய்யப்பட்டுப் பதற்றம் தணிந்த பின்னர்தான் பொலிஸார் வந்து உரையாடிச் சென்றனர்" என்று துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து பல்கலைக்கழக கலைப்பீடச் சட்டத்துறை மற்றும் நுண்கலைத் துறை தவிர்ந்த ஏனைய அனைத்துத் துறைகளும் மறுஅறிவித்தல்வரை மூடப்பட்டன. விடுதிகளிலுள்ள மாணவர்களை வெளியேறுமாறு துணைவேந்தர் அறிவித்துள்ளார் என்று மாணவர்கள் தெரிவித்தனர். (த-4-101)

## தவறை சுட்டிக்...

காக மன்னிப்புக் கோரவேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் அரச அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடல் நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர் லால் விஜயநாயக்க, பேராதனைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியர் சொய்சா ஆகியோர் கலந்துகொண்ட விளக்கமளிக்கும் கலந்துரையாடல் கூட்டம், கண்டியில் உள்ள நடனக் கலை மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி கருத்து மோதல்கள் நடைபெற்றுள்ளன.

பேராசிரியர் சொய்ஸா உரையாற்றுகையில், 1972 ஆம் ஆண்டு புதிய அரசமைப்பை உருவாக்கும்போது அப்போதைய தலைமை அமைச்சர் பௌத்த மதத்துக்கும் சிங்கள இனத்துக்கும் முன்னுரிமை கொடுத்து அரசமைப்பைத் தயாரிக்குமாறு பணித்தமை மகா தவறு. அவ்வாறான ஒருசெயலை சிறிமாவோ பண்டாரநாயக்க செய்யாதிருந்திருக்கலாம் என்றார்.

இது குறித்து கண்டி பிரதான வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் நிஸ்ஸங்க விஜேவர்தன கேள்வி எழுப்பினார். பேராசிரியர் கூறுவது போல் பௌத்த மதத்துக்கும் - சிங்கள இனத்துக்கும் அரசமைப்பில் முன்னுரிமை கொடுத்தது தவறு என்றால் புதிய அரசமைப்பில் அந்த விடயங்கள் நீக்கப்படும் என்பதையா குறிப்பிடுகின்றீர்கள் என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பேராசிரியர் சொய்ஸா தனது நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதாகக் குறிப்பிட்டார். இதன்போது பேராசிரியர் சொய்ஸா தனது தனிப்பட்ட நிலைப்பாடுகளைத் தெரிவிப்பதாகக் கூறி உடுநுவர பிரதேச செயலாளர் மற்றும் கண்டி உதவித் தேர்தல் ஆணையாளர் ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இவ்வாறான செயலமர்வுகளில் தனிப்பட்ட கருத்துக்களை முன்வைக்க எவருக்கும் இடமளிக்கக்கூடாது என்றும் செயலமர்வில் கலந்து கொண்ட அரச அதிகாரிகள் வலியுறுத்தினர். இதனால் சிறிது நேரம் குழப்பம் ஏற்பட்டிருந்தது. (த-5)

## ஈ.பி.டி.பி...

2009ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையில் யாழ்ப்பாண மாநகர சபை ஈபிடிபி கட்சியின் ஆளுகையில் இருந்தது. இந்தக் காலப் பகுதியில் கொழும்பில் ஆட்சியில் இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அமைச்சராக இருந்தார் ஈபிடிபி கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா. மாநகர சபை மேயராகப் பதவி வகித்தார் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா.

இந்தக் காலப் பகுதியில் யாழ். மாநகர சபை நிர்வாகத்தில் பல்வேறு முறைகேடுகள், மோசடிகள் இடம்பெற்றன என்று பல தரப்புகளாலும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. இது குறித்து விசாரித்து அறிக்கையிடுவதற்காக முன்னாள் நீதிபதி இ.வசந்தசேனன் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டார். 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் அவர் தனது விசாரணையை ஆரம்பித்தார். அதேயாண்டு ஒக்டோபர் மாதம் தனது அறிக்கையை வட மாகாண முதலமைச்சரிடம் கையளித்தார்.

அந்த அறிக்கை வெளியே கசிந்துவிடாது இரகசியம் காக்கப்பட்டது. அது குறித்து வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி கேள்வி எழுப்பினார். அறிக்கையை சபையில் பகிரங்கப்படுத்துமாறும் கேட்டார். ஆனால், விசாரணை அறிக்கையின் அடிப்படையில் சட்ட நடவடிக்கைக்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருப்பதால் அதனை வெளியிட முடியாது என்று முதலமைச்சர் மறுத்துவிட்டார்.

ஆனால், கடந்த வெள்ளிக்கிழமை வரையில் இந்த அறிக்கையின் பரிந்துரைக்கு அமைய குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படவில்லை என்று உதயன் உறுதிப்படுத்தியது.

இந்தப் பின்னணியில் இரகசியம் காக்கப்பட்ட அறிக்கையை உதயன் தேடிப் பெற்றுக் கொண்டது. அதில், யாழ். நகரத்தினுள் கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதிச் சந்தியில் குளத்தை நிரப்பி புதிதாக எழுப்பப்பட்ட 4 மாடிக் கட்டடம் முற்றிலும் சட்டத்துக்குப் புறம்பானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"எனது விசாரணையின்போது எனக்குத் தரப்பட்ட விடயங்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு என்னால் ஆய்வு செய்யப்பட்டபின் கஸ்தூரியார் வீதியில் வண்ணான் குளம் நிரப்பப்பட்டு இதில் கட்டப்பட்ட கட்டடத் தொகுதி முன்னாள் முதல்வரினாலும் அமைச்சர் ஒருவரின் தலையீட்டினாலும் சட்டத்துக்குப் புறம்பாகக் கட்டப்பட்ட கட்டடமாகும் என முடிவு செய்கிறேன்" என்று முன்னாள் நீதிபதியான விசாரணை அதிகாரி இ.வசந்தசேனன் தெரிவித்துள்ளார்.

விசாரணைக்காக அவரிடம் முன்வைக்கப்பட்ட 12 குற்றச்சாட்டுக்களில் 10 குற்றச்சாட்டுக்கள் மீது சட்டநடவடிக்கைக்குச் செல்லுமாறு அவர் முதலமைச்சருக்குத் தனது அறிக்கையில் பரிந்துரைத்துள்ளார்.

சட்ட நடவடிக்கைக்குப் பரிந்துரைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் வருமாறு:

1. சட்ட விதிகளுக்கு மாறாக மாநகர சபைக்குச் சொந்தமான காணிகளைக் கட்டடம் அமைப்பதற்கு முன்னாள் முதல்வர் தமக்கு வேண்டியவர்களுக்கு வழங்கியமை.
2. கஸ்தூரியார் வீதியில் வர்த்தகக் கட்டடத் தொகுதி கட்டுவதற்காகத் தனியார் ஒருவருடன் செய்யப்பட்ட ஒப்பந்தம் சட்டத்திற்குப் புறம்பானது.
3. ஸ்ரான்லி வீதிச் சந்தியில் முன்னர் லிடோ தியேட்டர் இருந்த இடத்தில் தனியாரால் கட்டப்பட்ட கட்டடத் தொகுதிக்கு முறைகேடாக வழங்கப்பட்ட அனுமதி.
4. மாநகர சபையின் அனுமதி இன்றி கஸ்தூரியார் வீதியிலுள்ள வண்ணான் குளத்தை நடவடிக்கை எடுத்தமை.
5. விதிகளை அனுசரிக்காது கொழும்புத்துறையில் தம்பு கந்தையா ஞாபகார்த்த சனசமூக நிலையத்தின் பெயரை டக்ளஸ் தேவானந்தா சனசமூக நிலையம் எனப் பெயர் மாற்றம் செய்தமை.
6. கொழும்புத்துறையில் வசந்தபுரம் எனும் பதிவுப் பெயர் கொண்ட பகுதியின் பெயரை உரிய நடைமுறைகளை அனுசரியாது தேவபுரம் என மாற்றியமை.
7. கொட்டடியில் சீனிவாசகம் வீதியை தர்மலிங்கம் வீதி எனவும், மத்தியூஸ் வீதியிலுள்ள 1ஆம் ஒழுங்கையை அல்வின் வீதி எனவும் நல்லூர் பின் வீதியிலுள்ள ஒழுங்கையை அந்த வீதியிலுள்ளோரின் சம்மதமில்லாமல் செல்லப்பா வீதி எனப் பெயர் மாற்றியமை.
8. முன்னயை முதல்வர் காலத்தில் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு மாறாக விளம்பரப் பணிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதி.
9. தொழிலாளர் நியமனங்களின்போதும் பதவி உயர்வுகளின்போதும் தற்காலிக நியமனம் பெற்று வேலை செய்வோரின் சேவை மூப்பு, தகுதி என்பன கவனிக்கப்படாது புதியவர்களுக்கு நியமனம் வழங்கியமை.
10. இறுதியாகச் சில நியமனங்களை வழங்கியபோது சபை இல்லாத நிலையிலும் மாகாண சபையின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தவேளையில் அந்த நியமனம் தொடர்பான எந்தவித அதிகாரமும் அளிக்கப்படாத ஓர் அமைச்சரின் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டமை.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்த முன்னாள் நீதிபதி, "மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக விசாரிக்கப் பட்ட பொழுது, இவை யாவும் முன்னைய முதல்வரின் தன்னிச்சையான தீர்மானத்தில் செய்யப்பட்டவை எனவும்; தொழிலாளர் நியமனங்கள், பதவி உயர்வுகள், தற்காலிக நியமனங்கள் யாவும் முதல்வர் சபையின் ஒப்புதலின்றி மேற்கொண்ட நடவடிக்கைகளெனவும் விசாரணையின்போது தெரியவந்துள்ளது. இவை சட்டத்துக்குப் புறம்பான செயல்கள் என நான் முடிவு செய்கிறேன்" என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (உ-5)

## கேப்பாபிலவுக்...

கேப்பாபிலவில் உள்ள தங்கள் பூர்வீக நிலத்தை விடுவிக்கக் கோரி கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாகத் தொடர் அறவழிப் போராட்டங்களை முன்னெடுத்து வந்த கேப்பாபிலவு மக்கள், தமக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் அனைத்தும் பொய்த்து விட்ட நிலையில் கடந்த முதலாம் திகதி முதல் தொடர் அறவழிப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இதனால் பயன் எதுவும் கிடைக்காத நிலையில் போராட்டத்தை மேலும் பலப்படுத்த உணவு தவிர்ப்பை அவர்கள் நேற்று முதல் ஆரம்பித்துள்ளனர்.

"கேப்பாபிலவுக் கிராமத்தில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த 138 குடும்பங்களுக்குச் சொந்தமான 482 ஏக்கரை விடுவிக்கக்கோரி கடந்த 5 வருடங்களுக்கு மேலாகத் தொடர் அறவழிப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். இதனை யாரும் கருத்தில் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. 11 நாள்களாக இந்த இடத்தில் தகரக் கொட்டகை அமைத்துப் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம். ஆனால் கேப்பாபிலவு விடுவிக்கப்பட்டுவிட்டாதாகக் கருத்து நிலவுகின்றது. உண்மையில் கேப்பாபிலவு இதுவரை விடுபடவில்லை. கேப்பாபிலவு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள சூரிபுரம், சீனியாமோட்டை, பிலக்குடியிருப்பு, பிரம்படி போன்ற பகுதிகளே விடுவிக்கப்பட்டன. எங்கள் பூர்வீக நிலங்களை விடுவித்து அங்கு சென்று கால் பதிக்கும் வரை உணவு தவிர்ப்புப் போராட்டம் முடிவுக்கு வராது" எனப் போராட்டதில் ஈடுபட்டுள்ள விவேகானந்தன் தஜீபன் (வயது-28), பொன்னுத்துரை அழகுராஜா (வயது-55) ஆகிய இருவரும் தெரிவித்தனர். (த-7)

## அரசுக்கு...

யத் தவறினால் ஐ.நாவே பன்னாட்டுப் பொறிமுறையை உருவாக்குவதை உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் வவுனியாவில் தனியார் விடுதியில் நேற்று நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவரும், கட்சியின் தலைவருமான இரா.சம்பந்தன் தலைமை தாங்கினார். காலையிலிருந்து மாலை வரை நடைபெற்ற கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையால் 2015 ஆம் ஆண்டு இலங்கை அரசின் இணை அனுசரனையுடன் நிறைவேற்றப்பட்ட மனித உரிமை ஆணைக் குழுவின் தீர்மானத்தில், இலங்கை நிறைவேற்றவேண்டும் என்று கூறப்பட்ட அத்தனை விடயங்களும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

இவை கடுமையான நிபந்தனைகளின் கீழ் நிறைவேற்றப்படுவதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இலங்கையில் நிறுவி மேற்பார்வை செய்யவேண்டும்.

இலங்கை அரசு மேற்சொன்ன விடயங்களை தகுந்த பொறிமுறையின் மூலம் நிறை வேற்றத் தவறினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்தத் தீர்மானத்தின் கீழ் கிடைக்க வேண்டிய அனைத்து பெறுபேறுகளும் கிடைக்கும் வகையில் பன்னாட்டுப் பொறிமுறைகளை ஐ.நா. மனித உரிமைகள் சபை உறுதி செய்யவேண்டும்.

மேற்படி தீர்மானங்களுக்கு ஈபிஆர்எல்எப் இணங்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் நடேசு சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார் என்றுள்ளது. (த-5)

## அமைச்சரவை...

கலந்துரையாடியுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சரவையில் மாற்றங்கள் மேற்கொள்வது தொடர்பில் கடந்த 5 வாரங்களாக அரசல் புரசலாகத் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. கடந்த தடவை அமைச்சரவை மாற்றத்தை முன்னெடுப்பதற்கு அரச தலைவர் மைத்திரி தீர்மானித்திருந்தபோதும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அதில் தலையீடு செய்து தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தார். கூட்டு அரசின் அமைச்சர்களுக்கு இடையிலான மோதல்களே அமைச்சரவை மாற்றம் தொடர்பில் அரச தலைவர் சிந்திப்பதற்குக் காரணம் என்று கொழும்பு அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு வருடங்களில் அமைச்சுகளுக்குக் கொடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பொறுப்புடன் நடைபெற்றுள்ளதா? இல்லையா? என்பதைப் பற்றியும் அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்றியுள்ளனரா என்பது குறித்தும் அவர்களால் அரசுக்கு பிரச்சினைகள் எதுவும் உருவாக்கப்பட்டதா என்பது சம்பந்தமாகவும் அரச தலைவர் மைத்திரி நுணுக்கமாக ஆராய்ந்து வருகிறார் எனவும் தெரிய வருகின்றது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மிகப் பற்றின்மைமையே வன்முறைகளுக்கு காரணம்

## தீவக உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

இன்றைய கலாசார சீரழிவு வன்முறைச் சம்பவங்களுக்கு கலை, ஆன்மிகப் பற்றற்ற நிலையே காரணம் என தீவக உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி மலர்விழி கனகசபை தெரிவித்தார். நிகரை வீதி, சங்கானையில் ஆரம்பிக்கப்பட்ட கலையக ஆரம்ப விழா அண்மையில் நடைபெற்றது. அதில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஆய கலைகள் அறுபத்து நான்கென அறிந்துள்ளோம்.

இந்தக் கலைகளிலே ஒரு கலையை ஒவ்வொருவரும் பேணிக்காத்து வரவேண்டும். கலைகளை முறையாகக்கற்றறிவதற்காக இந்தக் கலையகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சியை சங்கானை வாசியும் புலம்பெயர்ந்து வாழும் செ.முருகானந்தனின் தனிநபர் நிதி அனுசரணையுடன் திறந்து வைத்ததற்கு நாம் எல்லோரும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

இந்தக் கலையகத்தில் சங்கீதம், ஓவியம், மிருதங்கம், நடனம், வயலின், ஓர்கன் போன்ற கலைகள் பயிற்றப்படவுள்ளன. என்றார். (ற-29)

## மரண அறிவித்தல்



### திருமதி நாகம்மா நாகேந்திரம்

யாழ்.வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா நாகேந்திரம் 10.03.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் கணபதி - பத்தினி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகேந்திரத்தின் அன்புமனைவியும், நேசமலர், சாந்தினி, பகீரதி, சுகந்தினி, நாகேஸ்வரன், விக்கினேஸ்வரன், மேகலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்மராசா, சந்திரவரன், காலஞ்சென்ற இராஜரூபன், துஷாந், ரேவதி, சஜந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சின்னத்துரை, வீரசிங்கம் மற்றும் நாகேந்திரம், இராமநாதன், சாந்தமலர், செல்வராசா ஆகியோரின் அன்புச்சகோதரியும், பொன்னம்பலம், நாகராசா, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும், வினோஜா, விதுரன், விபுஷன், கிஷோனா, மதுஷன், சந்தோஸ், கிஷோர், அபிசாந், பவீஸ், சுலக் ஷன், டினுஷா, சஷ்விந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குடமியன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

பிரித்தானியா - சுதன் - 077 504 6776,
நாகேஸ் - 00447801393824, சுகந்தி - 0763495796

## கண்ணீர்க் காணிக்கை

### திருமதி சர்மிளா விஜயரூபன்



கண்ணீரில் உன் நினைவுகள் நனைய
உன் அன்புமுகம் கண்களுக்குள்
சிரித்திட
வார்த்தைகளின்றி வேதனையில்
துடிக்கவிட்டுச் சென்றாயோ....
தவிப்போடு -உன் அன்பு நண்பி

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி




அன்பாலும் பண்பாலும்
எல்லோரையும் அரவணைத்த அன்புத் தெய்வமே !
ஆண்டுகள் எட்டு ஆனாலும்
அழியாது உங்கள் நினைவுகள்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்துப் பூசிப்போம்

இல.64, ஆனந்தம் வடலி வீதி,
அரியாலை.
021 221 1100

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## மரணஅறிவித்தல்



### துரைசிங்கம் தனபாலசிங்கம்

(ஓய்வு பெற்ற எழுதுனர், யாழ்.கல்வி வலயம், அகில இலங்கை சமாதான நீதிவான் J.P, விசாரணை அலுவலர், இலங்கை மனித உரிமை அமைப்பு - யாழ்.மாவட்டம்)

கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழை கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய துரைசிங்கம் தனபாலசிங்கம் 09.03.2017 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் சின்னையா - சேதுப்பிள்ளை (ஓய்வு பெற்ற பெஞ்சனியர், சிங்கப்பூர்) தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக்கணவரும் தவறஞ்சிதமலரின் (ஓய்வு பெற்ற எழுதுநர், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) அன்புச் சகோதரனும் புவனசிங்கம் (கனடா), கிருஸ்ணசிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் குமுதாவின் (கனடா) மாமனாரும் குமாரதாசனின் (ஓய்வு பெற்ற பிராந்திய முகாமையாளர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) அன்பு மைத்துனரும் அனோச் (கனடா), அபர்ணா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.03.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணியளவில் கோப்பாய் மத்தியில் உள்ளஅவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாவலர் பாடசாலை வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.**

**தகவல்:
த. புவனசிங்கம்
(மகன் - கனடா)**

## மரணஅறிவித்தல்



### திருமதி சத்தியலட்சுமி காங்கேயன்

(இளைப்பாறிய நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர்)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியலட்சுமி காங்கேயன் நேற்று (11.03.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் இராமலிங்கம் காங்கேயன் (இளைப்பாறிய வங்கி உத்தியோகத்தர் மக்கள் வங்கி) அவர்களின் அன்பு மனைவியும் ஆதவனின் (பிரபல சதுரங்க பயிற்றுனர்) பாசமிகு தாயாரும் வானதியின் அன்பு மாமியாரும் தரன் (புனித ஜோன் பொஸ்கோ), யதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் நவ ரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் இராமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் துளசி தாஸின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:
திரு.இ.காங்கேயன் (கணவர்)
திரு.கா.ஆதவன் (மகன்)**

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணிதேவி ஐயாத்துரை



நெல்லியடி வடக்கு, வதிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணிதேவி ஐயாத்துரை 10.03.2017 காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கட்டைத்தம்பி ஐயாத்துரையின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற அப்பையா (ஆசிரியர்) - திருமதி அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும் கட்டைத்தம்பி - இலட்சுமி தம்பதியரின் மருமகளும் திருவீரகத்தி கனகசபை, வீரகத்தி சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மரு மகளும் காலஞ்சென்ற ஜனககுமாரி (ஆசிரியர்) மற்றும் ஜனககுமார் (நோர்வே) ஸ்ரீஜனககுமார் (சுவிஸ்), ஜனகராணி (குடும்பநல உத்தி யோகத்தர், மந்திகை ஆதார வைத்தியசாலை) திருமதி ஜனக மர்லினி(ஆசிரியர் - யா/பொலிகண்டி இ.த.க. பாடசாலை) ஜனகநளினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் குணரத்தினம் (ஓய்வு பெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்), சத்தியதாசன் (பிரதேசசபை, கரவெட்டி), விஜயரத்தினம் (கெருடாவில், தொண்டைமானாறு), யோகதாசன்(ரூபவாகினி கூட்டுத்தாபனம், கொழும்பு), திருமதி யோகபவானி(நோர்வே), திருமதி சகுந்தலா(சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் குணஜீவன் ஜெனித்தா(வவுனியா), திருமதி துஷியந்தி கௌசிகன்(லண்டன்), வேணுகீதன், கஜரூபன், வருணப்பிரியன், ஜனனி(நோர்வே), வைஷாலி(நோர்வே), ஜலஷன்(சுவிஸ்), துலாபன்(சுவிஸ்), நர்த்தனி(சுவிஸ்), அவனீஸ் (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் ஆருக்ஷன் அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.03.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தவமனை
கலா நிலையம்
நெல்லியடி வடக்கு,
வதிரி.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரகத்திப்பிள்ளை மகா வித்தி. கிண்ணத்தை சுவீகரித்தது

யாழ்ப்பாணம், மார்ச்12
வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலானகரப்பந்தாட்டத்தில்18வயதுக்;குட்பட்ட ஆண்கள் பிரிவில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணி கிண்ணம் வென்றது.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில்நடைபெற்றஇந்தஇறுதியாட்டத்தில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி மோதியது. இதில் தொண்டமானாறு வீரகத்தி ப்பிள்ளை மகா வித்தியாலய அணி 25:17, 25:23 என்ற புள்ளிகள்அடிப்படையில்முதல்இருசெற்களையும் கைப்பற்றி2:0என்றநேர்செற்கணக்கில்வெற்றிபெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாமிடத்தைபருத்தித்துறைஹாட்லிக் கல்லூரிஅணிதனதாக்கியது. (ம-422-108)






# கரப்பந்தாட்டத் தொடரில் இந்து இளைஞர் மகுடம்

யாழ்ப்பாணம், மார்ச்12
வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

கோப்பாய்கிறிஸ்தவக்கல்லூரிமைதானத்தில் நேற்றுமுன்தினம்நடைபெற்றஇறுதியாட்டத்தில்ஆவரங்கால்இந்துஇளைஞர்அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் அணி மோதியது. முதலாவது செற்றை 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது இந்து இளைஞர். 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இரண்டாவது செற்றைக் கைப்பற்றி பதிலடி கொடுத்தது அச்சுவேலி யுத்.
கிண்ணத்தைத் தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியானதுமான செற் இரு அணிகளுக்கும் சவாலாக அமைந்தது.
பலத்தபோராட்டத்தைவெளிப்படுத்தியஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-108-422-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச்12

**அண்ணா வி.க. கால்பந்தாட்டம்**

அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அராலி மாவத்தையில் உள்ள சங்கானை பிரதேச செயலக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமைபிற்பகல்3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி அணியை எதிர்த்துஉரும்பிராய்திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**அரியாலையின் துடுப்பாட்டம்**

அரியாலை 98 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் ஓர் அங்கமான யாழ். மாவட்ட அணிகள்பங்குபற்றும்மென்பந்து துடுப்பாட்டத்தொடரின்ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரின் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை சனசமூகநிலையஏ அணியைஎதிர்த்து லெவன் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்திரா அணியை எதிர்த்து கலைமகள் சனசமூகநிலையஅணிமோதவுள்ளது. காலை9.30மணிக்குஇடம்பெறும் ஆட்டத்தில் ஏ.பி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து காந்தி சனசமூக நிலைய அணி மோதவுள்ளது.

முற்பகல்10மணிக்குஇடம்பெறும் ஆட்டத்தில் முத்தமிழ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை வீனஸ் விளயாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

நண்பகல்11.30மணிக்குஇடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை சனசமூகநிலையஏ அணியைஎதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் அணி மோதவுள்ளது.

நண்பகல்12மணிக்குஇடம்பெறும் ஆட்டத்தில் கொட்டடி இளங்கதிர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பிரம்படி விளையாட்டுக் கழகஅணிமோதவுள்ளது. (ம23)

## இளைஞரை வீழ்த்தியது இமையாணன்

கரணவாய், மார்ச்12
வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும்கால்பந்தாட்டத்தொடரில்அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்தது இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம்.

வல்வை றெயின்போ மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. ஆட்டத்தின் ஆரம்பத்தில் திக்கம் இளைஞர் அணியின் முன்கள வீரர் அரிகரன் முதல் கோலைப் பதிவு செய்து அதிர்ச்சி கொடுத்தார். இதனை அடுத்து அதிரடியாக விளையாடிய இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக வீரர் சாருஜன் தொடர்ச்சியாக 3 கோல்களைப் பதிவுசெய்து அதிர வைத்தார். சுலக்சனும் கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் இமையாணன் மத்திய அணி வெற்றி பெற்றது. (ம-108)

## நீக்கிலஸ் அணி அபார ஆட்டம்

அராலிஅண்ணாவிளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலானகால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நாவாந்துறைசென். நீக்கிலஸ் அணி வெற்றிபெற்றது.

அராலி மாவத்தையில் உள்ள சங்கானை பிரதேச செயலக மைதானத்தில் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம்இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ்விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி சில்வேஸ்ரார் விளையாட்டுக்கழகஅணிமோதியது. இதில்நாவாந்துறைசென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி3:0என்றகோல்கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## மெதடிஸ்தபெண்கள்எல்லேயில்சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச்12
வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான எல்லேயில் பருத்தித்துறை மெதடிஸ்தபெண்கள் உயர்தரப்பாடசாலைஅணி கிண்ணம் வென்றது.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம்நடைபெற்றஇறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலைஅணிமோதியது. முதலில்துடுப்பெடுத்தாடியபருத்தித்துறைமெதடிஸ்தபெண்கள் உயர்தரப்பாடசாலைஅணிநிர்ணயிக்கப்பட்ட 40பந்துகளில்7ஓட்டங்களைப்பெற்றது. அதிகபட்சமாக அஜித்தா 2 ஓட்டங்களையும் ஆதித்தியா, டினேக்கா, கிசோரி, சாகித்தியா, சுவர்ணசீலி ஆகியோர் தலா ஓர் ஓட்டத்தையும் பெற்றனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அம்பன் அமெரிக்கன்மிசன்தமிழ்கலவன்பாடசாலை அணி நிர்ணயிக்கப்பட்ட 40 பந்துகளில் ஒரு ஓட்டத்தை மாத்திரம் பெற்றதை அடுத்து 6 ஓட்டங்களால்வெற்றிபெற்றுசம்பியன்கிண்ணத்தைச் சுவீகரித்தது மெதடிஸ்த பெண்கள் அணி. மூன்றாமிடத்தை நெல்லியடி மத்திய கல்லூரிஅணிதனதாக்கியது. (ம-108-422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசி. வலுப்பெறுகிறது

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில், வெற்றிபெறக் கூடிய சாத்தியக் கூறுகளை வெளிப்படுத்தி வலுப்பெற்று வருகிறது நியூசிலாந்து அணி.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 308 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக எல்கர் 140 ஓட்டங்களையும், பவுமா 64 ஓட்டங்களையும், பிளாசிஸ் 52 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் போல்ட் 4 இலக்குகளையும், வாக்நெர் 3 இலக்குகளையும், பட்டேல் 2 இலக்குகளையும், நீஸ்கம் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 341 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக வில்லியம்சன் 130 ஓட்டங்களையும், ராவல் 52 ஓட்டங்களையும், வற்லிங் 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மகாராஜ் 5 இலக்குகளையும், பிளன்டர், மோர்கல் இருவரும் தலா 2 இலக்குகளையும், ரபாடா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

33 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இருந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி நேற்றுமுன்தினம் மூன்றாம் நாள் முடிவில் 381 என்றிருந்தது. அம்லா 23 ஓட்டங்களுடனும், எல்கர் 12 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர்.

24 ஓட்டங்களுடன் அம்லாவையும், 39 ஓட்டங்களுடன் டுமினியையும் வீழ்த்தினார் வாக்நெர். பிளாசிஸ், எல்கர் இணை சிறிது நிலைத்தது. அரைச்சதம் கடந்தார் எல்கர். அவர் 89 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பவுமா, குயின்டன் பிரகாசிக்கவில்லை.

நாள் முடிவில் தென்னாபிரிக்கா 224-6 என்றுள்ளது. பிளாசிஸ் 56 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். (ம)



# 259 ஓட்டங்களால் இலங்கை வெற்றி

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் 259 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இலங்கை அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணிமுதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து 494 ஓட்டங்களுடன் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக குசல் மெண்டிஸ் 194 ஓட்டங்களையும், குணரத்ன 85 ஓட்டங்களையும், டிக்வெல்ல 75 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மிராஸ் 4 இலக்குகளையும், ரகுமான் 2 இலக்குகளையும், அகமட், றோய், சகிப் அல் ஹசன் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் 312 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ரகிம் 85 ஓட்டங்களையும், சர்கர் 71 ஓட்டங்களையும், இக்பால் 57 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் டில்ருவான் பெரேரா, கேரத் இருவரும் தலா 3 இலக்குகளையும் லக்மல், குமார, சன்டகன் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

182 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி 274-6 என்ற நிலையில் இருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக தரங்க 115 ஓட்டங்களையும், சந்திமல் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மிராஸ், சகிப் அல் கசன் இருவரும் தலா 2 இலக்குகளையும், ரகுமான், அகமட் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

457 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி இலக்குச் சரிவில்லாமல் 67 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்காம் நாள் முடிவு கண்டது. பங்களாதேஷின் வெற்றிக்கு இன்னும் 390 ஓட்டங்களும், இலங்கையின் வெற்றிக்கு 10 இலக்குகளும் தேவை என்ற நிலையில் ஆட்டத்தின் ஐந்தாவதும் இறுதியுமான நேற்றைய தினம் ஆரம்பமானது. சர்கர் 53 ஓட்டங்களுடனும் இக்பால் 13 ஓட்டங்களுடனும் களமிறங்கினர்.

மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார் சர்கர். 5 ஓட்டங்களுடன் கக்கியூவின் ஆட்டமும் முடிவுக்கு வந்தது. சகிப் அல் கசன் 8 ஓட்டங்களுடனும், முகமதுல்லா ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் கேரத்தின் சுழலில் சிக்கினர். இக்பாலை வீழ்த்தினார் பெரேரா. பின்வரிசை கேரத்தால் தகர்க்கப்பட்டது. 197 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை.

பந்துவீச்சில் கேரத் 6 இலக்குகளையும், டில்ருவான் பெரேரா 2 இலக்குகளையும், குணரத்ன, சன்டகன் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)



# முல்லை. பி.செயலகங்களின் விளையாட்டுப் போட்டிகள்

முல்லைத்தீவு, மார்ச் 12

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரம், சதுரங்கம், கபடி, கடற்கரை கரப்பந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளன.

கடற்கரை கபடி, கடற்கரை கரப்பந்தாட்டம் போன்றன முல்லை நகர் கடற்கரையிலும் ஏனைய போட்டிகள் முல்லைத்தீவு மாவட்டச் செயலக முன்றிலிலும் நடைபெறவுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தை வதிவிடமாகக் கொண்டவர்கள் இப்போட்டிகளில் கலந்துகொள்ளமுடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-4-22)

# போராடி வென்றது யங்ஹென்றிஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 12

உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி போராடி வெற்றிபெற்றது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வேலணை ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில், இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# ராஞ்சி ஆடுகளத் தயாரிப்பில் அக்கறை காட்டுகிறார் டோனி

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் நடைபெறவுள்ள ராஞ்சி ஆடுகளம் தொடர்பில், டோனி பெரும் அக்கறையுடன் உள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களில் இரு அணிகளும் 1:1 என்றுள்ளன. இதனால் அடுத்த ஆட்டத்தில் அதிக எதிர்பார்ப்பு நிலவுகிறது. இந்த ஆட்டம் ராஞ்சி ஆடுகளத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது. ராஞ்சி டோனியின் சொந்த மைதானம். இதனால் தனது இடத்தில் நடை பெறும் இந்த ஆட்டத்துக்கான ஆடுகளத் தயாரிப்பில் மைதான நிர்வாகத்துடன் இணைந்து அவர் ஈடுபட்டு வருகிறார். சில ஆலோசனைகளை வழங்குகிறார் என்று ஜார்கண்ட் கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் தெபாசிஸ் சக்கரவர்த்தி தெரிவித்தார். (ம)




# ஓய்வறையை பயன்படுத்த கோக்லிக்குத் தடையில்லை

## கவாஸ்கர் சீற்றம்

நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முடிவுக்காக விராட் கோக்லி ஓய்வறையை உபயோகப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். இந்த விடயத்தில் அவருக்கு எவ்விதத் தடையும் இல்லை என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் தெரிவித்தார்.



ஆஸ்திரேலியா -இந்தியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணித்தலைவர் சிமித் யாதவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யு. ஆனார். அவர் நடுவரின் முடிவை எதிர்த்து முறையிடலாமா என்பது தொடரிபில் ஓய்வறைக்கு சைகை காட்டினார். இதனால், இந்திய அணித்தலைவர் கோக்லி உடனடியாக குழப்பமடைந்தார். இதனையடுத்து மைதான நடுவர் நைஜல் லோங் மிகச்சரியாகத் தலையிட்டு சிமித்தை வழியனுப்பி வைத்தார்.

இந்த விடயம் தொடர்பில் கோக்லியும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரிகளும் இணைந்து பன்னாட்டு கிரிக்கெட் சபையிடம் முறையிட்டுள்ளனர். எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதையடுத்து சிமித்தின் செயலுக்கு கண்டனங்கள் குவிந்துவரும் நிலையில் கவாஸ்கர் இவ்வாறு தெரிவித்தார்.

பன்னாட்டு கிரிக்கெட் சபை ஒரு சில நாடுகளுக்கு சாதகமாகவும், சில நாடுகளுக்கு பாதகமாகவும் நடந்து கொள்ளக்கூடாது. உதாரணமாக அடுத்த ஆட்டத்தில் சமித் போன்று இந்திய வீரர் ஒருவர் நடந்து கொண்டாலும் அவர் மீதும் நடவடிக்கை எடுக்கக்கூடாது.

அடுத்த டெஸ்டில் விராட் கோக்லிக்கு நடுவர் ஆட்டமிழப்பு வழங்கும் போது. அவர் ஓய்வறையில் தங்களது வீரர்கள் அமர்ந்திருக்கும் பகுதியை நோக்கி, மறுபரிசீலனை செய்வது தொடர்பில் உதவி கேட்க வேண்டும். இதை பார்க்க விருப்பமுடன் இருக்கிறேன். அப்போது ஆட்டத்தின் நடுவர் என்ன செய்வார், அதைத் தொடர்ந்து ஐ.சி.சி. என்ன முடிவு எடுக்கும் என்பதை காண ஆவலாக இருக்கிறேன் என்று கவாஸ்கர் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# AUTO CAD

Civil / MEP / HVAC / Plumbing 2D & 3D
Full time : 2 Weeks  Part time : 2 Months
BRITISH COLLEGE 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna.
103, Mannar Rd, Vavuniya.
Pettah Rd, Mannar.  Main Street, Mullaithivu.

## இலாபமோ அதிகம் வியாபாரமோ சுலபம் !
ஜூஸ் பக்கெட் தயாரிக்கும் மெசின்




தமிழில் தொடர்பு கொள்ள
**077 391 8870**
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பத்திற்கு வீடு அல்லது Annex யாழ் மாநகர சபை, சுண்டுக்குளி அருகில் தேவை.
076 302 4946, 0773916047

## கார் தேவை

வெள்ளை நிற **Toyato Axio** அல்லது **Toyato Premio** கார் விலைக்குத் தேவை.
077 441 4374


## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளிநாயகி முத்துக்குமாரு



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், கில்னர்லேன், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிநாயகி முத்துக்குமாரு கடந்த 08.03.2017 புதன்கிழமை தனது 88 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் இல.187/11. கில்னர் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**187/11, கில்னர்லேன், யாழ்ப்பாணம்.**
**0212221108**
தகவல்
**குடும்பத்தினர்.**


# VACANCY

Daily Food City இல் கீழ்வரும் பணி நிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆண் / பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

1. விற்பனை உதவியாளர் (Sales Assistant)
   **தகைமைகள்:**
   GCE O/L 06 பாடங்களில் சித்தி (கணிதம், ஆங்கிலம், உட்பட)
   வயதெல்லை 18-25
   சுயமாக வேலை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
2. Pharmacist (Licence கட்டாயம்)

அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் சுயவிவரக் கோவையை விளம்பரத் திகதியில் இருந்து 07 நாள்களுக்குள் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

careers@dailyfoodcity.com

**முகவரி:**
**இல. 26, ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**
**தொ.பே: 021 4927 869**

AJA CS 1972 (10)

பிரபல கண்டி ஆசிரியர்
A.C. Faizal Mohamed அவர்களின்
ஜேர்மன் மொழி (DEUTSCH)
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்
BRITISH COLLEGE 23, Kachchari nallur Rd, Jaffna.
0777-596148

## Rent a Car

நாள், மாத அடிப்படையில் கார்கள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு
075 204 0061

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் - கொழும்பு போக்குவரத்து சேவைக்கு கனரக வாகன அனுமதிப்பத்திர முடைய லொறி சாரதி ஒருவர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**மற்றும்**

வத்தளையில் இயங்கும் நிறுவனத்திற்கு சிங்களம், பேசக்கூடிய, கணினி அறிவுடைய ஆண் ஒருவர் தேவை. சிறந்த சம்பளம் உணவு, தங்குமிட வசதியும் இலவசம்

தொடர்புக்கு:
**076 690 8976, 076 690 8986**

## வெல்லுங்கள் பரிசு- Rs.20,000

? குறியினால் காட்டப்பட்டுள்ள சதுரத்தினுள் வர வேண்டிய மிகச் சரியான கோலத்தை (a), (b), (c), (d) ஆகிய உருவங்களில் இருந்து தெரிவு செய்க.

(a) (b) (c) (d)

**போட்டியில் பங்குபற்ற உங்கள் விடை, முழுப்பெயர், முகவரி என்பவற்றை 759520941 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பவும்.**

வெற்றியாளர்களுக்கு 5 கற்கைநெறிகளை கற்பதற்கான Rs.4,000 பெறுமதியான 5 Vouchers

பரிசுகளை வழங்குவது
கல்வியங்காட்டில்
**MCAI CAMPUS**
Supported by Jaffna Computer Society
Phone : 759520941, 0212219464 Web : www.mcai.edu.lk


## வெளிவந்துவிட்டது!

**அனைத்து தரப்பினருக்கும் ஏற்ற 1750 இற்கு மேற்பட்ட ஆங்கிலச் சொற்களும் அவற்றுக்கான தமிழ் அர்த்தத்துடனும் கூடிய ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டிக்கான வழிகாட்டி.**




விலை : ரூபா 120/-
- 0718473926, 0770027621


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



08.02.2017 செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த எம்து குடும்பத்தலைவி

## அமரர் தங்கம்மா அப்பையா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 09.03.2017 வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு மண்கும்பான் வெள்ளைக்கடற்கரை புண்ணிய தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**159/12, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org